செய்தி இதழாகப் பதிவு பெற்றது

# சிந்தாமணி

ரூ 5/50

சிந்தாமணி

THE MOST INFLUENTIAL TAMIL WEEKLY WITH THE LARGEST CIRCULATION IN SRI LANKA

CHINTHAMANI

இல 1045 7—1—1990 சுக்கில மார்கழி 23 வ. 1990 ஜனவரி 7 ஞாயிற்றுக்கிழமை ஹிஜ்ரி 1410 ஜமாதுல் ஆகிர் பிறை 9



## பூவிதழ் சிந்திய புன்சிரிப்பு

சற்றே சரிந்த குழலே கமுகின் தோளினிலே
பொற்றோகை யாகப் படர்ந்தே மயிலை நிகர்த்ததுவே!
நற்றேன் பிலிற்றும் பூவிதழ் சிந்திய புன்சிரிப்பால்
வற்றாத இன்பத் தடாகத்தில் என்னை வீழ்த்தினளே!

# சுமார் ஒரு லட்சம் மக்கள் அகதிகள்

## வெள்ளப்பெருக்கினால் பெரும் பாதிப்பு
## அம்பாறை, மலையகப் பகுதிகளில்

கொழும்பு, ஜன. 6

நாட்டின் பல பகுதிகளிலும் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனால் 20 ஆயிரம் குடும்பங்களைச் சேர்ந்த சுமார் ஒரு லட்சம் பேர் வீடுவாசல்களை இழந்து அகதிகளானார்கள். அம்பாறை, பதுளை பகுதிகளில் வெள்ள நிலைமை மோசமாகியிருக்கிறது.

கிழக்கு மாகாணத்திலும பெரும வெள்ளம ஏற்பட்டிருக்கிறது. கல்முனை, அமபாறை, ஏறாவூர் பகுதி மக்கள் இதனால் பெரிதும பாதிக்கப்பட்டுள்ளனர்.

கல்முனைப் பகுதியில் வெள்ளத்தினால் வெளியூர் போக்குவரத்துச் சேவைகள் முற்றாக துண்டிக்கப்பட்டு விட்டன. ஆயிரக்கணக்கான கால்நடைகள் இறந்து விட்டன. 10 ஏக்கர் நெல் வயல்கள் நீரில் மூழ்கி விட்டன.

மலையகத்தில் பெரும மண் சரிவுகள் ஏற்பட்டு போக்குவரத்துச் சேவைகள் துண்டிக்கப் பட்டிருக்கின்றன.

பதுளைஓயாவில் நீர் மட்டம 25 அடிக்கும 30 அடிக்கும மேல் உயர்ந்துள்ளது. இதனால் தாழ் நிலப் பகுதிகளில் வசிப்போர் வெள்ளத்தில் சிக்குண் டுள்ளனர்.

இவர்களை மேட்டு நிலப் பகுதிகளுக்குக் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று பதுளை அரசாங்க அதிபர் திரு எம பீ வர்சுகோன் தெரிவித்தார்.

பசறையில் மண் சரிவினால் 300 பேர் அகதிகளானார்கள். பிபிலை, ஹாலிஎல, மொனராகலை பகுதிகளிலும மண் சரிவு ஏற்பட்டிருக்கிறது. வீடுகள் சேதமாகியுள்ளன. இதனால் ஆயிரக்கணக்கானோர் அகதிகளானார்கள்.

மஹியங்கனை பகுதியில் 800 பேர் வரை அகதிகளானார்கள். இவர்களுக்கென அகதி முகாமகள் ஏற்படுத்தப்பட்டன. சமைத்த உணவுகளும, உலர் உணவுகளும வழங்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

அமபாறை மாவட்டத்தில் உஹனை, மஹஓய, சமமாந்துறை, பொத்துவில், தமன, கல்முனை, ... பகுதிகள் வெள்ளக் காடாகக் காட்சி அளிக்கின்றன.

பல கிராமங்கள் வெள்ளத்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## ஊழியர்களின் குறை தீரும்

கொழும்பு ஜன 6

1980 ஜூலை வேலை நிறுத்தத்தில் பங்குபற்றி இது வரை தொழில் கிடைக்காத ஊழியர்களுக்கு இளைப் பாற்று நன்கொடை பணம உட்பட மற்றும அலவன்ஸ்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## பாணுக்குப் பதிலாக சோறு வழங்க திட்டம்

பாவனையாளருக்குப் பாணுக்குப் பதிலாகச் சோறு வழங்குவதற்கு திட்டம் ஒன்று வகுக்கப்படும்.

உணவு ராஜாங்க அமைச்சர் திரு ஜீ எம் பிரேமச்சந்திர இப்படித் தீர்மானித்திருக்கிறார்.

500 கிராம் சோற்றுப் பார்சலை ஐந்த ரூபாவுக்கு வழங்கக்கூடிய முறையை அறிமுகப்படுத்துவதன் மூலம் மக்கள் பெரும்பாலும் சோறு சாப்பிட விருப்பம் செலுத்துவார்கள் என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

உணவு அமைச்சு சுவீகரித்துள்ள விற்பனைத் திணைக்கள சமையற்கூடங்கள் மூலம் இந்தச் சோற்றுப் பார்சல்கள் வழங்கப்பட விருக்கின்றன.

[ண—007]

## சில முக்கிய விடுமுறை தினங்களில் மாற்றம் ஏற்படும் அறிகுறி!

கொழும்பு ஜன 6

இந்த ஆண்டில் சில முக்கிய விடுமுறை நாட்களில் மாற்றம் ஏற்படலாம். உயர் அதிகாரிகள் மட்டத்தில் இப்படி சூசகமாகப் பேசப் படுகிறது.

...

பௌத்தர்களுக்கு புனிதமான நாளாகும். அந்த நாளில் விடுமுறை வழங்கப்படுவதால் அதனைக் களியாட்ட நாளாக அனைவரும் பயன்படுத்தி வருகின்றனர்.

இது பௌத்த தர்மத் ...

செயல். இதனை உணரும்படி விடுமுறை தினங்களில் மாற்றங்களைக் கொண்டுவர வேண்டும்.

இவ்வாறு உயர் அதிகாரி ஒருவர் முறையிட்டுக் கொண்டார்.

## பூவிதழ் சிந்திய புன்சிரிப்பு

சற்றே சரிந்த குழலே கழுகின் தோளினிலே
பொற்றோகை யாகப் படர்ந்தே மயிலை நிகர்த்ததுவே!
நற்றேன் பிலிற்றும் பூவிதழ் சிந்திய புன்சிரிப்பால்
வற்றாத இன்பத் தடாகத்தில் என்னை வீழ்த்தினளே!

வயல்கள் நீரில் மூழ்கி விட்டன.

மலையகத்தில் பெரும மண் சரிவுகள் ஏற்பட்டு போக்கு வரத்துச் சேவைகள் துண்டிக்கப் பட்டிருக்கின்றன.

பதுளைஓயாவில் நீர் மட்டம 25 அடிக்கும 30 அடிக்கும மேல் உயர்ந்துள்ளது. இதனால் தாழ் நிலப் பகுதிகளில் வசிப்போர் வெள்ளத்தில் சிக்குண் டுள்ளனர்.

இவர்களை மேட்டு நிலப் பகுதிகளுக்குக் கொண்டுவர நட ... எனார்கள்.

மஹியங்கனை பகுதியில் 800 பேர் வரை அகதிகளானார்கள். இவர்களுக்கென அகதி முகாம கள் ஏற்படுத்தப்பட்டன. சமை த்த உணவுகளும, உலர் உணவு களும வழங்க ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது.

அமபாறை மாவட்டத்தில் உஹனை, மஹஓய, சமமாந்துறை. பொத்துவில், தமன, கல்முனை, நிந்தவூர், காரைதீவு ஆகிய

கொழும்பு ஜன 6

இந்த ஆண்டில் சில முக்கிய விடுமுறை நாட் களில் மாற்றம் ஏற்பட லாம்- உயர் அதிகாரி கள் மட்டத்தில் இப் படி சூசகமாகப் பேசப் படுகிறது-

போயா தினங்கள் பௌத்தர்களுக்கு புனி தமான நாளாகும்- அந்த நாளில் விடுமுறை வழங்கப்படுவதால் அதனைக் களியாட்ட நாளாக அனைவரும் பயன்படுத்தி வருகின்ற னர்-

இது பௌத்த தர்மத் திற்கே மாறான செயல்- இதனை உண ரும்படி விடுமுறை தினங்களில் மாற்றங் களைக் கொண்டுவர வேண்டும்-

இவ்வாறு உயர், அதிகாரி ஒருவர் முறை யிட்டுக் கொண்டார்-

[ண—கு]

## இளைஞர் அமைதியின்மை: அறிக்கை 19இல் கையளிப்பு

கொழும்பு ஜன 6

இளைஞர் அமைதி இன்மை குறித்து ஆராய்ந்து வரும ஜனாதிபதி ஆணைக்குழு அதன் இறுதி அறிக்கையை எதி ர்வரும 19-ஆம திகதி ஜனாதி பதி திரு. ஆர் பிரேமதாச விடம கையளிக்கும.

ஆணைக் குழுவினர் இப் போது தமது இறுதி அறிக்கை யைத் தயாரிப்பதில் ஈடுபட்டுள்ள னர்.

கொழுமபிலும வெளி மாகா ணங்களிலும இளைஞர் அமைதி யின்மை தொடர்பாக விசா ரணை நடத்திய மேற்படி ஆணைக்குழு நூற்றுக்கும அதிக மான நிபுணர்களையும, 400 பொது மக்களையும சந்தித்து சாட்சியங்களைப் பதிவு செய் தது. ஆயிரத்துக்கும அதிகமான எழுத்துமூல விளக்கங்களையும ஆணைக்குழு பரிசீலனைக்கு எடுத் துக் கொண்டது.

(ண-032)

## பேராதனை மொரட்டுவை பல்கலை நாளை

கொழும்பு ஜன 6

பேராதனை, மொரட்டுவை ஆகிய பல்கலைக்கழகங்கள் இறுதி ஆண்டு மாணவர்களுக் காக நாளை 8 ஆம திகதி மீண்டும திறக்கப்படும-

களனி, கொழுமபு, ஸ்ரீ ஜெய வர்த்தனபுர பல்கலைக்கழகங் கள் அடுத்த 11 ஆம திகதியும, ருஹுனு பல்கலைக்கழகம அடு த்த 15 ஆம திகதியும மீண்டும திறக்கப்படும-

(ண-007)

## இந்திய வம்சாவளியினரின் பொருளாதார மேம்பாட்டிற்கு துரித அபிவிருத்தித் திட்டம்

### இ. தொ. கா. வின் அடுத்த இலக்கு இது என்கிறார் தொண்டமான்

கொழுமபு, ஜன 6

— க் தமிழ்மாறன் —

இலங்கை வாழ் இந்திய வமசாவளியினரின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்கு வழி செய்ய வேண்டியதுதான் அடுத்து நமமிடம இருக்கும பணியாகும். அப்படி ஒரு சமூக, பொருளாதார அபி விருத்தியை நமது சமுதாயம குறுகிய காலத்தில் அடைவ தற்கு ஏற்றதான ஒரு துரித திட்டத்தை இலங்கை தொழி லாளர் காங்கிரஸ் வகுத்து செயல்படுத்த இருக்கிறது.

இ தொ கா தலைவரும புடைவைக் கைத்தொழில், கிரா மக் கைத்தொழிற்றுறை அபி விருத்தி அமைச்சருமான திரு சௌமியமூர்த்தி தொண்டமான் இப்படித் தெரிவித்தார்.

திரு தொண்டமான் "சிந்தா மணி"க்கு அளித்த ஒரு சிறப்புப்

(2 ஆம் பக்கம் பார்க்க)

## வி. பி. சிங்கை ரஞ்சன்நேற்று சந்தித்தார்

கொழுமபு, ஜன 6

வெளிவிவகார அமைச் சர் திரு ரஞ்சன் விஜேரத்ன நேற்று இந்தியப் பிரதமர் திரு வி பி சிங்கை சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தினார். இந்தியப் பிரதமரின் உத்தி யோகபூர்வ இல்லத்தில் நடை பெற்ற இச்சந்திப்பு அரை மணி நேரம நீடித்தது.

இந்தியப் பிரதமர் இப் பேச்சுவார்த்தையின் போது தமிழ் மக்கள் எதிர்நோக்கும பாதுகாப்புப் பிரச்சினைகளை திரு விஜேரத்னவிடம எடுத்துக் கூறினார்.

இதே சமயம இலங்கை - இந்திய தூதுக்குழுவினரிடையே நேற்று முன்தினம நடைபெற்ற

(2 ஆம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் காங். மாநாடு இன்று

கொழுமபு, ஜன 6

ஸ்ரீலங்கா முஸ்லிம காங கிரஸின் ஒன்பதாவது வரு டாந்த தேசிய மாநாடு கொழும்பு விகாரமகாதேவி பூங்கா திறந்த வெளியரங் கில் அமைக்கப்பட்டுள்ள மர் ஹூம் எம் ஐ அலி உதுமான் அரங்கில் இன்று நடை பெறும்-

தேசியத் தலைவரும, திகாமடுல்ல மாவட்ட எம பி யுமான ஜனாப் எம எச் எம அஷ்ரப் பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

(ண-007)

## பட்ஜட் விவாதத்தில் தெரிவிக்கப்பட்ட கருத்துகளுக்காக சகல எம். பி களுக்கும் பதில் தனிப்பட்ட முறையில் வரும்

கொழும்பு ஜன 6

கடந்த வரவு செலவுத் திட்ட விவாதத்தின் போது சகல எம் பீமார்களும் சமர்ப்பித்துள்ள கருத்துக்க ளுக்குத் தனிப்பட்ட முறை யில் பதில் அளிக்க வேண் டும்-

ஜனாதிபதி திரு ஆர் பிரேம தாச இவ்வாறு சகல அமைச் சர்களுக்கும் ஆலோசனைகளை வழங்கி இருக்கிறார்-

இப்பணி முறையாக மேற் கொள்ளப்படுகிறதா என்ப தைக் கண்காணிக்குமாறும் அவர் கொள்கை திட்டமிடல் அமைச்சுக்கு உத்தரவு பிறப்பித் திருக்கிறார்-

தனிப்பட்ட முறையில் அனுப்பப்படும் இக்கடிதங்களில் வரவு செலவுத் திட்ட விவாதம குழுநிலை விவாதம் போன்ற வேளைகளில் எம் பீமார்கள் தெரிவித்த யோசனைகளுக் கான பதில்கள் தெரிவிக்கப் பட்ட குற்றச்சாட்டுக்களில் உள்ள உண்மை பொய் நிலைமை எடுக்கப்பட்ட நட வடிக்கைகள், ஆகியவற்றை வெவ்வேறாகக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும்-

இவ்வாறு ஜனாதிபதி அமைச் சர்களுக்குத் தெரிவித்திருக்கி றார்-

[ண—007]

## சோதனையிடும் பொலீஸார் சீருடையில் செல்ல உத்தரவு

சந்தேகத்திற்கிடமான ஒரு வீட்டை சோதனையிடச் செல்லும் பொலீஸார் சீருடை அணிந்திருக்க வேண் டும்-

அவர்கள் சிவில் உடையில் செல்லும் போது தம்மை யார் என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள தமது அடையாள கார்டுகளைக் காட்ட வேண் டும்-

பொலீஸ் மாஅதிபர் திரு ஏர்னஸ்ட் பெரேரா இப்படி சகல பொலீஸ் நிலையங்களுக் கும் உத்தரவு பிறப்பித்திருக்கி றார்-

சில ஆயுதபாணிகளா

(3ஆம் பக்கம் பார்க்க)

ஆகக் கூடுதலான விற்பனையுள்ள தமிழ் வார இதழ் சிந்தாமணி தான்

# சிந்தாமணி சிறு விளம்பரங்கள்


## மணமகன் தேவை

கிழ் மாகாணத்தில் கௌரவமான முஸ்லிம் பெற்றோர், பம்பலப்பிட்டி முஸ்லிம் மஹரா வித்தியாலயத்தில் படித்த, அரசாங்க ஆங்கில ஆசிரியைக்கு படித்தோதிய, நல்லொழுக்கமுள்ள, மார்க்கப்பற்றுள்ள, அரசாங்க உத்தியோகம் அல்லது சொந்த வியாபாரம் செய்யும் மணமகனை எதிர்பார்க்கின்றார்கள். கவர்ச்சியான சீதனம் கொடுக்கப்படும். தொடர்பு கொள்க— விளம்பரதாரர் இலக்கம்— ஜ-07-01, மே/பா சிந்தாமணி, த பெ 1257 கொழும்பு.

## கார் டிறைவிங் பயிற்சி

கொழும்பில் உள்ளோர் மட்டும் டிறைவிங் பழக விரும்பினால் விபரங்களுக்கு விலாசத்தை அனுப்பவும்.
94/5 Vivekananda Hil Colombo 13.
வி இ 029139

## வாகன ட்றைவிங் பயிற்சி

பஸ், கார், மோட்டார் சைக்கிள் வாகனப் பயிற்சி, சர்வதேச லைசன்ஸ் ஒழுங்கு செய்து தரலாம். சூரியா பாமசி, 388, காலி வீதி, வெள்ளவத்தை. கிளை— 17, விஜித றோட், தெஹிவளை, தொலைபேசி— 716853.
வி இ 027790

## ஆங்கில டைப்ரைட்டர்

ஆங்கில டைப்ரைட்டர்கள் விற்பனைக்கு உண்டு விலை ரூபா 2,900/- ற்கு மேல்.
Colombo Gift House 42, Keyzer St. Pettah.
வி இ 027307

## ஆசிரியை தேவை

ஆசிரியை தேவை— மொண்டிசூரி வகைப் பாடசாலைக்கு ஆசிரியை தேவை. கல்வித் தகைமை மற்றும் தகைமைகளுடன் உடனடியாக விண்ணப்பிக்கவும். தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
Secretary. 61, Daskara, Muruthagamula, (Via, Gampola)
வி இ 026088

## பணிப்பெண் தேவை

கொழும்பில் இரண்டு குழந்தைகளைப் பராமரிக்க வீட்டுப் பணிப்பெண் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம். விபரங்களுக்கு தாய்லா—
117/B Abesekara Road Kawdana Dehiwela
வி இ 029268

## பெண் ஊழியர் தேவை

எடெண்டன்ட் வேலைக்கு ஒரு நடுத்தர வயதுப் பெண் தேவை. ஓரளவு ஆங்கிலம், சிங்களம் தெரிந்திருத்தல் விரும்பத்தக்கது. முன் அனுபவம் அவசியமில்லை. நேரில் வருவோர் செவ்வாய், புதன், வியாழக்கிழமைகளில் வரலாம்.
U & A Clinic. 22, Averiwatte Road, Wattala.
வி இ 029418

## முஅத்தின் தேவை

மஸ்ஜிதுல் குர்பத்துஸ் ஸாகிரீன் வஸா வியா குர்ஆன் மத்ரஸாவில் ஓதிக் கொடுக்கவும், பள்ளியில் முஅத்தின் வேலை பார்க்கவும் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும். "பைத்துல் மிஹ்ன்" 98, மீரிப்பண்ண, தர்காநகர்.
வி இ 029168

## ஒலிபெருக்கி விற்பனை

அம்பிலிபயர்கள், ஹோன், யுனிட், மைக் ஸ்ராண்ட், விற்பனைக்கு உண்டு. விலை ரூ. 900/- க்கு மேல்.
Colombo Gift House 42, Keyzer St. Pettah.
வி இ 027307

## விற்பனைக்கு உரியவை

நெஷனல், அகாய் வீடியோக்கள் கவனமாகப் பாவித்தவை விற்பனைக்கு—
Telecave — 105—1/5, Olcott Mawatha (Opposite Fort Station) Rupavahini Buildings, 1st Floor, Phoie: 5453 7
வி இ 027272

நெஷனல் என் வி 390 ஷார்ப் வீடியோ டெக்கள் விற்பனைக்கு—
Telecave — 105—1/5, Olcott Mawatha (Opposite Fort Station) Rupavahini Buildings, 1st Floor, Phoie: 5453 7
வி இ 027995

தென்னிந்தியா சென்னையிலிருந்த ஒரு குத்பா பிரசங்கம் "வாழ்க்கையே வணக்கமாகு" வைத்தியக் கலாநிதி ஆலி ஜூனைப் ஹபீப் முஹாமத் நிகழ்த்தியது. ஒரு மணித்தியால ஒலிப்பதிவு நாடா (ஓடியோ கெஸட்) நாற்பது ரூபா மட்டுமே. தொடர்பு கொள்ளுங்கள்— ஹோட்டல் மௌலானா புத்தக நிலையம், 136, 2ம் குறுக்குத் தெரு, கொழும்பு -11. தொலைபேசி— 24292 "பாம் லீப்" முஸ்லிம் ஹோட்டல் 211/1, ஓல்கொட் மாவத்தை, கொழும்பு-11. தொலைபேசி— 437258.
வி இ 029456

## கருவிகள் திருத்துதல்

ரேடியோ, டீ வி, ஹவுஸ் வய...

## தேவைகள்

தலைநகரின் பிரபல ஹோட்டலுக்கு அனுபவமுள்ள பில்மேக்கர், சுப்பவைசர்மார், மெனேஜர்மார் உடன் தேவை— முழு விபரங்களோடு விண்ணப்பிக்கவும்— 211/1, ஓல்கொட் மாவத்தை, கொழும்பு-11.
வி இ 029456

## குத்தகைக்கு உண்டு

கட்டிட நிர்மாணத்துக்கான இரும்புப் பொருட்களை (ஹாட் வெயார் ஐட்டம்ஸ்) உற்பத்தி செய்யும், சகல இயந்திர சாதனங்களை உள்ளடக்கியதும் கொழும்புக்கு மிக அண்மையில் அமைந்துள்ளதுமான தொழிற்சாலை குத்தகைக்கு கொடுக்கப்பட உள்ளது. மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்க— விளம்பரதாரர் இலக்கம்— 27-949 மே/பா சிந்தாமணி, த பெ 1257, கொழும்பு.

## வாடகைக்கு / குத்தகைக்கு

வியாபார ஸ்தலம் வாடகைக்கு அல்லது குத்தகைக்கு உண்டு. கலேவெல நகரில், கலாவெவ வீதியில் சில்லறைக் கடை மிகவும் குறைந்த விலையில் கொடுக்கப்பட உள்ளது. பஸ் ஸ்டாண்ட் அருகில் உள்ளது— ஹோட்டலுக்கு மிகவும் சிறந்த இடம். நேரில் வரவும்— எஸ் ஏ ரசாக், நொ— 5, மார்க்கட், கலேவெல.
வி இ 027605

## வசிய மாந்திரீகம்

முனிவர்கள் மக்களுக்காக தையாண்ட சகல மத மக்களுக்...

## வீட்டு டியூஷன் கல்வி

முதலாம் வகுப்பு தொடக்கம் ஓ/எல் வரை கணிதம் வீடுகளுக்கு வந்து படிப்பிக்கப்படும்.
Mashool. 144, Demetagoda Road, Colombo 9.
வி இ 029143

## கல்விச் சஞ்சிகை

வெகு விரைவில் வெளிவரவிருக்கும் கல்வி இலக்கிய சஞ்சிகையில் மாணவர்களின் ஆக்கங்களும், வளர்ந்த, வளரும் எழுத்தாளர்களின் சிறுகதை, கவிதை, கட்டுரைகளும் இடம் பெறும். உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்—
M.H.M. Naufar (teacher)
140. Bulugehatenne Akurana.

## யந்திரம் மந்திரம்


# சுமார் ஒரு லட்சம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தில் மூழ்கி இருப்பதாகவும், சில பகுதிகள் வெள்ளத்தினால் சூழப்பட்டு இருக்கின்றன எனவும் அம்பாறை அரச அதிபர் திரு முதன்நாயக்கா தெரிவித்தார்.

10,000 குடும்பங்கள் வீடு வாசல்களை இழந்துள்ளன. இவர்களை மேட்டு நிலப் பகுதிகளுக்கு அழைத்துச் செல்லவும், இவர்களுக்கு உணவு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அகதிகள் படகுகளில் ஏற்றி வரப்படுவர்.

வீதிகள் வெள்ளத்தில் மூழ்கி இருப்பதால் அம்பாறையில் போக்குவரத்து சீர்குலைந்துள்ளது.

ஊவாபரணகம பகுதியும், மாத்தளை நகரமும், பொலன்னறுவை, கல்லேல்ல பகுதியும் வெள்ளக் காடாகியுள்ளன. போக்குவரத்து பாதிக்கப்பட்டிருக்கிறது.

அம்பாறை, பொலன்னறுவை மாவட்டப் பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கர் வயல் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

பொலன்னறுவையில் நீர் மட்டம் உயர்ந்திருக்கிறது.

நுவரெலியா, கந்தபொல வலப்பனை பகுதிகளும் பாதிக்கப்பட்டிருக்கின்றன.

அம்பாறையில் நிலைமை மோசமானால் விமானப் படையின் உதவியைப் பெற்று உணவுப் பொட்டலங்களைப் போட நேரிடுமென்று அம்பாறை அரச அதிபர் தெரிவித்தார்.

வெல்லாவெளி என்ற இடத்தில் ஒரு கிராமம் வெள்ளத்தில் முழுமையாக மூழ்கியிருக்கிறது. பாதிக்கப்பட்ட குடும்பங்கள் பாடசாலைகளில் தஞ்சமடைந்திருக்கின்றன.

இங்கு 200இற்கும் மேற்பட்ட மாடுகள் இறந்துள்ளதாக அங்கிருந்து கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

பாதிக்கப்பட்டவர்களை பாதுகாப்பாக வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் உதவி வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

இதே வேளை, கல்முனையில் கடல் அரிப்பு அப்பகுதி மக்களை பெரிதும் பதட்ட நிலைக்குள்ளாக்கி இருக்கிறது.

கல்முனை ஐஸ் தொழிற்சாலையில் இருந்து நிந்தவூர் வரைக்குமான கடற்கரையோரப் பகுதிகள் கடலால் அரிக்கப்பட்டிருக்கின்றன. கடற்கரையோரம் இருந்த வாடிகள், பள்ளிவாசல் என்பன சேதமாகியிருக்கின்றன.

பாதிக்கப்பட்ட அகதிகளுக்கு பல்வேறு இடங்களிலும் வசதிகளைச் செய்து கொடுக்க பல கழகங்களும், இயக்கங்களும் முன்வந்துள்ளன.

சமூக சேவா திணைக்கள அதிகாரிகள், அவ்வப்பகுதிகளுக்குச் சென்று நிவாரண நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

நிவாரணப் பணிகளை மேற்கொள்வதில் தமது அமைச்சின் அதிகாரிகள் தொடர்ச்சியாகப் பணியாற்றி வருகின்றனர் என்று சமூக சேவைகள் அமைச்சின் செயலாளர் திரு ஜஸ்டின் டயஸ் தெரிவித்தார். (ண—கு—281—007)

# வி. பி. சிங்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தையின் போது இந்தியப் படை விலக்கல் குறித்து விதிக்கப்பட்டுள்ள கால அவகாசத்தை மீள் பரிசீலனை செய்ய இந்திய தூதுக்குழு இணக்கம் தெரிவித்தது. இப்பேச்சுவார்த்தை ஒன்றரை மணி நேரம் நீடித்தது. (ண—032)

# ஊழியர்களின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கள் வழங்கப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின் பேரில் பிரஸ்தாப ஊழியர்களுக்கு 30,000 ரூபா 40,000 ரூபா, 50,000 ரூபா என்ற ரீதியில் இளைப்பாற்று நன்கொடைப் பணம் வழங்கப்பட்டிருக்கின்றன. (ண—007)

# பொருளாதார...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேட்டியில் மேலும் தெரிவித்ததாவது—

இலங்கை அரசு பின்தங்கிய கண்டிய கிராமத்தவர்களின் சமூக அபிவிருத்திக்கென நிதி ஒதுக்கீடு செய்கிறது. அவர்களின் நலவுரிமைகளைப் பேணுவதில் முதன்மை அளிக்கிறது. ஆனால் இந்திய வம்சாவளி மக்களுக்கு அவ்வாறான ஒரு திட்டம் இல்லை.

இ தொ கா கடந்த பத்து வருடங்களுக்கு முன்னதாக இப்படியான ஒரு திட்டத்தை செயல்படுத்துவதற்குத் திட்டமிட்டு செயல்பட்டு வருகிறது.

சமூக, பொருளாதார அபிவிருத்திக்காக காங்கிரஸ் தொழில் நிறுவனம் தோற்றுவிக்கப்பட்டது. இந்த நிறுவனம் செயல்படுவதற்கு நிதி தேவை. உலக வங்கி, ஏனைய நாடுகளின் அபிவிருத்திக்கு நிதி வழங்குவது போல், காங்கிரஸ் தொழில் நிறுவனத்திற்கும் நிதி வழங்கும் ஒரு நிறுவனம் தேவை.

... கொடுத்தவரும் அவர்தான்" என்று கூறினார்.

என்றாலும் அவர் பதவியில் இருந்த 10 ஆண்டு காலத்தில் நமது மக்களின் பிரஜாவுரிமைக்கு முற்றும் முழுதான தீர்வைக் காண்பதில் ஆர்வம் காட்டவில்லை.

இன்றைய ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச துணிவுடன் பிரஜாவுரிமைப் பிரச்சினைக்கு முற்றும், முழுதான தீர்வைக் கண்டது மட்டும் அல்லாமல், நாடற்றவர் பிரச்சினைக்கு முற்றுப்புள்ளியும் வைத்தார்" என்றும் அவர் சொன்னார்.

இந்தியக் கடவுச் சீட்டுப்

(3ஆம் பக்கம் பார்க்க)


## கண்டியில் கலண்டர்

கண்டியில் புதுவருடக் கலண்டர்களையும், தமிழ், சிங்கள, ஆங்கில அரிச்சுவடிப் புத்தகங்களையும், டயரிகளை...

## ஆங்கில டைப்ரைட்டர்

ஆங்கில டைப்ரைட்டர்கள் விற்பனைக்கு உண்டு விலை ரூபா 2,900/- ற்கு மேல்.

Colombo Gift House 42, Keyzer St. Pettah.

வி இ 027307

## கமரா பழுதுபார்த்தல்

கமரா சேவிஸிங், லென்ஸ் கிளினிங், பிளஷ் கண் பழுது பார்த்தல் செய்யப்படும். கொழும்பு கிப்ட் ஹவுஸ், 42, கெய்சர் வீதி, (பொலீஸ் நிலையம் எதிரில்) புறக்கோட்டை.

Colombo Gift House 42, Keyzer St. Pettah.

வி இ 027307

## கருவிகள் பழுதுபார்த்தல்

டீ வி, வீடியோ, ரேடியோ, கல்குலேட்டர்கள் துரிதமாகவும், உத்தரவாதத்துடனும் திருத்திக் கொள்ளவும். அன்டெனு, பூஸ்டர், வீடியோ ஹெட்கள் மற்றும் உதிரிப்பாகங்களுக்கும்.

Telecave — 105—1/5, Olcott Mawatha (Opposit Fort Station) Rupavahini Buildings, 1st Floor Phone: 5453 77

வி இ 027995

## மலையாள மாந்திரீகம்

எண்ணியோரை எண்ணியபடி மலையாள ஜெய்பகவதி மூலம் காதலர், காதலியை பெற விரும்புவோர்க்கு இருவரினதும் பெயர்களுடன், நம்பிக்கையுடன் உங்கள் எண்ணங்களை நிச்சயமாக நிவர்த்தி செய்து கொண்டு போக எமது கட்டணம் 350/- நேரில் வருவது சாலச் சிறந்தது. இலவச விபரம் நேரில் மட்டுமே. வருகை தர வேண்டிய முகவரி- பி கே சாமி, மலையாள மாந்திரிகர், ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம், இல- 33. தினச்சந்தைக் கட்டிடம், நுவரெலியா, தொலைபேசி- 052—2508.

வி இ 1066

---

ரீன் வஸா வியா குர்ஆன் மத்ரஸாவில் ஓதிக் கொடுக்கவும், பள்ளியில் முஅத்தின் வேலை பார்க்கவும் தகுதியானவர்கள் விண்ணப்பிக்கவும். "பைத்துல் மினன்" 98, மீரிப்பன்ன, தர்காநகர்.

வி இ 029168

## கமரா உபகரணம் தேவை

புதிய அல்லது சிறிது பாவித்துள்ள கமராக்களுக்கும் உபகரணங்களுக்கும் நியாயமான விலை கொடுக்கப்படும். "கொழும்பு கிப்ட் ஹவுஸ்" 42, கெய்சர் வீதி, (பொலீஸ் நிலையம் எதிரில்) புறக்கோட்டை.

Colombo Gift House

வி இ 027321

## வாகனங்கள் தேவை

ஒஸ்டின் ஏ 40, ஏ 50, ஏ 55 கேம்பிரிஜ் கார்/வேன் சிறிய லொறி பெட்போர்ட் தேவை. விலை நிலைமை விபரமாகக் குறிப்பிடவும். விளம்பரதாரர் இலக்கம்- 27-647 மே/பா சிந்தாமணி, த பெ 1257, கொழும்பு.

## மாந்திரீக வசியம்

விரும்பும் காதலன், காதலியை (ஆண் - பெண்ணை) கூடிய தீங்கில்லாத வசியம் செய்து சகலரின் விருப்பத்துடனும் திருமணம் செய்ய கணவன் - மனைவி பிரச்சினைகள் தீர்த்து தாம்பத்திய உறவு தொடர்ந்து இன்பமாக இருக்க விரும்பியோரை நன்மைக்காகத் தன் வசப்படுத்த, உதவி பெற, பிரிந்து சென்ற காதலன் - காதலி கணவன் -மனைவியை வரவழைக்க உறவாக்க, வேண்டாதவரை தகாத உறவு, கெட்ட பழக்கங்களை மறக்க, வெளியில் செல்ல முடியாத வெட்கமான வேதனையான குடும்ப வாழ்க்கை சம்பந்தமான பிரச்சினைகளை, நோய்களை தீர்க்க டாக்டர் மந்திரயோகி, குருசக்தி நிலையம், கல்லடி, மட்டக்களப்பு.

(Batticaloa) Sri Lanka

வி இ 026082

---

437258.

வி இ 029456

## கருவிகள் திருத்துதல்

ரேடியோ, டீ வி, ஹவுஸ் வயரிங் பயிற்சி வகுப்புகள் கிழமை நாட்களிலும், விடுமுறை நாட்களிலும் நவீன முறையில் பயிற்சி அளிக்கப்படுகின்றன. குறுகிய காலத்தில் ரேடியோ, டீ வி, டெக் என்பன திருத்திக் கொடுக்கப்படும்.

Gainsbrog Institute 121 1st Division Maradana Colombo .0

வி இ 027936

## எண் கணித ஜோதிடம்

எண் கணித சாஸ்திரி, நியூமரலாஜி கைரேகை நிபுணர் (தமிழ்நாடு) சென்னையில் பிரபல்யமானவர். பண்டிட் பாவா உங்கள் கால பலன்களைச் சொல்வதில் மிகுந்த தேர்ச்சியும் அனுபவமும் உள்ளவர். பெயர்களையும் சரிபார்த்துக் கொடுக்கப்படும். இதற்கு உங்கள் பிறந்த திகதி, மாதம், ஆண்டு தேவை. சனி, ஞாயிறு முழுநாளும் பார்க்கப்படும். மற்றைய நாட்கள் பகல் 10 மணி முதல் 5 மணி. பண்டிட் பாவா, கற்பகம் ரெஸ்டுரெண்ட், இல- 42, குமார வீதி (மேல் மாடி) புறக்கோட்டை. கொழும்பு-11. போன்- 549533

வி இ 029269

## இஸ்லாமிய மாந்திரிகம்

இஸ்லாமிய மாந்திரிகம்- வீட்டுக் கார்மானத்துக்கு, கணவன் மனைவி முகப்பத்துக்கு, காதல் ஜயமாக, திருமண தடை நீங்க, நோய்கள் அகல மற்றும் இசும் அஷ்மா வேலைகளை செய்ய ஜின் வாசலாத் யந்திரம். வெள்ளி. செவ்வாய் தவிர ஏனைய நாடுகளில் 9-00 மணி முதல் 2-00 வரை திறக்கப்படும். அல்லது முத்திரை ஒட்டிய கவருடன் தொடர்பு கொள்க.

Mohamed Nizamdeen Kallana thukkeda Neerella Akurana

வி இ 026078

---

வி இ 027605

## வசிய மாந்திரீகம்

முனிவர்கள் மக்களுக்காக கையாண்ட சகல மத மக்களுக்கும் ஏற்ற புனித புராதன வைத்தியம். சர்வமத சன்மார்க்க மலையான மாந்திரீக மட்டக்களப்பு மாந்திரீக குருசக்தி நிலையத் தலைவர் புராதன வைத்திய நிபுணர் சுகாதார அமைச்சினால் பதிவு செய்யப்பட்ட சித்த ஆயுர்வேத மருத்துவ பண்டிட் ஹோமியோபதி (இந்தியா) அக்குபஞ்சர் டிப்ளோமா (இலங்கை) டாக்டர் மந்திரயோகியிடம் நோய், பேய், சூனியம் தீர்த்து காவல் செய்து காதல் திருமணம், கல்வி, பரீட்சை, தொழில், வியாபாரம், வெளிநாட்டுப் பிரயாணம் சகல காரியங்களிலும் வசியம் செய்து வெற்றி பெறலாம். டாக்டர் மந்திரயோகி, குரு சக்தி நிலையம், கல்லடி, மட்டக்களப்பு.

(Batticaloa) Sri Lanka

வி இ 026083

## மாந்திரீக் வசியம்

வர முடியாதவர்கள் கடல் கடந்து வெளிநாட்டில் இருப்பவர்கள் முதல் கடிதத்திலேயே முழு விபரமும் விருப்பங்களையும் சம்பந்தப்பட்ட ஆண் - பெண் பெயர்களையும் எழுதி விலாசமிட்ட முத்திரைக் கவரும் அனுப்பி ஆலோசனைகளுடன் பொருட்களை பார்சலில் (தபாலில்) பெற்று பாவித்து பலன் அடையலாம். நோய்கள் பிரச்சினைகளைத் தீர்த்து மனிதர்களுக்கு தீங்கு விளைவிக்காத உங்கள் நியாயமான விருப்பங்களை மருந்து மந்திர வசிய யந்திர ஆகர்ஷண மனோ வசிய, யோகாசன தியான மந்திரப் பூஜையில் பிரார்த்தனைகள் மூலம் இறைவன் துணையோடு நிறைவேற்றி வைக்கப்படும். பூசைச் செலவு அனுப்புவோரின் விடயம் முதலில் செய்யப்படும். டாக்டர் மந்திரயோகி, குருசக்தி நிலையம், கல்லடி. மட்டக்களப்பு.

(Batticaloa) Sri Lanka

வி இ 026084

---

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்-

**M.H.M. Naufar (teacher) 140. Bulugehatenne Akurana.**

## யந்திரம் மந்திரம்

உங்களுடைய தேவைகளை என்னால் பூர்த்தி செய்து தர முடியும். பொருத்தமான திருமணம் கைகூடவும், காதலன் - காதலியின் மனதை வெல்லவும், வெறுத்தவர்களை நீக்கி விரும்பியவர்களை வசப்படுத்தவும், எந்தக் கொடூர நபரையும் அடக்கவும். விரும்பியவர்களை வசப்படுத்திக் கொள்ளவும், கணவன் - மனைவி ஒற்றுமையாக இருக்க, வியாபாரம், விவசாயம், கைத்தொழில் முன்னேற்றம் அடையவும், எந்த வகையான மன வேதனையோ கவலையோ பிரச்சினையோ இருந்தால் எழுதிக் கேளுங்கள். இல்லாவிட்டால் சந்தியுங்கள் இரகசியம் வெளியிடப்பட மாட்டாது. பி எம திசாநாயக்கா, இல- 55, மிகுந்து மாவத்தை, கொழும்பு-12 தொலைபேசி- 433955,, சந்திக்கும் நேரம் காலை 8 மணி 12 மணி வரை.

வி இ 029542/029463

## இஸ்லாமிய மாந்திரீகம்

இன்ஷா அல்லாஹ் - அநியாயக்காரர்களின் தொல்லைகளைத் தவிர்த்தல், வாழ்வும் புறக்கத்தும் உண்டாக்குதல், ஆபத்துக்களை விலக்குதல், முடுமைகளுக்கு மீட்சி, ராசி பார்த்தல், சுப முகூர்த்தம் பார்த்தல், வீடு - கடை வாகனங்களின் கார்மானம், சில நோய்கள், தோஷங்களுக்கு நிவாரணம், குடி விஷத்தை இறக்குதல், திருமணப் பொருத்தம் பார்த்தல், கணவன் - மனைவி உறவைப் பலப்படுத்துதல் முதலானவற்றை இஸ்மும் அஸ்மாக்களினால் செய்வோம். மாந்திரீக எண்ணெய்யும் உள்ளது. தொடர்புகளுக்கு முத்திரையுடன் கவரும் அனுப்பவும். விடுமுறைத் தினங்களில் நேரில் சந்திக்கலாம்.

Sufika Buhary Shams al Manzil 17 Eluwila. Panadura

வி இ 029161

---

தொழில் நிறுவனம தோற்றுவிக்கப்பட்டது. இந்த நிறுவனம செயல்படுவதற்கு நிதி தேவை. உலக வங்கி, ஏனைய நாடுகளின் அபிவிருத்திக்கு நிதி வழங்குவது போல், காங்கிரஸ் தொழில் நிறுவனத்திற்கும நிதி வழங்கும ஒரு நிறுவனம தேவை.

அப்படியானதொரு நிறுவனமதான் "தொண்டமான் நிதியம". இந்த நிதியத்திற்கு நன்கொடையாக வழங்கப்படும நிதி, இந்திய வமசாவளி மக்களின் சமூக, பொருளாதார அபிவிருத்திக்குப் பயன்படுத்துவதற்கே ஆகும.

கடந்த 50 ஆண்டு காலமாக நாம நமது இழந்த அடிப்படை உரிமைகளுக்காகப் போராடி வந்தோம. அவற்றை நாம அடைந்து விட்டோம.

இனி நமது அடுத்த நோக்கம சமூக, பொருளாதார அபிவிருத்தியேயாகும. காங்கிரஸ் தொழிலாளர் நிறுவனம, தொண்டமான் நிதியம, இ தொ கா ஆகிய மூன்று அமைப்புகளும இணைந்து இப்பணியைத் தொடரும.

இன்னும் ஓர் ஐமபது ஆண்டு காலத்திற்குள் நமது சமுதாயம சமூக, பொருளாதார ரீதியில் எழுச்சியுற்ற சமுதாயமாக மறுமலர்ச்சி அடைய வேண்டும.

இப்படி அவர் சொன்னார்.

கேள்வி ஒன்றுக்குப் பதிலளித்த அமைச்சர்,

"முன்னாள் ஜனாதிபதி திரு ஜே ஆர் ஜெயவர்த்தனா, இந்திய மக்களின் நலவுரிமைகளில் ஆர்வம காட்டினார் என்பதை மறுப்பதற்கு இல்லை. எமது சமூகத்திற்கு ஓர் அமைச்சர் பதவியைக்

---


## கண்டியில் கலண்டர்

கண்டியில் புதுவருடக் கலண்டர்களையும், தமிழ், சிங்கள, ஆங்கில அரிச்சுவடிப் புத்தகங்களையும், டயறிகளையும குறைந்த விலையில் பெற்றுக் கொள்ள-

அமீன் டிரேடர்ஸ்

48, டொரிங்டன் மாவத்தை, கண்டி.



## கொழும்பில்

90/91 டிசெ- ஓ/எல்

கல்விக் கருத்தரங்கு

கணிதம்/விஞ்ஞானம்

**21 — 1 — 90**

(ஞாயிறு 9 முதல் 3 மணி வரை)

**ஸ்ரீ ராமகிருஷ்ண**

மிஷன் மண்டபத்தில்

(வெள்ளவத்தை)

டிக்கட்டுக்கள் (30/-) மண்டப வாயிலில்

**டப்ளியூ. எல். ராஜரட்ணம்**

கண்டியில் சிறந்த ஆசான்


## மீண்டும் அறிவுக்களஞ்சியம்

இம்மாதம் 7 ந் திகதி முதல் ஞாயிறு தோறும் இரவு 8-30 மணிக்கு வானொலி முஸ்லிம் சேவையில் இந்நிகழ்ச்சியை மீண்டும் தயாரித்தளிக்கிறார் ஜனாப் எம் எச் இர்பான். ஏ சி ராவுத்தர் நெய்னா முஹம்மத் மீண்டும் இந்நிகழ்ச்சியை நடாத்துகிறார்.

## சிந்தாமணி இலக்கிய பீடம்

### ஞானச்சுடர்

ஞானச் சுடர் என்ற சுமார் 80 பக்கங்கள் கொண்ட நூலிலே சமயக் கட்டுரைகள் பத்து இடம்பெற்றுள்ளன— சுவாமி சாந்தானந்தா அவர்களுக்கு சமர்ப்பணம் செய்யப்பட்டுள்ள இந்த நூலை கல்விச் சேவை ஆணைக்குழு உறுப்பினரும், இலங்கை திறந்த பல்கலைக் கழக சிரேஷ்ட விரிவுரையாளருமான கலாநிதி ஆ கந்தையா எழுதி வெளியிட்டிருக்கிறார்—




இந்நூலின் முன்னுரையில் — "தேவாரம், பெரிய புராணம், திருவிளையாடற் புராணம், திருமுருகாற்றுப் படை ஆகியவற்றைப் படித்தபோது எனது கருத்தைக் கவர்ந்த சில அம்சங்கள் இங்கே ஆராய்ச்சிக் கட்டுரைகளாக உருப்பெற்றுள்ளன" என்று ஆசிரியர் கூறுகின்றார்— அவர் கூற்றுப்படி இந் நூலில் இடம்பெற்றுள்ள ...

### [untitled review]

...ந் எழுதி வெளியிட்டிருக்கும் "யௌவனம்" என்ற புத்தகத்தைச் சிபார்சு செய்யலாம்—

காவியக் காட்சி ஒன்றினைச் சித்திரிக்கும் அழகான அட்டையுடன் கூடிய இந்நூலில் சுமார் 100 பக்கங்களே உள்ளன— தமிழில் உள்ள பல பழைய புதிய இலக்கிய நூல்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட கரும்பு போன்ற சுவையுடைய கட்டுரைகள் 23 இந் நூலிலே இடம்பெற்றுள்ளன— ஒவ்வொன்றும் மணியான கட்டுரை— படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பம் தருகிறது—

இந் நூலுக்கு முன்னாள் அமைச்சர் திரு செ இராசதுரை ஆசியுரை வழங்கியுள்ளார்— "மற்றும் ஒரு மணியாரம்" என்ற கருத்தாழமுடைய முகவுரையை திரு எஸ் டி சிவநாயகம் எழுதியிருக்கிறார்—

நூலின் முதல் கட்டுரையின் தலைப்புத்தான் "யௌவனம்"

இது இத்தாலிய இலக்கிய மேதை பெஸ்கி என்ற வீரமாமுனிவர் இயற்றிய "தேம்பாவணி" என்ற தித்திக்கும் நூலைப் பின்னணியாகக் கொண்டு எழுதப்பட்ட கட்டுரையாகும்— கோலியாத்தைத் தாவீது வீழ்த்திய பைபிள் சம்பவம் இக் கட்டுரையில் வர்ணிக்கப்படுகிறது— "யௌவனம்" என்றால் இளமை என்று பொருள். ஜெயசிங் தீட்டும் தமிழிலும் "யௌவனம்" துள்ளி விளையாடுகிறது—

இந்த சிறந்த நூலில் இடம்பெற்றுள்ள கட்டுரைகள் அவ்வப்போது சிந்தாமணி இதழில் வெளிவந்தவை என்பது குறிப்பிடத்தக்கதாகும்—

நூல் வெளியீடு— மலையக வெளியீட்டகம்— கண்டி— விலை ...

விடுதலைக்காகவும், சுபீட்சத்திற்காகவும் தாம் பெரிதும் பாடுபடப் போவதாகச் சூள் உரைத்திருக்கின்றார்— பேச்சு நடை, அழகு தமிழில் ஆற்றொட்டமாகச் செல்கிறது—

— எஸ்

### நவஜோதி

இலங்கை தந்த சிறந்த இலக்கிய ஆர்வலர்களுள் ஒருவரான திரு க நவஜோதி லண்டனில் அகால மரணம் அடைந்து விட்டார் என்ற செய்தி அவரோடு பழகிய அனைவருக்கும் ஆழ்ந்த கவலையைத் தந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

கடந்த புதன்கிழமை இரவு லண்டனில் உள்ள சாலை ஒன்றைக் கடக்கும் போது மோட்டார் சைக்கிள் ஒன்று அவர் மீது மோதியதாகவும உடன் அவர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அரை மணி நேரத்தில் அகால மரணமானார் என்றும் தெரிய வருகிறது.

தொண்டமானாறு என்ற வடபகுதி கிராமத்தைச் சேர்ந்த திரு நவஜோதி இலங்கை பல்கலைக் கழக தமிழ்த்துறைச் சிறப்புப் பட்டதாரி பின்னர் எம் ஏ பட்டமும் பெற்றவர்-

இவர், சுவடிகள் திணைக்களத்தில் உதவி அதிகாரியாகச் சிறிது காலம் கடமையாற்றினார்- அப்போது அவர் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதியிருக்கிறார். அங்கு கடமையாற்றும் போது அவருக்கு ஒரு புலமைப் பரிசு கிடைத்தது. அதைப் பயன்படுத்தி அவர் ஆஸ்திரேலியா சென்றார்- அங்கும் படித்துத் தேறிய பின் லண்டனுக்குப் போய்ச் சேர்ந்தார்-

லண்டனில் அவர் "தமிழ்ப் பள்ளி" என்ற பெயரில் ஓர் ஆலவ்...

# ஸ்ரீ தியாகராஜ சுவாமி ஆராதனை

## பஞ்சரத்தின கீர்த்தனைகளை இலங்கையிலும் பாட ஏற்பாடு

> இந்து சமய இந்து கலாசார தமிழ் அலுவல்கள் ராஜாங்க அமைச்சு நடத்தும் 50 சங்கீத வித்துவான்கள் பஞ்சரத்தின கீர்த்தனைகளைப் பாடி ஆராதிக்கும் விழா எதிர்வரும் 15 ஆம் திகதி மாலை 5—00 மணிக்கு பம்பலப்பிட்டி சம்மாங்கோட்டார் மாணிக்க விநாயகர் ஆலயத்தில் நடைபெறுகிறது.

சங்கீத மும்மூர்த்திகளுள் ஒருவரான ஸ்ரீ தியாகராஜர் ஒரு இசை மேதை. இவரால் பாடப்பட்ட சுருதிகள் யாவும் இசைக் கலைஞர்களால் மாணவர்களால் பேணிப் பாதுகாக்க வேண்டிய பொக்கிஷங்களாகும்.

சுருதிகள், உற்சவ சம்பிரதாய கீர்த்தனங்கள், இசை நாடகங்கள் போன்ற பல உருப்படிகளை ஆக்கி, கர்நாடக சங்கீதத்திற்கே மெருகூட்டியவர் ஸ்ரீ தியாகராஜர்.

காலத்தால் அழியாத இவ் இசை உருப்படிகளை இசை உலகிற்கு அளித்த ஸ்ரீ தியாகராஜரை சங்கீத வித்வான்களும் கலாரசிகர்களும் மதித்து போற்றுகிறார்கள்.

அவரது இசை மாணிக்கங்களான பஞ்சரத்தின கீர்த்தனைகளைப் பாடி ஆராதிக்கும் சம்பிர...



...தாயம் இந்தியாவில் திருவையாற்றில் வருடா வருடம் நடைபெற்று வருவது போற்றதற்குரிய விடயம்.

இத்தகைய முறையில் இலங்கையிலும் நடத்த முன்வந்த இந்து சமய இந்து கலாசார தமிழ் அலுவல்கள் அமைச்சு ஆற்றும் பணி அளப்பரியதே!

ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமிகளால் இயற்றப்பெற்ற பஞ்சரத்தின கீர்த்தனைகள் சங்கீதச் சிறப்பும் சாகித்திய எழிலும் ஒருங்கே செறிந்த ஒப்பற்ற ஒரு கீர்த்தனை தொகுதியாகும்.

இவற்றில் ஸ்வாமிகள் தமது சங்கீத மேதா விலாசத்தையே ஒன்று திரட்டி அமைத்துள்ளார் என்று கூறுவது மிகையாகாது!

வைதீக சம்பிரதாயத்தில் கனராகங்கள் என்று வழங்கப்படும நாட்டை, வெள்ளை, ஆரபி, வராளி, ஸ்ரீ ஆகியவற்றில் அமைந்த இவ்வைந்து பிரதிகள் மற்ற பிரதிகளைப் போல் அல்லாமல் தனித்த முறையில் சிருஷ்டிக்கப் பெற்றுள்ளன.

"ஸாதிஞ்சனே" என்ற ஆரபி

**அருந்ததி ஸ்ரீரங்கநாதன் —**

ராக பிருதியின் சரணத்தில் முதல் வரிக்கும் மற்ற வரிகளுக்கு மிடையே வரும் ஸ்வர, சாமித்திய எழுத்துக்களும் இதர நான்கு சுருதிகளில் சரணங்கள் ஒரே அளவாக இல்லாமல் விதவிதமான தத்துவங்களுடன் காணப்பெறுவதும் கர்நாடக சங்கீதத்திலேயே ஒரு புதினம்!

ஆதி தாளத்திலேயே அமைந்த



தியாகராஜ சுவாமிகள்

இந்தப் பிரதிகளில் ஸர்வலகு தாண்டவமாடுகிறது. பக்திரசம் வெள்ளமெனப் பாய்கிறது-

ஆகவே ஸ்வாமிகளின் ஆராதனை விழா நடைபெறும் இடங்களில் எல்லாம் வித்வான்கள் பஞ்சரத்தின சுருதிகளை தேற்ற கானமாகப் பாடி வரும் சம்பிரதாயம் மிகவும பொருத்தமானது.

இந்த கீர்த்தனங்களில் பாடாந் தரத்தில் காலப் போக்கில் சிற் சில வித்தியாசங்கள் நுழைந்து விட்டன.

ஆயினும் சம்பிரதாய முறையில் இவற்றைப் பாடி தியாகராஜர் ஆராதனையில் கலந்து கொள்வது எல்லா சங்கீத வித்வான்களதும் கடமையும் பெருமையுமாகும்.

இசை உலகிற்கு அந்த ஒப்பற்ற மகான் ஆற்றிய சேவைக்கு நாம் செலுத்தும் இசையார்ப் பணமாகக் கருத வேண்டும.


(ம)

பொருளாதார...

இந் நூலில் இடம்பெற்றுள்ள பத்துக் கட்டுரைகளில் ஏழு கட்டுரைகள் ஆராய்ச்சிக் கட்டுரைகளாக மிளிர்கின்றன-

கலாநிதி கந்தையாவின் தமிழ் நடை தெளிந்த நீரோட்டம் போன்றது- பல்கலைக்கழகத்து ஏனைய தமிழ் பேராசிரியர்களைப் போல, கரடுமுரடான சருகல் நடையில் தமிழை எழுதுபவர் அல்லர் கலாநிதி கந்தையா! அவர் எதை எழுதினாலும், பாமரரும், பண்டிதரும் ரசித்துப் படிக்கக்கூடிய வகையில் எளிமையாகவும், விளக்கமாகவும் எழுதுவார்- அவ்வாறே இந்த ஞானச் சுடர் கட்டுரைகளும் அமைந்துள்ளன- ஆராய்ச்சி மூலம் அவர் வெளியிட்டுள்ள கருத்துக்களும் புதுமையானவை- சமய இலக்கியங்களில் அவருக்கு உள்ள ஞானமும், ஈடுபாடும் நன்கு புலனாகும் வண்ணம் அமைந்திருக்கிறது ஞானச் சுடர்- நூலின் விலை; ரூபா 25-00

## யௌவனம்



தரமான இலக்கியக் கட்டுரைகள் அடங்கிய ஒரு நூலைப் படிக்க விரும்பும் வாசகர்களுக்கு திரு தேவதாசன் ஜெய

நூல் வெளியீடு- மலையக வெளியீட்டகம்- கண்டி- விலை ரூபா 22-50.

## தாயாய் தங்கையாய்

"தாயாய், தமக்கையாய் தங்கையாய்" என்ற தலைப்புடன் ஒரு சிறு நூல் வெளிவந்திருக்கிறது- மேல் மாகாண சபையின்



ஒரே ஒரு பெண் அங்கத்தவரான திருமதி மாணிக்க வேலம்மாள் செல்லச்சாமி மாகாண சபையில் ஆற்றிய கன்னிப் பேச்சின் தொகுப்பு இந்நூல்- இதைத் தொகுத்தளித்திருக்கின்றார் கலைஞர் கலைச்செல்வன். சிறிய புத்தகமானாலும மூவண்ண அட்டையுடன் அழகாக அச்சிடப்பட்டிருக்கிறது-

திருமதி வேலம்மாள் தமது கணவர் திரு எம் எஸ் செல்லச்சாமியுடனும் ஜனாதிபதி பிரேமதாச, ஜனாதிபதி ஜயவர்த்தன மாகாண சபை முதல்வர் சுசில் முனசிங்க, புடைவைக் கைத்தொழில் அமைச்சர் திரு எஸ் தொண்டமான் ஆகியோருடனும் எடுத்துக் கொண்ட படங்கள் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன-

திருமதி வேலம்மாள் தமது பேச்சில் — பெண் இனத்தின்

பள்ளி" என்ற பெயரில் ஓர் கல்வி ஸ்தாபனத்தை ஆரம்பித்து சிறார்களுக்கு தமிழ் போதனையும் வயது வந்த மாணவர்களுக்கு தமிழ் இலக்கிய, இலக்கணக் கல்வியும் புகட்டி வந்தார். அத்தோடு தமிழில் ஒரு பத்திரிகையையும் வெளியிட்டு வந்தார்.

மாணவராகப் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே இலங்கையில் ஒரு மாதப் பத்திரிகை வெளியிட்ட பெருமையும் இவருக்கு உண்டு. "தமிழோசை" என்ற பெயரில் வெளிவந்த அந்தப் பத்திரிகையை திரு நவஜோதியும் தற்போது ஈரோஸ் கட்சியின் யாழ்ப்பாண எம் பியாக விளங்கும் திரு இ இரத்தினசபாபதியும சேர்ந்து வெளியிட்டனர்.

இலங்கையில் திரு நவஜோதி சமூக சேவைகளிலும ஈடுபட்டு இருந்தார். திராவிடர் முன்னேற்றக் கழகத்தின் கோட்பாடுகளில் ஈடுபாடுடைய திரு நவஜோதி கொழும்பில் கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றம் என்ற ஸ்தாபனத்தின தலைவராக இருந்தும் பணியாற்றினார்.

இவர் தமிழ் ஈழ விடுதலை இயக்கங்களின அனுதாபியாகவும் செயல்பட்டு வந்தார்.

லண்டனில் தமிழ்ப் பாடசாலை நடத்தி வந்த நவஜோதியை லண்டன் பி பி சி தமிழ் ஓசை பிரிவு பயன்படுத்திக் கொண்டது. அங்கு அவர் பகுதி நேர அறிவிப்பாளராகப் பணியாற்றி வந்தார். அவருடைய அகால மரணச் செய்தியை முதன் முதலாக புதன்கிழமை இரவே பி பி சி தமிழ் ஓசை ஒலிபரப்பி விட்டது.

பல தமிழ் நூல்களுக்கு ஆசிரியரான திரு நவஜோதி இந்தியாவிலும் யாழ்ப்பாணத்திலும் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாடுகளில் எல்லாம் பங்கேற்று கட்டுரைகள் வடித்திருக்கிறார்.

ஒரு சிறந்த எழுத்தாளரும் பேச்சாளருமான நவஜோதியின் இழப்பு இலங்கை தமிழ் மக்களுக்கு பெரிய நஷ்டமாகும்.

## ஏவுகணைகள் இனி இல்லை

சோவியத் பிரிபால்டிக் குடியரசுகளில் ஒன்றான லித்துவேனியாவின் தலைநகரான வில்னூஸில் ஏவுகணைகள் அகற்றப்பட்டு வருகின்றன-

பல வருடங்களாக இந்த ஏவுகணை கொண்ட இடம முட்கம்பிகளால் சுற்றிவளைக்கப்பட்டிருந்தது- ஏவுகணைகளை அகற்றிய பின்னர் இங்கு 60 கட்டிடங்கள் 600,000 ரூபில் செலவில் நிர்மாணிக்கப்படும-

இங்கு முன்பிருந்த சில கட்டிடங்கள் கடைத் தொகுதிகளாகவும், உணவுக் களஞ்சியங்களாகவும பாவிக்கப்படவுள்ளன- மேற்படி ஏவுகணைகள் இருந்த இடத்தின் ஒரு பகுதி விவசாய நடவடிக்கைகளுக்காகவும உபயோகிக்கப்படவுள்ளது- (ம)

## பொருளாதார....

(2ஆம பக்கத் தொடர்ச்சி)

பெற்று, இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் கீழ் தாயகம திரும்ப வேண்டியவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் இப்பொழுது இந்தியா செல்ல முடியாத நிலையில், இங்கேயே நிரந்தரமாக இருக்க விரும்புகிறார்கள். இதற்கு தாங்கள் கூறும பரிகாரம என்ன என்று கேட்ட போது, அவர் கூறியதாவது—

அவர்களைக் கட்டாயப் படுத்தி நாடு கடத்த முடியாது. இருபத்து நான்கு வருடத்திற்கு முன் செய்து கொண்ட ஒப்பந்தம இது.

அன்று இந்தியா செல்ல விண்ணப்பம செய்தோர் இன்று இல்லை.

குடும்பங்களைச் சேர்ந்த தலைவர்கள் இல்லை. பெற்றோர்கள் இல்லை. அவர்களின் பிள்ளைகள்தான் இருக்கிறார்கள். இவர்களைக் கட்டாயப் படுத்தி நாடு கடத்துவது மனிதாபிமானமாகாது.

இலங்கையும இந்தியாவும இவர்கள் சமபந்தமாக மீண்டும பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும. மனிதாபிமான ரீதியில் இதற்குத் தீர்வு காண வேண்டும.

இப்படி திரு தொண்டமான் சொன்னார்.

(ண—ங)

## சோதனையிடும்....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கோஷ்டினர் பொலீஸார் என்ற போர்வையில் இராக் காலங்களில் வீடுகளுக்குச் செல்கிறார்கள்-

அவர்கள் மக்களுக்கு அசௌகரியம் ஏற்படும் விதத்தில் நடந்து கொள்கிறார்கள்-

இது பற்றி பொலீஸ் மா அதிபருக்கு முறைப்பாடுகள் கிடைத்திருக்கின்றன- அதனையடுத்தே இந்தப் புதிய உத்தரவு!

அடையாள கார்ட்டைக் காட்டாமல் பொலீஸார் என்று கூறி மக்களுக்குத் தொந்தரவு கொடுக்கும் விதத்தில் செயற்படும் கோஷ்டிகள் இருந்தால் பிரதேச பொலீஸ் அதிபருக்கோ அல்லது பொலீஸ் தலைமையகத்துக்கோ அல்லது பொலீஸ் மா அதிபருக்கோ முறைப்பாடு செய்யலாம்-

பொலீஸ் மா அதிபர் இவ்வாறு பொதுமக்களைக் கேட்டிருக்கிறார்-

இதேவேளை இரவு நேரங்களில் வீடுகளைச் சோதனையிடச் செல்லக் கூடாது என்று பாதுகாப்பு அமைச்சு முப்படையினருக்கும் உத்தரவு பிறப்பித்திருக்கிறது என்பது அறிந்ததே!

இராணுவத்தினரும் வீடுகளைச் சோதனையிடச் செல்லும் போது தம்மை அடையாளம காட்ட வேண்டும் என இராணுவத் தளபதியும் ஏற்கனவே உத்தரவு பிறப்பித்திருக்கிறார்-

# தமிழ் இலக்கியப் பணிக்கு அரசியல்வாதிகளின் பங்கு

அரசியல்வாதிகள் இலக்கியவாதிகளாகவும் மாற வேண்டும். பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின் கீழ் அவர்களுக்கு ஒதுக்கப்படும் பணத்தில் ஐம்பதாயிரம் ரூபாயையாவது அவர்கள் இலக்கியப் பணிகளுக்காகச் செலவிட வேண்டும்.

இவ்வாறு மத்திய மாகாண சபை உறுப்பினர் திரு டபிள்யூ ரட்ணம் வலியுறுத்தினார்.

"ஷாமிலாவின் இதயராகம்" நாவலின் இரண்டாம் பதிப்பு வெளியீட்டு சிறப்பு விழா அண்மையில் மருதானை "சரசவிபாய" மண்டபத்தில் நடைபெற்ற போது விழாவுக்குத் தலைமை வகித்த திரு ரட்ணம் மேற்கண்டவாறு கூறினார்.

நாடாளுமன்றத்தில் சுமார் 40க்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள்.

இவர்கள் இவ்விதம் பணம் ஒதுக்கினால் வருடாந்தம் இருபது லட்சத்துக்கும் மேல் பணம் திரளும்.

தமிழ் இலக்கியப் பணிக்கு இவ்விதம் நிதி சேர்ந்தால் "ஷாமிலாவின் இதயராகம்" போன்ற நாவல்களை இரண்டு பதிப்பு மட்டுமல்ல, இருபது பதிப்புகளைக் கூட வெளியிடலாம் எனவும் அவர் குறிப்பிட்டார்.

விழாவில் சமுகமளித்திருந்த ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜும் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம எச் எம் அஷ்ரஃபும் இது சம்பந்தமாக ஒரு பிரேரணையை நாடாளுமன்றத்தில் கொண்டு வர வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார்.

(ம)


## ரோய் சேரின்

### விசேஷ ஆங்கில பேச்சு வகுப்புகள்

(அடிப்படை இலக்கணத்துடன்)

ஆரம்பம்- 08—01—1990

60 நாட்களில் ஆங்கிலம்
(தமிழ் மூலம்)

* நேர்முக வகுப்புகளில் பங்குபற்றுதல் மூலமே ஆங்கிலம் சரளமாகப் பேச முடியும்.
* இலங்கையிலே ரோய் சேர் அதிகமான ஆங்கில புத்தகங்கள் எழுதிய, அதிகமான மாணவ - மாணவிகளுக்கு படிப்பித்த ஆசிரியர்.

— நேரில் மட்டும் வரவும் —

**தக்ஷிலா வித்தியாலயம்**

75, பஞ்சிகாவத்தை ரோட், மருதானை, கொழும்பு-10
(டவர் அரங்கு அருகில்)



முன்னேறி வரும் கொமபியூட்டர் யுகத்தில் அடியெடுத்து வைக்க உங்களை தயார்படுத்திக் கொள்ளுங்கள்

எங்கள் பயிற்சிகளில் உங்களுக்குப் பொருத்தமானதை தேர்ந்தெடுக்க

## இலவச கருத்தரங்கம்

உங்களை அன்புடன் அழைக்கிறது

போயா - 10-1-90 காலை 9-30 மணிக்கு

**At:— 294—2-1 Galle Road. Bambalapitiya.**
**(Near New Kathiresan Temple)**

ஞாயிறு 21-1-90 காலை 9-30 மணிக்கு

**At:— 74, Sea Beach Road.**
(Ext: Reclamation Road)

COMPUTEC INTERNATIONAL

# சிந்து வந்தனள்-நாம் சிந்தை மகிழ்ந்தனம்

இரு வாரங்களுக்குப் பிறகு "சிந்து"வைச் சென்ற வாரம சந்தித்தேன்! அவளைச் சந்தித்த பின்புதான் என் முகம "சந்திரனைக் கண்ட அல்லி"யைப் போல் மலர்ந்தது!

— எம ஏ சீ எம பாயிஸ் புத்தளம.

★

சில வாரங்கள் சிந்துவைக் காணாமல் வாடியிருந்த என் முகம 31–12–1989 அன்று மீண்டும "சிந்து"வைக் கண்டதும சூரியனைக் கண்ட "தாமரை" போல் மலர்ந்தது!

— எம ஐ டி சுமர்டீன், புத்தளம.

★

கடந்த வாரச் சிந்துவைப் பார்த்ததும உலகத்தையே ஒரு ரவுண்டு அடிச்சிட்டு வந்த மாதிரித் திருப்தியைத் தந்தது! எல்லா விஷயங்களையுமே அலசி விட்டார்களே அலசி!

— செல்வி நிஸானா இஸ்மாயில், பேருவளை—

★

சென்ற வாரச் "சிந்து"வை என் கையில் எடுத்ததும எனக்கு அளவில்லாத மகிழ்ச்சி! காரணம தொடர்கதையொன்று ஆரமபமாகிறது என்ற புதிய செய்தியொன்றைப் புத்தாண்டுப் பரிசாகத் தந்திருந்தாள் "சிந்து!"

— செல்வி மரியம காலித், கண்டி.

★

இரண்டு வாரமாக காணாத சிந்துவை இரண்டு மாதத்திற்குப் பிறகு கண்டது போல் என்னுள் உற்சாகம எழுந்தது! புத்தாண்டில் புதுத் தொடர் கதை வெளியிடுவதையிட்டு நான் மிகவும மகிழ்ச்சி அடைகிறேன்!

— செல்வி ஷிஹானா மன்சூர், கமபளை.

★

சிந்துவில் இடமபெற்ற அத்தனை அமசங்களும பாராட்டுக்குரியவை! குறிப்பாகச் சிறு இடைவெளிக்குப் பிறகு, "சிந்து"வில் ஒரு தொடர்கதை இடமபெறுவதையிட்டுச் சிந்துவை வாழ்த்துகிறோம!

— ஏ ஆர் எம பசீர், கட்டாப்பு.

★




"காலத்தால் அழியாத மொழி பிறந்த காலத்தை அறிவார் யார்?" என்ற தலைப்பில் வெளிவந்த கட்டுரையைப் படிக்கும பொழுது நாம தமிழுக்கும தமிழராகப் பிறந்த இந்த வையகத்துக்கும நன்றி சொல்ல வேண்டும!

— மகேந்திரன் சுந்தரலிங்கம, டிரேயிட்டன் எஸ்ட்டேட்.

★

1990 ஆம ஆண்டு மலர்ந்திருக்கும இவ்வேளையில் சிந்துவிலும எவ்வாறான பல புதிய அமசங்களை மலரச் செய்ய உத்தேசித்துள்ளீர்கள்?

— எம எச் எம சிறாஜ், எல மல்தெனிய பஸார்.

குறிப்பு:

பொறுத்திருந்து பாருங்களேன்—

ஆ—ர்

★

நீண்ட நாட்களுக்குப் பின் "இலக்கிய பீடத்"தில் விபுலானந்த அடிகள் அவர்களின் ஆக்கமொன்றைச் சுவைக்க பெற்றதையிட்டு மகிழ்ச்சியடைந்தேன்!

— செல்வி மஸாஹிமா எம ஷஹீட், கமபளை.

★

நீண்ட நாட்களுக்குப் பிறகு வந்தாலும சிந்துவில் வந்த அனைத்து அமசங்களும "எ—வன்" குறிப்பாக மர்மப் படம போல் நடந்த நடிகை சீதாவின் திருமணம என்னை அதிரச் செய்தது!

— ஸ்ரீதர் வசந்தா, வெளிஓயா மேல் பிரிவு.

★

இரு வாரங்களாகச் சிந்துவை எதிர்பார்த்து ஏமாற்றமடைந்த நாம இவ்வாரச் சிந்துவைக் கையில் எடுத்ததும முதலில் தென்பட்டது "நன்றி" என்ற தலைப்பில் வெளியிடப்பட்டிருந்த சிறு குறிப்புதான்!

— பௌமியா ஜுனைதீன் மாத்தளை.

★

முன் பக்கத் தோற்றமாக "சிந்து" தன் 1989 ஆம ஆண்டைப் பூர்த்தி செய்வதற்காக "மத்தாப்பு சிரிப்பழகி" எனத் தன்னை அலங்கரித்துக் கொண்டு ஜொலிக்க வைத்து விட்டாள்!

— செல்வி போஸ் இந்திரா சுப்பிரமணியம, அமபிட்டிய.

★

ஞாயிற்றுக்கிழமைக்கு புத்துணர்ச்சி ஊட்டும என் அபிமான "சிந்து"வை இரண்டு வாரங்களாகக் காணாமல் யான் பட்டபாடு கொஞ்சநஞ்சமல்ல! "சிந்து" வெளிவராத அவ்விரண்டு வாரங்களும ஞாயிறு போன்றே தோன்றவில்லை! என்றாலும கடந்த ஆண்டின் கடைசித் தினத்தில் "சிந்து" வழமை போல் வெளிவந்தது. அவளது வாசகர்களாகிய என் போன்றோருக்குக் கிடைத்த புத்தாண்டுப் பரிசு என்றே சொல்ல வேண்டும! மேலும "சிந்து" வெளிவராத ஞாயிறும ஒரு ஞாயிறா?

— நுஃமான் முஹமட், வரக்காமுறை.

★

இரு வாரங்களாகச் "சிந்து" வராததால் நாம மிகவும மனச் சோர்வுற்றிருந்தோம. வேறு எந்தப் பத்திரிகையை வாங்கிப் படித்தாலும "சிந்து"வைப் படிப்பது போன்ற மனமகிழ்ச்சி நமக்கு ஏற்படுவதில்லை. வராதிருந்த "சிந்து" கடந்த வாரம வந்தனள். நாமும சிந்தை மகிழ்ந்தனம. சிந்து தரும இன்பமே ஒரு தனி இன்பம தான்!

— பா கதிரவேல், பாமன்கடை.

# உலகப் புகழ் பெற்றவர்
## சிறையில் வாடுகிறார்

மத்தாயஸ் ரஸ்ட் என்ற பெயர் ஞாபகத்தில் இருக்கிறதா? டீன் ஏஜ் இளைஞரான இவர் சில ஆண்டுகளுக்கு முன்னர் தனது பயிற்சி விமானத்தை செலுத்தியபடி கட்டுக்காவல் மிக்க ரஷ்ய வான் பிராந்தியத்தைக் கடந்து மாஸ்கோ செஞ் சதுக்கத்தில் விமானத்தை இறக்கி ஒரே இரவில் உலகப் புகழ் பெற்றார்,

கோர்பச்சேவின் ரஷ்யாவானதால் இவர் பின்னர் விடுதலை செய்யப்பட்டார், இப்போது 21 வயதான ரஸ்ட், ஒரு மேற்கு ஜெர்மனிய தாதியைக் கத்தியால் குத்திய குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு சிறையில் வைக்கப்பட்டுளார்,

இந்த அழகிய தாதியின் பேரில் ஒரு கண் வைத்திருந்த ரஸ்ட் ஒரு தினம அவரை வழி மறித்து முத்தமிட முயன்றிருக்கிறார், இவர் உலகப்புகழ் பெற்ற புள்ளியாக இருக்கும ஒரே காரணத்தால் அந்தப் பெண் தன் இதழ்களை இவரிடம ஒப்படைத்து விடுவாரா என்ன? மறுத்து விட்டார்

இதனால் ஆத்திரம் கொண்ட ரஸ்ட், இடையில் சொருகியிருந்த கத்தியை உருவி அத் தாதியை இரு தடவைகள் குத்தினார், தாதியைக் கத்தியால் குத்தி வீழ்த்திவிட்டு ரஸ்ட் ஓடி மறைந்தாலும பொலீஸாரின் கண்ணில் இவரால் வெகு நேரம் மண்ணைத் தூவ முடியவில்லை,

(ம—032)

## பிறந்த நாள் வாழ்த்து



முகம்மது மபாஸ்

காத்தான்குடி-6, அமானுல்லா வீதியைச் சேர்ந்த கிதிறுமுகம்மது தம்பதிகளின் செல்வப் புதல்வன் முகம்மது மபாஸ் 5–1–90 தனது இரண்டாவது பிறந்தநாளை

## பிறந்த நாள் வாழ்த்து



இஷ்தியாக் நஸீர்

பண்டாரகமை, அடுலுகமை, பமுனுமுள்ள நஸீர் – ஸாஹிரு தம்பதிகளின் செல்வப் புதல்வன் இஷ்தியாக் நஸீர் தனது நான்கா

## பிறந்த நாள் வாழ்த்து



நுஸ்ஹா மஹ்றூப்

தோரியாய ஹனீஸா – மஹ்றூப் தம்பதிகளின் புதல்வி நுஸ்ஹா தனது முதலாவது பிறந்த நாளை சிறப்பாகக் கொண்டாடுகின்றார்.

நுஸ்ஹாவை மமி, டடா, பொல்கஹவெல மமிம்மா, அப்பா, மாமாமார்களான மன்ஸூர், பஹ்ரைன் ஜத்பி, குவைட் ஸல்மி, குவைட் றிஸ்வி, பஸ்லி, ஸபுவி, சாச்சிமார்களான ஸூல்பிஹா, வீனா, சாய்ந்தமருது அண்டிம்மா, அங்கள்மார்களான ஜௌபர், நௌபர் அஷ்ஹர், அண்டிமார்களான பௌஸியா, கலைமகள் ஹிதாயா, சபீனா, பஸ்லியா, மச்சான்மார்களான றிஸா, றிஹாஸ் றிஷாட், இனாம், பஸான், பஹ்ற

## விஞ்ஞான எழுத்தாளர்



அன்ரனி பெர்னாண்டோ

கடந்த பத்து வருட காலத்தில் விஞ்ஞான இலக்கியத் துறைக்கு ஆற்றியுள்ள அரிய சேவையைப் பாராட்டிக் கௌரவிக்குமுகமாக விஞ்ஞான எழுத்தாளரான அன்ரனி பெர்னாண்டோவுக்கு பிரதமர் திரு டி பி விஜேதுங்க அண்மையில் விருது சான்றிதழ், ரூபா 2500/- பணம் முதலான பல பரிசுகளை வழங்கினார்.

இலங்கைத் தேசிய விஞ்ஞான மன்றம கொழும்பு ஹில்ட்டன் இன்டர்நஷனல் ஹோட்டலில் கடந்த டிசமபர் 28 ஆம தேதி ஏற்பாடு செய்திருந்த விஞ்ஞான விருது வழங்கும விழாவில் அன்ரனி பெர்னாண்டோ உட்பட 13 விஞ்ஞான எழுத்தாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

பிரதமர் விஜேதுங்க விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

சில வாரங்களுக்கு முன்னர், டிசமபர் 4 ஆம தேதி, 1989 ஆம ஆண்டின் சிறந்த தமிழ் விஞ்ஞான எழுத்தாளருக்கான விருது அன்ரனி பெர்னாண்டோவுக்குக் கிடைத்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும.

மேற்படி விருதையும அவர் பிரதமர் விஜேதுங்காவிடம இருந்து பெற்றுக் கொண்டார். இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கம அந்த விருதை வழங்கியது-

இவர் 1959 ஆம ஆண்டு முதல் விஞ்ஞானம முதலான பல துறைகளைப் பற்றி தொடர்ந்து எழுதி வருகிறார்.

வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும இவர் சுவைத்து வருகிறார். (ம).

# பரிசோதிக்கப்பட்டவர்கள் காத்திருக்கிறார்கள்!

தாய்லாந்தின் சிவப்பு விளக்கு ஏரியாவுக்கு சென்றால் மதுபான விடுதிகள் - மஸாஜ் நிலையங்கள் மற்றும் ஒரு மாதிரியான இடங்களில் ஒரு அறிவிப்புப் பலகையைத் தொங்க விட்டுள்ளார்கள்-

"எமது பெண்கள் பரிசோதிக்கப்பட்டுள்ளனர்" என்று அந்த அறிவிப்புகளில் எழுதப்பட்டிருக்கும்-

அதாவது எயிட்ஸ் நோய் இருக்கிறதா இல்லையா என்று அவர்கள் மீது பரிசோதனை நடத்தப்பட்டுள்ளது என்பதுதான் இதன் அர்த்தம்-

ஏனெனில் எயிட்ஸ் நோய் அந்தளவுக்கு இந்நாட்டைப் பயமுறுத்தி வருகிறது- கடந்த ஜனவரியில் இருந்து மாதத்திற்கு 700 தாய்வாசிகள் என்ற சதவீதப்படி எயிட்ஸ் வைரஸ் இந்நாட்டு மக்களிடையே பரவி வருகிறதென்று கணிக்கப்பட்டிருக்கிறது-

1991ஆம் ஆண்டளவில் 24 ஆயிரம் பேர் எயிட்ஸ் நோயால் பீடிக்கப்பட்டிருப்பார்களென தாய்லாந்தின் எதிர்காலம் பற்றி கணித்த உலக சுகாதார ஸ்தாபனம் கூறியுள்ளது-

தாய்லாந்தில் வேகமாகப் பரவி வரும் எயிட்ஸ் நோய் பரவுவதற்கு அந்நாட்டின் விபசார மற்றும் மஸாஜ் நிலையங்களும் இரவு விடுதிகளும் பெரும் காரணமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது-

ஆனால் சமீபத்தில் எடுக்கப்பட்ட கணக்கெடுப்பின் பிரகாரம் உடலுறவு மூலமாக இந்நோய் பரவுவதைவிட போதை வஸ்து பேர்வழிகளினூடாகவே அதிகமாகப் பரவுகிறதென்று தெரியவந்துள்ளது-

தாய்லாந்தில் எயிட்ஸ் நோய் பயங்கரம் இருந்தாலும் வெளிநாட்டு உல்லாசப் பயணிகள் செக்ஸ் வாழ்க்கையைத் தேடி இங்கு படையெடுப்பது மட்டும் குறைந்தபாடில்லை-

சிவப்பு விளக்கு பகுதிகளில் பார்வைக்கு வைக்கப்பட்டிருக்கும "விவரங்கள்: பெண்கள் பரிசோதனைக்கு ஆளாக்கப்பட்டுள்ளனர்" என்ற அறிவிப்பை வேத வாக்கியமாக நம்பி பணத்தை வீசியெறிந்து பெண்களை ஆரத்தழுவிக் கொள்கிறார்கள் உல்லாசப் பிரயாணிகள்-

எயிட்ஸ் நோய் எப்போதோ கட்டுப்படுத்தப்பட்டு இருக்கும்-செக்ஸோடு சம்பந்தப்படாத நோயாக மட்டும் அது இருந்திருக்குமானால்!

(த—032)

## கணவன் செய்த தவறு

தவறாமல் குடும்பக்கட்டுப்பாடு மாத்திரை சாப்பிட்டு வந்தும கர்ப்பமடைந்த பெண் டாக்டரிடம சென்றாள் டாக்டர் தாய்மைப் பேற்றை உறுதி செய்துவிட்டு, அடுத்த "செக் அப்" புக்கு கணவனை அழைத்துக் கொண்டு வரச் சொன்னார்.

டாக்டர், மாத்திரை பற்றி அந்தக் கணவனை விசாரித்தார்.

என் மனைவி சாப்பிடுவதை விட நான் சாப்பிடுவதே நல்லது என்று எண்ணத்தில் நானே தினமும் மாத்திரைகளைச் சாப்பிட்டு விட்டேன் என்றான் அந்தப் புத்திசாலிக் கணவன், (ம-10)

## டெலிவிஷன்

### ரூபவாஹினி

7—1—1990

3-30 ஜிலெட் உலக விளையாட்டு ஸ்பெஷல்
4-00 "த வொண்டபுல் விஸ்ட் ஆப் ஊஸ்"
4-25 "த மஜிக்கல் வேல்ட் ஆப் கி கி"
4-50 "த அல்வின் ஷோ"
5-00 "கதை வேளை - சிறுவர் நிகழ்ச்சி
5-30 "சைவ நீதி"
6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி
6-15 "பியூஷர் அட்ரக்ஷன்ஸ்"
6-30 செய்திகள் - தமிழ்
6-55 ரஷ்ய கலாசார நிகழ்ச்சி
7-25 "அப்ப யுஹலுவோ - நாடகம்
8-00 செய்திகள் - சிங்களம்
8-30 சங்கீத்த மக்கந்த
9-00 "மயசிராவ்" - இசை நிகழ்ச்சி
9-30 செய்திகள் - ஆங்கிலம்
10-00 இரண்டாவது ஒரு நாள் சர்வதேச போட்டி (இலங்கை - ஆஸி.)
10-50 ஒளிபரப்பு முடிவு

### ஐ. டி. என்:

சேவை - 1
11-00 விட் கிட்ஸ்
11-30 "பிரைவட் அய்"
12-00 வண்ணப் பூக்கள்
12-30 விச்சித்ர கீத்த
1-00 முத்துச்சரம்
1-30 நீந்தத் தெரியாத மீன்கள்
1-45 ஒளிபரப்பு முடிவு
சேவை - 11
5-00 புட்போல் மேட் இன் ஜெர்மனி
6-00 மும்மணிகளுக்கு அஞ்சலி
6-15 ரச தஹரா
6-45 கௌரி கீத்த கட்டு
7-00 சுப பிரார்த்தனா
7-30 வெரயிட்டி பெயார்
8-00 பட்ட பினைஸ்
8-30 செய்திகளும் கருத்துக்களும்
9-00 ரச விந்தன
9-30 சேனிங் ரெயின் போஸ்
10-00 செய்திகள் - ஆங்கிலம்
10-26 சேனிங் ரெயின் போஸ் தொடர்ச்சி
10-45 ஒளிபரப்பு முடிவு

மத தம்பதிகளின் செல்வப் புதல்வன் முகம்மது மபாஸ் 5-1-90 தனது இரண்டாவது பிறந்தநாளை தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடினார்.

இவரை உம்மா, வாப்பா, மூத்தம்மா, மூத்த வாப்பா, மாமாமார்களான மூனிர் இந்தியா, ஜெமில் சவூதி, கையூம் ஓட்டமாவடி, சாச்சி நூரும்மா, பெரியம்மா, பெரியப்பா ஆகியோர் பல்கலையும் கற்று, பல்லாண்டு வாழ்கவென வாழ்த்தியுள்ளார்கள்.

வி இ 029465

## பிறந்த நாள் வாழ்த்து



ஹஸ்னி பானு

சாய்ந்தமருது-3, முஹம்மட் றிபாய்—சித்தி பாயிதா தம்பதிகளின் புதல்வி ஹஸ்னி பானு 1990-01-06 இல் தனது 3 வது பிறந்த தினத்தை சிறப்புடன் கொண்டாடினார்.

இவரை உம்மா, வாப்பா, உம்மம்மா, உம்மாவாப்பா, வாப்பாஉம்மா, அப்பா, தம்பி முஹம்மட் ஹாஸான் வலியா, மாமாமார்களான ஜாபிர் ஏ கபூர், நிசார் ஏ கபூர் (சவூதி), சுல்பிகா அன்ரி, சாச்சாமார்கள், மச்சி, மச்சான்மார்கள், மூத்தும்மா, மூத்தப்பாமார்கள், உம்மம்மாமார்கள், உறவினர்கள் அனைவர்களும் பல்கலையும் கற்று அல்லாஹ்வின் கிருபையால் நீடூழி காலம் வாழ வாழ்த்துகிறார்கள்.

வி இ 027642

பழுலுல்லாஹ் நவீர் - ஸாஹிறு தம்பதிகளின் செல்வப் புதல்வன் இஷ்தியாக் நவீர் தனது நான்காவது பிறந்தநாளை 1990-01-05 இல் கொண்டாடினார்.

இவரை உம்மா, வாப்பா, அன்புத் தங்கை ரிப்னு நவீர், உற்றார், உறவினர் அனைவரும் பல்கலையும் பெற்று வாழ வாழ்த்தியுள்ளார்கள்.

வி இ 029419

## பிறந்த நாள் வாழ்த்து



பாத்திமா பர்ஹா

இரத்தினபுரி பணுகராபிட்டியைச் சேர்ந்த கவுசுல் அமீர்—பாலிணு தம்பதிகளின் செல்வப் புதல்வி பாத்திமா பர்ஹா தனது முதலாவது பிறந்த நாளை 1989-12-19 ல் தனது இல்லத்தில் வெகு சிறப்பாகக் கொண்டாடினார்.

பர்ஹாவை வாப்பா, உம்மா, அப்பா, வாப்பும்மா, சாச்சா, சாச்சி, மாமாமார், மாமிமார், இரத்மலானை மாமா, மாமி, பொத்துஹரயைச் சேர்ந்த அப்பா, உம்மும்மா, சாச்சியும்மா, பெரியப்பா, பெரியும்மா, மாமாமார், மாமிமார், சாச்சிமார், மாத்தளை சாச்சா, சாச்சி, நாகலகமுவ வாப்பும்மா, அப்பாமார், நாநா, தம்பி, தாத்தாமார், மதினிமார், மச்சான்மார், உறவினர்கள் எல்லாம் வல்ல இறைவனருளால் சிறப்புடன் வாழ பிரார்த்திக்கிறார்கள்.

வி இ 029426

ஹிதாயா, சபீனா, புஸ்லியா, மச்சான்மார்களான றிஸா, றிஹாஸ் றிஷாட், இனாம், புஸான், பஹ்றைன் மாமி, லுபுனா மைனி, குருநாகல் டெடா குடும்பத்தினர் யாவரும் பல்லாண்டு காலம் சிறப்போடு வாழ வாழ்த்துகின்றார்கள்.

## பிறந்த நாள் வாழ்த்து



ரெஜினா மதிவதனி

இலக்கம் 187/6, டொரிங்டன், எவனியுவைச் சேர்ந்த ஜோர்ஜ். ஜோசப்பின் தம்பதிகளின் செல்வப் புதல்வி ரெஜினா மதிவதனி தனது இரண்டாவது பிறந்த தினத்தை தனதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, அத்தைமார், சித்திமார், மாமாமார், திலிப் தம்பி, ஏஞ்சல் அக்கா, தாத்தாமார், பாட்டிமார், சித்தாமார், மற்றும் அவிசாவெலையைச் சேர்ந்த தாத்தா குடும்பத்தினர், ஆகலையைச் சேர்ந்த உறவினர், ஏலியாகொட தாத்தா குடும்பத்தினர், டெவன் தாத்தா குடும்பத்தினர், பெரியப்பா, பெரியம்மா, தொட்டம்மா, தொட்டப்பா அனைவரும் வேளாங்கண்ணி மாதா அருள் பெற்று நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றனர்.

வி இ 029165

# சிந்தாமணி கேள்வி ? பதில்

திரிஞானி

நஸீனியா, நிராஸா,
நிஸ்ரின், நுஸ்பத்,
கொழும்பு-9—

கே— "அபூர்வ சகோதரர்கள்" திரைப்படத்தில் குள்ளமாக நடித்திருக்கும் கமலின் நடிப்பைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப— அந்த அபூர்வ நடிப்பினால் தானே படம் நூறு நாட்களைத் தாண்டி விட்டது!

★

திருமதி கே கமலா,
திருகோணமலை.

கே— கண்ணதாசன் "விதி"யைப் பற்றிக் கூறும் விளக்கத்தைப் பற்றித் தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப— அவர் என்ன விளக்கத்தைக் கூறி என்ன பயன்? அமெரிக்காவுக்குப் போகும் போது அவருடைய விதியை அவர் விளங்கிக் கொள்ளவில்லையே!

★

ரொஷான் ரொட்ரிகோ,
கொழும்பு-13—

கே— ஜவஹர்லால் நேருவின் வாரிசான ராஜீவ் காந்தி தோற்றதைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப— ஒரு தரம் தோற்க வேண்டியவர் தான்!

★

செல்வி எம் பரமேஸ்வரி,
கூநதெனிய—

கே— ஆண்கள் பெண்களைக் காதலிக்கும் போது கொடுக்கக் கூடாதது என்ன?



ராஜீவ் காந்தி

ப— திருமணம் ஆனபின் கொடுக்க வேண்டியதைக் காதலிக்கும் போது கொடுத்து விடக்



அறிஞர் அண்ணா

★

செல்வன் எஸ் விஜயகுமார்
ஸ்டெப்போட்ஹில் எஸ்டேட்

கே— காதல் பிரிவினால் ஏற்படும் துயரத்தைத் தாங்கும் இதயம் ஆண்களுடையதா? பெண்களுடையதா?

ப— தாங்க முடியாமல் தவிப்பர் பெண்கள் தாம்! ஆனால் வெளியில் காட்டாத பண்பு கொண்டவர்கள் அவர்கள்!

★

ஏ எஸ் பாத்திமா பர்ஸானா
பண்டாரவளை

கே— இறைவனை ஏன் ஆண்டவன் என இறந்த காலத்தில் அழைக்கிறார்கள்?

ப— உலகமும் மனிதனும் படைக்கப்பட்ட போது ஆட்சியில் இருந்தவன் என்பதால்!

★

திருமதி ரிஸானா ரவுப்
தர்கா நகர்

கே— கணவனோடு அடிக்கடி சண்டை பிடிக்கும் மனைவியரைப் பற்றித் தங்கள் கருத்து என்ன?

ப— சண்டைக்கான காரணம் யாரிடம் உண்டு என்று தெரியாமல் இக்கேள்விக்கு எப்படிப் பதில் கூறுவது?

★

எம் எப் எம் றியாஸ்
பேருவளை

கே— சிந்தித்துச் செய்ய வேண்டியது எது? சிந்திக்காமல் செய்ய வேண்டியது எது?

ப— சிந்தித்துச் செய்ய வேண்டியது கருமம்! சிந்திக்காமல்

கே— தங்களிடம் யாராவது பெண்களைப் பற்றிய கேள்விகளைக் கேட்டால் மிகவும் உயர்வான பதில்களை அளிக்கிறீர்களே — தாய்மைக்கு பணிவா? அல்லது தாரத்திற்குப் பயமா?

ப— இரண்டும் தான்!

★

எம் சி அனீஸ்
குறிஞ்சிப்பிட்டி

கே— ஒரு மனிதன் எந்தச் சந்தர்ப்பத்தில் மிருகமாகிறான்?

ப— ஒருவனுடைய தேகப் பசி அவனுடைய மனச்சாட்சியைக் கொன்று தின்று விடும் போது!

★

க சந்திரகுமார்,
பதுளை

கே— எனக்கும் என் மனைவிக்கும் அடிக்கடி பிரச்சினை ஏற்படுகிறது! இதை நிறுத்துவதற்கு ஒரு வழி சொல்லுங்களேன்?

ப— யாராவது ஒருவர் மௌன விரதம் பூண்டால் அமைதி பிறந்து விடும்!

★

இஸட் ஏ எம் நஜிப்தீன்
வறக்காமுறை—

கே— அழகற்ற அறிவுள்ள ஆணுக்கும் அழகுள்ள அறிவற்ற பெண்ணுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

ப— அவனிடம் அமைதி இருக்கும்— அவளிடம் அகங்காரம் இருக்கும்!

★

எம் முஹம்மட் சவாஹிர்
புசல்லாவை—

கே— அரசு வேலைகள் தாமதப்படுவது யாரால்?

ப— அரசியல்வாதிகளால்!

★

செல்வி மர்லியா ரசீட்
செல்வன் ரபீக் ரசீட்
அக்குறணை—

கே— ஏழைகளின் சிரிப்புக்கும் பணக்காரர்களின் சிரிப்புக்கும் இடையிலான வித்தியாசம் என்ன?

ப— ஏழை சிரித்தால் அவன் வயிற்றில் பசி இல்லை என்று பொருள்! பணக்காரன் சிரித்தால் அவன் தேகத்தில் பசி எடுக்கிறது என்று பொருள்!

★

செல்வன் ஜே என் ரசான்
முஹமட்
பல்லியகொடுவ—

கே— தங்களுக்குச் சினிமாவில் சிவாஜி – கமல் போல் நடிப்பதற்கு ஆசை உண்டா?

ப— ஆசைப்பட்டால் மட்டும் போதுமா? சந்தர்ப்பம் கிடைக்க வேண்டாமா?

★

றலீனா மஃரூப்
இப்பாகமுவ—

கே— பெண்களின் மனதை கடலலைக்கு ஒப்பிடுகிறார்களே – அது ஏன்?

ப— எப்போதும் அலை பாய்ந்து கொண்டிருப்பதால்!

★

எம் இஸட் எம் உவைஸ்
கல்கமுவ—

கே— பெண்கள் அழகையும் பணத்தையும் விரும்புகிறார்களே – அது ஏன்?

ப— அந்த இரண்டையும் தானே ஆண்களும் விரும்புகிறார்கள் – அதனால்!

★

எம் யூ எம் இஸ்திகார்
கொடியாகும்புற—

கே— பிழைக்கத் தெரிந்தவர்கள் சினிமாக்காரர்களா? அரசியல்வாதிகளா?

ப— சினிமாக்காரர்கள் எந்த மூலைக்கு?

★

செல்வி எஸ் மலர்
தெனியாய—

கே— அக்காலத்தில் பெண்ணைப் பெற்றவர்கள் கவலைப் பட்டார்கள்— இக்காலத்தில் ஆணைப் பெற்றவர்கள் அல்லவா கவலைப்படுகிறார்கள் – இதன் காரணம் என்ன?

ப— புலி பிடிக்கிறதே! என்ன செய்வது?

★

செல்வி எம் ஏ எஸ் நிபாசியா
அம்பத்தன்னை—

கே— கரும்பை விட இனிமையானது எது? இரும்பை விட உறுதியானது எது?

ப— கரும்பை விட இனிமையானது தமிழ்! இரும்பை விட உறுதியானது ஜப்பானிய யென் நாணயம்!

★



ஔவையார்

★

ரஜபுன்னிஸா நளீம்
பாணந்துறை—

கே— அறிஞர்கள் வரிசையில் உங்களைக் கவர்ந்த அறிஞர் யார்?

ப— அறிஞர் அவ்வேவியஸ்! இவருக்கு அடுத்தபடியாக அறிஞர் அண்ணா!


## அங்கர் பாவனையாளருக்குப் புத்தாண்டு வாழ்த்துக்கள்!

அங்கர் சிறுவர்களுக்குத் தனித் தனியாகவும் கூட்டாகவும் இதோ ஒரு செய்தி ! உங்கள் அபிமான அங்கர் ஸ்டிக்-ஏ-டெக்ஸ் மீண்டும் வருகின்றன. உங்கள் பாடசாலைப் புத்தகங்கள், பென்சில்/கணிதக் கருவிப் பெட்டிகள், பைகள் போன்றவற்றுக்கு ஏற்றவை. உங்கள் கூப்பன்களை அனுப்பி, உங்கள் அங்கர் ஸ்டிக்-ஏ-டெக்ஸ் ஒட்டுத் தாள்களைச் சேருங்கள்.

நீங்கள் அனுப்ப வேண்டியவை இவ்வளவே:

● 2 அங்கர் ஸ்டிக்-ஏ-டெக்ஸ் ஒட்டுத் தாள்களைப் பெற, 1 கிகிராம்

இலவசம்!

அங்கர் சிறுவர்களுக்கான

கொடுக்க வேண்டியதைக் காத லிக்கும் போது கொடுத்து விடக் கூடாது!

★

எம் எஸ் எம் நவாஸ்,
தல்தூஸ்பிடிய—

கே— மது – மாது இவை இரண்டிலும் எதில் போதை அதிகம?

ப— மாதுவின் போதை தான் அதிகம்! ஏனென்றால் அருகே அரவும் இருக்கிறது அல்லவா?

★

செல்வி அஸ்னியா அஸாஹிம்,
ஹேனவத்த—

கே— உங்கள் மனைவி எப்போதாவது ஏதாவது ஒன்றைச் செய்து உங்களை வியப்பில் ஆழ்த்தியதுண்டா?

ப— ஒரு தடவை மஸ்கட் அல்வா செய்தார்! தாச்சியும், கரண்டியும் தனித் தனியாகப் பிரிந்து வந்தன— அசந்தே போனேன்—

★

ஏ டபிள்யூ எம் நப்ஹாம்,
வெலிகாமம்—

கே— நீங்கள் குளிரால் நடு நடுங்கிக் கொண்டு இருக்கும போது உங்கள் நண்பன் ஒருவன் "கூல் ட்ரிங்ஸ் குடிக்கப் போவோமா?" என்று கேட்டால் என்ன செய்வீர்கள்?

ப— எனக்குத் தேவை "ஹொட் டிரிங்ஸ்" என்று சொல்வேன்!

★

செல்வி சிஹானா மொஹமட், யஹலத்தன்னை.

கே— வீட்டில் உணவு திருடிச்



கமலஹாசன்

சாப்பிட்டு மாட்டிக் கொண்ட அனுபவம் ஏதாவது உண்டா?

ப— எதையும் திருட வேண்டிய அவசியம் என் வாழ்வில் என்றும் ஏற்பட்டதில்லை!

ப— சிந்தித்துச் செய்ய வேண்டியது கருமம்! சிந்திக்காமல் செய்ய வேண்டியது தருமம்!

★

எஸ் பிரிஜட் மேரி
ரஜவெல்ல—

கே— சில பெற்றோர்கள் கறுப்பாக இருக்கிறார்கள் – ஆனால் பிள்ளைகள் எப்படி வெள்ளையாக இருக்கிறார்கள்?

ப— இதுதான் ஜென்ம பலா பலன் என்பது!



கண்ணதாசன்

செல்வி நஸீராஜ்
குந்தளாய்

கே— "ஆண்கள் சேற்றைக் கண்டால் மிதிப்பார்கள் – தண்ணீரைக் கண்டால் கழுவுவார்கள்" என்று சொல்கிறார்களே இது உங்களைப் பொறுத்தவரையில் உண்மையா?

ப— மிதிக்கக் கூடாது— மிதித்து விட்டால் வேறு என்ன செய்வது கழுவித் தானே ஆக வேண்டும்?

★

செல்வி பெ மீனலோஜினி
அட்டபாகை

கே— நீங்கள் "ஜோக்" சொல்லும் பொழுது யாரும் சிரிக்காமல் உங்கள் முன் உட்கார்ந்திருந்தால் நீங்கள் என்ன செய்வீர்கள்—

ப— நானே சிரித்து விடுவேன்!

★

செல்வி சிபானி ஹசன்
உக்குவளை

கே— "பெண் – மண் – பொன்" இவற்றில் சிறந்தது எது?

ப— பொன்தான் சிறந்தது! அது கிடைத்து விட்டால் மற்றவை இரண்டும் தேடிக் கொண்டு வரும்!

★

எஸ் ஏ எல் நாதன்
கல்கிரியா

ப— அரசியல்வாதிகளால்!

★

செல்வி மீனாவசுமதி
தேவராஜ்
பூண்டுலோயா—

கே— நீங்கள் விவரம தெரிந்த நாளில் இருந்து பத்திரமாக வைத்திருக்கும் பொருள் எது?

ப— அந்த ஒருவர் மீது வைத்த அன்பு!

★

அ தாஜுல் இஸ்லாம்
நவசேனபுர—

கே— பெண்கள் ஆண்களை விலை கொடுத்து வாங்குவதேன் – காரணம் என்ன?

ப— அவர்கள் சேவை இவர்களுக்குத் தேவை என்பதால்!

★

ஜனனி மதுரலிங்கம்
சசிரேகா மதுரலிங்கம்
கொட்டாஞ்சேனை—

கே— உங்களுக்குப் புரியாத விஷயம் எது?

ப— ஆண்டவன் கருணை உள்ளவன் என்றால் ஒரே காட்டில் அவன் ஏன் புலியையும் மானையும் படைத்தான் என்பது!

★

எம் எச் எம் பைரூஸ்
தர்காநகர்—

கே— விரும்பியது கிடைக்கா விட்டால்...?

ப— "கிட்டாதாயின் வெட்டென மற"

★

செல்வி கல்யாணி
மில்லகந்த—

கே— யானை எந்த நேரத்தில் நித்திரை கொள்ளும்?

ப— தூக்கம் வரும்போது!

★

எஸ் எல் எம் ஹனிபா
அட்டாளைச்சேனை – 01

கே— உங்கள் திறமையின் ஒரு பகுதியைத் திருடிக் கொள்ள விரும்புகிறேன்— சிறந்த வழி ஒன்று கூறுவீர்களா?

ப— வழியே இல்லாத ஊருக்கு வழி கேட்கிறீர்களே!

★

செல்வி இரா பாக்யா,
கம்பளை—

கே— தோல்விகளைத் தாங்குவதற்கு ஒரு வழி கூறுங்களேன்?

ப— சுலபமான வழி தோல்வி ஏற்படக் கூடியவற்றை செய்யாமல் விடுவது தான்! அதனால் தான் "தோற்பன தொடரேல்" என்றார் ஔவையார்!


நீங்கள் அனுப்ப வேண்டியவை இவ்வளவே:

- 2 அங்கர் ஸ்டிக்-ஏ-டெக்ஸ் ஒட்டுத் தாள்களைப் பெற, 1 கிகிராம் அங்கர் முழு ஆடைப் பால் பவுடர் டின்னின் 1 உள் மூடி, அல்லது
- 4 அங்கர் ஸ்டிக்-ஏ-டெக்ஸ் ஒட்டுத் தாள்களைப் பெற, 2 கி.கிராம் அங்கர் முழு ஆடைப் பால் பவுடர் டின்னின் 1 உள் மூடி, அல்லது
- 1 அங்கர் ஸ்டிக்-ஏ-டெக்ஸ் ஒட்டுத் தாளைப் பெற, 113 கிராம் அங்கர் பட்டர் பக்கெட்டின் 1 மேலுறை, அல்லது
- 2 அங்கர் ஸ்டிக்-ஏ-டெக்ஸ் ஒட்டுத் தாள்களைப் பெற 250 கிராம் அங்கர் பட்டர் பக்கெட்டின் 1 மேலுறை.

# அங்கர்

## ஸ்டிக்-ஏ-டெக்ஸ்

புத்தாண்டை உற்சாகமாகத் தொடங்க ஒரு வழி அங்கர் ஸ்டிக்-ஏ-டெக்ஸ் ஒட்டுத் தாள்கள். அனுப்பும் உள் மூடிகள்/ மேலுறைகளின் தொகையைக் குறிப்பிட்டு கூப்பனை நிரப்பி, உங்கள் சுய விலாசம் எழுதி முத்திரையிட்ட 15×9 செ.மீ. அளவான தராதரக் கடித உறையுடன் இணைத்துப் பின்வரும் விலாசத்துக்கு அனுப்புங்கள்:

அங்கர் ஸ்டிக்-ஏ-டெக் சலுகை, த. பெ. எண் 199. கொழும்பு.

போட்டோ பிரதி எடுத்த அல்லது சுயமாகத் தயாரித்த கூப்பன்களும் ஏற்கப் படும். உங்கள் கடிதங்கள் தபாலில் தவறாமல் இருக்கும் வண்ணம், உறைகளில் விலாசத்தைத் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுங்கள்.



முடிவு தேதி 15 பெப்ரவரி 1990

ஒவ்வொரு 400 கிராம் முழு ஆடைப் பால் பக்கெட்டிலும் ஓர் இலவச ஸ்டிக்-ஏ-டெக்ஸ் ஒட்டுத் தாள் உண்டு.

கூப்பன்

நான் இணைத்திருப்பது

1 கி. கி. டின் உள் மூடி ______ ☐

2 கி. கி. டின் உள் மூடி ______ ☐

113 கி. பட்டர் மேலுறை ______ ☐

250 கி. பட்டர் மேலுறை ______ ☐

பெயர் : ______

______




D&D

1939–1989
50 YEARS

ஏக பிரதிநிதிகள் : ஜோன்ஸ் ஓவர்சீஸ் லிமிட்டெட்

அங்கர் – தாய்மார் நம்பும் நிலையான தரம்

# சோஷலிசத்தைக் காக்க வழி என்ன?

சோவியத் சமுதாயத்தைச் சீரமைப்பதற்கு ஆழமான நடவடிக்கைகள் அவசியம் என்று சோவியத் ஜனாதிபதி கொர்பச்சேவ் வலியுறுத்தினார்— சோவியத் மக்கள் பிரதிநிதிகள் காங்கிரஸ் கூட்டத்தில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்—

"பெரிஸ்த்ரோய்காவால் மட்டுமே சோஷலிசத்தைக் காப்பாற்ற முடியும்— பெரிஸ்த்ரோய்க்கா லட்சியத்தை நிறைவேற்ற நான் உறுதிபூண்டுள்ளேன்" எனவும் அவர் கூறினார்—


அவர் மேலும் கூறியதாவது:—

எனது நிலை குழப்பத்திற்கு இடமளிக்காமல் தெளிவாக இருக்கிறது— அவதிப்பட்டுவரும் சமுதாயத்துக்கு நாம் சிகிச்சை அளிக்க வேண்டியது அவசியம்— இதற்குத் தீவிரமான ஆழமான நடவடிக்கைகள் அத்தியாவசியம் சமுதாயத்தின் பொருளாதாரத் துறை அரசியல் துறை ஆகிய இரண்டுக்கும் இது பொருந்தும்—

நியாயமானதாக மனிதநேயம் கொண்டதாக ஜனநாயகம் தழைப்பதாக சோவியத் சமுதாயத்தை மாற்ற வேண்டியது அவசியம்— சோஷலிசப் பண்புகளின் வாயிலாகவே இங்குப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண இயலும்—

கடந்தகால ஸ்டாலினிசப் பண்புகளாலோ அல்லது முதலாளித்துவத்திற்குத் திரும்பிச் செல்லும் போக்கை அங்கீகரிக்கும் பண்புகளாலோ இவற்றுக்குத் தீர்வுகாண முடியாது—

அக்டோபர் புரட்சியின் பாதையில் நாம முன்னேறி வருகிறோம நமது சோஷலிச அமைப்புக்கும நமது சமுதாயத்துக்கும நாம மேலும் வளம சேர்த்து வருகிறோம்—



கொர்பச்சேவ்

அரசியல் முடிவுகளை எடுக்கும் பொறுப்பிலிருந்தும மேலிருந்து கீழ் வரை அரசியல் அதிகார அமைப்புகளை உருவாக்கும பொறுப்பிலிருந்தும் மக்கள் விலகியிருக்கும வரையில் சோஷலிசம என்பது சோஷலிசமாக நிலைத்திருக்காது—

பல தேசிய இனங்களைக் கொண்ட நாடு என்பது சோவியத் நாட்டின் முக்கிய அம்சங்களுள் ஒன்றாக இருக்கிறது— ஒவ்வொரு தேசிய இனத்துக்கும வேர்களும் மரபுகளும கலாசாரங்களும் இருக்கின்றன— அதே சமயத்தில் இந்த தேசிய இனங்களைச் சேர்ந்த மக்கள் நெடுங்காலமாக ஒன்றாக வாழ்ந்து வருகிறார்கள்—

தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்னும லெனிஸக் கருத்தோட்டத்தை சோவியத் யூனியன் தொடர்ந்து போற்றி வரும் அதேசமயத்தில் பிரிவினை என்பதன் மூலமாக சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட முயல்வது சோவியத் நாட்டின் ஒன்றிய தன்மையைக் குலைப்பதற்கும

ஒருவருக்கெதிராக ஒருவர் என மக்களை மோதவிடுவதற்கும வேற்றுமைகளை விதைப்பதற்கும ரத்தக்களரியும உயிரிழப்பும ஏற்படுவதற்கும வழிவகுக்கும்—

சமஷ்டி அமைப்பை மேலும பொருள் பொதிந்ததாகச் செய்ய முடியும் என்று நான் நம்புகிறேன்— யூனியன் அமைப்புக்குள் இருந்தவாறே ஒருவருக்கொருவர் ஒத்துழைத்தவாறே அரசியல் பொருளாதார சுயாட்சியை அடைவதற்கும் கலாசாரம மொழிகள் முதலியவற்றின் வளர்ச்சிக்குப் போதிய வாய்ப்புக்களைப் பெறுவதற்கும வழியேற்படுத்த முடியும—

இவ்வாறு கொர்பச்சேவ் கூறினார்—

இச்சேவேளையில் கிழக்கு ஐரோப்பிய விவகாரங்கள் வேளைக்கு எதிர்பார்க்கப்பட்டவையே அனால் ருமேனிய அதிர்ச்சிகள் எதிர்பார்க்கப்படாதவையே—

போலந்து ஹங்கேரி செக்கோஸ்லோவாக்கியா கிழக்கு ஜெர்மனி போன்ற நாடுகளில் மாற்றங்கள் மக்கள் இயக்கம முன்னின்று அமைதியாகக் கொண்டுவரப்பட்டவையாகும்— அமைதியான மாற்றத்திற்கு ருமேனியாவில் இடமிருக்கவில்லை— ஆகவே இரத்தக்களரி ஏற்பட்டது—

இன்று அங்கே தேசிய விமோசன முன்னணியின் தலைமையில் புதிய ருமேனியாவை உருவாக்குவது பற்றிய திட்டங்கள் தயாராகி வருகின்றன—

## பூலோக சஞ்சாரம்

ருமேனியா சம்பவங்கள் உச்சகட்டத்தில் இருந்த வேளையில் மேற்கத்தேய நாடுகளைப் போலவே மாஸ்கோவும் மாற்றத்தைக் கோரி நின்ற புதிய சக்திகளை ஆதரித்தது—

ஆகவேதான் பழைய ஜனாதிபதி சிசெஸ்கு கிழக்கு ஐரோப்பிய அரசாங்கங்களையும சோவியத் அரசாங்கத்தையும எதிரிகள் என குற்றஞ்சாட்டினார்— இன்று ருமேனிய நிலவரம் சகஜ நிலைமைக்குத் திரும்பியுள்ளது—

ருமேனிய மாற்றங்களோ அல்லது கிழக்கு ஐரோப்பிய மாற்றங்களோ கொர்பச்சேவ் திரை நீக்கம் செய்துள்ள மாசீரமைப்புக்குப் பின்னர்தான் சாத்தியமாகியுள்ளன என்று அரசியல் அவதானிகள் கூறுகின்றனர்—

இந்த விஷயங்கள் குறித்து கருத்து தெரிவித்த சோவியத் வெளிநாட்டு அமைச்சர் எட்வர்ட் செவர்னத்ஸே கூறியுள்ளதாவது:—

"எம்மைப் பொறுத்தமட்டில் நாம பெரஸ்த்ரோய்க்கா (மாசீரமைப்பு) மார்க்கத்தில் முன் செல்ல தீர்மானித்துவிட்டோம— இந்த மார்க்கம் முழு மனித சமாஜத்திற்கும புதிய மார்க்கத்தைச் சமைத்துக் கொடுத்துள்ளது—

சோவியத் யூனியனைப் பொறுத்தமட்டில் எமது வழிமுறைகளை யார் மீதும திணிக்க மாட்டோம ஒவ்வொரு நாடும் அதன் வரலாறு நிர்ணயித்த மாற்றத்தில் அதன் வழி மார்க்கத்தை நிர்ணயித்துக் கொள்ள சுதந்திரம பெற்றதாக உள்ளது"

இவ்வாறு அவர் கூறியிருப்பது புதிய ஆண்டில் பிரவேசித்துள்ள உலகத்துக்கு ஒரு நல்ல செய்தி—

### ஆசியாவின் நிலை என்ன?

ஐரோப்பாவில் வரவேற்கத்தக்க சுமுகமாக மாற்றங்கள் ஏற்பட்டுவரும இவ்வேளையில் ஆசியப் பிராந்தியத்தின் 1990 ஆண்டுப் போக்கு எப்படி இருக்கு?

உடன்பாடு இருந்தாலும சரி இல்லாவிட்டாலும் சரி நஜிபுல்லாவின் காபூல் அரசாங்கம விட்டுக் கொடுக்கும் அடிப்படையில் தேசிய சமரசத்தை ஏற்படுத்த பிரயத்தனம எடுத்து வருகிறது—

கடந்த மாதம ஆப்கன் விவகாரம சம்பந்தப்பட்ட பல விஷயங்கள் பாகிஸ்தானில் நடைபெற்றது—

அமெரிக்க—சோவியத் மால்டா உச்சிமாநாட்டுக்குப் பின்னர் அண்டை கிழக்கு மற்றும் தென் ஆசியாவுக்கான அமெரிக்க உதவி ராஜாங்கக் காரியதரிசி ஜோன் கெலி இஸ்லாமாபாத்துக்கு விஜயம் செய்து ஆப்கானிஸ்தான் உச்சிமாநாட்டில் நடைபெற்ற விஷயங்கள் பற்றி தகவல்களைக் கொடுத்தார்—

இதேசமயத்தில் கெஹ்ரான் அகாவைப் பெற்ற எட்டுக் குழுக்களின் தலைவர் கரீம் கலீலி பெஷாவரிலுள்ள முஜாஹிதீன் குழுக்களுடன் பேச்சுவார்த்தை நடத்த இஸ்லாமாபாத் விஜயம் செய்திருந்தார்—

மார்ச் மாதத்திற்கு முன்னர் பிரச்சினையைத் தீர்த்துக் கொள்வதற்கு முஜாஹிதீன் அணிகளும பெஷாவர் தற்காலிக அரசாங்கமும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமெரிக்கா எச்சரித்துள்ளது என்று கூறப்படுகிறது—

மால்டா உச்சி மாநாட்டுக்கு முன்னர் உயர்மட்டத் தூதுக்குழு ஒன்றை வாஷிங்டனுக்கு பாகிஸ்தான் அனுப்பியது— லெப்டினன்ட் ஜெனரல் ஸமாவர் ரஹ்மான் கலீலி தலைமை தாங்கிய தூதுக் குழுவில் முக்கியமான ஏழுவை அமைப்பு அமைப்புக்களின் பிரதிநிதிகளும இடம பெற்றனர்—

அப்கன் தற்காலிக அரசாங்கத்திற்குக் கல்தா கொடுக்க வேண்டாம்— வல்லரசுகளின் சந்திப்பின் போது அப்கான் பிரச்சினைக்கு முக்கிய இடம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைகளை இத்தூதுக் குழு வாஷிங்டனில் முன் வைத்தது—

1990க்குப் பின்னர் அமெரிக்க ஆயுத விநியோகம முஜாஹிதீன்களுக்குக் கிடைக்காது என்று வாஷிங்டன் அறிவித்துள்ளதாக செய்திகள் கூறுகின்றன—

ஆப்கான் பிரச்சினைக்குள் பல் வேறு நலன்கள் பிரவேசம செய்துள்ளன— ஈரான்—சவூதி போட்டி நடைபெறுவதாக அரசியல் அவதானிகள் கூறுகின்றன—

பெஷவாரில் அமைந்துள்ள இடைக்கால ஆப்கான் அரசாங்கத்தில் உரிய ஸ்தானத்தைப் பெற்று இயங்குவதற்கு சவூதி அரேபியா முட்டுக்கட்டை போடுவதாக கெஹ்ரான் ஆதரவு பெற்ற கலீலீ குழு குற்றஞ்சாட்டுகிறது—

சோவியத் துருப்புக்கள் வாபஸ் செய்யப்பட்ட வேளையில் அதாவது ஒரு வருடத்திற்கு முன்னர் எதிர்காலக் கூட்டரசாங்கத்தில் 20 சதவிகித ஆசனங்கள் இருந்தால் போதும் என்று ஆப்கான் ஆதரவுக் கட்சியான பி டி பி எ கூறியது—

இன்று கோரிக்கை 50 சதவிகிதமாக உயர்ந்துள்ளது— இந்த வித்தியாசம அதன் இன்றைய பலத்தைக் காட்டுவதாக அவதானிகள் கூறுகின்றனர்—

யார் தலையிட்டாலும சரி இல்லாவிட்டாலும சரி ஆப்கான் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர அமெரிக்காவும சோவியத் யூனியனும் இணங்கிவிட்டன என்பதே இன்றைய எதார்த்தமாகும்—

(ம)

# கம்யூனிச நாடுகளின் இரும்புத்திரை

# படிப்படியாகக் கிழிகிறது

## வித்தியாசமான மனிதராக மாறினார் கொர்பச்சேவ்

கம்யூனிஸ்ட் நாடுகளில் தனி மனிதனுக்குச் சுதந்திரம் கிடையாது- பேச்சுரிமை கிடையாது- தாம் விரும்பிய வேலையில் சேர வாய்ப்பில்லை- எதிர்க்கட்சிக்கு இடமில்லை-

எல்லோரும் சமம் என்று கம்யூனிஸட் ஆட்சியில் கருதப்பட்டாலும் தலைவர்கள் மக்களை இரும்புக் கரம் கொண்டு ஆட்சி புரிந்து வருவது உலகம் அறிந்த உண்மை-

கம்யூனிஸ்ட் நாடுகளில் இப்போது மாபெரும் சக்தியாக விளங்குவது ரஷ்யா அமெரிக்காவுடன் போட்டி போட்டுக் கொண்டு வளர்ந்து வருகிறது-

அமெரிக்கா முழுக்க முழுக்க ...ாளிகளின் நாடு- அதே ...த்தில் ஜனநாயக நாடு- ...ருளாதாரத்திலும் பொருள் ...த்தியிலும் மிகவும் முன்னேறிய நாடு-

...ங்கே உள்ள பத்திரிகைகள் ...ரிக்க ஜனாதிபதியை எப்படி ...டுமானாலும் தாக்கி தவ...ச் சுட்டிக்காட்டுகின்றன- ...மனிதன் கூட அரசியல் தலை...ளைப் பற்றிப் பேசலாம் விம...லாம்-

...ய மக்களை விட அமெ... மக்கள் மிகவும் வசதியாக ...கிறார்கள்- மகிழ்ச்சி... காணப்படுகிறார்கள்- ... உணர்ந்த ரஷ்ய அதிப... ...ர்பச்சேவ் அமெரிக்க ஜனாதிபதியைப் போல் தானும் ஆட்சி புரிய விரும்பினார்-

ஆகையால் கம்யூனிஸக் கொள்கைகளைத் தளர்த்தி ஜனாதிபதி ஆட்சியைக் கொண்டு வந்தார்- மேலும் ரஷ்யாவில் பல்வேறு கட்சிகள் உருவாகலாம் என்று எதிர்க்கட்சிகள் உருவாக வாய்ப்பு அளித்தார்-

கம்யூனிஸத்துக்கு முதலாளித்துவ நாடுகளால் ஆபத்து வருமா என்று இவர் பயப்படவில்லை- ஆகையால் ஐரோப்பாவில் காணப்படும் கம்யூனிஸ்ட் நாடுகளில் தமது பிடியைத் தளர்த்தினார்-

கொர்பச்சேவ் ஒரு வித்தியாசமான மனிதராக உலகின் கண்களுக்குத் தெரிகிறார்-

அமெரிக்கப் பாணியில் அரசாங்கத்தை நடத்த விரும்புகிறார் என்பதை உணர்ந்ததும் கம்யூனிஸ்ட் நாடுகளில் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட்டங்களை தொடங்கினார்கள்-

கம்யூனிஸ்ட் தலைவர்களின் சர்வாதிகார ஆதிக்கம் மாற்றப்பட வேண்டும்- ஜனநாயக முறையில் ஆட்சி நடக்க வேண்டும்-

தனி மனிதனுக்குச் சுதந்திரம் வேண்டும் என்று சீனாவில் இளைஞர்கள் பலர் கலவரம் செய்த போது ஆயிரக்கணக்கான மாணவர்களைச் சுட்டுத் தள்ளினார்கள்- ஆக சீனாவில் எழுந்த புரட்சி இரும்புக்கரம் கொண்டு அடக்கப்பட்டதே தவிர இளைஞர்களிடையே ஓர் எதிர்ப்புச் சக்தி உருவாகி விட்டது-

எப்படியும் அது மீண்டும் வெடிக்கும் என்பதை அரசியல் ஞானிகள் உணர்த்தியிருக்கிறார்கள்-

போலந்து நாடு ஒரு கம்யூனிஸ்ட் நாடாக இருந்து வந்தது இங்கே நடந்த மிகப் பெரிய கிளர்ச்சியால் கம்யூனிஸ்ட் அரசாங்கம் கவிழ்ந்தது-

இப்போது அங்கே ஜனநாயக ஆட்சி அமைக்கப்பட்டு விட்டது-

இங்கே எதிர்ப்புச் சக்தியை உருவாக்கி ஜனநாயகத்தை மலர வைத்தவர் வாலேசா என்பவர்- சமாதானப் பணிக்காக நோபல் பரிசு பெற்றவர்- பதவிக்கு ஆசைப்படாதவர்-

போலந்தில் ஏற்பட்ட மாறுதலைக் கண்டதும் கிழக்கு ஜெர்மனி - செக்கோஸ்லவேக்கியா - ஹங்கேரி ஆகிய நாடுகளிலும் புரட்சி ஏற்பட்டது-

மக்கள் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தை எதிர்த்துப் போராட்டங்களைத் தொடங்கினார்கள்-

கம்யூனிஸக் கொள்கைகளைக் கொர்பச்சேவ் மாற்றியமைத்திருப்பதால் மற்ற கம்யூனிஸ்ட் நாடுகளில் வாழ்பவர்கள் சிந்திக்கத் தொடங்கினார்கள்-

ஆனானப்பட்ட ரஷ்யாவே மாறி வரும் போது மற்ற கம்யூனிஸ்ட் நாடுகள் ஏன் மக்களுக்கு அதிக சுதந்திரம் அளிக்கக் கூடாது என்று எண்ணிப் போராட்டங்களையும் கிளர்ச்சிகளையும் தொடங்கி விட்டார்கள்-

கிழக்கு ஜெர்மனியில் மக்கள் போராடியும் பலன் இல்லாததால் நாட்டை விட்டு வெளியேறி மேற்கு ஜெர்மனிக்குள் புகுந்து வருகிறார்கள்-

கிழக்கு ஜெர்மனியிலிருந்து யார் வந்தாலும் அவர்களை மேற்கு ஜெர்மனி கைநீட்டி வரவேற்கிறது-

ஆகையால் கிழக்கு ஜெர்மனியைச் சேர்ந்தவர்கள் ஹங்கேரி வழியாக ஆஸ்திரியாவின் எல்லைக்குள் புகுந்து மேற்கு ஜெர்மனிக்குத் தப்பி வந்தார்கள்-

ஆயிரக் கணக்கானவர்கள் கிழக்கு ஜெர்மனியை விட்டுச் சுதந்திர தாகத்துடன் மேற்கு ஜெர்மனிக்கு ஓடத் தொடங்கியதும் கிழக்கு ஜெர்மனி அரசு கொஞ்சம் வளைந்து கொடுத்தது

கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தில் இருக்கும் கிழக்கு ஜெர்மனியைப் பாதுகாக்கும் 45 கி மீ நீளமுள்ள பெர்லின் சுவரை இடிக்கத் தொடங்கி விட்டார்கள்-

அப்படிச் சுவரை உடைத்த போது மக்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு அளவே இல்லை-

சுவர் தெரியாதபடி மக்கள் அதன் மீது உட்கார்ந்து மேற்கு பெர்லினில் இருக்கும் உறவினர்கள் நண்பர்களுடன் பேசத் தொடங்கினார்கள்- மக்கள் கூட்டம் சுவரையே மறைத்து விட்டது என்று "டைம்ஸ்" பத்திரிகை குறிப்பிடுகிறது-

கிழக்கு ஜெர்மனியும் மேற்கு ஜெர்மனியும் விரைவில் இணைந்து ஒரே ஆட்சியின் கீழ் வரக்கூடும் என்பதற்கான அறிகுறிகள் கூடத் தெரிகின்றன என்று ஒரு மேலை நாட்டுப் பத்திரிகை கூறுகிறது-

ஆனால் கிழக்கு ஜெர்மனி இதற்கு எளிதில் சம்மதிக்காது எனத் தெரிகிறது-

ஹங்கேரி ஒரு கம்யூனிஸ்ட் நாடாக இருந்த போதிலும் அது தன் எல்லைகளைத் திறந்து விட்டிருந்ததால் கிழக்கு ஜெர்மனி மக்கள் ஹங்கேரியின் வழியாக தப்பி ஓடினார்கள்-

ஹங்கேரியின் எல்லையில் போடப்பட்டிருந்த முள்வேலி அகற்றப்பட்டு விட்டது-

முன்பெல்லாம் ஹங்கேரியின் எல்லையையோ பெர்லின் சுவரையோ கடக்க முயல்பவர்களை இராணுவத்தினர் சுட்டுத் தள்ளி வந்தார்கள்-

இப்போது தப்பிப் போகிறவர்களைச் சுடுவதில்லை- மாறாக இராணுவத்தினர் வேறு பக்கம் திரும்பிக் கொண்டு பார்க்காதவர்களைப் போல் இருந்து விடுகிறார்கள்-

சமீபத்தில் செக்கோஸ்லவேக்கியவில் ஏற்பட்ட புரட்சி உலகத்தைக் கவர்ந்திருக்கிறது- செக்கோஸ்லவேக்கியா கம்யூனிஸ்டுகளின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது-

1968 இல் செக்கோஸ்லவேக்கியா மக்கள் கம்யூனிஸ்ட் ஆதிக்கத்தை எதிர்த்துப் புரட்சி செய்த போது ரஷ்யா ஐந்து லட்சம் வீரர்களை அனுப்பிக் கலவரத்தை அடக்கியது-

ஆனால் சமீபத்தில் மீண்டும் இந்த நாட்டில் புரட்சி தொடங்கியபோது ரஷ்யா தலையிடவில்லை

பராகுவே நகரில் பதினையாரம் இளைஞர்கள் ஒன்று கூடி புனித வென்ரஸஸ்லாஸ் சிலைக்கு எதிரில் போராட்டம் நடத்திய போது பொலீஸார் பயங்கரமாகத் தாக்கி இளைஞர்களைக் காயப்படுத்தினார்கள்-

இதன் விளைவாக நாடு முழுவதும் கலவரம் பரவியது- கல்லூரிகளில் ஸ்டிரைக்- சினிமாக்கள் நடக்கவில்லை- தொழிற்சாலைகள் மூடப்பட்டன- எங்கும் போராட்டம்- வேலை நிறுத்தம்-

ஆண்களும் பெண்களும் லட்சக்கணக்கில் கூடி விடுதலை வேண்டும் என்று வீதிகளில் முழங்கினார்கள்- டெலிவிஷன் ஊழியர்கள்கூட வேலை நிறுத்தம் செய்யப் போவதாக அறிவித்தார்கள்-

எழுத்தாளர்களும் பேச்சாளர்களும் செக் நாடு கம்யூனிஸ்ட் ஆட்சியால் எப்படிச் சீர்குலைந்து விட்டது என்று குறிப்பிட்டுக் காட்டினார்கள்-

மக்களின் கிளர்ச்சியை அடக்க முடியாது என்று எண்ணிய கம்யூனிஸ்ட் அரசு அடிபணியத் தொடங்கியது-

ஆட்சியில் இருந்த கம்யூனிஸ்ட் தலைவர்கள் தமது பதவியை இராஜினாமா செய்ததுடன் தாம் செய்த தவறுகளையும் உணர்ந்தார்கள்-

கம்யூனிஸ்ட் தலைவர்கள் இராஜினாமா செய்ததும் குடியரசுத் தலைவர் காரல் ஆர்பானெக் செக் நாட்டின் அதிபரானார்-

இவர் பழைய கம்யூனிஸ்ட் கொள்கைகளை எதிர்ப்பவர்- மக்கள் சுதந்திரமாக வாழ அரசு அமைதிக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளார்- ... இவர் ஆட்சியில் நாட்டில் பல புதுமையான மாறுதல்கள் நடக்கும் என்று ஒன்றரைக் கோடி மக்கள் கருதுகிறார்கள்-

இங்கே இப்போது மக்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார்கள்- தெருக்களில் ஆடிப்பாடி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார்கள்-

விரைவிலேயே இங்கு பொதுத் தேர்தல்கள் நடத்தவும் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன-

விரைவில் இது ஒரு ஜனநாயக நாடாக மாறும் என்பதில் யாருக்கும் சந்தேகமில்லை-

கம்யூனிஸ்ட் நாடுகளில் நடந்து வரும் போராட்டங்களைப் பார்க்கும்போது ஜனநாயக நாடுகளில் மக்களுக்கு இருக்கும் மகிழ்ச்சியும் சுதந்திரமும் கம்யூனிஸ்ட் நாடுகளில் இல்லை என்பது தெளிவாகத் தெரிகிறது-

அதே நேரத்தில் கம்யூனிஸ்ட் நாடுகளும் விரைவில் ஜனநாய நாடுகளாக மாறும் வாய்ப்பு அதிகமாகி வருகிறது என்பதும் தெளிவாகத் தெரிகிறது-

தனிமனிதன் எப்போதும் யாருக்கும் அடிமையைப் போல் வாழ விரும்பவில்லை என்பதைத்தான் கம்யூனிஸ நாடுகளில் நடக்கும் கலவரங்கள் நமக்கு எடுத்துச் சொல்கின்றன-

(ம).

## சீனாவில் கிராம மக்கள் தற்கொலை அதிகரிப்பு

சீன கிராமங்களில் தற்கொலை செய்து கொள்வது பெருகுவாக அதிகரித்துள்ளது என்று அந்நாட்டு பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது,

1985 ஆம் ஆண்டின் பின்னர் சீனாவின் ஒரு குறிப்பிட்ட பிராந்தியத்தில் மட்டும் கிருமிநாசவிகளை அருந்தி 2900 பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனராம்!

சீன கிராம மக்களின் பண்பாட்டில் ஏற்பட்டுள்ள சிதைவையும பழைய தலைமுறையினருக்கும, புதிய தலைமுறையினருக்கும இடையே ஏற்பட்டுள்ள சித்தாந்த மோதலையுமே இந்த கிராம மட்ட தற்கொலை அதிகரிப்பு எடுத்துக் காட்டுவதாக இப் பத்திரிகை அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறது,

இளைஞர்கள் தமது வாழ்க்கை இப்படித்தான் அமைய வேண்டும என்ற தீர்மானிக்கும உரிமையையும் அதிக சுதந்திரத்தையும நாடும போது குடும்பத்தினரிடையே ஏற்படும பிரச்சினைகள் இந்த தற்கொலைகளுக்கு காரணமாக அமைந்து விடுகின்றன.

(ம-U32)

# அனாதைகளை ஆதரித்து அபயம் அளித்திடுங்கள்

## அல்குர் ஆனும் அல் ஹதீஸும் இதனையே வலியுறுத்தி நிற்கின்றன

இஸ்லாம மக்களுக்கு சிறந்த நடைமுறைகளையும, வாழ்க்கை முறைகளையும, வழிமுறைகளையும் அமைத்துக் காட்டி மக்களை நல்லவர்களாக மாற்றி அமைக்கும பொருட்டு பல உண்மைகளை விளக்கியுள்ளது. இதே போன்றே அனாதைகள் விடயத்தில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை அல்குர்ஆன் மூலம் பல தெளிவான கருத்துக்களைத் தந்துள்ளது.

நமது அன்றாட கடமைகளை விடவும் அனாதைகள் விடயத்தில் மிகவும் கண்ணும் கருத்துமாக நடந்து கொள்ள வேண்டும் என்பதை அல்குர்ஆன் அநேகமான இடங்களில் ஆணித்தரமாக வலியுறுத்திக் கூறுகிறது.

அனாதைகளின் பொருள்களை அபகரிப்பதோ, அபகரிக்க பல திட்டங்களைத் தீட்டுவதோ அவர்களுக்கு நன்மை செய்வது போல் நடித்து அவர்களுடைய தொழில், காணி, நிலம போன்றவற்றை அபகரித்துக் கொள்வதையோ கூடாது என்று இறைவன் கண்டிப்பாக கூறியுள்ளான்.

அவர்களுடைய பொருள்களைப் பறித்தோ, பதுக்கியோ, அபகரித்த தன்னுடைய அல்லது

**— ஏ. எம். எம். பாறூக் —**

தனது பிள்ளைகளினுடைய தேவைகளை நிறைவேற்றுவதைக் கூட இஸ்லாம கண்டிப்பான முறையில் வெறுக்கிறது.

நீங்கள் அனாதைகளின் பொருள்களை (அவர்கள் பிராயம அடைந்த பின் குறைவின்றி) அவர்களுக்குக் கொடுத்து விடுங்கள். (அதிலுள்ள) நல்லதுக்குப் பதிலாக கெட்டதை மாற்றி விடாதீர்கள். அவர்களுடைய பொருள்களை உங்களுடைய பொருள்களுடன் சேர்த்து விழுங்கி விடாதீர்கள். நிச்சயமாக இது பெரும பாவமாகும். (4: 2) (அல்குர்ஆன்)

இன்று நம மத்தியில் நடப்பவற்றை உணர்ந்து பார்த்தால் அப்படிப்பட்ட செயல்களை மறைமுகமாகச் செய்து பணம தேடும பல்லவிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களால் சமுதாயம ஒருபோதும மாற்றமடையப் போவதில்லை.

கடமைகள் செய்வதில் கவனம செலுத்துகிறார்களே தவிர மனதார இறைவனுக்கே மாய செய்கின்றார்கள்.

இதனால் அனாதைகள் ஒருபோதும தலைநிமிர்ந்து வாழ முடியாது. கடைசியில் தங்களது

கொள்ள வேண்டும என்பதை வலியுறுத்துகிறது. இதனை அறிந்தும அறியாதவர்கள் போல் நமமில் பலர் அனாதைகளின் பொருள்களை அபகரித்து அவர்களை நடுத்தெருவில் விட்டு விடுகிறார்கள்.

அனாதைகளின் அன்றாட வாழ்விற்கே அபயம அளிக்க வேண்டியவர்கள் அவர்களை விரட்டி விடுகிறார்கள். இதனால் சமூகத்தில் சிறந்த மாற்றங்களை ஏற்படுத்த முடியாமல் போய் விடுகிறது.

சிறந்த நடைமுறைகளையும செல்வந்தர்களுக்கு என்ன தேவைகள் இருக்கின்றதோ, அவை அனைத்தும ஏழை எளியவர்களுக்கும இருக்கத்தான் செய்கிறது. அனாதைகள் படித்து முன்னுக்கு வர எத்தனிக்கும போது அவர்களுக்கு பல இடைஞ்சல்களை ஏற்படுத்தி முட்டுக்கட்டை போட்டுத் தடுப்பவர்கள் இனியாவது அந்தக் குணங்களை மாற்றி அவர்களும வாழ வழி அமைக்க உதவி புரிய வேண்டும.

அவர்களிடத்தே மறைந்திருக்கின்ற ஆற்றல்களை வெளிக்கொணர சமுதாயம பாடுபட வேண்டுமேயன்றி மாறாக அவர்களைப் புறக்கணித்துக் கொள்ளும செயலில் இறங்குவதைக் கூட இஸ்லாம வெறுக்கிறது.

வேண்டிய அவல நிலை உருவாகி விடுகிறது.

அனாதைகளை கைதூக்கி விடுவதற்குப் பதிலாக கையிழக்கச் செய்து விடுகிறார்கள். இவர்களால் சமுதாயம எந்த அடிப்படையில் சிறப்படையும என்று சொல்ல முடியாது. சமுதாய சீர்கேடுகளை மாற்றி அமைக்க வேண்டியவர்களே மாறு செய்கின்றார்கள்.

"அனாதைகளின் பொருளை — அவர்கள் பிராயம அடையும வரையில் — நியாயமான முறையின்றித் தொடாதீர்கள்" (6–152) அல்குர்ஆன்.

மேற்கூறப்பட்ட அல்குர்ஆன் வசனம அனாதைகள் விடயத்தில் எந்த அளவுக்கு நாம நடந்து

இருப்பவர்களது இடையறாத அமல்கள் இறைவனிடத்தில் எவ்வளவு தூரம ஏற்றுக் கொள்ளப் படும என்பதை அவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும. அனாதைகள் வாழ்வதற்கு எமமால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும.

அவர்கள் அன்றாடம வாழ்க்கையை நடத்துவதற்காகவாவது நாம பாடுபட வேண்டும. இதனையே நபிகள் நாயகம (ஸல்) அவர்கள் நடைமுறையில் காட்டினார்கள். ஸஹாபாக்களுக்கும அதனையே போதித்தார்கள்.

அனாதைகளின் அமானிதப் பொருட்களை அபகரித்துக் கொண்டு அவர்களை அல்லலுற வைப்பதை இஸ்லாம கண்டிப்பாக வெறுக்கிறது. அனாதைக்கொரு நீதியும அடுத்தவருக்கு ஒரு நீதியும வழங்கும சட்டம இஸ்லாத்தில் இல்லை. நீதியை பாரபட்சமின்றி சரியாக வழங்குமபடிதான் அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான்.

"(விசுவாசிகளே உங்களிடம நமபி ஒப்படைக்கப்பட்ட) அமானிதப் பொருள்களை அவற்றின் சொந்தக்காரர்களிடம நீங்கள் ஒப்படைத்து விடுமபடியும, மனிதர்களுக்கிடையில் நீங்கள் தீர்ப்புக் கூறினால் (பாரபட்சமின்றி) நீதமாகவே தீர்ப்பளிக்குமாறும நிச்சயமாக அல்லாஹ் உங்களுக்குக் கட்டளையிடுகிறான். (4: 58) அல்குர்ஆன்.

ஆகவே நமது கட்டாய கடமைகளை மக்களுக்கு எடுத்து வலியுறுத்துவது போன்று அனாதைகளின் விடயத்தில் அலட்சியமாகவும, புறக்கணித்து நடப்பதையும தவிர்ப்போம.

அவர்களுடைய பொருள்களை அபகரிப்பதையும, அவர்களுக்கு ஆசை காட்டி மோசம செய்வதையும, அவர்களால் உற்பத்தி செய்யப்படும பொருள்களின் விலையில் கொள்ளையடிப்பதையும நிறுத்துமபடி கற்றறிந்தவர்கள் ஏனையோருக்கு உணர்த்த வேண்டும.

அனாதைகளும அவர்களுடைய வாழ்க்கையை முன்னேற்ற மற்றவர்களும உடந்தையாக இருக்க வேண்டும.

(ம-வ)



கள். (அதிலுள்ள) நல்லதுக்குப் பதிலாக கெட்டதை மாற்றி விடாதீர்கள். அவர்களுடைய பொருள்களை உங்களுடைய பொருள்களுடன் சேர்த்து விழுங்கி விடாதீர்கள். நிச்சயமாக இது பெரும பாவமாகும. (4: 2) (அல்குர்ஆன்)

இன்று நம மத்தியில் நடப்பவற்றை உணர்ந்து பார்த்தால் அப்படிப்பட்ட செயல்களை மறைமுகமாகச் செய்து பணம தேடும பல்லவிகள் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்களால் சமுதாயம ஒருபோதும மாற்றமடையப் போவதில்லை.

கடமைகள் செய்வதில் கவனம செலுத்துகிறார்களே தவிர மனதார இறைவனுக்கே மாயு செய்கின்றார்கள்.

இதனால் அனாதைகள் ஒருபோதும தலைநிமிர்ந்து வாழ முடியாது. கடைசியில் தங்களது இடங்களைக் கூட கைவிழந்து வீட்டு வாழ வழியின்றி யாரோ ஒருவருடைய தயவில் வாழ்விற்கே அபயம அளிக்க வேண்டியவர்கள் அவர்களை விரட்டி விடுகிறார்கள். இதனால் சமூகத்தில் சிறந்த மாற்றங்களை ஏற்படுத்த முடியாமல் போய் விடுகிறது.

சிறந்த நடைமுறைகளையும செல்வந்தர்களுக்கு என்ன தேவைகள் இருக்கின்றதோ, அவை அனைத்தும ஏழை எளியவர்களுக்கும இருக்கத்தான் செய்கிறது. அனாதைகள் படித்து முன்னுக்கு வர எத்தனிக்கும போது அவர்களுக்கு பல இடையூறுகளை ஏற்படுத்தி முட்டுக்கட்டை போட்டுத் தடுப்பவர்கள் இனியாவது அந்தக் குணங்களை மாற்றி அவர்களும வாழ வழி அமைக்க உதவி புரிய வேண்டும.

அவர்களிடத்தே மறைந்திடக்கின்ற ஆற்றல்களை வெளிக்கொணர சமுதாயம பாடுபட வேண்டுமேயன்றி மாறாக அவர்களைப் புறக்கணித்துக் கொள்ளும செயலில் இறங்குவதைக் கூட இஸ்லாம வெறுக்கிறது.

அனாதைகளின் பொருள்களை அபகரித்தும அவர்களது முன்னேற்றத்துக்குத் தடையாகவும

---

# பழைய செருப்பு

— எஸ். முத்துமீரான் —

பழைய செருப்பொன்று
பாதையிலே நாதியற்று
சோர்ந்து கிடக்கிறது
சொந்தமொன்றும் இல்லாமல்
கல்லுக்கும் முள்ளுக்கும்
கடும்மழைக்கும வெயிலுக்கும,
எள்ளளவும் அஞ்சாது
எதிர்த்துக் களங்கண்டு,
எவனோ ஒருவனுக்காய்
எத்தனையோ இன்னலுற்று
தேடுவார் இல்லாமல்
தெருவில் கிடக்குமிந்த
வாரறுந்த செருப்பெங்கள்
வாழ்க்கைக்கு நற்பாடம்


★

அடிமையைப்போல் ஒருவனுக்காய்
அனுதினமும் அல்லலுற்று,
உருவமெல்லாம் உருக்குலைந்து
உதவியற்ற அனாதையைப் போல்,
புழுதி படிந்தபடி
புண்பட்ட மனதோடு,
நலிந்து கிடக்குமந்த
நன்றியுள்ள பழஞ்செருப்பு,
உழைத்தழியும் ஏழைகட்டு
உயிருள்ள உதாரணமே!

★

உண்டு கொழுத்தொருவன்
உவப்போடு வாழ்வதற்காய்,
உழைத்துழைத்து ஓடாகி,
உருக்குலைந்து தோலாகி,
செருத்தெருவாய் எச்சிலுக்காய்
திரிந்தலைந்த எமனோடு
வாழ்க்கையிலே போராடும்
வகையற்ற எனக்கின்று
வாரறுந்த பழஞ்செருப்பு
வழி மரபில் ஒரு பாடம்.



# காதலி தேடிக் கொடுத்த மனைவி

ஆர். இராஜலிங்கம்

1

பட்டு போன்ற ஒரு அழகிய கார் அந்த நகைக் கடைக்கு முன்னால் வந்து நின்றது— அதிலிருந்து இறங்கிய வாலிபனைக் கண்டதும் கடை முதலாளி உட்பட அனைவரும் உற்சாகத்துடன் அவனை வரவேற்றனர்—

"பிறந்த நாள் பரிசு வழங்க அழகிய நெக்லஸ் ஒன்று தருகிறீர்களா?" என்று அவன் கேட்டதுதான் தாமதம்! அழகிய பல்வேறு டிசைன்களிலான தங்க நெக்லஸ்கள் மேஜை மீது குவிந்தன—

அதிலிருந்து அவனைக் கவர்ந்த அழகிய நெக்லஸ் ஒன்றை "செலக்ட்" பண்ணி எடுத்துக் கொண்டான்— சுமார் பத்தாயிரம் ரூபா பெறுமதியான அந்த நெக்லஸுக்குரிய தொகையை பாக்கெட்டுக்குள் கையை விட்டு கத்தை கத்தையாக நோட்டுகளை எடுத்து நீட்டினான்—

நகைப் பெட்டியை எடுத்துக் கொண்டு காரை நோக்கி வந்தான்— காரின் முன் கதவைத் திறந்து நகைப்பெட்டியை பின் சீட்டில் போட்டு விட்டு உள்ளே நுழைய முற்பட்டபோது —

"தம்பி...!" என்ற குரல் கேட்டு பின்னால் திரும்பிப் பார்த்தான்—

அங்கே சுமார் நாற்பத்தைந்து வயது மதிக்கத்தக்க மனிதர் ஒருவர் நின்று கொண்டிருந்தார்— பத்தாம்பசலியாகக் காட்சியளித்த அவரின் கைகளில் சில ஓலைச் சுவடிகள் நூலால் கட்டப்பட்ட நிலையில் இருந்தன— சிதைந்து போன சில பழைய பத்தகங்களும் இருந்தன—

கேள்விக்குறியுடன் அவர் முகத்தைப் பார்த்த திலீபன் (அதுதான் அந்த வாலிபனின் பெயர்)

தளோ — நம்பவில்லையோ அதைப்பற்றி எனக்கு அக்கறை இல்லை... ஆனால் ஒருவருக்கு வரப்போகும் ஆபத்தை அறிந்திருந்தும் அதனை அவருக்கு அறிவுறுத்தாமல் இருப்பது தர்மம் அல்ல! அதனால்தான் சொல்கிறேன்"

அவர் கூறியதைக் கேட்டு கோபங்கொண்டான் திலீபன்!

..."சார் இப்பொழுது உங்களுக்கு வேண்டியதெல்லாம் பணம்— அதற்காகத்தானே

சாஸ்திரம் சொன்ன பின்பு நீங்கள் கொடுக்கும் காணிக்கையைப் பெற்றுக் கொள்ளக் கூடிய நிலையில்தான் நான் இருக்கிறேன்... ஆனால் எனக்குப் பணம்தான் பிரதானம் என்று நீங்கள் தவறாக எடை போட்டு விட்டீர்கள்—

இந்தாருங்கள் உங்கள் பணம்... நீங்கள் எங்கு போக வேண்டுமோ அங்கு தாராளமாகப் போகலாம்— வருகிறேன்" என்று கூறி

மையிலேயே இழந்து விட்டீர்கள்... உங்கள் தேவைகளை இப்பொழுது நீங்களே செய்து கொள்ளக் கூடிய நிலையில் இருக்கிறீர்கள்..."

— என்று அவர் கூறியதும்

"உம்... சரிதான்— இதுவும் எல்லோருக்கும் தெரிந்த விஷயந்தான்" என்று அவன் சிறிதும் சுவாரஸ்யமில்லாமல் சொன்னான்...

"அவசரப்படாதீர்கள் தம்பி விஷயத்தைச் சொல்கிறேன்... நீங்கள் ஒரு பெண்ணை உயிருக்குயிராகக் காதலிக்கிறீர்கள்— ஆனால் அவளின் உயிருக்கு உங்களால்தான் ஆபத்து வரப்போகிறது..."

— இப்படி அவர் சொன்னதும் அவன் அதிர்ச்சிக்குள்ளானான்—

"என்ன அவளுக்கு என்னால் ஆபத்தா? என்ன சொல்கிறீர்கள்?"


"ஆமாம் தம்பி... உங்கள் கைரேகை ஜாதக பலன் அப்படி! நீங்கள் அவளைத் திருமணம் செய்து கொண்டால் மூன்று மாத காலத்தில் அவளின் ஆயுள் முடிந்து விடும்!"

"என்ன சொல்கிறீர்கள்? ஏன் அப்படி...?"

"அது உங்கள் கைரேகை பலன்! நீங்கள் எந்தப் பெண்ணைத் திருமணம் செய்கிறீர்களோ... அவளுக்கு மூன்று மாதங்கள்தான் ஆயுள்!"

"ஆ...! அப்படியா? இது என்ன கொடுமை? இதற்குப் பரிகாரம் கிடையாதா?"

"பரிகாரம்... உங்கள் ஜோதிடப்படி நீங்கள் முதலில் மணக்கும் பெண்ணுக்குத்தான்



ஆயுள் காலம் மூன்று மாதம்— அதன் பின்பு நீங்கள் ஒரு பெண்ணை மணந்து கொண்டால் அவள் நீண்ட ஆயுள் உடையவளாக இருப்பாள்"

சோதிடர் சொன்ன விஷயங்களை அவனால் நம்பாமல் இருக்கவும் முடியவில்லை— நம்பவும் முடியவில்லை... பலவாறு சிந்தித்துக் கொண்டே பாக்கெட்டுக்குள்ளிருந்து நூறு ரூபா நோட்டொன்றை உருவி எடுத்தான்... பின்னர் அதனை அவரிடம் நீட்டினான்—

அவர் அதனை ஒருவித வெறுப்புடன் நோக்கினார்— பின்பு —

"தம்பி சாஸ்திரம் சொன்னதற்கு காணிக்கையாக ஏதாவது கொடுத்திர்களானால் அதனை வாங்கிக் கொள்கிறேன் ஆனால் இவ்வளவு பெரிய தொகை எனக்கு பற்றுக்களை ஏற்படுத்தி நிம்மதியைக் கெடுத்து விடும்... ஆதலால் இவ்வளவு பெரிய தொகைப் பணம் எனக்கு வேண்டாம்" என்றார்—

தன்னிடம் இவ்வளவு காலமும் பணத்தை மட்டுமே எதிர்பார்த்து எல்லாரும் வந்தார்கள்... ஆனால் இவர் மட்டும் வித்தியாசமாக இருக்கிறாரே என்று சிந்தித்த அவன் —

"சார்... அப்படியானால் நான் எவ்வளவு தந்தால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்கள்" என்று கேட்டான்—

"ஒன்றோ... இரண்டோ ரூபா தந்தீர்களானால் போதும் தம்பி" என்றார்—

இரண்டு ரூபா நாணயம் ஒன்றைத் தேடியெடுத்து அவரிடம் கொடுக்க அவர் மகிழ்ச்சியுடன் அதனைப் பெற்றுக் கொண்டார்—

"சார் உங்களிடம் ஒன்று கேட்கலாமா...?"

"தாராளமாகக் கேளுங்கள் தம்பி!"

"உங்களுக்கு இது மட்டுந்தான் வருமானமா...? அல்லது வேறு ஏதாவது உண்டா?"

"ஏன் தம்பி அப்படிக் கேட்கிறீர்கள்? எனக்கு இது மட்டுந்தான் வருமானம்"

"அப்படியானால் இந்த வருமானத்தில் எப்படி வாழ முடியும்?"

"ஏன் முடியாது...? திருப்தியாக வாழ்கிறேன்... நான் தனிக்கட்டைதானே... உங்களைப் போல இன்னும் பலரை சந்திப்பேன்... அவர்களிடமிருந்து கிடைக்கும் பணத்தைக்கொண்டு ஒரு நேர உணவை தயார் செய்து கொள்வேன்— சில நாட்களில் ஒரு சதமும் கிடைக்காமல் போய்விடும்— அப்படியான நாட்களில் வெறும் பச்சைத் தண்ணீர்தான்... இப்படித்தான் நான் வாழ்கிறேன்" என்றார் அவர்—

இவருடன் இன்னும் கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தால் இவர் நம்மையும் துறவியாக மாற்றி விடுவார் போலிருக்கிறது என்று நினைத்த திலீபன் தான் அந்த இடத்தில் வெகு நேரத்தைக் கடத்தி விட்டதை உணர்ந்து அவரிடம் விடைபெற்றுக் கொண்டான்...

[தொடரும்]

## என்று தான் ஓயுமோ?

— சிவா. பத்மநாதன் —

யாருக்கு யார் ஆறுதல்சொல்லு வோமிங்கு
அத்தனை வீட்டிலும ஏக்கம்
ஊருக்கு ஊரோடி உயிர்தப்பக் காடேறி
உடல் விட்டுப் போனதே தூக்கம்
பேருக்கு நீதியும் பேயிற்கு வாழ்க்கையும்
பட்டாலே ஏதுதான் மீதம்...?

★

மண்ணடா மண்ணிங்கு எதிர்கால வாழ்க்கையும்
மயக்கத்தில் போகுதே காட்டில்
வீணடா வீணிங்கு சதக்காசு மதிப்பில்லை
விலையில்லா எம்முயிர் நாட்டில்
ஆண்டவன் கூடத்தான் ஷெல்லுக்கு இரையானான்
ஆலயம் இல்லையே நாட்டில்!

★

இத்தனை துயரிங்கு பட்டுநாம் வாழ்கின்றோம்
இரங்குமோ ஓருள்ளம கண்டு...?
எத்தனை சோதனை நித்தமும் வேதனை
எப்போது ஓயுமோ குண்டு...?
பித்துப்பி டிக்காத குறையொன்று மட்டும்தான்
பற்றெல்லாம் இழந்தோமே இன்று

கட்டப்பட்ட நிலையில் இருந்தன— சிதைந்து போன சில பழைய புத்தகங்களும் இருந்தன—

கேள்விக்குறியுடன் அவர் முகத்தைப் பார்த்த திலீபன் (அதுதான் அந்த வாலிபனின் பெயர்)

"உங்களுக்கு என்ன வேண்டும்?" என்று கேட்டான்—

"தம்பி உங்களின் வலது கையைக் கொஞ்சம் நீட்டுங்கள்" என்றார் அவர்—

"ஏன் என் வலது கைக்கு என்ன...?" என்று கேட்டான் அவன் ஏளனமான குரலில்...

"வலது கைக்கு ஒன்றுமில்ல தம்பி— உங்கள் வாழ்க்கையில்தான் ஏதோ நடக்கக் கூடாதது நடக்கப் போகின்றது— அதை உங்கள் முகம் காட்டுகிறது— உங்கள் வலது கையைக் காட்டினால் ரேகையைப் பார்த்து உங்கள் வாழ்க்கையில் நடக்கப் போகும் அந்த சம்பவம் என்னவென்று அறிந்து கூறுவேன்" என்றார் அந்த மனிதர்!

"ஓஹோ அப்படியா? இதை நான் நம்ப வேண்டும் என்று கூறுகிறீர்கள்— அதற்கெல்லாம் எனக்கு நேரம் இல்லை"

"தம்பி அப்படிச் சொல்லாதீர்கள்— வெள்ளம் வருமுன் அணை கட்ட வேண்டும்— உங்களுக்கு வரப் போகும் ஆபத்திலிருந்து உங்களை நீங்கள் காப்பாற்றிக் கொள்ள வேண்டாமா?"

"ரொம்ப தேங்ஸ்! உங்களுக்கு என் மீது இருக்கும் அக்கறைக்கு! ஆனால் நான் இதையெல்லாம் நம்பத் தயாராக இல்லையே! எனக்கு இந்த சாஸ்திரம் – சம்பிரதாயம் எதிலுமே நம்பிக்கையில்லை— இப்போது நான் அவசரமாக ஒரு பயணம் போக வேண்டும்— வரட்டுமா?"

"தம்பி கொஞ்சம் பொறுங்கள்... நீங்கள் நம்புகிறீர் வுறுத்தாமல் இருப்பது தர்மம் அல்ல! அதனால்தான் சொல்கிறேன்"

அவர் கூறியதைக் கேட்டு கோபங்கொண்டான் திலீபன்!

..."சார் இப்பொழுது உங்களுக்கு வேண்டியதெல்லாம் பணம்— அதற்காகத்தானே கைரேகை பார்க்கிறீர்கள்... இந்தாருங்கள் ஐம்பது ரூபா— போதாவிட்டால் இன்னும் தருகிறேன்... தயவுசெய்து ஆளை விட்டால் போதும்"

— என்றவாறு பாக்கெட்டில் இருந்து ஐம்பது ரூபா நோட்டொன்றை உருவியெடுத்து அவரின் கையில் திணித்தான்— பின்னர் — ச

## தொடர் கதை

"நான் வருகிறேன்" என்று கூறிவிட்டு காருக்குள் நுழையச் சென்ற அவனை —

"தம்பி" என்று மீண்டும் அவர் அழைத்தார்—

"என்ன இன்னும் என்ன வேண்டும் உங்களுக்கு?" என்று கேட்டான் எரிச்சலுடன்—

"தம்பி நீங்கள் மிக மட்டமாகக் கணக்கெடுத்து விட்டீர்கள் என்னை... பணத்துக்காகத்தான் சாஸ்திரம் பார்க்கிறேன் என்று நினைத்து சாஸ்திரத்தின் மகிமையையே குழிதோண்டிப் புதைத்து விட்டீர்கள்... அப்படிப்பட்ட உங்களுக்கு நான் சாஸ்திரம் சொல்ல வேண்டுமென்று கட்டாயமில்லை! குப் பணம்தான் பிரதானம் என்று நீங்கள் தவறாக எடைபோட்டு விட்டீர்கள்—

இந்தாருங்கள் உங்கள் பணம்... நீங்கள் எங்கு போக வேண்டுமோ அங்கு தாராளமாகப் போகலாம்— வருகிறேன்" என்று கூறி அவன் கொடுத்த ஐம்பது ரூபா நோட்டை மீண்டும் அவனின் கையிலேயே திணித்து விட்டு விறுவிறுவென்று நடந்தார்—

அவர் போவதையே ஆச்சரியத்துடன் பார்த்துக் கொண்டிருந்த திலீபன் சில யார் தூரம் அவர் சென்றதும் —

"சார் கொஞ்சம் நில்லுங்கள்..." என்றான்—

அவர் கேள்விக்குறியுடன் திரும்பி அவனைப் பார்த்தார்—

"சார் உங்களைத் தவறாக நினைத்து விட்டேன்... மன்னித்துக் கொள்ளுங்கள்... தயவுசெய்து என் கையைப் பார்த்து அதன் பலனை சொல்லிவிட்டுப் போங்கள்... பிளீஸ்" என்று கூறினான்...

"சரி தம்பி கையை நீட்டுங்கள்" என்றவாறு அவனருகில் வந்தார்—

அவன் கையை நீட்டியதும் சிறிது நேரம் கூர்ந்து பார்த்தார்— பின்னர் ஏதோ சொல்ல ஆயத்தமானார்—

ஏதோ ஒரு அதிர்ச்சியான விஷயத்தைச் சொல்லப் போகிறார் என்று எதிர்பார்த்தவனுக்கு அவர் சொன்ன விஷயம் "சப்"பென்றிருந்தது—

"தம்பி பல கோடி ரூபா சொத்துகளுக்கு நீங்கள் அதிபதியாக இருக்கிறீர்கள்... சரிதானா?"

"சரிதான்... ஆனா இது ஊரே அறிந்த விஷயம்" என்றான் ஏளனமான குரலில்—

"பொறுங்கள் தம்பி" என்று கூறிய அவர் மீண்டும் அவன் கையைக் கூர்ந்து பார்த்து விட்டு —

"நீங்கள் பெற்றோரை இள

— என்று அவர் கூறியதும்

"உம்... சரிதான்— இதுவும் எல்லோருக்கும் தெரிந்த விஷயம்தான்" என்று அவன் சிறிதும் சுவாரஸ்யமில்லாமல் சொன்னான்...

"அவசரப்படாதீர்கள் தம்பி மாதங்கள்தான் ஆயுள்!"

"ஆ...! அப்படியா? இது என்ன கொடுமை? இதற்குப் பரிகாரம் கிடையாதா?"

"பரிகாரம்... உங்கள் ஜோதிடப்படி நீங்கள் முதலில் மணக்கும் பெண்ணுக்குத்தான் என்று சிந்தித்த அவன் —

"சார்... அப்படியானால் நான் எவ்வளவு தந்தால் நீங்கள் ஏற்றுக் கொள்வீர்க"ளென்று கேட்டான்—

"ஒன்றோ... இரண்டோ ரூபா தந்தீர்களானால் போதும் தம்பி" என்றார்—

டிருந்தால் இவர் நம்மையும் துறவியாக மாற்றி விடுவார் போலிருக்கிறது என்று நினைத்த திலீபன் தான் அந்த இடத்தில் வெகு நேரத்தைக் கடத்தி விட்டதை உணர்ந்து அவரிடம் விடைபெற்றுக் கொண்டான்...

[தொடரும்]

# மிருகக்காட்சிச்சாலையில் மக்களைக் கவரும் மாலி



மாலியின் வித்தைகள் அதன் அம்மா, அப்பாவையும் கவர்ந்து விட்டன. (ம)

தெஹிவளை மிருகக் காட்சிச் சாலையில் வாரம் ஒரு தடவை வித்தைகளைச் செய்து காட்டி மக்களை மயக்குகிறது ஒரு குரங்கு.

மாலி என்ற பெயர் கொண்ட இச் சிம்பன்சி இக்காட்சிச்சாலையில் வசித்துவரும் ஜூலியா மற்றும் மைக் குரங்குத் தம்பதிகளுக்குப் பிறந்ததாகும்—

மாலி பிறந்ததுமே வித்தை காட்டும் சிம்பன்சியாக இதைப் பழக்க வேண்டும் என மிருகக் காட்சிச்சாலை அதிகாரிகள் தீர்மானித்தனர்— இதைத் தொடர்ந்து ஒரு வருட கால பயிற்சி வழங்கப்பட்டது—

இப்போது மாலி திறமையாக முச்சக்கர வண்டியை ஓட்டிக் காட்டி குழந்தைகளை வியப்பில் ஆழ்த்துகிறது— ஊஞ்சலாட்டம மேசையில் அமர்ந்து மனிதர்களைப் போல உணவு அருந்திக் காட்டுவதிலும மாலிக்கு பயிற்சி வழங்கப்பட்டு வருகிறது—

மாலி சட்டென விஷயத்தைக் கிரகித்துக் கொள்ளும் தன்மை கொண்டது என்கிறார் இதன் பயிற்சியாளர்—

குரங்கு வித்தைகளை எல்லாம கற்றுக் கொண்டதும மாஜி வித்தைக்காரர்களை எல்லாம தூக்கிச் சாப்பிட்டு விடும வகையில் மாலி நிபுணத்துவம் பெற்றுவிடும என்பதில் சந்தேகம இல்லையாம

(ம-032)



சைக்கிள் ஓட்டத்தில் மாலிக்கு நல்ல பயிற்சி உண்டு. (ம)

# மன்மத பாணத்துடன் வந்த ரதிக்கு ஏற்பட்ட தோல்வி

## அவளை முனிவர் வென்றது எவ்வாறு?

மன்மதனுக்கும் ரதிக்கும் கடுமையான வாக்குவாதம் நடந்தது.

ஆரண்யத்தில் கடும் தவம் புரிந்து கொண்டிருந்த ஒரு முனிவனைக் காமுகனாக மாற்ற முடியுமா என்பதே இருவருக்கும் நடந்த விவாதம்.

"முடியும்!" என்றாள் ரதி.

"முடியாது!" என்றான் மன்மதன்.

"புலன் — உணர்ச்சிகளைக் கல்லாக்கிய பிறகே ஒருவன் முனிவனாகிறான். அதில்லை

ஈரம் உள்ளவரை தான் அதில் காமக் குழம்பு கொதிக்கிறது.

துறப்பு என்பது உடல் உள்ளம் அனைத்தையும் துறப்பதே.

அப்படிப்பட்டவன் அந்த முனிவன். அவனைக் காமுகனாக்க உன்னால் முடியுமானால் சிவ ஞான தத்துவம் செத்து விட்டதாக அர்த்தம்" என்றான் மன்மதன்.

"பஞ்சபாணா! இவ்வளவு பழகியும் என்னை நீ அறியவில்லை.

எனது அங்கங்களின் ரஸவாதத்தில் அனைத்தும் சுருண்டு கிடக்கிறது.

காமதேவியின் மைய மண்டபத்தில் தான் விசுவாமித்திரன் மதியிழந்தான்; ராஜ்யங்களை மூழ்கின.

சரித்திரத்தின் பெரும் பகுதியே இதுதான். இதில் மயங்காத ஒருவனை இன்னும் பிறக்கவில்லை!" என்றாள் ரதி.

"முடியுமானால் அந்த முனிவனை முயன்று பார்" என்று ரதிக்கு அனுமதி தந்தான் மன்மதன்!

ரதி தன்னை அலங்கரித்துக் கொண்டாள். [illegible]

முனிவன் கண் திறக்கவில்லை.

ரதி பாடிக்கொண்டே ஆடத் தொடங்கினாள்.

"என் அன்பே! சிறியதொரு கோபுரத்தின் சிங்காரக் கலசங்களைப் பார்.

இந்தக் கோயிலின் வாசலில் பரமனே பல தடவை மயங்கி விழுந்திருக்கிறான்.

நாராயணா!" ஏழு ஆண்டுகளுக்கு முன்னே மூடிய முனிவனின் கண்கள், மெதுவாகத் திறந்தன. அவை கோவைப்பழம் போல் சிவந்திருந்தன.

ரதியின் மேனியை அவன் உற்றுப் பார்த்தான். பார்த்தான், பார்த்தான், பார்த்துக் கொண்டேயிருந்தான்.

ஓங்கி உச்சரித்தான்.

கூடைக்குள்ளிருந்து தலைதூக்கும் பாம்பு போல் அவன் மார்பிலிருந்து மெதுவாக விலகினாள் ரதி.

இப்போது அவள் அவனையே உற்றுப் பார்த்தாள். அவள் கண்கள் சிவந்தன. அவை மெதுவாக மூடின.

தம் கேட்டது: இறைவன் பிரத்தியட்சமானான். அவன் சொன்னான்:

"பலவீனமான ஆத்மாக்கள் மற்றவர்களாலே மாற்றப்படுகின்றன. ஆன்மபலம் உள்ளவர்கள் மற்றவர்களை மாற்றி விடுகிறார்கள்."

(ம)



### இலங்கை பற்றி ரஷ்யாவில் ஆய்வுகள்

இலங்கைக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான கலை கலாசாரத் தொடர்புகள் வளர்ந்து வருகின்றன. இது இலங்கை பற்றிய ஆய்வினை ரஷ்யாவில் வளர்க்கிறது என பிரபல இலங்கை இயலாளரும் விஞ்ஞானப் பேராசிரியருமான யூ. என். மாஸ்கோவ் தெரிவித்துள்ளார்.

ஏரா தல்மூத் என்பவர் 1950 இல் இலங்கை பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டார் நடப்பு ஆண்டில் இலங்கையின் அரசியல் அமைப்புப் பற்றி ஆராய்ச்சி வேலைகளை அவர் மேற்கொண்டுள்ளார்.

இலங்கை அரசியலில் பௌத்த மதத்தின் தாக்கம் இனங்களுக்கிடையிலான உறவுகள் என்பன பற்றியும் ஆய்வுக் கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார்.

லெனின்கிராட் நகரைச் சேர்ந்த நினா கிராஸ்னோ தெட்ஸ்கயா [illegible]

# ராம்!

## அர்த்தமுள்ள பெயர் அது

பக்தியில் பழுத்த பழமான திருமுருக கிருபானந்த வாரியார் பெண்ணின் பெருமை பற்றி கூறுகிறார்.

கல்யாணம் ஆகாத பெண் குஞ்சு தோய்த்த கோடி துணி (புதிய துணி) போல, கல்யாணம் ஆனவள் சலவைத் துணி போல.

கல்யாணம் ஆகாத இளம் பெண் ஒருத்தியும், இளைஞன் ஒருவனும் ஒரு சத்திரத்தில் 2 திண்ணையில் தனித்தனியாக படுத்து உறங்கினார்கள். இளைஞன் அரவம் (பாம்பு) தீண்டி அலறினான்.

குரல் கேட்டு பதறிப் போய் இளைஞன் இருந்த இடத்திற்கு சென்று அழுது புலம்பினாள் இளம் பெண். ஆனாலும் அந்த நிலையிலும் கூட தான் கல்யாணம் ஆகாத பெண் என்பதை உணர்ந்து அவனை கைகளால் தொடாமல் அழுதாள்.

அப்படி வாழ்ந்த பெண்கள், காலம் ஒன்று. இப்போது கல்யாணம் ஆகாமலும், கல்யாணம் ஆன 10 நாட்களில் கூட பிள்ளை பெறும் காலமாக இருக்கிறது. காரணம் கல்யாணம் ஆவதற்கு முன்பாகவே தழுவிக் கொண்டார்கள். தீண்டிக் கொண்டார்,



### வாரியார் தரும் விளக்கம்

இருப்பதைப் போல, ராம் என்ற சொல் அர்த்தமுள்ள பெயர், ராம் என்றால் பாவங்களை வராமல் தடுக்கும் சொல்.

மக்கள் பேச்சு வழக்கில் கூட வந்தாராம், போனாராம் என்று பேசும் போது ராம் என்று சொல்கிறார்கள்.

ஜமதக்னி என்ற முனிவருக்கு 5



மதியழுதான்; ராஜயங்களை மூழ்கின.

சரித்திரத்தின் பெரும பகுதியே இதுதான். இப்படி மயங்காத ஒருவனை இன்னும் பிறக்கவில்லை! என்றாள் ரதி.

"முடியுமானால் அந்த முனிவனை முயன்று பார்" என்று ரதிக்கு அனுமதி தந்தான் மன்மதன்!

ரதி தன்னை அலங்கரித்துக் கொண்டாள், மார்பகங்கள் விம்மி நிற்குமாறு மார்புக் கச்சையைக் கட்டிக்கொண்டாள்.

ஆடும்போது கால்கள் முழுமையும் தெரியும்படி ஆடை அணிந்து கொண்டாள்.

ஞானமுனிவன் தவம் செய்யும இடத்தை நோக்கி விரைந்தாள்.

நமோ நாராயணா!, நமோ நாராயணா!

காட்டு மிருகங்களையே துரத்தி அடிக்கும் அளவுக்கு இந்தக் கோஷம் முனிவனின வாயிலிருந்து வந்து கொண்டிருந்தது.

ரதி, கால் சலங்கைகளால் ஒலி எழுப்பினாள்.

முனிவன் கண் திறக்கவில்லை.

கைவளையோசை பிறந்தது.

முனிவன் அப்படியே இருந்தான்.

இசையும், ஸ்வரங்களும, சுதியும தோற்றுவிடும்படி அவள் பாடினாள்.

இதனை நீ ஒருமுறை பார்த்து விட்டால் மூச்சுத் திணறும்; பேச்சுத் தடுமாறும்; மறு உலகம பற்றிய சிந்தனை மரத்துப் போகும; சங்கார லயமும சுதம சுகம் என்று ஓசையிடும; தாலங்கள் மறந்து போகும; கவலைகள் பறந்து போகும!,

வலிமைகளைச் சேகரித்து வைத்திருக்கும உனது உடலை, இளமையைச் சேகரித்து வைத்திருக்கும என்னிடம் கொடுத்துப் பார்; பிறகு தவம உனக்கு சுகந்து போகும!"

ஆனால் முனிவரிடமிருந்து "நமோ நாராயணா!" என்ற குரலன்றி வேறொன்றும இல்லை,

எனினும உரத்து நின்ற அந்தக் குரல் தாழ்ந்து கொண்டே வந்தது.

"நமோ நாராயணா!, நமோ நாராயணா" என்ற குரல் கீழ் ஸ்தாயிக்கு வந்து விட்டது.

ரதி முனிவன் அருகில் வந்து அமர்ந்தாள்.

அவன் கன்னங்களை வருடினாள். ஆள்காட்டி விரலினால் உதடுகளைத் தடவினாள். மார்பினில் சாய்ந்தாள். அவனை மார்போடு அணைத்தாள்.

"நமோ நாராயணா!"

முனிவன் குரல் மெதுவாக மேலெழுந்தது. ஏதோ ஒருவகை உணர்ச்சி அவனை உந்தித் தள்ளியது.

"நமோ நாராயணா!" என்று இப்போது அவள் அதை உச்சரிக்கத் தொடங்கினாள்.

சுதியும், லயமும் கூடிக்கொண்டே போயின.

முனிவனைக் காமத்துக்கு அழைக்க வந்த ரதி, தான் ஞானத்துக்குள் நுழைந்து விட்டாள்.

முனிவன் சிரித்தான்.

மன்மதன் அலறினான்.

"தவத்தைக் கலைக்கப்போன என் அருமை ரதியே நீயுமா தவம செய்யத் தொடங்கி விட்டாய்!"

திடீரென்று ஒரு சிரிப்புச் சத்

— கவியரசர் கண்ணதாசன் —

ஆண்டில் இலங்கையின் அரசியல் அமைப்புப் பற்றி ஆராய்ச்சி வேலைகளை அவர் மேற்கொண்டுள்ளார்–

இலங்கை அரசியலில் பௌத்த மதத்தின தாக்கம இனங்களுக்கிடையிலான உறவுகள் என்பன பற்றியும ஆய்வுக் கட்டுரைகளை இவர் எழுதியுள்ளார்–

லெனின் கிராட் நகரைச் சேர்ந்த நினா கிராஸ்லைமதல்ஸ்கயா என்பவர் இலங்கையின் திருமணப் பிரச்சனைகள் தொடர்பான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளார்– தமது ஆராய்ச்சிக்குத் தேவையான தகவல் சேகரிக்க 1989 ஆம் ஆண்டு இவர் இலங்கை வந்தார்–

கிலேனா அஸ்லானோவா, யெவ்கெனியா, கல்பாயவா ஆகியோர் இலங்கையின் இலக்கியம பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டுள்ளனர்– 1960 ஆம் ஆண்டு அவர்கள் இத்துறையில் கடமையாற்றத் தொடங்கினர்–

இலங்கையின் சரித்திரம என்ற தலைப்பில் மராத் எல்க்கிவிட்டுஸ, அலெக்ஸான்றா லப்றோனவா ஆகியோர் ஈடுபட்டுள்ளனர் எனவும மாஸ்லவ் தெரிவித்துள்ளார்–

(ம).

நிலையிலும கூட தான் கல்யாணம ஆகாத பெண் என்பதை உணர்ந்து அவளை கைகளால் தொடாமல் அழுதாள்.

அப்படி வாழ்ந்த பெண்கள், காலம ஒன்று. இப்போது கல்யாணம் ஆகும்போதும், கல்யாணம ஆன 10 நாட்களில் கூட பிள்ளை பெறும காலமாக இருக்கிறது. காரணம் கல்யாணம ஆவதற்கு முன்பாகவே தழுவிக் கொண்டார்கள். தீண்டிக் கொண்டார்கள் என்பது தானே.

ராமன் 14 ஆண்டுகள் வனவாசம செய்தபோதும், ஆயிரம ஆண்டுகள் ஆட்சி செய்த போதும, மாதரை தீண்டாமல் மனதாலும் நினையாமல் தியாக வாழ்வு வாழ்ந்திருக்கிறான். தனக்கென்று சொத்து சேர்க்கவில்லை,

இப்போதெல்லாம மந்திரிகள் சுவிட்சர்லாந்தில் பணம போட்டு வைக்கும காலம.

பெண்கள் கணவனைத் தெய்வமாக கருதலாம், ஆனால் சீதைக்கு தெய்வமே கணவனாக இருந்தான், இது எப்படி என்றால் எல்லா மாணவர்களுக்கும பாடசாலை ஆசிரியர் குரு,

ஆனால் ஆசிரியர் மகனுக்கு குருவே தனக்கு தந்தையாக

## தரும் விளக்கம்

இருப்பதைப் போல, ராம் என்ற சொல் அர்த்தமுள்ள பெயர், ராம் என்றால பாவங்களை வராமல் தடுக்கும சொல்,

மக்கள் பேச்சு வழக்கில் கூட வந்தாராம், போனாராம் என்று பேசும போது ராம் என்று சொல்கிறார்கள்.

ஜமதக்னி என்ற முனிவருக்கு 5 குழந்தைகள், அதில ஒரு பிள்ளைக்கு ராமன் என்று பெயர் வைத்தார், "ரா" என்ற எழுத்து பாவங்களை விலக்குகிறது, "ம்" என்ற எழுத்து பாவங்களை வராமல் தடுக்கிறது.

இதனால் தான் ராம், ராம, ராம் என்று சொல்லிக் கொண்டே மகாத்மா காந்தி ஒரு தேசத்திற்கு சுதந்திரம வாங்கி விட்டார், மனிதன் எதைப் பேசினாலும ஒரு குறிக்கோளோடு பேச வேண்டும, எந்த உயிரையும் கொல்லக் கூடாது, அப்படியானால் மனிதன் தெய்வமாகலாம்,

— இவ்வாறு கூறினார் வாரியார்,

(ம–10).

# "கற்றராக்ட" எனப்படும் விழி வெண்படல நோயைத் தடுப்பது எப்படி?

கண்பார்வை மங்குவதற்கு கண்ணின் மணியில் புகார் போன்ற விழி வெண்படலம் படிவது முக்கிய காரணமாகும்–

இந்த விழிவெண்படலம் ஏற்படுவதை குறைப்பதற்கு லண்டன் எடின்பரோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த மருத்துவ நிபுணர்கள் தங்கள் ஆராய்ச்சி மூலம் சில வழிமுறைகளைக் கண்டுபிடித்திருக்கின்றனர்–

விழிவெண்படலம் யாருக்கு ஏற்படுகிறது?

இளம் பெற்றோருக்கு இந்நோய் இருந்தால் அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்கு வெண்படல நோய் ஏற்படும்– ஆபத்து அதிகமாக இருக்கிறது– அதாவது பரம்பரையாக இந்த நோய் ஏற்படும்.

இக் குழந்தைகளுக்குஇளமையிலேயே இந்த நோய் ஏற்பட்டு கண்பார்வை குன்றும் ஆபத்தும் இருக்கிறது–

இந்நோய் ஏற்படுவதற்குரிய அடிப்படைக் காரணம் பற்றி போதியளவு விளக்கமில்லை–

இவ் வெண்படல நோயினால் பாதிக்கப்பட்ட முன்னூறு நோயாளிகளின் வாழ்க்கை நடைமுறைகளையும பழக்க வழக்கங்களையும் தேகாரோக்கியத்தையும் நன்கு ஆராய்ந்த எடின்பரோ பல்கலைக்கழக மருத்துவர்கள் வெண்படல நோய் ஏற்படும் சில காரணங்களை கண்டுபிடித்திருக்கிறார்கள்–

அதாவது நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு வெண்படலம ஏற்படும் ஆபத்து அதிகமாக இருக்கிறது–

நீரிழிவு நோயைக் கட்டுப்படுத்துவது மிகவும் கடினம் என்பதால் இதன் மூலம் "கற்றராக்ட்" ஏற்படுகின்ற ஆபத்தை குறைப்பதும மிகவும கடினம் என்கிறார்கள்.

ஆனால் வேறு சில காரணங்களால் ஏற்படுகின்ற வெண்படல நோயைக் கட்டுப்படுத்த சில வழிமுறைகளை கண்டு பிடித்திருக்கிறார்கள்–

சிகரெட் – பீடி – சுருட்டு நாளொன்றிற்கு நாற்பதுக்கு மேல் பிடிப்பவர்களுக்குக் கண்ணில் "கற்றராக்ட்" ஏற்படும ஆபத்து புகைபிடிக்காதவர்களை காட்டிலும் மூன்று மடங்காகும–

எனவே புகைபிடித்தலை அடியோடு நிறுத்துவதற்கு இதுவே போதுமான காரணமென்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்–

அதிகளவில் சாராயம் கசிப்பு போன்றவற்றைக் குடிப்பவர்களுக்கும் வெண்படல நோய் ஏற்படும் ஆபத்து அதிகரித்துக் காணப்படுகிறது–

சில மருந்து வகைகளுக்கும் குறிப்பாக கண்ணுக்குப் பயன்படுத்தப்படும் தூள் மருந்திலும் "கற்றராக்ட்"டை ஏற்படுத்தும தன்மை காணப்படுகிறது–

இந்த விடயத்தில் டாக்டர்கள் தங்கள் நோயாளிகளுக்கு பயன்படுத்தும் மருந்துகள் பற்றி அதிக கவனம் செலுத்த வேண்டுமென்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள்–

நோயின் அடிப்படை அறிகுறிகளில் ஒன்றான தாக்கத்தை கட்டுப்படுத்த ஒருவகை மருந்து பயன்படுத்தப்படுகிறது இதனை தேவைக்கு அதிகமாக நீண்ட நாள் கண்களுக்கு பயன்படுத்தப்படுவதால் "கற்றராக்ட்" ஏற்படும் ஆபத்து அதிகரிக்கிறது–

சில நாடுகளில் குறிப்பாக இந்தியாவில் இத்தகைய ஆபத்தான மருந்தை மிகச் சுலபமாக கடைகளில் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறது– கண்களில் தூசி விழுந்து ஏற்படுகின்ற மிகச் சாதாரண கண் உறுத்தலுக்குக் கூட இம்மருந்தினை பயனபடுத்துகிறார்கள் என எடின்பரோ பல்கலைக்கழக பேராசிரியர்கள் கூறுகிறார்கள்–

— டாக்டர் ரமணி சிர்மாறன் —

நுண்ணுயிர்களினால் ஏற்படுகின்ற கண்ணோயினாலும் வெண்படல நோய் ஏற்படும் ஆபத்து அதிகரிக்கிறது– சுத்தமான நீரினால் கண்களைக் கழுவுவதும் சுகாதாரமாக இருப்பதும் மிகவும் அவசியமென்று அவர்கள் வலியுறுத்துகின்றனர்–

"தூரப்பார்வை" குறைபாட்டுக்காக மூக்குக் கண்ணாடி அணிபவர்களை விட "குறும் பார்வைக்காக" மூக்குக் கண்ணாடி அணிபவர்களுக்கு இந்நோய் ஏற்படும் ஆபத்து அதிகரித்துக் காணப்படுகிறதாம்– இதற்கு உண்மையான காரணம் என்ன என்பதற்கு இன்னும் விளக்கமில்லை–

"கற்றராக்ட்" நோய் ஏற்பட்டு விட்டால் சிகிச்சைக்கு ஒரேயொரு வழிதான் உண்டு– வெண்படலம் படிந்த கண்ணின் மணியை அறுவை சிகிச்சை மூலம அகற்றி விட்டு செயற்கை வில்லையை அதாவது "பிளாஸ்டிக்" வில்லையை பொருத்துவதாகும்– ஆனால் இயற்கையான கண்ணின் மணியை கண்ணின் தசை நார்கள் தூரப் பார்வைக்கும் குறும்பார்வைக்கும் ஏற்பதாமாகவே கட்டுப்படுத்துவது போல் இதனைக் கட்டுப்படுத்துவதில்லை–

இந்தக் குறைபாட்டை மூக்குக் கண்ணாடியின் உதவியுடன் நிவர்த்தி செய்கிறார்கள்–

மூன்றாவது உலக நாடுகளிலும் மேற்கு நாடுகளிலும் மக்களின் அடிப்படை வாழ்க்கைத் தரமும் உயர்ந்து அவர்களின் ஆயுட் காலமும் அதிகரித்திருக்கிறது– அடுத்த நூற்றாண்டின் முற்பகுதியில் வயது வந்தவர்களின் எண்ணிக்கை தற்போது இருப்பதை விட அதிகம் இருக்கும்–

எனவே வெண்படல நோய் உலகளவில் பெரும பிரச்சினையாக உருவெடுத்து வருகிறதென மருத்துவர்கள் கருதுகிறார்கள்–

இதுவரை கூறப்பட்ட ஆபத்தான காரணங்கள் எவ்வாறு வெண்படல நோயை ஏற்படுத்துகின்றன என்கிற ஆராய்ச்சியில் மருத்துவர்கள் மிகத் தீவிரமாக ஈடுபட்டிருக்கிறார்கள்– இந்த ஆராய்ச்சியில் நல்ல விளைவு கிடைக்குமானால் "கற்றராக்ட்" நோயை குணப்படுத்தும் சிகிச்சை முறையில் பெரும் முன்னேற்றம் ஏற்படுமென நம்பிக்கை தெரிவிக்கிறார்கள்.

அறுவைச் சிகிச்சைக்குப் பதிலாக மருந்துகளின் உதவியுடனேயே சிகிச்சையளிக்கும் "பொற்காலம்" தோன்றிவிடுமென ஆரூடம் தெரிவிக்கிறார்கள்–

[ம].

# சுவிங் கத்தை மெல்லுவது கெட்ட பழக்கமா?

சிஙகப்பூர் சுவிங்கத்தைத் தடைசெய்துள்ளது, ஏனெனில் சதா சுவிங்கத்தை மென்று கொண்டிருப்பவர்கள் அதை பக்கத்தில் இருக்கும் சுவரில் அல்லது பஸ்சில் ஒட்டிவிட்டு அடுத்த சுவிங்கத்தை வாயில் போட்டுக் கொள்கிறார்களாம்,

இவர்கள் ஆங்காங்கே ஒட்டி வைத்து விட்டு போகும் சுவிங்கத்தை அகற்றி சுத்தப்படுத்துவதற்கே அரசாங்கம் பெரும செலவு செய்ய வேண்டியிருக்கிறதாம்,

மேலும் சதா வாயைமென்று கொண்டிருப்பதும் நல்ல ஒரு பழக்கமல்ல என்று பலரும சுவிஙகம மெல்லுபவர்களைப் பற்றி குறை சொல்லி வருகிறார்கள்,

ஆனால் பல் டாக்டர்கள் சுவிங்கம மெல்லுவதில் நன்மை இருக்கவும் செய்கிறது என்று சொல்கிறார்கள், ஒருவர் சுவிஙகம் ஒன்றை வாயில் போட்டால் அதை குறைந்த பட்சம இருபது நிமிடங்களாவது மெல்லுவார், இவ்வாறு மெல்லும போது வாயில் எச்சில் ஊறுகிறது,

நீங்கள் சாப்பிட்டு முடிந்ததும பல் இடுக்குகளில் சிக்கும் மாப் பொருள்கள் பிளாக் அஸிட் என்ற பொருளை உற்பத்தி செய்கின்றன, இந்த அஸிட் திரவமே பற்களைத் தாக்கி ஊறு விளைவிக்கின்றன,

ஆனால் சுவிங்கம மெல்லுவதன் மூலம வாயில் ஊறும அதிகப்படி எச்சில் இந்த அஸிட்டை பலமிழக்கச் செய்து விடுவதால் பற்கள் பாதிப்பில் இருந்து தப்பி விடுகின்றன,

ஆகவே சுவிங்கத்தை சதா வாயில் போட்டு அரைத்துக் கொண்டிருக்காமல் சாப்பாட்டின் பின்னர் ஒன்றிரண்டு சுவிஙகத்தை மெல்லுவது ஆரோக்கியமான ஒரு பழக்கம தான் என்கிறார்கள் பல் டாக்டர்கள்!

கியூபா மற்றும் ஜமேய்க்கா போன்ற கரும்பு உற்பத்தி செய்யும நாடுகளில் கரும்புத் தோட்டங்களில் வேலை செய்யும் மக்களுக்கு பொதுவாக பல வலி போன்ற பல் நோய்கள் வருவதில்லையாம.

இவர்கள் அவ்வப்போது கரும்பை கடித்து மென்று தின்று வருவதால் தான் பல் நோய்கள் இவர்களை அண்டுவதில்லை என்கிறார்கள் பல் வைத்தியர்கள்,

தாடையை அசைத்து மெல்லுவது மூலம ஈறுகளுக்கு அதிக இரத்தம பாய்ச்சப்படுகிறது, ஈறுகளுக்கு போதிய இரத்தமும பிராணவாயுவும கிட்டும போது அவை நோய்களை எதிர்க்கும தன்மையைப் பெறுகின்றன,

இதன் காரணமாக இம்மக்கள் உறுதியான பற்களைப் பெற்றுள்ளனர் என்று விளக்கம அளிக்கப்பட்டுள்ளது, வெற்றிலை போடுபவர்களையும் இந்தப் பட்டியலில் சேர்த்துக் கொள்ளலாம,

வெற்றிலை மெல்லுபவர்களை பல் வியாதிகள் பொதுவாகவே அண்டுவதில்லை, இதற்கும இதே காரணத்தைச் சுட்டிக்காட்ட முடியும்,

நாம் தொடர்ந்து பணியாற்றி வரும் போதும அல்லது தொடர்ந்து பிரச்சினைகளுக்கும நெருக்கடிகளுக்கும முகம கொடுத்து வரும போதும் மனம் பலமிழந்து சோர்வுற்று விடுவது வழக்கம,

மனம் தொய்வுடைந்து விடும இந்நிலையை "ஸ்ட்ரஸ்" என்று ஆங்கிலத்தில் அழைக்கிறார்கள், மனம் சோர்ந்து விடாமல் இருக்க வேண்டும என்பதற்காகத் தான் எட்டு மணித்தியாலமே ஒருவர் பணியாற்ற வேண்டும என்றும், வாரம ஒரு நாளோ ஒன்றரை நாளோ ஓய்வு எடுத்துக் கொள்ள வேண்டும் என்று வகுத்திருக்கிறார்கள்,

பாடசாலை மாணவர்களுக்கு ஒரு மாதகால விடுமுறை அளிப்பதும் மக்கள் விடுமுறையில் வெளியூர் செல்வதும் மனதுக்கு இதம அளித்து புத்துணர்ச்சியை ஊட்டுவதற்காகத்தான்.

ஏனெனில் மனம் சோர்ந்து போன ஒருவர் கருத்துடன் காரியமாற்ற மாட்டார், சிந்தனை யோட்டம் ஏறுமாறாக இருக்கும், இதை அறிந்து கொள்வது எப்படி!

இதற்கென ஒரு சுவிங்கம சந்தைக்கு வந்துள்ளது, ஜப்பானில் தயாரிக்கப்படும் இச் சுவிங்கத்தின் பெயர் "மன அமைதியற்ற நேரத்துக்கான மினிட்" என்பதாகும், பச்சை நிறம கொண்ட இச்சுவிங்கத்தை வாயில் போட்டு மென்ற மூன்றாம் நிமிடமே உஙகளது மனதின் நிலைபற்றி அறிந்து கொள்ள முடியும்.

ஏனெனில் இச் சுவிங்கம மன நிலைக்கு ஏற்ப தன் நிறத்தை மாற்றிக் கொள்ளக் கூடியது, வாயில் போட்டுக் கொண்ட மூன்றாம் நிமிடத்தின் பின்னரும இதன் பச்சை நிறம மாறா விட்டால் மனம் களைப்புடைந்து போயுள்ளது என்று அர்த்தம,

சுவிங்கத்தின் நிறம மஞ்சள் அல்லது இளம் றோசா வர்ணமாக மாறினால் நீஙகள் படு உற்சாகமாக் இருக்கிறீர்கள் என்று பொருள்,

சோர்வுடைந்த நிலையில் வாயில் சுரக்கும எச்சிலில் காணப்படும அஸிட் அளவின் தன்மையைப் பொறுத்தே இப் பச்சோந்தி சுவிங்கம தன் நிறத்தை மாற்றிக் கொள்கிறதாம்!

(த-032)

---

## சோதிட சிந்தாமணி

சிந்தாமணி சோதிடர்:திரு. ஆர்வி

[7—1—1990 தொட்க்கம 13—1—1990 வரை உள்ள பலாபலன்கள்]

### மேஷம்

அசுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் கால்

மேஷம்;— பொருளாதாரம நன்றாக இருக்கும— கடன் தொல்லை இல்லை— செலவுகள் கட்டுக்கடஙகியிருக்கும மனைவியால் அல்லது மனைவி வழியால் தொல்லைகள் ஏற்படும— ஆயினும வாரக் கடைசியில் சூழ்நிலை தெளிவாகும— கடிதப் போக்குவரத்துக்கள் அனுகூலமாக இருக்கும— அயலவரால் உதவி உண்டு—

### சிங்கம்

மகம், பூரம், உத்தரம் 1 ஆம் கால்—

சிஙகம;— பண வருவாய் நன்றாக இருக்கும்— அதற்கேற்பச் செலவுகள் ஏற்படும— மனைவி காட்டும ஆதரவு சாந்தியையும சந்துஷ்டியையும தரும்— தூர தேசத்தில் இருந்து மன மகிழ்ச்சி தரும செய்தி ஒன்று கிடைக்கும— கோர்ட் வழக்குகள் வெற்றியாக முடிந்தாலும நிமமதி குறைவு—

### தனு

மூலம், பூராடம், உத்தராடம் 1 ஆம் கால்—

தனு;— பொருளாதாரம நன்றாக இருக்கும— அதற்கேற்பச் செலவினஙகளும ஏற்படும— கொடுக்கல் வாஙகல் திருப்தியான வகையில் நடைபெறும: பிரயாணத்தில் தொல்லைகளும கஷ்டஙகளும் ஏற்படலாம— தூர தேசத்தில் இருந்து கிடைக்கும கடிதம ஆறுதலான செய்திகளைக் கொண்டுவரும—

### ரிஷபம்

கார்த்திகை 2, 3, 4 ஆம் கால்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் கால்கள்—

ரிஷபம;— தேகாரோக்கியம அபிவிருத்தியடையும— மனதில் உற்சாகமும, புதுத் தென்பும காணப்படும— செய்யும் தொழிலில் முன்னேற்றம காணப்படும— அசிரியத் தொழில் புரிபவர்கள்

### கன்னி

உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் கால்கள்- அத்தும் சித்திரை 1, 2 ஆம் கால்கள்—

கன்னி:— முக வசீகரதாலும வாக்கு வன்மையாலும பல நல்ல காரியஙகள் நிறைவேறும— தொழில் பார்க்கும இடத்தில் மேலதிகாரியின் பாராட்டும அனுதாபமும கிடைக்கும பிள்ளை

### மகரம்

உத்தராடம், 2, 3, 4 ஆம் கால்கள்- திருவோணம், அவிட்டம, 1, 2 ஆம் கால்கள்—

மகரம;— இந்த வாரம புதுத் தொழில் புது முயற்சிகளில் பணத்தை இறைக்காமல் இருப்பது நல்லது— ஒரு சிலர் ஏமாற்றப் பார்ப்பார்கள்— வீடு நிலம வாகனம போன்றவற்றால் வருமா

---

## தாளாத பாசம்



வெற்றிவேல் உண்மையிலேயே அதிர்ந்து போனான்—

"என்ன சார் சொல்றீங்க... கல்யாணமான ஒரு மாசத்துல உங்க மகளை வீட்டை விட்டு அனுப்பிட்டாங்களா?"

"ஆமாப்பா... நான் தான் என் பொண்ணை எப்படி வளர்த்தேன்னு தெரியுமே உனக்கு... ஒரே பொண்ணு அப்புடீன்னு எந்த வேலையும் செய்யவிடாமல் செல்லமா வளர்த்ததன் பலன் இன்னிக்கு சமைக்கத் தெரியாத மருமகள் எஙகளுக்கு தேவையில்லைன்னு புகுந்த வீட்ல விரட்டறதுக்கு நானே காரணமாயிட்டேன்..." குலுஙக குலுஙக அழுதவாறே சாமிநாதன் கூறிய போது —

வெற்றிவேலின் மனதில் சுரீரென்றது—

நானும் இதைப் போலத் தானே என் தஙகை அகிலாவையும் எந்த வேலையும் செய்ய விடாமல் வளர்த்தேன்— என் தஙகச்சி மகாராணியாக்கும் போற இடத்துல எல்லாத்துக்கும் வேலைக்காரிதான் என்று அளவு கடந்த பாசத்தில் சொல்லி தடுத்தேன்!

திருமணமாகி இரண்டு மூன்று வாரஙகள் ஆகிறது— என் தஙகைக்கும் இதே நிலை ஏற்பட்டால்...?

அதை நினைத்த போதே வெற்றிவேலின் மனதில் "திக்" கென்றது—

"சே" கண்மூடித்தனமாக பாசத்தை வைத்து என் தஙகையின் வாழ்க்கை கெட நானே காரணமாகி விட்டேனே..." என்று தனக்குள் கூறிக் கொண்டவன் விபரீதமாக நடப்பதற்கு முன் அவர்கள் வீட்டில் சொல்லி காலில் விழுந்தாவது என் தஙகையை வாழ வைக்க வேண்டும்..." வேகமான எண்ணத்தை செயல் வடிவமாக்க—

அலுவலகத்திற்கு விடுப்பு எழுதி கொடுத்து விட்டு ஸ்கூட்டரை உசுப்பினான்—

தஙகையின் வீட்டில் நுழைந்த போது!

**சின்னஞ் சிறுகதை**

"வாஙகத்தான்..." சந்தோஷத்தில் முகம் காட்டி தஙகை—

"வாஙகத்தான்..." தஙகையின் கணவன் வரவேற்க உள்ளே நுழைந்தான் வெற்றிவேல்—

எனக்காக நடிக்கிறார்களா? இல்லை கிண்டலாக கூப்பிடுகிறாரா? தஙகையும் அவர்கள் திட்டுவதை நான் அறியக் கூடாதென்பதற்காக பொய்யாக சந்தோஷிக்கிறாளா? தஙகை தனியே இருக்கும்போது கேட்டு விட வேண்டும்— அவன் மனம் ஆரவாரமிட்டது—

சமையலறையில் தனிமையில் நின்ற தஙகையிடம் நெருங்கினான் "அகிலா...!"

"என்னண்ணா... திரும்பினாள்—

"நீ இங்கு சந்தோஷமா இருக்கியாம்மா... உன்னை

---

எண் சோதிடம்

கார்த்திகை 2, 3, 4 ஆம் கால்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் கால்கள்—

ரிஷபம்;— தேகாரோக்கியம் அபிவிருத்தியடையும்— மனதில் உற்சாகமும், புதுத் தென்பும் காணப்படும்— செய்யும் தொழிலில் முன்னேற்றம் காணப்படும்— ஆசிரியத் தொழில் புரிபவர்கள் மன மகிழ்ச்சியடைவார்கள் கலை நாடகத்துறையில் உள்ளவர்கள் புகழடைவார்கள்— மிக நெருங்கிய ஒரு அன்பரை இழக்க நேரிடும்—

உத்தரம் 2 ஆம் 3 ஆம் 4 ஆம் கால்கள்- அத்தம் சித்திரை 1, 2 ஆம் கால்கள்—

கன்னி;— முக வசீகரதாலும் வாக்கு வன்மையாலும் பல நல்ல காரியங்கள் நிறைவேறும்— தொழில் பார்க்கும் இடத்தில் மேலதிகாரியின் பாராட்டும் அனுதாபமும் கிடைக்கும் பிள்ளைகளால் செலவுகள் ஏற்பட்டாலும் புகழும் மகிழ்ச்சியும் உண்டு— உறவினர் ஒருவரால் வீண் கவலைக்கு இடமுண்டு—

உத்தராடம், 2, 3, 4 ஆம் கால்கள்— திருவோணம், அவிட்டம், 1, 2 ஆம் கால்கள்—

மகரம்;— இந்த வாரம் புதுத் தொழில் புது முயற்சிகளில் பணத்தை இறைக்காமல் இருப்பது நல்லது— ஒரு சிலர் ஏமாற்றப் பார்ப்பார்கள்— வீடு நிலம் வாகனம் போன்றவற்றால் வருமானம் உண்டாகும்— பிரயாணத்தின் போது உடைமைகளையும் கைப் பொருளையும் ஜாக்கிரதையாகப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும்—

## மிதுனம்

மிருகசீரிடம் 3 ஆம் 4 ஆம் கால்கள். திருவாதிரை புனர்பூசம் 1, 2, 3 ஆம் கால்கள்—

மிதுனம்;— குடும்பத்தில் உள்ள பிரச்சினைகள் குறைந்து அமைதி ஏற்படும்— மனதில் மகிழ்ச்சியும் நிறைவும் தோன்றும் நீண்டநாட்களாகப் பிரிந்திருந்தவர்கள் வந்து ஒன்றுசேர்வார்கள்— நண்பர் ஒருவரால் ஒரு புது முயற்சிக்கு அடிபோடப்படும்— கொடுக்கல் வாங்கலில் சிறுபிரச்சினைகள் [illegible]—

## துலாம்

சித்திரை 3, 4 ஆம் கால்கள், சுவாதி விசாகம் 1, 2, 3 ஆம் கால்கள்—

துலாம்;— செய்தொழிலில் அபிவிருத்தி காணப்படும்— பண நெருக்கடி கவலை தரும்— அரசாங்க உத்தியோகத்தர்கள் பதவி உயர்வுகளையும் பாராட்டுக்களையும் எதிர்பார்க்கலாம்— வீடு சம்பந்தமாகச் சில பிரச்சினைகள் உருவாகும்— அயலவரோடு வாக்குவாதங்களைத் தவிர்த்து நடப்பது நல்லது—

## கும்பம்

அவிட்டம் 3, 4 ஆம் கால்கள், சதயம், பூரட்டாதி 1, 2, 3 ஆம் கால்கள்—

கும்பம்;— செய் தொழிலில் பல விதக் குறைவு காணப்படும் வீண் அலைச்சலும் ஏமாற்றமும் ஏற்படும்— திட்டப்படும் திட்டங்கள் பலனளிக்காமல் போகலாம்— மனைவியின் அன்பும் ஆதரவும் புதுத் தெம்பைத் தரும்— அயலவர் உதவியாக இருப்பார்கள் வெளிநாட்டில் இருந்து பணம் பொருள் உதவி கிடைக்கும்—

## கடகம்

புனர்பூசம் 4 ஆம் கால் பூசம் ஆயிலியம்—

கடகம்;— பணப் புழக்கம் நன்றாக இருந்தாலும் வயிற்றுக் கோளாறு தலைநோய் போன்றவை வர ஆரம்பத்தில் உபத்திரவம் தரலாம்— தூக்கமின்மையும் சோர்வும் ஏற்படும்— குழந்தைகள் பற்றி ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்— குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெற இடமுண்டு—

## விருச்சிகம்

விசாகம், 4 ஆம் கால். அனுஷம் கேட்டை—

விருச்சிகம்;— குடும்ப நலம் நன்றாக இருக்கும்— ஆனாலும் சில சில பிரச்சினைகள் ஏற்படும்— மனோதிடத்துடன் நடந்து கொண்டால் குடும்பத்தில் ஏற்படும் கவலையைத் தீர்க்கலாம்— காதல் வயப்பட்டவர்கள் எதிர்பாராத தடைகளினாலும் தப்பபிப்பிராயங்களினாலும் சஞ்சலப் [illegible] நேரிடும்—

## மீனம்

பூரட்டாதி, 4 ஆம் கால். உத்திரட்டாதி, ரேவதி—

மீனம்;— வெளிவட்டாரப் பழக்கத்தால் புகழ் ஏற்படும்— காதல் விவகாரங்கள் மகிழ்ச்சியுடன் இருக்கும்— பணப் புழக்கம் நன்றாக இருக்கும்— பழைய கடன்கள் நிவர்த்தியாகும்— மனைவி வழியால் அல்லது தாய் வழியால் மன மகிழ்ச்சி தரும் காரியங்கள் சமபவிக்கும்— கலைஞர்கள் புகழும் பொருளும் பெறுவார்கள்—

அண்டுவதில்லை, இதற்கும் இதே காரணத்தைச் சுட்டிக்காட்ட முடியும்,

நாம் தொடர்ந்து புணியாற்றி வரும் போதும அல்லது தொடர்

காணப்படும் ஆளிட் அளவின் தன்மையைப் பொறுத்தே இப் பச்சோந்தி சுவிங்கம் தன் நிறத்தை மாற்றிக் கொள்கிறதாம்!

(த-032)

வெற்றிவேலின் மனதில் [illegible] தென்றது—

"சே" கண்மூடித்தனமாக பாசத்தை வைத்து என் தங்கையின் வாழ்க்கை கெட நானே

# சிந்தாமணி எண் சோதிடம்

## NUMEROLOGY

[7—1—1990 தொடக்கம் 13—1—1990 வரை உள்ள பலாபலன்கள்]

### 1

1 10 19 28 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

பணவசதி லட்சுமீகரம வாக்கு பலிதம பலவித பொருட்பேறு ஆரோக்கியக் குறைவு இனசனப் பகை பூமியால் பலன் பிரயாண சுகம—

அதிஷ்ட நாட்கள்; வியாழன் சனி—

### 2

2 11 20 29 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

சுகபோக வாழ்க்கை வாகன சுகம கொடுக்கல் வாங்கலில் திருப்தி புதிய ஆடை ஆபரண சேர்க்கை ரோக நீக்கம விருந்தினர் வருகை—

அதிஷ்ட நாட்கள்; புதன் சனி

### 3

3 12 21 30 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

முகவசீகரத்தால் காரிய சித்தி குடும்ப சுகம நன்று பிரயாணத்தில் கஷ்டம பணத் தட்டுப்பாடு பிரயாசை மிகுதி காதலில் மகிழ்ச்சி பிள்ளைகளால் கவலை—

அதிஷ்ட நாட்கள்; செவ்வாய் வெள்ளி—

### 4

4 13 22 31 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

பண வரவு புதிய பதவிப் பேறு இடமாற்றம சத்துருஜயம விருந்தினர் வருகை கோப மிகுதி துக்க சமபவங்கள் கேள்விப்படல், மனச் சோர்வு—

அதிஷ்ட நாட்கள்; புதன் வியாழன்—

### 5

5 14 23 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

அதிகார விருத்தி பயனற்ற பிரயாணம சத்துருஜயம வியாபாரத்தில் அபிவிருத்தி அதிக லாபம பெண்களால் கவலை புத்திரரால் புகழ் யோசனை மிகுதி—

அதிஷ்ட நாட்கள்; திங்கள் புதன்—

### 6

6 15 24 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

தனதானிய லாபம அதிக செலவு முயற்சிகளில் தடங்கல் வீண் அலைச்சல் பண விரயம நண்பர்களால் உதவி, கலைஞர்களுக்குப் புகழ—

அதிஷ்ட நாட்கள்; செவ்வாய் வெள்ளி—

### 7

7 16 25 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

தொழில் துறையில் மந்தநிலை விருந்தினர் வருகை அகால போஜனம அடிக்கடி பிரயாணம உறவினரால் உதவி சூரிய ஆபுத்தால் விபத்து—

அதிஷ்ட நாட்கள்; ஞாயிறு வியாழன்—

### 8

8 17 26 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

உத்தியோக உயர்வு இடமாற்றம வாகன சுகம பணவரவு வீட்டுப் பிரச்சினை வைத்தியச்செலவு நித்திரையின்மை அதிக யோசனை—

அதிஷ்ட நாட்கள்; புதன் வெள்ளி—

### 9

9 18 27 ஆம் திகதிகளில் பிறந்தவர்களுக்கு —

முயற்சிகளில் வெற்றி புகழ் அதிகரிப்பு தனதானிய லாபம பிரயாணக்கஷ்டம பிள்ளைகளால் செலவு காதலில் மகிழ்ச்சி பண வரவு—

அதிஷ்ட நாட்கள்; செவ்வாய் வெள்ளி—

விட வேண்டும்- அவன் மனம் ஆரவாரமிட்டது—

சமையலறையில் தனிமையில் நின்ற தங்கையிடம் நெருங்கினான் "அகிலா...!"

"என்னண்ணா..." திருமபினாள்—

"நீ இங்கு சந்தோஷமா இருக்கியாம்மா... உன்னை யாரும் திட்டலியா..." வெற்றிவேலின் குரலில் கலக்கம் தெரிந்தது—

"என்னண்ணா! சொல்றீங்க..."

"ஆமாம்மா உன்னை சமையல் அறைப்பக்கமே போக விடாமல் எதுவும் தெரியாமல் வளர்த்துட்டேன்... எந்த வேலையும் தெரியலைன்னு உன்னை யாரும் இங்க திட்டலியா...?"

"எனக்கு சமைக்க எந்த வேலையும் தெரியலேன்னா தானே அவங்க திட்டணும்..." சிரித்தவாறே சொன்ன அகிலாவை—

அதிர்ச்சியுடன் ஏறிட்டான் வெற்றிவேல்—

அகிலாவே தொடர்ந்தாள்—

"அண்ணா! நீங்க என்மேல் வச்சிருந்த பாசத்தினால் நான் சின்ன வேலை செய்து கூட நான் கஷ்டப்படுறமாதிரி நெனைச்சு நீங்க அப்படி சொன்னீங்க... என்ன இருந்தாலும் நானும் பொண்ணுதானே...

ஒரு பொண்ணு புகுந்த வீட்ல எந்த வேலையும் செய்ய தெரியாமல் நின்னா அவங்க என்னை பேச மாட்டாங்க... வளர்த்த உங்களைத்தான் பேசுவாங்க— சின்ன வயசுல தாயை இழந்துட்ட எனக்கு அந்த தாயன்பை நீங்க தான் உங்க தோளிலும் மார்பிலும் சீராட்டி எனக்கு கொடுத்தீங்க— உங்களை யாரும் பேசினா சத்தியமா என்னால தாங்கிக்க முடியாதுண்ணா...!

அதான் நீங்க ஆபீஸ் போன நேரம் பார்த்து அண்ணி கிட்ட சமையல் எல்லா வேலையும் கத்துக்கிட்டேன்... மலர்ந்த ரோஜா வாய் சிரித்தவாறே சொன்ன தங்கையினை -

பாசம் பரவசத்துடன் பார்த்தான் வெற்றிவேல். [ம-10]

# தேவனின் உண்மை அன்பை பெற்றிட முனைந்திடுவீர்

## உங்களைப் பற்றி முதலில் சிந்தித்தால் அது சாத்தியம்

உலகம் ஒரு நாடக மேடை— நாம் அனைவரும் அதில் நடிக்கும் நடிகர்கள்— இது ஒரு ஆங்கில இலக்கியவாதியின் கூற்று— ஒரு நிதர்சனமான உண்மை !

இந்த உலகில் நாமெல்லாம் ஏற்றுக் கொண்டிருப்பது ஒவ்வொரு பாத்திரமே— நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் மனித உயிரெனும் பாத்திரங்களின் வேலை முடிந்ததும் நாம் உலகமெனும் மேடையிலிருந்து ஒதுங்கி விடத்தான் வேண்டும்—

இப் பிரபஞ்சத்தையும் அதன் சர்வ சேனைகளையும் உண்டாக்கி குறிக்கப்பட்ட பாத்திரங்களாக நம்மையெல்லாம் உருவாக்கி இயக்கி வருபவர் எல்லாம்வல்ல நம் தேவனேயன்றி வேறு யார்?

நாம் ஏற்றுக் கொண்டிருக்கும் பாத்திரங்களைப் பற்றி நாம் என்றாவது சிந்தித்துப் பார்த்ததுண்டா? இல்லையேல் இனிமேலாவது சிந்தித்துப் பார்ப்போம்—

தேவனின் உண்மையான அன்பைப் பெற்ற பாத்திரமாக தெரிந்து கொள்ளப்பட்ட பாத்திரமாக நாம் இருக்க வேண்டுமோ? அப்படியெனில் நாம் எம்மைப் பற்றி சிந்தித்தே ஆக வேண்டும்—

தேவனின் அன்பைப் பெற்ற புனித பவுலின் வாழ்க்கையை நாம் சற்றுத் தியானித்துப் பார்ப்போம்—

புனித பவுல் ஆரம்பத்தில் சவுல் என்றே அழைக்கப்பட்டார்— கர்த்தருடைய பிள்ளைகளைப் பயமுறுத்தியும் கொலை செய்யவும் வகை தேடிய அசுத்த பாத்திரமாகவே சவுல் இருந்தார்—

"சவுல் என்பவன் இன்னும் கர்த்தருடைய சீஷரைப் பயமுறுத்தி கொலை செய்யும்படி சீறிப் பிரதான ஆசாரியரிடத்திற்குப் போய் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையாகிலும் ஸ்திரிகளையாகிலும் தான் கண்டுபிடித்து அவர்களைக் கட்டி எருசலேமுக்கு கொண்டு வரும்படி தமஸ்குவின் ஜெப ஆலயங்களுக்கு நிருபங்களைக் கேட்டு வாங்கினான்" அப் 9—1—2.

இப்படியாக கிறிஸ்துவின் சபையை வெறுத்து தேவ மக்களைத் துன்பப்படுத்துபவனாக அழிக்கிறவனாக அசுத்தமான பாத்திரமாக விளங்கிய சவுலை இரக்கம் நிறைந்த நம் கர்த்தர் தாமே தன்னுடைய நாமத்தை அறிவிப்பதற்கான பாத்திரமாகத் தெரிந்து கொண்டார்—

என்னுடைய நாமத்தை அறிவிக்கிறதற்காக நான் தெரிந்து கொண்ட பாத்திரமாயிருக்கிறான்— அப் 9—15

சவுலுடைய நோக்கங்கள் திட்டங்கள் எல்லாம் இப்போது கைவிடப்பட்டன— கர்த்தர் அவனை தலைகீழாக மாற்றி விட்டார்— அவன் உள்ளே இருந்த அசுத்தங்களையெல்லாம் கழுவி விட்டார்—

உங்கள் நிலை என்ன? உங்கள் உள்ளம் எதனால் நிறைந்துள்ளது— நீங்கள் அசுத்தமான பாத்திரமா? சுத்தமாக்கப்பட்டுள்ளதா? பாத்திரத்தைக் கழுவாமல் புது திராட்சை ரசம் கிடைக்காது— எனவே கழுவுவோம்—

கர்த்தர் உன்னை உபயோகிக்க விரும்பினால் உன்னிடம் உள்ள அசுத்தங்களை அவரே கழுவி வெளிக்கொணர்ந்து விடுவார்!

உங்களில் சிலர் இப்படிப்பட்டவர்களாக இருந்தீர்கள்— ஆயினும் கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும் நமது தேவனுடைய ஆவியினாலும கழுவப்பட்டீர்கள்— இரட்சிக்கப்பட்டீர்கள்— 1 கொரி 6—11

"மிதியிடப்பட்ட ஒரே களிமண்ணினாலே குயவன் ஒரு பாத்திரத்தைக் கனமான காரியத்திற்கும் ஒரு பாத்திரத்தைக் ஈனமில்லாத காரியத்திற்கும் செய்வதற்கு மண்ணின் மேல் அவனுக்கு அதிகாரம் இல்லையோ" ரோமர் 9—21 என்பதற்கொப்ப அவர் நம்மை நிச்சயமாகக் கனமான காரியத்திற்கென்று தெரிந்து கொள்வார்—

ஆனால் அதற்கு நாம் செய்ய வேண்டியது என்ன— இதோ புனித பவுல் கூறுகிறார்— "ஆகலால் கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப்படுவான்" ரோமர் 10—13

நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்— உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள்— இயேசு கிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்" 11 கொரிந் 13—5

ஆம்... நாம் பரீட்சைக்குத் தயாராயிருக்க வேண்டும்— கர்த்தர் கூறுகிறார் —

"அவன் என்னுடைய நாமத்தினிமித்தம் எவ்வளவாய்ப் பாடுபட வேண்டுமென்பதை நான் அவனுக்குக் காண்பிப்பேன்— அப் 9—16

அவர் நிமித்தம் நாம் பாடுகளைச் சுமக்க வேண்டும்— அவரை விசுவாசித்துத் தொழுது தியானித்தால் மட்டும் போதாது— அவருக்காக நாம் பாடுகளைச் சுமக்க வேண்டும்— எத்தனை இடர்கள் வந்தாலும் அவர் நிமித்தம அவருக்காக சாட்சியாக வாழ வேண்டும்—

புனித பவுல் தான் தெரிந்து கொள்ளப்பட்ட பின் எத்தனை பாடுகளை சுமந்திருக்கிறார் தெரியுமா? 11 கொரி 11—23 — 24 — 25 இல் இதோ அவரே சொல்கிறார் கேளுங்கள் —

"... நான் அதிகமாய்ப் பிரயாசப்பட்டவன்— அதிகமாய் அடிபட்டவன்— அதிகமாய்க் காவல்களில் வைக்கப்பட்டவன் அநேகந் நேரம் மரண அவதியில் அகப்பட்டவன்—

யூதர்களால் ஒன்று குறைய நாற்பதடியாக ஐந்து தரம் அடிபட்டேன்—

மூன்று தரம் மிலாறுகளால் அடிபட்டேன்— ஒருதரம் கல்லெறியுண்டேன்— மூன்று தரம கப்பற் சேதத்தில் இருந்தேன்— கடலிலே ஒரு இராப்பகல் முழுவதும் போக்கினேன்"

இப்படியாக பவுல் தாமே கர்த்தருக்காக எத்தனையோ பாடுகளைச் சுமந்தார்— கர்த்தரின் நாமத்திற்கு சாட்சியாக விளங்கினார்—

பவுல் அளவு பாடுகளை நம்மால் சுமக்க முடியாவிட்டாலும கர்த்தருக்குள் உண்மையான விசுவாசம் உள்ளவர்களாய் எந்த இடர்பாடுகளிலும் அவரை மறுதலியாமல் அவரோடு கூட பாடுகளை சகிக்கும் மனப்பான்மையோடு நம் வாழ்வை நெறிப்படுத்துவோம்!

"உனக்காக நான் மரித்தேனே— எனக்காக நீ என்ன செய்தாய்?" என்று கர்த்தர் நம்மைப் பார்த்து வினவும் போது —

"எல்லாம்வல்ல கர்த்தாவே! உம்மோடு கூட ஆளுகை செய்ய நான் எந்த பாடுகளையும் சுமக்க சித்தமாயிருக்கிறேன்" என்று நெஞ்சுறுதியுடன் சொல்லத்தக்கதாக நம் வாழ்க்கை முறைகளை அமைத்துக் கொள்வோமானால் கர்த்தராகிய பரம குயவன் தாமே பவுலைப் போன்ற உத்தமப் பாத்திரமாக நம்மையும் தமது மகிமைக்கென்று உருவாக்கிப் பயன்படுத்துவார்— (ஐ)

— எல். ஸ்டெப்னி பர்னாந்து —






ஜோன் பிளேயர் • கோல்ட் லீஃப்

விலை: 12 கொண்டது ரூ. 24
20 கொண்டது ரூ. 40

அரசாங்க எச்சரிக்கை:
புகைபிடித்தல் உடல் நலத்துக்குக் கேடாகலாம்

JWT CTC 20625

# பிரதமர் பதவியில் மேனகா ஆசை!

இந்தியாவின் மத்திய ராஜாங்க மந்திரி மேனகா காந்தி தனக்கு இந்திரா காந்தி வசித்த வீட்டை ஒதுக்கி தரும்படி கேட்டுள்ளார்.

மேனகா காந்திக்கு தன்னுடைய மாமியார் இந்திரா காந்தியைப் போல் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற விருப்பம் உள்ளது. மந்திரியாக பதவியேற்ற மேனகா டில்லியில் 12 வில்லிங்டன் கிரசண்டு விலாசமுள்ள வீட்டை தனக்கு ஒதுக்கித் தரும்படி கேட்டுள்ளார்.

இந்த வீட்டில் முன்பு இந்திரா காந்தி பிரதமர் பதவியை இழந்த போது தங்கியிருந்தார். பின்பு சஞ்சய் காந்தி அமேதி தொகுதியில் வெற்றி பெற்று எம். பி ஆன போது அவருக்கு இந்த வீடு ஒதுக்கப்பட்டது. பின்பு சஞ்சய் காந்தி விமான விபத்தில் இறந்ததும், சஞ்சய் காந்தி நினைவு டிரஸ்ட் அலுவலகத்திற்கு இந்த வீடு ஒதுக்கப்பட்டது.

ராஜீவ் காந்தி பிரதமர் பதவியை ராஜினாமா செய்வதற்கு முன்பு இந்த வீட்டை மேலும் 5 ஆண்டுகளுக்கு இந்த டிரஸ்ட் அலுவலகத்திற்கு ஒதுக்க உத்தரவிட்டார்.



மேனகா காந்தி

இந்திரா காங்கிரஸ் நாடாளுமன்றத் தேர்தலில் ஆட்சி இழந்த பின் ராஜீவ் காந்தி இவ்வாறு உத்தரவிட்டது செல்லுமா என்று மத்திய நகர்ப்புற விவகார இணைக்களம் ஆலோசனை செய்து வருகிறது.

மேனகா இந்திரா காந்தியை பின்பற்ற முயற்சி செய்வது அவருக்கு பிரதமர் பதவி மீதும் ஆசை உள்ளதை காட்டுவதாக டில்லி அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

(ம-10)


## டுபாய், ஓமான், பக்ரெயின் குவைட் நாடுகளில் வேலை வாய்ப்பு

முஸ்லிம் வீட்டுப் பணிப்பெண்களுக்கு எவ்வித கட்டணமும் இன்றி

வயது— 22 வயது முதல்
சம்பளம்— 4250 ரூபா முதல்
சேவைக் காலத்திற்குள் பூரண பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கப்படும்.

**யசோதா எண்டர்பிரைசஸ்**

ஆட்பலப் பிரிவு,
455, கூட்டுறவு கட்டிடம், 4 ஆம் மாடி,
காலி வீதி, கொழும்பு—03.
தொலைபேசி— 502868

தொழில் அனுமதிப்பத்திர இல— 647
அங்கீகார இல. ஏ எல் / 647 / 11 / 89


## உபேந்திரா — ராமராவ் மோதல்


மத்திய மந்திரி பி உபேந்திராவுக்கும், தெலுங்கு தேசக் கட்சித் தலைவர் என் டி ராமராவுக்கும் இடையே மோதல் வலுத்து உள்ளது.

உபேந்திராவுக்கு வி பி சிங் மத்திய மந்திரி பதவி அளித்ததை ராமராவ் விரும்பவில்லை என்று கூறப்படுகிறது.

ராமராவ் உதவி பிரதமர் பதவியை அடைய விரும்பியதாகவும் வி பி சிங் இதற்கு மறுத்ததோடு, ராமராவின் விருப்பத்திற்கு மாறாக உபேந்திராவுக்கு மத்திய மந்திரி பதவி அளித்ததாகவும் கூறப்படுகிறது.

உபேந்திரா ராஜ்ய சபை எம்பியாக உள்ளார். இவருடைய பதவி காலம் ஏப்ரலில் முடிவடைகிறது. இவர் மீண்டும் ராஜ்ய சபை எம். பி யானால் தான் மத்திய மந்திரி பதவியில் நீடிக்க முடியும். ஆனால் உபேந்திரா மீண்டும் எம் பி ஆவதை தடுக்க ராமராவ் தீர்மானித்து விட்டதாகக் கூறப்படுகிறது.

(ம-10)



## கடலில் எண்ணெய் கக்கும் கப்பல்களுக்கு ஆபத்து

கருங்கடல் நச்சுப்படுத்தப்பட்டு வருகிறது. தொழிற்சாலைகளிலிருந்து அப்புறப்படுத்தப்படும் அழுக்குகள், கப்பல்களிலிருந்து தள்ளப்படும் ரசாயன, எண்ணெய்ப் பொருட்கள் காரணமாக மீன்கள் அழியும் அளவிற்கு அங்கே சேதமேற்பட்டுள்ளது.

அத்துடன் கஸ்பியன் கடலில் வந்து முடிவடையும் நதிகளும் தொழிற்சாலைகள், நகரங்களிலிருந்து வெளியாகும் நச்சுப் பொருட்களைக் கொண்டு வருகின்றன. இதற்கு கூபான் நதி நல்ல உதாரணமாகும்.

இன்று தசாப்தங்களாக ஏற்பட்டு வந்த சேதங்களைச் சரிப்படுத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நச்சுப் பொருட்களை வெளியாக்கும் தொழிற்சாலைகளுக்கு எதிராக கடினமான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

சமீபத்தில் ரசாயனத் தொழிற்சாலை ஒன்று பத்து தினங்களாக மூடப்பட்டதுடன் 2 லட்சம் ரூபிள் அபராதம் விதிக்கப்பட்டது.

கண்காணிப்பு வேலைகளுக்காக விமானங்களும் பயன்படுத்தப்படுகின்றன! இதன் மூலம் தவறு செய்யும் கப்பல்களைக் கண்டுபிடிக்க முடியும்.

அண்மையில் தவறு செய்த டென்மார்க் நாட்டைச் சேர்ந்த கப்பல் சொந்தக்காரருக்கு 10 லட்சம் டாலர் அபராதம் விதிக்கப்பட்டது!

அமெரிக்க கப்பல் சொந்தக்காரர் ஒருவர் 4 லட்சம் டாலர் அபராதம் செலுத்தினார். இப்பணத்தைக் கொண்டு சூழல் சுற்றாடல் பாதுகாப்பு வேலைகள் நடத்தப்படுகின்றன!

கடலில் கப்பல்களிலிருந்து வழிந்தோடும் எண்ணெய் அகற்றப்படுவதை படம் காட்டுகிறது.

(ம)


## கூட்டுறவு சங்கக் கடை முகாமையாளர் பதவி

"க பொ த உயர்தர பரீட்சையில் சித்திபெய்தி, ஆங்கில அறிவுள்ள தொழில் அனுபவமுள்ள கூட்டுறவு சங்கக் கடை முகாமையாளர் பதவி ஒன்று காலியாக உள்ளது. கவர்ச்சியான சம்பளம்.

விண்ணப்பம் 31-01-1990 க்கு முன்பாக கிடைக்கக்


# அப்பாவின் ஆட்சியில்

கவர்ச்சியான சம்பளம்—

விண்ணப்பம் 31-01-1990 க்கு முன்பாக கிடைக்கக் கூடியதாக தலைவர் வரையறுக்கப்பட்ட தெரேசியா அரச பெருந்தோட்ட கூட்டுறவு சங்கக் கடை, தெரேசியா அரச பெருந்தோட்டம், பொகவந்தலாவ என்ற முகவரிக்கு ஆங்கிலத்தில் அனுப்பப்பட வேண்டும்—

**B. T. I. FAZLIRUMI**

நடாத்தும்

## SPOKEN ENGLISH DIPLOMA

1990 ஆம் ஆண்டுக்கான புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

ஆங்கிலம் பேசுவதற்கு வீட்டிலிருந்தபடியே தபால் மூலம் கற்றுக் கொள்ளுங்கள். பாடநெறி இலகுவான முறையில் தமிழ் விளக்கத்துடன் தயாரிக்கப்பட்டுள்ளது. ஐந்து மாதத்தில் டிப்ளோமா சான்றிதழ் வழங்கப்படும். குறைந்த தொகை கட்டணமே அறவிடப்படும்

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்.—

**Director**
Business Training Institute
UTI Complex
540, Maradana Road Colombo—10.

# மகன் குபேர வாழ்வு

ருமேனியாவின் பதவியிறக்கப்பட்ட அதிபர் சிஸெஸ்குவின் மகன் நிக்கு பெரும் ஆடம்பர வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறார், இறைச்சிக்காகவும் ஏனைய உணவுப் பொருட்களுக்காகவும் மக்கள் வீதிகளில் கியூவில் நின்ற போது இவர் அதிகாரமும் ஆணவமும் கொண்ட சொகுசு வாழ்க்கையை நடத்தி வந்திருக்கிறார்,

ருமேனியாவின் மாகாண ஆளுநராக விளங்கிய 39 வயதான நிக்கு சிஸெஸ்குவின் ஆடம்பர மாளிகையை வெளிநாட்டு பத்திரிகையாளர்களுக்கு அந்நாட்டு மக்கள் இராணுவம் திறந்து காட்டியது, அப்போதே இவர் எவ்வளவு வசதிகளுடன் வாழ்ந்து வந்திருக்கிறார் என்ற உண்மை வெளியுலகுக்கு தெரிய வந்தது,

இவர் வெளிநாடுகளுக்கு தொலைபேசியில் தொடர்பு கொள்ள வேண்டுமானால் நாட்டின் மத்திய பரிவர்த்தனை நிலையத்தின் ஊடாக இணைப்பு ஏற்படுத்திக் கொள்ள வேண்டியதில்லை,

இம்மாளிகையில் அமைக்கப்பட்டுள்ள விசேட தொலைத்தொடர்பு பரிவர்த்தனை சாதனங்களின் உதவியுடன் உலக நாடுகளுடன் உடனடியாக இவரால் தொடர்பு கொள்ளக் கூடியதாக இருந்தது,

விசேஷ அன்டனாவின் உதவியுடன் செய்மதிகளில் இருந்து பெறப்படும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை இவர் ரசித்து வந்திருக்கிறார், இம்மாளிகையில் ஒவ்வொரு அறையிலும் தொலைக்காட்சிப் பெட்டிகள் வைக்கப்பட்டிருந்தன,

நிக்கு சிஸெஸ்குவின் மூன்று

(21ஆம் பக்கம் பார்க்க)

இதோ வெளிவந்துவிட்டது

குணசேன

## ஆங்கில—தமிழ்

சுருக்க அகராதி




ஆக்கியோன் - எஸ் நடராசா

**விலை ரூ. 190.00**

பாடசாலை மாணவர்களுக்கும் காரியாலயப் பயன்பாட்டுக்கும் மிகச் சிறந்த அகராதி
உங்கள் தேவைக்கு உடனே
எழுதுங்கள் அல்லது நேரில் வாருங்கள்.

## எம். டி. குணசேன

**அன்ட். கம். லிமிட்.**

217- ஒல்கொட் மாவத்தை
கொழும்பு—11

கிளைகள்— கொள்ளுப்பிட்டிய- களுத்துறை- காலி- மாத்தறை- கண்டி- குருநாகல்- நீர்கொழும்பு

புகையிரத புத்தகசாலை— மருதானை- பொல்காவலை- கண்டி- காலி- மாத்தறை- அனுராதபுரம்

வெளிநாட்டு வேலைவாய்ப்பு

## வெற்றிடங்கள்

சவூதி அரேபியா, பஹ்ரேய்ன்,
அபுதாபி, டுபாய்

## உடனடிப் பயணம்

★ வீட்டுப் பணிப்பெண்கள்
(முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாதோர்)

★ வீட்டு டிரைவர்கள்
(முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாதோர்)

தெரிவு செய்யப்பட்ட வீடுகளில் வேலைகள்

உடன் நேரில் வரவும்—

**ரேயல் ஏஜென்சி (பிரைவேட்) லிமிட்**

158- புதுச்செட்டித் தெரு-
கொழும்பு—13

அனுமதிப்பத்திர இல- 470
அங்கீகார இல- ஏஎல்/470/77/86/89/89

## 21ஆம் நூற்றாண்டை துணிவுடன் எதிர்நோக்க நீங்கள் தயாரா?

அப்படியாயின் உலகமே வியப்பில் ஆழும் வகையில் மாபெரும் புரட்சியை ஏற்படுத்தும் கம்ப்யூட்டர் பற்றிய அறிவு சிறிதளவேனும் இன்றி எதிர்காலத்தை எதிர்நோக்குவது இயலாத காரியம் என்பது உலகறிந்த உண்மை.

**உங்கள் வீட்டிலிருந்தே!**

**உங்கள் தாய்மொழியிலேயே!!**

(தமிழில்/சிங்களத்தில்)

இந்த அற்புதமான கருவி பற்றியும் "புரோகிராமிங் இன் பேஸிக்" பற்றியும் கற்றுக் கொள்ள, இதோ ஒரு அறிய சந்தர்ப்பம்!

**இலங்கையிலேயே**

**முதன் முறையாக**

தபால்மூலம் நடாத்தப்படும் கம்ப்யூட்டர் பாடநெறியில் நீங்களும் இன்றே உங்களை சேர்த்துக் கொள்ளுங்கள்.

மிகக் குறைந்த கட்டணம்! நேரடிப் பயிற்சி!!
மேலதிக விபரங்களுக்கு ரூபா 10/- க்கான தபால் / காசுக் கட்டளையை

**The Director**
Miraj for Engineering & Computer studies
216. D S Senanayake Veediya Kandy.
என்ற முகவரிக்கு அனுப்பவும்.
(கண்டி மாநகர சபைக்கு அருகில்)

எமது நிலையத்தில் நடாத்தப்படும் ஏனைய பாடநெறிகள் கம்ப்யூட்டர் விஞ்ஞானம்/உபயோகம் பற்றி கற்க.

certificate in computer science / studies for those who wish to be computer engineers, dip loma in computer hard ware.

ஒவ்வொரு ஞாயிறும் காலை 9-00 மணிக்கு இலவச அறிமுக வகுப்பு நடத்தப்படும்.

# குத்பா பிரசங்கத்தில் அரசியல் கலக்கலாமா?

குத்பா பிரசங்கத்தில் அரசியல் பேசுவது கூடுமா? கூடாதா?

— இப்படியொரு விவகாரம் இன்று முஸ்லிம்களிடையே விவாதத்திற்குரிய தலைப்பாக்கப்பட்டு, சாதக - பாதகமான கருத்துக்களை சன்மார்க்க நெஞ்சங்கள் சமுதாயத்தின் முன் வைப்பதில் மும்முரம் காட்டி வருகின்றன.

இன்றைய சூழலில் இப்படியொரு பிரச்சினை அலசப்பட வேண்டியது அவசியந்தானா?

— இப்படியொரு சிந்தனை முஸாபிரை இவ்வாரம் உசுப்பி விட்டிருக்கிறது.

நாட்டிலுள்ள பிரதான ஊர்களில் அமைந்திருக்கும் ஜும்ஆ பள்ளிவாயல்களில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் நண்பகல் வேளைகளில் இடம்பெறும் தொழுகையே ஜும்ஆவாகும்.

இந்த ஜும்ஆ தொழுகைக்கு முன், "மிம்பர்" என்னும் மேடையேறி தொழுகை நடத்துனரான கத்தீப், மார்க்க உபந்நியாசமாக நிகழ்த்தும் உரையே "குத்பா" பிரசங்கமாகும்.

இந்த குத்பா பிரசங்கத்தில் அரசியல் கலப்புடன் பேசுவது கூடுமா? கூடாதா? என்பது தான் இப்போது எழுந்துள்ள பிரச்சினை. இப்பிரச்சினைக்கு முடிவுதான் என்ன?

வல்லான் இறைவனால் இவ்வுலக மாந்தரின் ஈடேற்றத்திற்கென தீர்க்கதரிசிகள் (நபிமார்) மூலம் அவ்வப்போது அருளப்பட்ட சமயங்களின் தொடரில், இறுதியானதே ஃபுர்கான் வேதமாகிய இஸ்லாம் ஆகும்.

இஸ்லாம் வெறும் தத்துவங்களை மட்டும் கொண்டிலங்கும் ஒரு மதமல்ல. அது மனித வாழ்வுக்குத் தேவையான - நடைமுறை சாத்தியமான நெறிகளை கொண்டுள்ள ஒரு மார்க்கமேயாகும்.

அதனாலேயே உலகப் புகழ் பூத்த வேற்றுமதப் பெரியார்கள் பலர், இஸ்லாத்தை ஏற்றிப் போற்றிப் போந்தனர். தமிழ் நாட்டில் முன்னாள் முதல்வர் பேரறிஞர் சி என் அண்ணாதுரை ஒரு முறை சென்னை மெரீனாவில் நடந்த மீலாத் விழாவில் கீழ்வருமாறு இஸ்லாத்தைப் பாராட்டிப் பேசினார்.

"...உலக சமயங்கள் எல்லாம் பலாப்பழங்கள் என்றால், இஸ்லாம் அவற்றின் சுளை என்பேன். ஏனெனில் — பலாப்பழங்களில் நீக்க வேண்டியவை (பிசிர் - தோல் - கொட்டை என்பன) உண்டு. சுளையில் நீக்க வேண்டியது எதுவுமில்லை. கையில் எடுத்ததும் சாப்பிட்டு விடலாம்..."

இவ்வாறு பாராட்டுக்கும் — சீராட்டுக்கும் இஸ்லாம் இலக்காகி இருப்பதற்கு காரணம் என்ன?

அது வாழ்வு கோணங்கள் அனைத்திற்கும் வெளிச்சமிட்டுக் காட்டுகிறது. இதனால் இஸ்லாத்தில் சமயம் - சமூகவியல் - வர்த்தகம் - பொருளாதாரம் - அரசியல் - இல்லறம் - கல்வி என்று அனைத்தும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து இரண்டறக் கலந்து - சம்பூரண மார்க்கமாக - இருப்பதே ஆகும்.

இக்கூற்றினை முஸ்லிம் தலைவர்களும் - ஆலிம்களும் - படித்த அறிவு ஜீவிகளும் - ஏன் சாதாரண முஸ்லிம்களும் மறுக்காமல் ஏற்றுக் கொள்ளவே செய்வர்.

எனவே - மனித வாழ்வின் எந்த அம்சத்தையும் இஸ்லாத்தை விட்டும் பிரித்துப் பார்க்கவோ - உணரவோ முடியாது; கூடாது. இதில் அரசியலுக்கு மட்டும் விதிவிலக்கா என்ன?

என்றாலும் - இது குறித்து முஸாபிர் சமுதாயத்தின் வித்தியாச ரசனைமிக்க சிலரை நெருங்கி கருத்து கேட்கலானார். அத்தகையோர் சிந்தியா சிந்தனைகள் இதோ...




கொழும்பு அல் - மஸ்ஜிதுல் முனீர் மஅல் மத்ரஸா எனும் பள்ளிவாசல் நிர்வாகத்தின் நடப்பாண்டின் புதிய பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்ட ஜனாப் எம் பீ எம் ஏ லத்தீப்பிடம் "குத்பாவில் அரசியல்" பற்றிக் கேட்ட போது...

"...குத்பா உரையின் இறுதியில் துஆ (பிரார்த்தனை) கேட்கும் போது, "யா அல்லாஹ்... எங்களுக்கு ஒரு நல்ல ஆட்சியாளரை தேர்தலின் போது தெரிவு செய்வதற்கு இனங்காட்டி விடுவாயாக..." எனக் கேட்பதும், "யா அல்லாஹ் ஆட்சியாளரினால் எங்களுக்கு - எமது சமூகத்திற்கு எந்தவொரு தீங்கும் நிகழ்ந்திடாமல் காத்தருள்வாயாக..." என இறைஞ்சுவதும் எந்த வகையிலும் நியாயமான அரசியல் தத்துவங்களையே பிரதிபலிக்கின்றன. அப்படியிருக்க குத்பாவில் அரசியல் வேண்டாம் எனக் கூறுவது, எப்படி பொருந்தும்?" என்று விளக்கம் அளித்தார்.

கொழும்பில் தொழில் செய்யும் பொத்துவில்லைச் சேர்ந்த சட்டத்தரணி ஜனாப் எம் இஸ்மாயில் ஆதம் லெப்பை என்பவரை நெருங்கினேன்.

"...பிரதர், இஸ்லாத்தை விட்டு அரசியலை பிரித்துணர முடியாது. நபி (ஸல்) காலத்தில் குத்பா உரைகள் சமுதாய அரசியலாகவே இருந்துள்ளன. ஆனால், இன்று முஸ்லிம்கள் ஒவ்வொரு ஊர்களிலும் ஏதாவது ஓர் அரசியற் கட்சியை சார்ந்தே இருக்கின்றனர். இவர்கள் கூடும் பள்ளியில் கத்தீப் எந்த அரசியலை - எப்படி பேசுவார்?

"எவ்வாறு பேசினாலும், ஜமாத்தினர் கூறுபடவே செய்வர். தொடர்ந்து தொழுகைக்கு ஆயத்தமாகும் போது, கூறுபட்ட இதயங்களுடனே வரிசையில் நிற்பர். இது சமுதாய சீரழிவுகளையே ஏற்படுத்தும்.

எனவே, முஸ்லிம்கள் உள்ளூர் அரசியலை பள்ளிவாசலினுள் பேசுவதை தவிர்த்து, வெளியில் பேசுவதே சாலப் பொருத்தமாகும்..." என்றார்.

சம காலத்து நவீன சிந்தனைகளுக்கு நடுவில் சமுதாயப் பற்றுடன் திகழும் இளைஞர் ஜனாப் எம் எஸ் எம் ஜிப்ரியிடம், "தம்பி... நீ இது குறித்து என்ன எண்ணுகிறாய்?" எனக் கேட்க, அவ்விளைஞன் பின்வரும் பதிலை கூறலானார்.

"இஸ்லாமிய வரலாற்றில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், நான்கு கலிபாக்களும் இஸ்லாமிய அரசியலை போதித்தது மட்டுமல்ல... நடைமுறையில் சாதித்தும் காட்டிவிட்ட மன்மாதிரி நம்மிடையே இருக்கிறது. இதைவிட தெளிவான அரசியல் சிந்தனைகளை எந்த கத்தீபும் - பேஷ் இமாமும் பிரசங்கித்து விட முடியாது.

"... ஆனால், இன்று நடப்பதென்ன? உள்ளூர் கட்சி அரசியலில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கட்சிக்கு வக்காளத்து வாங்குகின்றனர். இதற்கு மிம்பரையோ - குத்பாவையோ பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாது. அதனால், குத்பாவில் அரசியல் பேசுவதை தவிர்ப்பதே நலம் பயக்கும்..."

தலை நகரில் ஜும்ஆப் பள்ளிவாசல் ஒன்றில் ஜும்அத் தொழுகை நடத்தும் கத்தீப் மௌலவி எம் ஸீ எம் இக்பால் (பாக்கவி) அவரது இருப்பிடத்தில் சந்தித்த போது, இது குறித்து வினவினேன்.

ரசூலே கரீம் (ஸல்) முதல் குலபாவுல் ராஷிதீன் என்னும் கலீபாக்களின் ஆட்சிக் காலம் உள்ளிட்டு, அப்பாஸியாக்கள் காலம் வரை இஸ்லாமிய வரலாற்றில் அரசியல் இருந்தே வந்திருக்கிறது. ஜனநாயகம் தழைக்க இஸ்லாம் வழி செய்துள்ளது— அப்படியிருக்க, குத்பாவில் அரசியல் பேச வேண்டாம் என மௌலவிகளுக்கு தடை விதிப்பது முறைகேடானது. இஸ்லாத்தில் அரசியலுக்கு எந்த இடத்திலும் தடையில்லை.

"...குத்பாவில் அரசியல் வேண்டாம் என்றால், முஹர்ரத்தைப் பற்றி பேசக் கூடாது. கலீபா உமரின் ஆட்சியின் மாட்சியைப் பற்றி பேசக் கூடாது. கர்பலாவின் சோகம் பற்றி கதை கதையாகப் பேசக் கூடாது. முஸ்லிம்களின் உணர்ச்சிகளை மூடி மறைத்து வெளிக்காட்டாமல் இருக்க முடியாது. பல இன மக்கள் வதியும் நம் நாட்டில் பிற இனத்தவர் பாதிக்காத வகையில் நம்மவர் உணர்ச்சிகளை குத்பாவில் பேசுவதில் தவறில்லை..." என்று சமய விளக்கங்களுடன் விவரித்தார்.

சமுதாயத்தின் நாலு பேர் சிந்திய நாலுவிதமான கருத்துக்களில் இருந்து தெறிக்கும் உண்மைகள் இரண்டு தான். "இஸ்லாத்தில் அரசியலும் கைகோத்திருப்பதால், குத்பாவில் பேசலாம்" என்பது ஒரு கருத்து. "உள்ளூர் கட்சி அரசியல் பேசி பிணக்கம் வேண்டாம்" என்பது மற்றொரு சிந்தனை.

குத்பாவில் அரசியல் பேசலாம் என்ற பின், உள்ளூர் அரசியல் வேண்டாம் எனச் சொல்வது சரியா? நாம் உள்ளூரில் தாமே வாழ்கிறோம். வெளிநாட்டு அரசியலைப் பேசுவதால் நமக்கு விளையப் போவதென்ன? ஈரான் அரசியலோ - ஈராக் அரசியலோ நமக்கு ஒரு பாடமாக அமையலாமே தவிர, பாதையாகவோ - பயனாகவோ ஆக முடியாதே! அப்படியிருக்க, உள்ளூர் அரசியலைப் பற்றி பேசாதிருப்பது எங்ஙனம் சாலும்?

இன்று நம் நாட்டில் எல்லா இனத்தாருக்கும் பிரச்சினைகள் உண்டு. முஸ்லிம்களுக்கும் பிரச்சினைகள் இருக்கவே செய்கின்றன. எந்தப் பிரச்சினைக்கும் பின்னணியில் அரசியல் இருக்கவே செய்கிறது. அரசியல் பிணைப்பு இல்லாத பிரச்சினைகளே இல்லை எனலாம்!

ஆனால் ஒன்று - அரசியல் மயப்படுத்தப்பட்ட எல்லாப் பிரச்சினைகளுக்கும் அடிநாதம், ஒரு சமுதாயத்தின் தேவை - குறைபாடு - எதிர்பார்ப்பு - ஏக்கம் என்று ஏதாயினும் ஒரு சமூகப் பிரச்சினையாகவே இருக்கும் என்பதை அறுதியிட்டு உறுதியாக முஸாபிரால் கூற முடியும்.

ஒரு பள்ளிவாசல் - அல்லது ஒரு மத்ரஸா புதிதாக நிர்மாணிக்க வேண்டியது ஒரு சமுதாயத்தின் தேவை தழுவிய ஒரு பிரச்சினை. ஆனால் - அதற்கான அனுமதியை அரசிடமே பெற வேண்டும். அப்போது அது அரசியல்மயமாகி விடுகிறது. இது சமூக வாழ்வில் தவிர்க்க முடியாதது.

அரபு மொழியை ஒரு பாடமாக அங்கீகரிக்க வேண்டுமானால், அது அரசியல் அரவணைப்பு இல்லாமல் செய்ய முடியாது. மௌலவி ஆசிரியர்

(21 ஆம் பக்கம் பார்க்க)

தை பிறந்தால் வழி பிறக்கும்! ஆசைக்கனவுகள் நிறைவேறும்!

கொட்டாஞ்சேனையில் மீண்டும் ஒரு வாய்ப்பு தேடி வருகிறது

# கல்பொத்தை வீதியிலே

# RED WOOD APARTMENTS

## சொகுசு தொடர் மாடி வீடமைப்புகள்!

**3-BED ROOMS**

- ★ 1150 சதுர அடிகள்
- ★ பிரதான படுக்கை அறை, குளியறை வசதிகளுடன்.
- ★ பொது இணைப்புடன் இரண்டு படுக்கை அறைகள்.
- ★ வழிபாட்டுக்கு பூஜை அறை
- ★ வசதியான வரவேற்பறை
- ★ 24 மணிநேர சுடுநீர், லிப்ட், பாதுகாப்பு வசதி.
- ★ பணியாளர்களுக்கு தனி குளியலறை உண்டு

மூன்று படுக்கை அறைகள், இரண்டு படுக்கை அறைகள் கொண்ட புத்தம் புதிய சொகுசு கட்டிடம், சுத்தமான, சுகாதாரமான சூழலில் 24 மணிநேர பாதுகாப்பு வசதி, எந்நேரமும் லிப்ட் வசதி உண்டு. பஸ் நிலையம், சமய வழிபாட்டு ஸ்தலங்கள் பள்ளிக்கூடம், மருத்துவ நிலையம, தபால் அலுவலகம், மார்க்கெட், தியேட்டர்கள் அனைத்தும் மிக... மிக... அருகில் நடக்கும் தூரத்தில்.

**2-BED ROOMS**

- ★ 900 சதுர அடிகள்
- ★ இரு படுக்கை அறைகள், பொது இணைப்பு குளியறைகள்.
- ★ வழிபாட்டுக்கு பூஜை அறை
- ★ வசதியான வரவேற்பறை
- ★ 24 மணிநேர சுடுநீர் வசதி, லிப்ட், பாதுகாப்பு வசதி.
- ★ பணியாளர்களுக்கு தனி குளியலறை உண்டு

### நாடி வரும் வாய்ப்பை நழுவ விடாதீர்கள்



## Marigold Property Developers

பிரதி ஞாயிற்றுக்கிழமை ஐ டி என் ல் நண்பகல் 12-00 வண்ணப்பூக்கள் நிகழ்ச்சியில் மனோரமாவின் காட்டுப்பட்டிச் சத்திரம் நாடகத் தொடரை கண்டு மகிழுங்கள்.

Architects: Triad Consultants    Member of S. Arumugam & Bros. Group

**HOTEL TAJ SAMUDRA—COLOMBO-3. PHONE: 546622**

திங்கள் முதல் சனிக்கிழமை வரை வேலை நேரத்திலும், ஞாயிறு காலை 10 மணி முதல் 1 மணி வரையும் அலுவலகம் திறந்திருக்கும்.

**வருடம் 2000 – யாவருக்கும் புகலிடம்**

—SKYLINE—

# மலையக மாருதம்



தயாரிப்பு: கே. தமிழ் மாறன்

## மலையக பாடசாலைகள் வளர்ச்சி குன்றுவது ஏன்?

அரசியல்வாதிகளதும், கல்வி அதிகாரிகளதும் சில செயல்களினால் இன்று மலையகப் பாடசாலைகளின் கல்வி வளர்ச்சி பாதிப்படைந்து வருகின்றது.

பாடசாலை நிர்வாகம் பற்றிய போதிய அறிவும், திறமையுமற்ற பெயருக்காக அதிபர்களாக இருப்போரினால் இன்று மலையகத்தின் பல பாடசாலைகளின் நிர்வாகம் சீர்கெட்டு காணப்படுகின்றது.

இதனால் பாதிப்படைவது மலையக மாணவர்களது கல்வி வளர்ச்சியும், மலையகச் சமூகத்தின் எதிர்காலச் சுபீட்சமுமேயாகும் என்பதை சிந்தனையாளர்கள் உணர வேண்டும்.

ஒரு பாடசாலையின் அதிபர் என்பவர் ஒரு நாட்டின் தலைவருக்கு ஒப்பானவர். இவரது மேற்பார்வையின் கீழ் ஆசிரியர்கள் மந்திரிகளைப் போல கற்பித்தல் பணியை தொடர வேண்டும்.

கற்பித்தல் சீராக நடைபெறுவதற்கு ஒரு பாடசாலை அதிபரின் சிறந்த நிர்வாகத் திறமையே காரணமாகும்.

மாணவர்கள் மத்தியில் எழும் பிரச்சினைகளை, பிணக்குகளை, சுமுகமான முறையில் தீர்க்கும் சாணக்கியம் ஒரு சிறந்த அதிபருக்கு இருக்க வேண்டும்.

இன்று மலையகப் பாடசாலைகளில் கடமையாற்றும் பெரும்பாலான அதிபர்கள் தமது தாய்

— முத்து சம்பந்தர் —

மொழியைத் தவிர வேறு எந்த மொழியையும் அறியாதவர்கள்.

இவர்களால் கல்வித் திணைக்களத்தோடு பாடசாலை தேவைகளையும், பிரச்சினைகளையும் தாமே சுயமாகத் தீர்த்துக் கொள்ள முடியாது.

தரகர்கள் மூலமாக தலை சொறிந்தே காரியம் பார்க்க முனைகின்றனர். இதனால் முறையாகத் தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முடியாது திண்டாடுகின்றனர்.

எந்தெந்த வகையான பிரச்சினைகளுக்கு எந்தெந்த உத்தியோகத்தர்களைக் காண வேண்டும் என வகை தெரியாத அதிபர்கள் தமது மொழி தெரிந்த அதிகாரிகளிடமே தமது எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முனைகின்றனர்.

சிலர், தமக்கு பாடசாலை அதிபர் பதவி கிடைத்ததும் தம்மை ஒரு சகல வல்லமையும் மிக்க சர்வாதிகாரியாக உருவகித்துக் கொள்கின்றனர்.

இவர்கள் ஆசிரியர்களையும், மலையக மாணவர், பெற்றோர்களையும் மடையர்களாகவும், தகுதி குறைந்தவர்களாகவும் கருதி செயல்படுகின்றனர்.

இதனால் ஆசிரியர், பெற்றோர், மாணவர்களது அன்பையும், விசுவாசத்தையும் இழந்து விடுகின்றனர். இதனால் பாட

# சர்வதேச கல்வியறிவு ஆண்டில் மலையகத்தவர் நிலை என்ன?

## வாழ்வு உயர வேண்டும்

— திருவநாதன் நாகராஜா —

மலையகத்து மண்ணிலே கடிதுழைக்கும்
மக்கள் என்றும் உழைப்பின் சிகரம்
மழைகொட்டி மண் சரிந்தாலுமவர்
மனந் தளரா நின்றங்குழைப்பர்
களைத்து என்றோ படுத்தாலும் மறுநாளே
உழைக்க எழுந்திட மனந்துடிப்பர்
துளைக்கும் துன்பங்கள் வரும் போதும்
துணிந்து நின்று சகித்திடுவர்

★

கொட்டும்மழை கொடும் பனியில்
குறுக்கு வழியில் மலைக்கு விரைகின்றார்
ரெட்டுத் துண்டுடன் "கொட்டா"னுள்ளே
பெரட்டு துண்டை வைத்திருப்பர்
வெட்டுவார் "கவ்வாத்து" விரைந்து
வெறும் முப்பது ரூபாய்க்கு முனைந்து
திட்டுக்கள் ஏச்சுக்கள் அப்பப்பா — அவை
தீர்ந்திடும் திருநாள் எப்போதப்பா?

★

காலமெலாம் உழைத்துக் கருகி
காற்பணம் கூட மிஞ்சவில்லை — ஒரு
கோலத்துள் வாழுமவர் வாழ்க்கை என்று
கோலமிட்டு ஜொலிக்கும் நாள்வரும்?
காலமெல்லாம கண்ட கனவு — இலவு
காத்த கிளிபோன்று ஆகாமல்
ஞாலத்தின் உயர்வுக்காய் உழைக்கின்ற
இப்பாட்டாளி வாழ்க்கை உயர்ந்திடணும்

புத்தாண்டு பிறந்து இன்றுடன் ஒரு வாரமாகிறது. 1990 ஆம் ஆண்டாகிய இவ்வாண்டு "சர்வதேச கல்வியறிவு ஆண்டு" என ஐக்கிய நாடுகள் சபை பிரகடனப்படுத்தியுள்ளது.

1987 டிசம்பரில் கூடிய ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை, 1990 ஆம் ஆண்டை சர்வதேச கல்வியறிவு ஆண்டாகப் பிரகடனப்படுத்தியது.

அத்தோடு இப்பணியின் முக்கிய பங்களிப்பை, ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான கலாசார அமைப்பு மேற்கொள்ள வேண்டும் என்றும் சபை அழைப்பு விடுத்தது.

இந்தப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்க சர்வதேச தொழிலாளர் நிறுவனம் முன் வந்திருக்கிறது. யுனெஸ்கோ என்று அழைக்கப்படும் ஐக்கிய நாடுகள் கல்வி, விஞ்ஞான கலாசார நிறுவனத்துடன், சர்வதேச தொழிலாளர் நிறுவனம் இணைந்து "தொழிலாளர் நிறுவனங்களுக்கு வேண்டுகோள்" என்ற தலைப்பில் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

உலகில் 90 கோடி இளைஞர்கள் கல்வியறிவற்றவர்களாக இருக்கின்றனர். சமூக, பொருளாதார, அரசியல் அபிவிருத்திக்குக் கல்வியறிவே முக்கியத்துவம் கொண்டதாகும்.

சர்வதேச மனித உரிமைகள் பிரகடனத்தில் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பதோடு அது அடிப்படை உரிமையாகவும் அங்கீகரிக்கப்பட்டிருக்கிறது.

கல்வியறிவின்மை அடிப்படை உரிமையை மீறியதாகும். சமகால சமூகத்தில் கல்விக்கு முன்னுரிமை அளிப்பதே முக்கிய சவாலாகும். மனித இனத்தில் ஒரு முக்கிய பிரிவினரின் மனித வள சமூக அபிவிருத்திக்கு அவசியமானதாகும்.

— வி. சண்முகநாதன் —

அது ஒதுக்கப்படுவதன் மூலம் விரக்தியையும், கலக்கத்தையும் உருவாக்குவதற்கு வழிவகுக்கிறது. சமத்துவமின்மையால் வஞ்சனையும், தொழில் நுட்பமும் முன்னேறியதன் பயனாக ஏற்பட்ட சமூக பொருளாதார அபிவிருத்தியில் சலுகையுடையோருக்கும், சலுகையற்றோருக்கும் இடையில் இடைவெளி விரிவடைந்திருக்கிறது. கல்வியறிவைத் தூண்டுவதற்குரிய நிதி [illegible] மனித கௌரவ

கவோ, எழுதவோ முடியாத நிலையில் எந்த உணர்வும் தோன்றுவது இல்லை.

படித்தவர்கள் என்பதால், அரசியல், தொழிற்சங்க நிறுவனங்களில் சுயமாகவே பங்களிப்பு அதிகரித்து விடும் என்பது அல்ல; ஆனால் தனிப்பட்ட ஒருவர் அறிவு பூர்வமாக பங்கேற்பதாக அது இருக்கவேண்டும்.

படிக்காதவர்கள் தமது சமூகத்திற்கு மத்தியிலோ, தொழில் செய்யும் இடங்களிலோ, தங்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் வேறெந்த ஒரு நிறுவனத்திலோ,

அரசியல் மற்றும் தொழிற் சங்க நடவடிக்கைகளில் பங்கேற்க முடியும், ஆயினும் அவர்கள் பொறுப்புடன பதவிகளை ஏற்றுச் செயல்படுவது முடியாத செயலாகும். மேலாக உள்ளூர் மட்டத்தில் இவ்வாறான நிறுவனங்களில் அவர்களின் பங்களிப்பு உண்மையாகவே முடியாததாகும்.

கல்வியறிவு என்பது ஒரு முழுமையான அறிவாற்றல் கொண்ட [illegible]

குறைந்த கல்வி அறிவற்றோரே, முதலில் பாதிப்படைகின்றனர். தொழில்களை இழக்கின்றனர், இதனால் குறைந்தளவு வாசிக்கவும், எழுதவும் தெரிந்திருப்பது அவசியமாகிறது.

தொழில் வாய்ப்புகளைத் தேடுவதற்கும். தொழில் சந்தையில் நுழைவதற்கும் இது வழி சமைக்கும். இன்றைய கடினமான பொருளாதார சூழலில் இதுவே அதி உண்மையுமாகும்.

தொழில் நுட்பத்துறையில் ஏற்பட்டிருக்கும் புரட்சியினால், ஒவ்வொருவரும் திடமான பயிற்சிகளையும், அறிவையும், புதிய சூழலுக்கேற்ப பெற்றிருப்பது அவசியமாகும்.

சர்வதேச கல்வியறிவு ஆண்டை சகல தொழிலாளர் அமைப்புகளும் கடைப்பிடிக்க வேண்டிய சந்தர்ப்பம் இதுவாகும், ஜனநாயகத்தில் கல்வியறிவற்ற சமூகத்தினர் இருப்பதற்கு எதிராகப் போராட சகல ஒத்துழைப்புகளையும் வழங்குவது அவசியமாகும்.

21 ஆம நூற்றாண்டில் அறியாமை, வறுமையில் வதியும் ஆண்களும், பெண்களும் இன்னும் இருக்கிறார்கள் என்ற நிலையை இல்லாதொழிக்க வேண்டும். இதனை நாம் சவா

காற்பணம் கூட மிஞ்சவில்லை — ஒரு
கோலத்தள் வாழுமவர் வாழ்க்கை என்ற
கோலமிட்டு ஜொலிக்கும் நாள்வரும்?
காலமெல்லாம கண்ட கனவு — இலவு
காத்த கிளிபோன்ற ஆகாமல்
ஞாலத்தின் உயர்வுக்காய் உழைக்கின்ற
இப்பாட்டாளி வாழ்க்கை உயர்ந்திடணும்

நிறுவனம் இணைந்த "தொழிலாளர் நிறுவனங்களுக்கு வேண்டுகோள்" என்ற தலைப்பில் கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளது,

உலகில் 90 கோடி இளைஞர்கள் கல்வியறிவற்றவர்களாக இருக்கின்றனர், சமூக, பொரு

# வெள்ளையன் நினைவுதின

## கட்டுரை, கவிதை, பேச்சு போட்டிகள்

தொழிலாளர் தேசிய சங்கம கடந்த ஞாயிற்றுக்கிழமை வெள்ளையன் வருடாந்த நினைவு தினத்தை முன்னிட்டு கட்டுரை, கவிதை பேச்சுப் போட்டிகளை நடத்தியது-

இந்த 18 ஆவது போட்டி நிகழ்ச்சியில் சிறுவர் சிறுமியர், இளைஞர்கள் யுவதிகள் மாத்திரம் அல்லாமல் நடுத்தர வயதினரும் கலந்து கொண்டனர்-

மலையக மக்கள் மத்தியில் எழுத்து – பேச்சு மற்றும் கவிதைத் துறைகளில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தும் விதத்தில் இந்த நிகழ்ச்சி அமைந்தது-

"2000 ஆம் ஆண்டளவில் மலையக மக்களின் நிலை" என்ற தலைப்பில் கட்டுரைப் போட்டி நடைபெற்றது-

பேச்சுப் போட்டியின் தலைப்பு "நாட்டில் ஏற்பட்டுள்ள பதற்ற நிலைமைக்குப் பரிகாரம்" என்பதாகும்-

"வெள்ளையன் கண்ட கனவு" என்ற தலைப்பில் கவிதைப் போட்டி அமைந்தது-


கட்டுரைப் போட்டியில் அட்டன் மூலந்தோட்டத்தைச் சேர்ந்த ஏ குணசீலன் முதலாம் பரிசையும் நுவரெலியா பீட்ரு தோட்டத்தைச் சேர்ந்த எஸ் கே ஞானசேகர் இரண்டாம் பரிசையும் பொகவந்தலாவை மூத்து லெட்சுமித் தோட்டத்தைச் சேர்ந்த பி லட்சுமணன் மூன்றாம் பரிசையும் தட்டிக் கொண்டனர்-

பேச்சுப் போட்டியில் பொகவந்தலாவை பெத்தராசி தோட்டத்தைச் சேர்ந்த எஸ் டேனியல் நுவரெலியா பீட்ரு தோட்டத்தைச் சேர்ந்த பி சுப்பிரமணியம் அட்டன் மூலந்தோட்டத்தைச் சேர்ந்த பி ராஜேந்திரன் ஆகியோர் முறையே முதலாம் இரண்டாம் மூன்றாம் பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர்-

அட்டன் மூலந்தோட்டத்தைச் சேர்ந்த செல்வி எஸ் புண்ணியவதி – மஸ்கெலியா பெரிய மஸ்கெலியாவைச் சேர்ந்த கே செல்வராஜ் – அட்டன் மூலந்தோட்டத்தைச் சேர்ந்த எம் ஜெயரட்னம் ஆகியோர் கவிதைப் போட்டியில் முறையே முதலாம் இரண்டாம் மூன்றாம் பரிசுகளைப் பெற்றுக் கொண்டனர்-

வருடந்தோறும் இந்தப் போட்டிகளை நடத்துவதில் சங்கத்தின் தலைவர் திரு டி அய்யாத்துரை – பொதுச் செயலாளர் திரு பி வி கந்தையா – நிதிச் செயலாளர் திரு பி பெருமாள் ஆகியோர் ஆர்வம் கொண்டுள்ளனர்-

எதிர்காலத்தில் இப்போட்டிகளை அகில இலங்கை ரீதியாக வயது அடிப்படையில் நடத்தினால் சிறப்பாக இருக்கும்- இப்போட்டியின் நடுவர்களாக சட்டத்தரணி திரு எஸ் சோதிகுமார் – பத்திரிகையாளர்கள் திரு எஸ் டி தியாகராஜா – திரு க து மாறன் ஆகியோர் பங்கு கொண்டனர்- (ம—ங)



வெள்ளையன் நினைவு தினம் பெற்ற செல்வி புண்ணியவதி கவிதைப் போட்டியில் முதலிடம் கவிதை பாடுகிறார்- பரிசுக்குரியவர்களைத் தெரிவு செய்த தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் திரு டி அய்யாத்துரை – பொதுச் செயலாளர் திரு பி வி கந்தையா – நிதிச் செயலாளர் திரு பி பெருமாள் ஆகியோர் அருகில் காணப்படுகிறார்கள்- (ம)

... முன்னேற்றியதன் பயனாக ஏற்பட்ட சமூக பொருளாதார அபிவிருத்தியில சலுகையுடையோருக்கும், சலுகையற்றோருக்கும இடையில் இடைவெளி விரிவடைந்திருக்கிறது, கல்வியறிவை அடைவதற்குரிய நீதி நெறிக்குரியவை மனித கௌரவத்தை வெகுவாக பாதிக்கின்றன,

தனிப்பட்ட ஒருவருக்கோ, சமூக குழுவுக்கோ எழுத, வாசிக்க முடியுமானால, அவையே அவர்களது வாழ்க்கை நிலையையும், எதிர்காலத்தையும தீர்மானிக்கக் கூடிய பங்களிப்புகளில் கலந்து கொண்டு கருத்துகளை தெரிவிப்பதற்கான, தேவையான அடிப்படை சாதனமாக அமையும்,

இந்த கருத்தின்படி கல்வியறிவு முன் நிபந்தனையற்ற தொரு அவசியத்தைக் கொண்டிருக்கிறது, குறைந்தளவேனும பொதுத்தன்மையோ, அறிவூட்டுதலோ இல்லை எனின், கிராமம், நகரப்புறப் பகுதிகளில் தொழிலாளர்களின் வாழ்க்கை நிலையிலோ, தொழில் மாற்றத்திலோ அபிவிருத்தியோ மாற்றமோ ஏற்படப் போவதில்லை,

வாசிக்கவும், எழுதுவதற்குமான அடிப்படை சுதந்திரம இல்லை என்றால், ஒடுக்கப்பட்டிருக்கும 90 கோடி இளைஞர்களும், தொழில் உற்பத்தியிலோ, சமுதாய விவகார முகாமைத்துவங்களிலோ ஊக்கமுடன் பங்குபற்றும நிலை இருக்க முடியாது-

பிரஜைகளினதும, தொழிலாளர்களினதும பிரதிநிதிகளை சுதந்திரமாக தெரிவு செய்வதற்கான உத்தரவாதம இல்லை, சில நாடுகளில் இயங்கும சட்டங்கள் படித்தவர்களுக்கும், படிக்காதவர்களுக்கும இடையில் பாகுபாட்டினை கொண்டவையாக இருக்கின்றன.

யதார்த்தத்தை முழுமையாகப் புரிந்து கொண்டு தங்களின் வாக்களிப்பு உரிமையைப் பயன்படுத்த முடியாத நிலையில் கோடிக்கணக்கான ஆண்களும, பெண்களும இருக்கின்றனர், ஏனெனில் அவர்களுக்கு வாசிக்...

...றச் செயல்படுவது முடியாத செயலாகும், மேலும் உள்ளூர் மட்டத்தில் இவ்வாறான நிறுவனங்களில் அவர்களின் பங்களிப்பு உண்மையாகவே முடியாததாகும,

கல்வியறிவு என்பது ஒரு முழுமையான அறிவாற்றல் கொண்ட சமூகத்தை உருவாக்க வல்லது என்பது அல்ல; என்றாலும பங்களிப்பு இயந்திரத்தை நிலைநாட்டவும, பேணுவதற்குமான முக்கிய பங்களிப்பை அது கொண்டிருக்கிறது, சகல சமூக மாற்றங்களுக்கும அதுவே திறவுகோலாக இருக்கிறது,

கல்வியறிவு, பொதுவாக கல்வியைப் போல சமுதாய – பொருளாதார யதார்த்தத்தில் நிலைகொண்டிருக்கும அரசியல் நடவடிக்கை போன்றதாகும,

சகல சமூகங்களிலும வேலை செய்வதற்கான உரிமையும, சுதந்திரமான ஒரு தொழிலைத் தெரிவு செய்தற்குமான நிலையும, வாசிக்கும, எழுதும தகுதியைக் கொண்டு அதிகரித்து வருகிறது,

வாசிக்க, எழுத முடியாதவர்கள் பதவி உயர்வு பெறுவதில் கட்டுப்படுத்தப்படுகின்றனர், அவர்கள் இதனால் உடல ரீதியாகவும, மனரீதியாகவும் பாதிக்கும ஆபத்தும உண்டு,

பொருளாதார நடவடிக்கைகள், வீழ்ச்சியுறும போது ...

...வாய்ப்புகளையும் வழங்குவது அவசியமாகும்,

21 ஆம நூற்றாண்டில் அறியாமை, வறுமையில் வதியும ஆண்களும், பெண்களும இன்னும இருக்கிறார்கள என்ற நிலையை இல்லாதொழிக்க வேண்டும, இதனை நாம சவாலாக ஏற்றுத் துணிவுடன் செயல்பட வேண்டும,

நீதியினதும, ஒருமைப்பாட்டினதும, மனித இன அபிவிருத்தியினதும் கடமை இதுவாகும,

இந்த ஆண்டை சர்வதேச கல்வியறிவு ஆண்டாக ஐக்கிய நாடுகள சபை பிரகடனப்படுத்தி இருப்பதை மலையக தொழிற் சங்கங்கள் எண்ணிப்பார்க்க வேண்டும,

அத்தோடு உலக தொழிற் சங்கங்களுக்குத் தலைமை வகிக்கும சர்வதேச தொழில் நிறுவனம யுனெஸ்கோவோடு சேர்ந்து விடுத்திருக்கும வேண்டுகோளையும கவனத்தில் கொள்ள வேண்டும,

கல்வியறிவால் மிகமிகப் பின் தள்ளப்பட்டிருக்கும மலையக சமுதாயத்தின் அறிவுக் கண்களைத் திறக்க இந்த ஆண்டில் ஆக்கபூர்வமான பணிகளில் மலையக தொழிற் சங்கங்கள் இறங்க வேண்டும, செயல்பட வேண்டும்,

(ம—ங—455)

...மலையக மாணவர், பெற்றோர்களையும மடையர்களாகவும், தகுதி குறைந்தவர்களாகவும கருதி செயல்படுகின்றனர்.

இதனால் ஆசிரியர், பெற்றோர், மாணவர்களது அன்பையும, விசுவாசத்தையும இழந்து விடுகின்றனர். இதனால் பாடசாலையின் கல்வி அபிவிருத்திப் பணிகள் பாதிப்படைகின்றன.

எழுத்து வடிவிலே உள்ள சட்ட திட்டங்கள் யதார்த்தமாக நடைமுறைப்படுத்தப்படும போது சில வேளைகளில் நெகிழ்ச்சியடைய வேண்டும. அதை ஏற்று நடத்தும துணிவு ஒரு பாடசாலை அதிபருக்கு இருக்க வேண்டும.

பாடசாலையைக் குடும்பமாகக் கருதி பாடசாலை அதிபர்கள், ஆசிரியர், மாணவர்களுடன் ஒட்டி உறவாடி பிரச்சினைகளைக் கலந்துரையாடி சுமுகமான தீர்வு காண அதிபர்கள் முனைய வேண்டும.

தனது மேலதிகாரிகளுக்குக் கௌரவமளிக்கும அதே வேளை அவர்களுக்குப் பயந்து தலை சொறிந்து கோழையாக, அடிமையாக அதிபர்கள் இருக்கக் கூடாது.

ஒரு பாடசாலையின் அதிபரைக் கொண்டுதான் அப்பாடசாலையின் ஆசிரியர், பெற்றோர் மாணவர்கள் அளவிடப்படுகின்றனர் என்பதை அதிபர்கள் மறந்து விடக் கூடாது.

ஒரு சிறந்த அதிபரின் திறமை அவரது நிர்வாக முறைகளிலும அந்தப் பாடசாலை பொதுப் பரீட்சைகளின் பெறுபேறுகளிலுமே தங்கி உள்ளன என்பதையும அதிபர்கள் மனதிற் கொள்ள வேண்டும.

(த—ங)

# காடழிப்பினால்

# ஏற்பட்ட வரட்சி

உலகிலேயே மிக அதிகமாக மழை பெய்யும இடம என்று மேகாலய மாநிலத்தில் உள்ள சிரபுஞ்சியைச் சொல்லுவார்கள்,

கடல் மட்டத்திலிருந்து 1313 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள இந்த இடத்தில் ஆண்டு ஒன்றுக்கு 360 அங்குலம மழை பெய்வதுண்டு,

அடர்ந்த காடுகளும நிறைய மரங்களும அதிக மழை பெய்வதற்கான காரணங்களுள் முக்கியமான ஒன்றாகும,

கடந்த 25 ஆண்டுகளாக காடுகளிலுள்ள மரங்களைக் கொஞ்சம கொஞ்சமாக திருட்டுத் தனமாக வெட்டி இந்தப் பகுதியை மொட்டையடித்து விட்டார்கள்,

இந்தியாவின் வடகிழக்கு எல்லையாக இருப்பதால் வெளிநாட்டுக் கடத்தல் காரர்களுக்கும இந்தக் கொள்ளையில் முக்கிய பங்கு உண்டு,

இப்பொழுது சிரபுஞ்சியில் கடும வரட்சி நிலவுகிறது, காடுகள் சமவெளியாகக் காட்சி தருகின்றன,

இந்தியாவின் பெருமைக்குரிய இந்த இடம இன்று பரிதாபமாக கரம்பு நிலப்பகுதியாக மாறிக் கொண்டிருக்கிறது,

(ம—10)

# ஒலி ஒளி உருவம்

## நாட்டிய நாடகம் காட்டிய நவரசம்

கடந்த 26–12–89 வாஹினியின் கலையரங்கம் நிகழ்ச்சியில் "நடக்கின்றோம்" என்ற தலைப்பிலான நத்தார் விசேட நிகழ்ச்சி ஒன்று ஒளிபரப்பானது!

திருமதி நிர்மலா ஜோனின் நடன அமைப்பிலும் நட்டுவாங்கத்திலும் "நிர்மலாஞ்சலி நடனக் கலையக" மாணவர்களும் நிர்மலாவும் நாட்டிய நாடகமொன்றைப் பாட்டும் பரதமுமாகத் தந்தார்கள்!

"நடக்கின்றோம் நடக்கின்றோம்... இருண்ட வாழ்வினில் குருடர்களாக யாவரும் நடக்கின்றோம்...

"பிறந்தோம் ஒரு நாள்... இறப்போம் ஒரு நாள் என்பதை உணராது...

"மானிட வாழ்க்கை நீர் மேல் குமிழி என்று நாம் நினைக்காது...

"என்றென்றும் வாழ்பவர் போல் உலகினில் உரிமைகள் தேடுகின்றோம்..."

என்ற தொடரும் கருத்தாழமிக்க பாடலுடனும் நிர்மலாவின் அருமையான அபிநயங்களுடனும் நத்தார் நிகழ்ச்சி மகிழ்ச்சியடைய வைத்தது!

ஐ டி பெனடிக்டின் பிரதியாக்கத்திலும் அருந்ததி ஸ்ரீரங்கநாதனின் இசையமைப்பிலும் பரராஜசிங்கம் — வனஜா ஸ்ரீநிவாசனின் பாட்டிலும் – பரதமும் தரமானதாகவே இருந்தது!

எஸ் விஸ்வநாதனின் தயாரிப்பிலும் நெறியாள்கையிலுமான "நடக்கின்றோம்" என்ற இந்த நிகழ்ச்சி...

இவ்வாண்டில் வாஹினியில் நடக்கவிருக்கும் "கலையரங்கு" நிகழ்ச்சிகளுக்குக் கட்டியம் கூறுவதாகவே அமைந்திருந்தது!



"நடக்கின்றோம்" நாட்டிய நாடகத்தில் நிர்மலா ஜோனின் அபிநயத்துடனான ஒரு காட்சி காணீர்...


## நேச பாச பந்தங்களை நெஞ்சம் மறப்பதில்லை

கடந்த வருடக் கடைசி நாளன்று (31–12–89) வாஹினியில் ஒளிபரப்பான "சைமல் காஸ்ட்" ஒ(லி)ளிபரப்பு இவ் வருடத்துக்கு வரவேற்புக் கூறும் வகையில் மகிழ்ச்சியான இனிய இசை நிகழ்ச்சியாகவே இடம் பெற்றது!

தங்களுக்குட்பட்டவர்களின் வாழ்வில் ஏற்பட்ட வெற்றி தோல்விகளையும் சந்தோஷ சஞ்சலங்களையும் கூட "நெஞ்சம் மறப்பதில்லை" என்பதை வருடத்தின் இறுதி நாளன்று பாடியது வெகு பொருத்தமாகவே இருந்தது!

வட்டங்களின் இதயங்களைத் தள்ளாட்டம் போட வைத்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை!

சந்திரபோஸின் இசையமைப்பிலான இந்தப் பாடல் இலங்கை வானொலியில் பல தடவைகள் ஒலித்து ரசிகர்களைக் கவர்ந்த ஒரு



"நெஞ்சம் மறப்பதில்லை" எனப் பாடும் கலாவதியுடன் "வண்ணாத்திப் பூச்சி வயசென்ன ஆச்சு?" என்று கேட்கிறார்கள் மோகனும் ராணியும்!

மும்மொழியிலுமான இந் நிகழ்ச்சியில் இடம்பெற்ற இரண்டு தமிழ்ப் பாடல்கள் மட்டும் பழைய – புதிய பாடல்களாகிப் பார்வையாளர்களைப் பரவசத்திலாழ்த்தின!

பழைய பாடல்கள் என்றதுமே நம் ஞாபகத்துக்கு வருபவர் கலாவதிதான்!

ஏனென்றால் பழைய தமிழ்த் திரைப் பாடல்களை இவரது இனிய குரலில் கேட்டுக் கொண்டே இருக்கலாம்!

ஆம்... அன்றைய நிகழ்ச்சி

அடுத்த தமிழ்ப் பாடல் இலங்கையின் இன்றைய பிரபல பாடகரான மோகன்ராஜும் ராணி பெர்னாண்டோவும் பாடிய "பாட்டி சொல்லைத் தட்டாதே" படப்பாடலான "வண்ணாத்திப் பூச்சி வயசென்ன ஆச்சு?" என்ற பாடலாகும்!

"ஆண்டொன்று போனால் வயசொன்று போகும்" என்பதை ஞாபகமூட்டும் வகையில்...

வண்ணத் தமிழ்ப் பெண்ணொருத்தியைப் பார்த்து "வண்ணாத்திப் பூச்சி...

அருமையான பாடலாகும்!

இந்தப் பாடலைத் தான் மோகனும் ராணியும் அருமையாகப் பாடி எல்லோரையும் விரும்ப வைத்தார்கள்!

மற்றைய மொழிப் பாடல்களும் கூட அன்றைய நிகழ்ச்சியில் அனைவரையும் கவரும் கானங்களாகிக் களிப்பிலாழ்த்தின!

சிறந்த இசையமைப்பாளரும் வாத்தியக் கலைஞருமான மோகன் சிங்கள வாத்தியக்...

## சித்தாரா இசையில் சிறந்த நிகழ்ச்சி!

ஐ டி என் ஒளிபரப்பிலும் இம்முறை நத்தார் பாடல்களை "வண்ணப் பூக்கு"ளும் "முத்துச்சர"மும் தரத் தவறவில்லை!

சித்தாரா — சுப்பர் சித்தாரா இசைக் குழுவினரின் வாத்திய விருந்திலும் இம்முறை கிறிஸ்தவப் பாடல்களைக் கேட்கக்கூடியதாக இருந்தது!

ஆனாலும் விஜயராஜா பெர்னாண்டோவின் தயாரிப்பிலும் நெறியாள்கையிலும் ஒளிப்பதிவிலும் இடம்பெற்ற "ஒளி பிறந்தது" என்ற நத்தார் சிறப்பு நிகழ்ச்சிதான் இம்முறை சிறப்பாக இருந்தது என்று சொன்னால் அது மிகையாகாது!

புனித லூக்காஸ் எழுதிய சுவிசேஷத்திலிருந்து யேசு பாலனின் பிறப்பைப் பற்றிய விஜயராஜாவின் விவரிப்புடன் "பிறந்த — ஒளி" — கிறிஸ்தவர்களைக் களிப்பிலாழ்த்தும் நிகழ்ச்சியாகவே அமைந்திருந்தது!

இறுதியாக இடம்பெற்ற சித்தாரா இசைக் குழுவினரின் மெட்டமைப்பிலான இரு பாடல்களும் இந்நிகழ்ச்சிக்கே இனிமை சேர்த்த விதம் சித்தாராவினரை மீண்டும் நினைவு கூர வைத்தது!

திருமதி லூர்த்ஸ் அன்ரனின் பயிற்சியில் இடம் பெற்ற "கண்ணே என் மணியே நீ கண்ணுறங்கு" என்ற பாடல் குறிப்பிடத்தக்கதாகும்!

இலங்கையின் இசைக் குழுவினரில் சித்தாராவினரும் பிரபலமானவர்கள் என்பது அனைவரும் அறிந்ததே!

இவர்களும் இனி அடிக்கடி வாஹினி – ஐ டி என் நிகழ்ச்சிகளில் தோன்றி டி வி ரசிகர்களை மகிழ்விப்பார்களென எதிர்பார்க்கிறோம்!

## மற்றுமொரு மகாத்மா.

இந்திய டிவி ரசிகர்கள் விரைவில் மற்றுமொரு மகாத்மா காந்தியைச் சந்திக்க இருக்கிறார்கள்– இந்தப் புதுக் காந்தி மேலை நாட்டில் இருந்து வந்த பென்கிங்ஸ்லி போல் அல்லாமல் இவர் ஓர் இந்தியக் காந்தி! பெயர் வித்தல்தாஸ் பாஞ்சோளி! இவருக்கு 84 வயது ஆகிறது–

இவரைப் பார்த்த மொரார்ஜி "உங்களுக்குக் காந்தியைப் போலவே காது இருக்கிறது – காந்தியின் கொள்கைகளும் இருக்கின்றன" என்று பாராட்டியிருக்கிறாராம்!



## ரூபவாஹினியின் தமிழ் நிகழ்ச்சிகள்

| | |
|---|---|
| ஞாயிறு– சைவநீதி | 5–30 |
| திங்கள்– வண்ணச்சோலை | 5–30 |
| பாடல்கள் | 6–15 |
| நாடகம் | 6–55 |
| செவ்வாய்– கலையரங்கம் | 6–55 |
| புதன்– புத்தமத பேச்சு | 6–55 |
| வியாழன்– ஒளித்தென்றல் | 6–55 |
| வெள்ளி– உரை நிகழ்ச்சி | 6–15 |
| உதயகீதம் | 6–55 |
| சனி– பாடல்கள் | 6–15 |

## அறிவுக் களஞ்சியம்

## கவரும் கானம்

வாழ்க... (தென் மதுரை)

(பெண்) தேய்கின்றது... பொன்மாலை நிலா... தேய்கின்றது... பொன்மாலை நிலா... தேயாதது நம் ஆசை நிலா...

(ஆண்) இது வானம் போலே வாழும் பாசம்...

(மூவரும்) தென் மதுரை வைகை நதி தினம் பாடும் தமிழ்ப்பாட்டு... தென் மதுரை வைகை நதி...

★

இப்பாடலை இயற்றியவர் கவிஞர் வாலி — இசையமைத்தவர் இளையராஜா — பாடியவர்...

### உன்னோடு ஜீவன் ஒன்றாக்கினான்

உன்னோடு ஜீவன் ... வைகை நதி...

## ஒன்றாக்கினான்



(ஆண்) தென் மதுரை வைகை நதி தினம் பாடும் தமிழ்ப் பாட்டு... தென் மதுரை வைகை நதி தினம் பாடும் தமிழ்ப் பாட்டு...

தேய்கின்றது... தேய்கின்றது பொன்மாலை நிலா... தேயாதது நம் ஆசை நிலா... இது வானம் போலே வாழும் பாசம்... (தென் மதுரை)

நம்மைப் போல நெஞ்சம் கொண்ட அண்ணன் தம்பி யாருமில்லை...

தன்னைப் போல என்னை எண்ணும் நீயும் நானும் ஓர் தாய் பிள்ளை...

தம்பி உந்தன் உள்ளம் தானே அண்ணன் என்றும் வாழும் எல்லை...

ஒன்றாய்க் காணும் வானம் என்றும் ரெண்டாய் மாற நியாயமில்லை...

கண்ணோடுதான் உன் வண்ணம்... நெஞ்சோடுதான் உன் எண்ணம்...

முன்னேற நீ மென்மேலும்... என் ஆசைகள் கைகூடும்...

இந்த நேசம் பாசம் நாளும் வாழ்க... (தென் மதுரை)

நெஞ்சில் என்னை நாளும் வைத்து கொஞ்சும் வண்ணத் தோகையுண்டு...

மஞ்சள் மாலை மேளம் யாவும் கண்ணில் காணும் காலம் உண்டு...

பூவைச் சூடிப் பொட்டும் வைக்க மாமன் உண்டு மானே மானே...

உள்ளம் தன்னைக் கொள்ளை கொண்ட கள்வன் இங்கு நானே நானே...

உன்னோடு தான் என் ஜீவன்... ஒன்றாக்கினேன் நம் தேவன்...

நீதானம்மா என் தாரம்... மாறாதம்மா என் நாளும்...

இந்த நேசம் பாசம் நாளும் வைகை நதி...

★

இப்பாடலை இயற்றியவர் கவிஞர் வாலி — இசையமைத்தவர் இளையராஜா — பாடியவர்கள் பாலசுப்பிரமணியம்... சுசிலா... மலேசியா வாசுதேவன் — படம் "தர்மத்தின் தலைவன்" — இப்பாடல் காட்சியில் நடித்தவர்கள் ரஜனிகாந்த்... சுகாசினி...பிரபு!

இப்பாடல் வரிகளை விரும்பியவர்கள் ஆர் சிலைன்மச் சாடோ தொழும்பு 13 – பாருக் * லாபீர் * நசார்தீன் * நிஹார்தீன் மாணிக்கம்பிட்டி – ரிஸ்பியா * சித்திநிஸா * நபூஸா புத்தளம் – நல்லையா * கோனார் * சகுந்தலா * ஜெயந்தி கணேசன் புனாவத்தை – சஹறுனா * கதிஜா * முஹம்மட் அலி * அய்சா உம்மா குருநாகல் – நூருள் பர்ஸானா மினுவான் கொட – குமைசா * அகுமதா புத்தளம் – கே ஆர் நிஷா * எம் ஸியாத் * எம் ஸிராத் வெல்லம்பிட்டி – நதீஜா * ஹனியா * நஸ்மியா குளத்துறை – செல்வி ஜெயா செல்லத்தம்பி கிண்ணியா 1 – எம் பாசில் * எம் தேசிம மன்னம்பிட்டி – நஸ்லீம் * ரம்ஸான் அக்குறணை புஹியா * ஸனியா * சஸ்னியா மூத்தறை – ஜெயா * சதீஷ் * ரஞ்ஜி * டினேஷ் * விஜெய் * ரஞ்ஜனி * தர்ஷினி வத்தளை – ராஸிக் * நிஸ்பர் * சம்சும் * நூஃமான் வரக்காமுறை – அறபா அபுல் பேருவளை

## நாடகப் பயிற்சிப் பட்டறை

இலங்கைத் தமிழ் நாடகப் பேரவை பிரிட்டிஷ் கவுன்சில் இந்துசமய கலாசார ராஜாங்க அமைச்சு ஆகியவற்றின் ஆதரவுடன் நடத்தும் நாடகப் பயிற்சிப் பட்டறை நேற்ற சனிக்கிழமை ஆரம்பித்து இன்றும் நடைபெறுகிறது–

இடம்– சரஸ்வதி மண்டபம்– பம்பலப்பிட்டி– நடத்துவோர்– திரு றாடி கோறன்ஸ் (பிரிட்டிஷ் கவுன்சில்) – உதவி– திரு றவின்ஸ் பசநாயக்கா – திரு ஜெறோம் வில்லியம்ஸ்–

பிரிட்டிஷ் கவுன்சில் வதிவிடப் பிரதிநிதி திரு றெக்ஸ் பேக்கரும் இந்துசமய தமிழ் கலாசார அலுவல்கள் ராஜாங்க அமைச்சர் திரு பீ பீ தேவராஜும் இணைந்து இதனை ஆரம்பித்து வைத்தனர்– (ம)

...ஏனென்றால் பழைய தமிழ்த் திரைப் பாடல்களை இவரது இனிய குரலில் கேட்டுக் கொண்டே இருக்கலாம்!

ஆம்... அன்றைய நிகழ்ச்சியிலும் இவர் பாடிய "நெஞ்சம் மறப்பதில்லை" என்ற பழைய படப்பாடல் கடந்த வருடத்தின் எத்தனையோ நிகழ்ச்சிகளை எல்லாம் நெஞ்சம் மறக்கவில்லை என்பதை நினைவு கூர்வதாகவே அமைந்திருந்தது!

நேசம் பாசம் போன்ற பந்தங்கள்... வழியோரம் போகும்" என்பதை ஞாபகமூட்டும் வகையில் வண்ணத் தமிழ்ப் பெண்ணொருத்தியைப் பார்த்து "வண்ணாத்திப் பூச்சி வயசென்ன ஆச்சு?" என்ற வாலிபனொருவன் கேட்பது போன்ற இனிமையான இப்பாடல் – இளைஞர்களின் ... தினம்!

சிறந்த ... இசையமைப்பாளரும் வாத்தியக் கலைஞருமான மோகன் சிங்கள வாத்தியக் கலைஞர்களின் இசை மெருகூட்டலில் பாடி இந்நிகழ்ச்சியைச் சிறப்பித்த விதம் பிரமாதம்!

காந்தியின் கொள்கைகள் ... இருக்கின்றன ... என்று பாராட்டியிருக்கிறாராம்!

இந்தப் புதுக் காந்தியை இந்திய டெலிவிஷனில் வெளிவர இருக்கும் "காந்தி சங்க்ராம்" என்ற 13 வாரத் தொடரில் பார்க்கலாமாம்–

இத் தொடரில் நடிக்கும் வித்தல்தாஸ் பாஞ்சோளியையே காந்தி வேடத்தில் இங்கே காண்கிறீர்கள்!

## அறிவுக் களஞ்சியம்

பாடசாலைகளுக்கிடையிலான வினா விடை போட்டி நிகழ்ச்சி "அறிவுக் களஞ்சியம்" மீண்டும் இன்ற முதல் பிரதி ஞாயிறு தோறும் இரவு 8–30க்கு வானொலி முஸ்லிம் சேவையில் ஒலிபரப்பாகவிருக்கிறது–



எம் எம் இர்பான்

முன்னர் இந்த நிகழ்ச்சியை வழங்கிய எம் எம் இர்பான் மீண்டும் இதனைத் தயாரித்து அளிக்கிறார்– ஏ ஸீ ராவுத்தர் நெய்னா முஹம்மதுவின் குரலும் ஒலிக்கும்– (ம)

# தயாரிப்பு: சஞ்ஜயன்

# வாசகர் எதிரொலி எதிரொலி

31–12–89 இரவு ரூபவாஹினியில் இடம்பெற்ற "லைமல் காஸ்ட் ஸ்டீரியோ" ஒ(லி)ளிபரப்பு பிரமாதம்! குறிப்பாக— இடம்பெற்ற இரண்டு தமிழ்ப் பாடல்களும் தமிழ் ரசிகர்களை கவர்ந்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை! மோகனும் ராணியும் பாடிய "வண்ணாத்துப் பூச்சி வயசென்ன ஆச்சு" என்ற பாடலும் கலாவதி பாடிய நெஞ்சம் மறப்பதில்லை" என்ற பாடலும் நெஞ்சம் மறக்காமல் செய்துவிட்டது! நிகழ்ச்சியைத் தந்த ரூபவாஹினியினரைப் பாராட்டத்தான் வேண்டும்! — செல்வன் ரா சுரேஷ் – கலஹா–

★

எனக்குப் பிடித்த "நாளை நமதே" படப் பாடலான "அன்பு மலர்களே நம்பி இருங்கள் நாளை நமதே" என்ற பாடலை வானொலியில் கேட்டு ரசித்ததுண்டு! ஆனாலும் பாடலைக் கேட்க முடிந்ததே தவிர – பாடல் வரிகளைக் குறித்துக் கொள்ள முடியவில்லை! "கவரும் கானம்" பகுதி வந்த பிறகு தான் பாடல் வரிகளைக் குறித்து ரசிக்க முடிகிறது! சஞ்ஜயன் சாருக்கு எனது நன்றி! — செல்வி றிஸ்வானா சாலிஹ் – பாணந்துறை–

★

கடந்த வாரச் சிந்துவில் "கவரும் கான"த்தில் பிரசுரமான பாடல் வரிகள் நன்றாகவே இருந்தன! எம் ஜி ஆர் படப் பாடலை "கவரும் கானம்" மூலம் தந்ததையிட்டு மகிழ்ச்சியடைந்தேன்! புத்தாண்டை முன்னிட்டு வானொலியிலும் ரூபவாஹினியிலும் ஒ(லி)ளிபரப்பான பாடல்கள் அனைத்தும் சுவையாகவே இருந்தன! — செல்வி மஸாஹிமா எம் ஸஹீட் – கற்பளை–

★

வானொலியின் பொங்கும் பூம்புனல் மற்றும் சிற்றி எப் எம ஸ்டீரியோவிலெல்லாம் தமிழ் சினிமாப் பாடல்களைக் கேட்டு ரசிக்கும் பொழுது உடனே நம் ஞாபகத்துக்கு வருபவர் சஞ்ஜயன்தான்! ஏனென்றால் நாம் கேட்கும் பாடல் வரிகளை மனதில் பதிய வைக்கும் அவரது பணி பாராட்டத்தக்கது! இலங்கையின் வேறெந்தப் பத்திரிகைகளுக்குமே வராத இந்த ஐடியா சிந்தாமணியின் சிறப்பம்சமாகும்! வாசகர்களின் விருப்பங்களிலிருந்து சஞ்ஜயன் தேர்ந்தெடுத்துத் தரும் "கவரும் கானம்" வரிகளைப் படிக்கும் பொழுது அடேங்கப்பா... இப்ப தானே புரியுது அதன் "அருமை"யான அர்த்தங்கள்! இளையதலைமுறையினருக்கு இப்பாடல் வரிகள் இனிக்கின்றன! — செல்விகள் ஜெயந்தி * பிரபாஷினி * ரஞ்சனி * ரமா * உமா * ஆனந்தி * ராணி * பவானி * பவளம் * ஜெயஶ்ரீ வெள்ளவத்தை–

★

"அன்பே என் அன்பே அழுவது ஆகாது" என்ற பாடலைக் கால நேரமறிந்து பிரசுரித்து – என் காதலிக்குக் "கவரும் கானம் விடு தூது" விடுவதற்குக் காரணமாயிருந்த சஞ்ஜயரை எப்படிப் பாராட்டுவதென்றே தெரியவில்லை! — எஸ் ராஜசேகர் – மட்டக்குளி–

★

"கவரும் கானம" பகுதி நல்லதொரு ஐடியா! ஆங்கிலப் பாடல் வரிகளை ஆங்கிலப் பத்திரிகைகளில் சஞ்சிகைகளில் எல்லாம் பார்க்கும் பொழுது இப்படித் தமிழிலும் வெளிவராதா என்ற நான் ஏங்கியதுண்டு! என் எண்ணம் சிந்தாமணி மூலம் நிறைவேறியது கண்டு ஆச்சரியமடைந்த அக மகிழ்ந்தேன்! — செல்வி ஏ ஜெயப்பிரதா – ஜிந்துப்பிட்டி!

★

"கவரும் கானம்" பகுதியில் வெளிவரும் திரைப்படப் பாடல்களை எல்லாம் "போட்டோஸ்டட்" பிரதிகளில் நான் சேர்த்து வருவதன் காரணம் – தமிழகத்திலிருந்து முன்பு வந்த சினிமாப் பாடல் புத்தகங்கள் கூட இப்படித் தந்ததில்லை என்பதால்தான்! — ஜே வஸந்தி கொட்டாஞ்சேனை–

★

"வெற்றி எட்டுத் திக்கும் எட்டக் கொட்டு முரசே" என்ற பட்டம்மாள் பாடிய பாரதியாரின் பாடல் வரிகளைக் கொண்டே சஞ்ஜயர் தலைப்பிட்டிருந்த "வெற்றி எட்டுத் திக்கும் எட்டும் — சிற்றி எப் எம் ஸ்டீரியோ" என்ற விமர்சனம் வானொலி நேயர்களை வசீகரித்திருக்கும் என்பதில் சந்தேகமே இல்லை! — தி சரவணமுத்து – நாராஹேன்பிட்டி–

★

"குஷியின் பாடலும் குஷியான ஆடலும்" எனும் அழகான தலைப்பில் அருமையான விமர்சனத்தைத் தந்த சஞ்ஜயருக்கு எனது பாராட்டுக்கள்! — த வில்வராஜா – மத்துகம–

## ஊரும் உலகமும்

ரூபவாஹினியில் "ஊரும் உலகமும்" என்ற ஒரு நிகழ்ச்சியை இப்போது நடத்துகிறார்கள்– கடந்த வியாழக்கிழமை இரவு 7 மணிக்கு ஒளிபரப்பப்பட்ட தொகுப்பைப் பார்வையிட்டோம்– மிகப் பயனுள்ள ஒரு நிகழ்ச்சி இது– தகவல்கள் நிறைந்தது– அறிவுபூர்வமானது–

இந்த நிகழ்ச்சியை மிக அழகாகத் தொகுத்து வழங்கினார் திரு எஸ் விஸ்வநாதன்– தெளிவான உச்சரிப்புடன் விவரங்களை விளக்கமாக எடுத்துரைத்தார்–

பல்வேறு நாடுகளிலும் நிகழும் அதிசயமான அற்புதமான சுவாரஸ்யமான நிகழ்ச்சிகளையும் சம்பவங்களையும் தொகுத்து ஏற்ற படங்களுடன் வெளியிடும் நிகழ்ச்சி இது– ஈர்ப்பு குறையாமல் பார்க்கக் கூடிய ஒரு டி வி நிகழ்ச்சியாக இருந்தது– இப்படியான நிகழ்ச்சிகளை அடிக்கடி ஒளி பரப்பினால் நல்லது–


மாபெரும்

இசை நிகழ்ச்சி

இல– 68, கொட்டாஞ்சேனை வீதி,
கோல்டன் வீடியோ ஆதரவில்
சீதாராமன் வழங்கும்
ரவி — ஜெகனுடன்

"சீதாராவின் தெய்வக ராகங்கள்"


(திரையிசை நிகழ்ச்சி)

இடம்– புறக்கோட்டை ஐந்து லாமுச் சந்தி பழைய நகர மண்டபம்


காலம்– 7—1—1990 ஞாயிறு மாலை 6–30

டிக்கட்டுகள்– மண்டப வாயிலில்

சினிமா



ரஞ்சனியின் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும் என்ற நிலைக்கு வந்து விட்டார் யோகராஜ். "சம்சாரமே சரணம்" படத்தில் இவ்வாறு இணைந்தார்கள்.
(ம-10)



# கராத்தே வித்தை கற்ற பட்டதாரி நடிகை விஜி

அண்மைக் காலமாக திரைப் படஙகளில் நடிக்காமல் ஒதுங்கியிருந்த அல்லது ஒதுக்கப்பட்டிருந்த நடிகை விஜி மீண்டும நடிக்க வந்திருக்கிறார். அதுவும இடை-நடுவில் நின்ற தனது படிப்பை முடித்துப் பட்டதாரியாக வந்திருக்கிறார். அத்துடன் கராத்தே கலையிலும துறை கண்டவராகி விட்டார்,

விஜி என்ன சொல்கிறார் என்று கேட்போம:

நான் படிப்பதோடு மட்டும நிறுதிக் கொள்ளவில்லை. படஙகளில் நான் நடித்துக் கொண்டிருந்த போது, என்னிடம உள்ள குறைகள் என்ன என்பதை நான் தெரிந்து ... இருந்தேன்.

என் கன்னங்கள் குண்டு குண்டாகவும, உடல் பருமனாகவும இருப்பதாக "கேலி" பேசினார்கள். அதற்கும முடிவு கட்ட நினைத்தேன்.

அழகிய உடற்கட்டு வர என்ன செய்யலாம என சிந்தித்த போது, "கராத்தே" பயிற்சி நினைவுக்கு வந்தது.

"கராத்தே" பயிற்சி என்பது சுலபமானது அல்ல. அதிலும பெண்கள் கராத்தே பயிற்சி பெறுவது கஷ்டத்திலும கஷ்டம. ஒரு நடிகை அதைக் கற்பது என்பது எண்ணிப் பார்க்கக் கூட முடியாத விஷயம. ஆனாலும நான் துணிந்து "கராத்தே" பழக முயன்றேன் என்றல் அதற்குக் காரணம நான் கச்சிதமான - நடிகைக்கு உரிய உடல் அறைகைப் பெற வேண்டும என்ற வெறிதான்.

சென்னையில் கராத்தே வகுப்பில் சேர்ந்து, 3 ஆண்டுகள் விடாமல் "கராத்தே" பயின்றேன். கடுமையான பயிற்சி. தலையில் இருந்த உள்ளஙகால்

... பெல்ட்", "ஆரஞ்ச் பெல்ட்", "கிரீன் பெல்ட்" என்று எல்லாவற்றையும தாண்டி "பிரவுன் பெல்ட்" வாஙகி இருக்கிறேன். "பிளாக் பெல்ட்"டும விரைவில் வாஙகி விடுவேன்.

கே— நடிகைகளுக்கு கராத்தே தேவையா?

பதில்— நடிகை என்று இல்லை. ஒவ்வொரு பெண்ணுக்குமே "கராத்தே" தெரிந்து இருக்க வேண்டியது அவசியம. அது அவளுக்கு நல்லதொரு பாதுகாப்பு.

முன்பெல்லாம நான் சின்ன சமபவஙகளுக்குக் கூட பயப்படுவேன். இப்போது பயமே வருவது இல்லை. இப்போது எனக்குள் தைரியம, துணிவு வந்து இருக்கிறது. இது என் சினிமா வாழ்க்கைக்கு மிகவும உபயோகமாக இருக்கும. சண்டைக் காட்சிக்கு பயனாக அமையும.

அதோடு நான் எதிர்பார்த்த உடற்கட்டும வந்து இருக்கிறது. வெயிட் குறைந்து "ஸ்லிம"மாக இருக்கிறேன். ஒரு நடிகைக்கு இது தானே தேவை.

கே— இனி படஙகளில் நடிப்பீர்களா? எப்படி?

பதில்— நிச்சயமாக நடிப்பேன். நான் நினைத்து இருந்த படி, அறிவுப் பயிற்சியிலும, அழகுப் பயிற்சியிலும வெற்றி பெற்று விட்டேன். இனி நடிக்க எனக்கு எவ்வித தடஙகளும இல்லை.

ஒரு பட்டதாரியாக, கராத்தே மாணவியாக மீண்டும பட உலகில் நுழைகிறேன். என்னால் இன்றும கதாநாயகியாக நடிக்க முடியும. அந்த நமபிக்கை எனக்கு இருக்கிறது.

பட வாய்ப்புகள் வந்தவண்ணம இருக்கின்றன. ஆனால் அவை என் மனதுக்கு பிடித்தவையாக இல்லை. 3 ஆண்டுகள் கழித்து மீண்டும வரும நான், ரசிகர்களின் மனதில் பதியக் கூடிய, எனக்கு புகழ் தரக் கூடிய நல்லதொரு வேடத்தில் நடித்தால்தான் எடுபடும. அதற்காகவே நான் காத்திருக்கிறேன். அப்படி ஒரு வாய்ப்பு வந்து கொண்டு இருக்கிறது.

இனி வர இருக்கும விஜி வித்தியாசமானவளாக இருப்பாள். விதவிதமான வேடஙகளில் நடிக்கக் கூடியவளாக இருப்பாள். கொள்ளை அழகுடன் ரசிகர்களின் நெஞ்சஙகளில் தஞ்சம கொள்ளக் கூடிய புதுமைப் பெண்ணாக இருப்பாள்.

— இவ்வாறு விஜி கூறினார்.
(ம-10)








நடிகர்களையெல்லாம் தனது காலடியில் போடும் அளவுக்கு உயர்ந்து விட்டார் சிலுக்கு சுமிதா. இங்கு அவர் திணறடிப்பது அர்ஜுனனை. படம்: "படிச்சபுள்ள". (ம-10)

சென்னையில் கராத்தே வகுப்பில் சேர்ந்து, 3 ஆண்டுகள் விடாமல் "கராத்தே" பயின்றேன். கடுமையான பயிற்சி. தலையில் இருந்த உள்ளங்கால் வரை தனித்தனியாக வலித்தது. ஆனாலும் பயிற்சியை விடவே இல்லை.

அதன் விளைவு கராத்தேயில் "வயிட் பெல்ட்" "ஜெலோ





கராத்தே வித்தை பயின்ற பின் ஓய்ந்திருக்கிறாரோ விஜி (ம-10)

## சுவிஸ் வீரர்களுடன்

## நடிகர் விஜயகாந்த்

# பனிச்சறுக்கு சண்டை

"ஊமை விழிகள்", "செந்தூரப் பூவே" போன்ற வெற்றி விழாப் படங்களை உருவாக்கிய ஆபாவாணன் அடுத்து "திரைச்சிற்பி" சார்பில் பிரமாண்டமான முறையில் அதிகப் பொருட் செலவில் தயாரிக்கும படம "மூங்கில் கோட்டை". ஒரே சமயத்தில் தமிழ், தெலுங்கு இரு மொழிகளிலும இந்தப் படம தயாராகிறது. கதை, திரைக்கதை, வசனம, பாடல்கள், இணை இசை, தயாரிப்பு ஆகிய பொறுப்புகளை ஆபாவாணன் ஏற்று உள்ளார்.


ராஜாரவி டைரக்ட் செய்ய, செல்வகுமார் ஒளிப்பதிவு செய்கிறார். எடிட்டிங்கை அசோக் மேத்தா செய்கிறார். கியான்வர்மா இசை அமைக்கிறார். "ஊமை விழிகள்" படத்தின் இரண்டாவது பாகமான இதில் விஜயகாந்த் கதாநாயகனாக நடிக்கிறார். மற்றும ராமகி, அருண்பாண்டியன், ஜெய்சங்கர், நாசர், செந்தில், ஸ்ரீவித்யா, நிரோஷா உட்பட பலர் நடிக்கிறார்கள். தெலுங்கில் ராமகிருஷ்ணம ராஜு, ராமகி, நாசர், நிரோஷா, மஞ்சுளா உட்பட பலர் நடிக்கிறார்கள்.

ஏற்கனவே "மூங்கில் கோட்டை" படப்பிடிப்பு சென்னையிலும, காஷ்மீரிலும நடைபெற்றது. படப்பிடிப்புக்காக 500க்கும மேற்பட்ட துணை நடிகர், நடிகைகளும அழைத்துச் செல்லப்பட்டனர்.

இந்தப் படத்தில் ஆங்கிலப் படங்களுக்கு நிகராக புதுமையான சண்டைக் காட்சியை வைக்க ஆபாவாணன் முடிவு செய்து இருக்கிறார். இதன்படி பனிச்சறுக்கு சண்டைக் காட்சி படமாக்கப்பட இருக்கிறது. இந்த சண்டைக் காட்சி காஷ்மீரில் பனிமலைகளில் படமாக்கப்படுகிறது. பனிமலையில் சறுக்கிக் கொண்டே சண்டையிடும காட்சி படமாக்கப்பட இருக்கிறது. இதற்காக பனிச்சறுக்கு விளையாட்டில் உலகப் புகழ் பெற்ற 14 வீரர்கள் அழைக்கப்படுகிறார்கள்.

ஹெலிகொப்டர் மூலம விஜயகாந்த் மற்றும வீரர்கள் பனிமலை உச்சியில் கொண்டு விடப்பட்டு அதன் பிறகு பனிச்சறுக்கு சண்டைக் காட்சி படமாக்கப்படும. இதில் விஜயகாந்த், ராமகி, நாசர் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள். படத்தின் உச்சக்கட்ட காட்சியாக இது இடமபெறும.

(ம-10)



கணவனைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கும் வித்தை மனைவிக்குத் தெரிந்திருக்க வேண்டும். "புல்லானாலும் பொஞ்சாதி" படத்தில் புதுமுகங்கள் கல்யாணி - ராஜ் ஸ்ரீதர் ஒன்றிணைந்த காட்சி. (ம-10)

# மகள் சீதாவுடன் தந்தை நடிக்கும் படம் ஆரம்பம்

சீதா அவரது தந்தை மோகன் பாபு நடிக்கும் படத்தை புதிய இயக்குநர் சி ஆர் தேவராஜா டைரக்ட் செய்கிறார்—

திருமகள் மூவிலேண்ட் சார்பில் டி எஸ் ரவிமாறன் தயாரிக்கும் படம் "நான் கண்ட சீதை"

கதை திரைக்கதையை சீதாவின் தந்தை பி எஸ் மோகன் பாபு எழுதி முக்கிய வேடத்தில் நடிக்கிறார்—

கருத்தாழமிக்க வசனம் எழுதி முதன்முறையாக சி ஆர் தேவராஜா டைரக்ட் செய்கிறார்—

பாசமுள்ள அண்ணன் அவருடைய மனைவி ஈருடல் ஓருயிராக வாழ்கின்றனர்— பின்னர் ஏற்படும் வாழ்க்கை புயலில் சிக்கி பிரிந்து தனித்து வாழ்கின்றனர்— தங்கையோ வாலிபன் ஒருவனுக்கு வாழ்க்கைப் பட்டு துன்பத்தில் அமிழ்கிறாள்—

இப்படி ஒரு உணர்ச்சிகரமான கதையம்சத்துடன் உருவாகவிருக்கும் படத்தில் சீதா கதாநாயகியாக நடிக்கிறார்—

இப்படத்தின் தொடக்க விழா தியாகராய நகரில் உள்ள அலுவலகத்தில் தொடங்கியது—

ஊட்டி - குன்னூர் போன்ற இயற்கை எழில் நிறைந்த இடங்களில் படப்பிடிப்பு நடத்த திட்டமிடப்பட்டுள்ளது— (ம—10)

## "ஊரெல்லாம் உன் பாட்டு"

"எங்க ஊரு மாப்பிள்ளை" படத்தை அடுத்து ஐயனார் சினி ஆர்ட்ஸ் தயாரிக்கும் படம் ராமராஜன் நடிக்கும் "ஊரெல்லாம் உன் பாட்டு" இதன் தொடக்க விழா ஏற்கனவே நடந்துள்ளது—

கதாநாயகி முடிவாகவில்லை— செந்தில், கவுண்டமணி, ராஜீவ் மற்றும் பலர் நடிக்க இளையராஜா இசை அமைக்கிறார்— (ம—10)




ஹோட்டல் அதன் பின்பு முன்பே தெரிந்தவர் வீடு என்று குடியிருந்த மோகன நடிகர் சென்னை சாலி கிராமத்தில் சொந்த வீடு கட்டி குடியேறி உள்ளார்— புது வீடு புகுந்த மோகன் விரைவில் மணமகளுடன் புது வீடு புகுவாராம்! மணமகள் யாரோ! நடிகை அல்லர்!

★

இளைய இசை இசை அமைக்கும் படங்களிலேயே நடிப்பது என்ற ரா—ராஜனின் பிடிவாதம் கொஞ்சம் தளர்ந்து உள்ளதாம்— அதனால் அவர் நடிக்கும் படங்களில் வேறு இசை அமைப்பாளர்களும் இசை அமைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது— இளைய இசையின் பளுவை உணர்ந்து ரா—ராஜன் மாறிவிட்டாரா? இல்லை அவர் இசை அமைத்துக் கொடுக்கும் காலதாமதத்தினால் தனது படங்கள் திரைக்கு வருவது தடைப்படுகிறதே! என்ற காரணமா?

★

பிரபலமான ஒரு சில நடிகர் நடிகைகளுக்கு பிறந்தநாள் என்றால் ஊரே அமர்க்களப்படும் இந்தக் காலத்தில் பக்கத்து வீட்டுக்குக் கூட தெரியாமல் தனது 'பிறந்தநாளைக் கொண்டாடுகிறார் அர்ச்சுன ஹீரோ—

(ம-10)

## இதோ சரியான ஜோடி



டிஸ்கோ சாந்திக்கு நல்ல ஜோடி கிடைத்து விட்டதா? வி பிரபாகரனு—ன் கூடிக் களிப்பது "சரியான ஜோடி" படத்திற்காக. (ம–10)

# குஷ்பூ புகைவிடும் நடிகையா?

பம்பாயில் இருந்து நடிக்க வந்த நடிகை குஷ்பூ புகை பிடிக்கும் பழக்கம உள்ளவர் என்று ஒரு "கிசுகிசு" உண்டு— இது பற்றி அவர் என்ன கூறுகிறார்?

ஏற்கனவே ஏறத்தாழ நாற்பது, ஐம்பது படங்களில் சிறமியாக நடித்துள்ள குஷ்பூ நல்ல தக்காளி நிறத்தில் செழுமையாகக் காட்சி அளித்தார்— அவருக்கு தமிழ் சுத்தமாக வர வில்லை—

தமிழ், தெலுங்கு, கன்னடம் போன்ற தென்னக மொழிப் படங்களில் இந்தி நடிகைகள் நடிக்க ஆர்வம் மிகக் காட்டி நடிக்க வரத் துவங்கிய நேரம அது— ரூபினி, பல்லவி என்று பலர் இங்கே வர ஆரம்பித்து இருந்தனர்— சிறுமி நிலையில் இருந்து கன்னிப் பருவத்தை அடைந்திருந்த குஷ்பூ தன் அதிஷ்டத்தை பம்பாயில் பரிசோதிப்பதை விட, தென்னாட்டில் "டிரை" பண்ணினால் என்ன என்று தோன்றவே, வாய்ப்புத் தேடி சென்னை— வந்து சேர்ந்தார்—

கலியுக பாண்டவலு" என்ற படத்தில் நடிக்க 1986 ஆம் ஆண்டில் வெருக்கு வாய்ப்பு கிடைத்தது— ஹீரோ புதியவர்— பெயர் வெங்கடேஷ் நடித்த முதல் காட்சியில் குஷ்பூவிற்கு தரப்பட்ட முதல் வசனம் "குட்லக்" என்பது தான்— குஷ்பூவை நல்ல அதிஷ்டம் அணைத்துக் கொண்டது அந்த குட்லக் வசனத்துடன் தான்— முதல் படம் வெளியான அன்று படம எப்படிப் போகுமோ? என்று ஜுரம் வராத குறை குஷ்பூவிற்கு! படம "சூப்பர் ஹிட்" என்ற தகவல் கிடைத்த பின்னரே அவர் நிம்மதிப் பெருமூச்சு விட்டார்—

ரணதீரா என்ற கன்னடப் படத்தில் நடித்து அதிலும் வெற்றியை தனதாக்கிக் கொண்ட குஷ்பூவை கன்னடப் படவுலகமும் ஏற்றுக் கொண்டது— பல இந்திப் படங்கள், ஓரிரு டி வி தொடர்களில் நடிக்கும் வாய்ப்பும் பெற்ற இவர் தமிழ்ப்பட உலகிலும் புகுந்தார்—

"நீங்கள் புகை பிடிக்கும் பழக்கம உள்ள நடிகை என்கிறார்களே? பம்பாய் நடிகைகள் போல் உங்களுக்கும சிகரெட் பிடிப்பது, மது அருந்துவது போன்ற பழக்கம் உண்டா?" என்று கேட்ட போது குஷ்பூவின் கண்களில் இலேசாக கலக்கம் தெரிந்தது—

"நான் பீடா போடுவேன், சிகரெட் பிடிப்பேன், தண்ணி போடுவேன், படத்திற்கு லட்சக் கணக்கில் பணம் கேட்கிறேன் என்றெல்லாம் கூறுகிறார்கள்— எல்லாமே "டுப்" சிலர் அப்படி கிளப்பி விடறாங்க— இதனால் யாருக்கு லாபம்? ஏன் இப்படி வதந்தி கிளப்பி விடறாங்க என்பது புரியவில்லை—

நான் ரொம்ப நல்ல பொண்ணு— படத்தின் ஹீரோ சிகரெட் பிடித்தாலே அந்த புகை நெடி கூட எனக்குப் பிடிக்காது— பம்பாயில் எவ்வளவோ பார்ட்டிகளில் எவ்வளவோ நண்பர்களுடன் கலந்து கொண்டு இருக்கிறேன்— எப்போதும் கூல்டிரிங்ஸ் மட்டுமே நான் குடிப்பேன்— அவ்வளவு தான் என்று பொரிந்து தள்ளினார் குஷ்பூ—

(ம–10)



இளவரசி குஷ்புவின் கூந்தலில் இருந்து வரும் மணம் சிகரெட் புகை நாற்றமா என்று பிரபு யோசிக்கிறாரோ? படம் "வெற்றி விழா" (ம–10)



# மனோவின் நாயகிகளாக சீதா—பாக்கியா நடிப்பு

## சினிமாஸ்கோப் படத்தில் ரகுவரன் இரட்டை வேடம்

அஷ்வினி குமார் டைரக்ட் செய்யும் சினிமாஸ்கோப் படத் "போகப் போகத் தெரியும்" படத்தில் முதல் தடவையாக தில் ரகுவரன் இரட்டை வேடத் மாறுபட்ட இரு வேடங்களை

திருப்பதி மூவீஸ் என்ற பட நிறுவனத்துக்காக ராம நாராயணன் கதை, திரைக்கதை எழுதி டைரக்டு செய்யும் புதிய படம் "சக்தி பராசக்தி"

இந்த படத்தின் கதாநாயகன் மனோ— அவருக்கு ஜோடியாக சீதா பாக்கியா ஆகியஇருவரும நடிக்கிறார்கள்— வரதட்சணை கொடுமையை பற்றிய கதை இது—

அடங்காப்பிடாரி மாமியார் மனைவி சொல்லே மந்திரம் என்று நம்பும் மாமனார் இவர்களின் அப்பாவி மகன்— அவனுக்கு வாழ்க்கைப்பட்ட கிராமத்து பெண் வரதட்சணை கொடுமையால் சாகடிக்கப்படுகிறாள்—

கொலை செய்யப்பட்டவளின் தோழி ஒருத்தி அதர்மத்தை அழிக்க வந்த அன்னை பராசக்தியின் மறுவடிவாக அந்த குடும்பத்துக்கு இரண்டாவது மருமகளாக வருகிறாள்—

மாமியார் —மாமனாரின் கொட்டத்தை ஒடுக்கி கணவனுக்கு புத்திமதி சொல்லி திருத்துகிறாள்—

குறுகிய கால தயாரிப்பான இந்த படத்தில் ஆனந்தராஜ், எஸ் எஸ் சந்திரன், சார்லி மோகன்பாபு, ரா சங்கரன் வெண்ணிற ஆடை மூர்த்தி ஜெயவிஜயா பேபி சவும்யா அமசா மற்றும் பலரும் நடிக்கிறார்கள்—

என் கே விஸ்வநாதன் ஒளிப்பதிவு செய்ய சங்கர் — கணேஷ் இசை அமைக்கிறார்கள்—

புகழ்மணி வசனம் எழுதி இருக்கிறார்—

எஸ் வஜ்ரவேல் தயாரிக்கிறார்— தயாரிப்பு நிர்வாகம் காசிநாதன்—

(ம—10)

...தில் ரகுவரன் இரட்டை வேடத்தில் நடிக்கிறார்—

ஓம் விக்னேஸ்வரா புரொடக்ஷன்ஸ் பட நிறுவனம் சார்பில் தயாராகும் முதல் படம் "போகப் போகத் தெரியும்"—

சினிமாஸ்கோப்பில் உருவாகவிருக்கும் இப்படத்தின் கதை திரைக்கதை வசனம் எழுதி அஸ்வினிகுமார் டைரக்ட் செய்ய ஏ

ஆர் பாபு ஒளிப்பதிவு செய்கிறார்— சங்கீதராஜன் இசை அமைக்கிறார்—

அஸ்வினி குமார் ஏற்கனவே "என் கணவர் படத்தை டைரக்ட் செய்து உள்ளார்— அவரது இயக்கத்தில் "உன்னை கண் தேடுதே" படம் வேகமாக வளர்ந்து வருகிறது—

மாறுபட்ட இரு வேடங்களை ஏற்று ரகுவரன் நடிக்கிறார்— கீதா ஒரு கதாநாயகியாக நடிக்கிறார்— மற்றொரு கதாநாயகியாக பிரபல நடிகை நடிக்க உள்ளார்—

பல இந்தி படங்களில் வில்லனாக நடித்தவரும் அகில இந்திய தொலைக்காட்சிகள் பலவற்றில் நடித்தவருமான ராபர்ட் இப்படத்தில் வில்லனாக நடிக்கிறார்—

மற்றும் ரவிச்சந்திரன் — சின்னி ஜெயந்த் — குமரி முத்து — காந்திமதி ஆகியோரும் நடிக்கிறார்கள்—

ஒரே ஷெட்யூலில் முழுப்படத்தையும் முடிக்க தயாரிப்பாளர்கள் திட்டமிட்டுள்ளனர்—

(ம—10)



காதல் மணம் புரிந்த நடிகை சிதாவுக்கு புத்திமதி கூறி அனுப்புகிறாரோ முரளி. "வெற்றி மாலை" படக் காட்சி.

(ம—10)

# கோடம்பாக்கம் டைரி

ராமராஜன் நடிக்கும் ஒரு சில படங்களுக்கு முன்பணம் (அட்வான்ஸ்) கொடுத்துவிட்டு "கால்ஷீட்டு"க்காக ஒரு ஆண்டாக காத்திருப்போரும் உள்ளனர்— 2 ஆண்டு ஆனாலும் தாக்குப்பிடிக்கும்— லாபம் கிட்டும் என்ற நம்பிக்கை உள்ளதே இதற்குக் காரணம்! இன்றைய நிலையில் இதுவும் உண்மைதான்—

★

"புதிய பாதை" பார்த்திபனிடம் குடிகொண்டிருப்பது அடக்கம்— அத்துடன் நண்பர்கள் என்ற பெயரில் சுற்றிவருவோரை நெருங்கவிடாத புத்திசாலித்தனம்— இவ்விரண்டும் இப்போது இருப்பது போல எப்போதும் அவரிடம் இருந்தால் திரை கடலை நீந்தி கரைசேர்ந்து விடுவார் என்பதே— இது திரைப்பட வட்டாரத்தில் பேசப்படுவதுதான்—

★

"கரகாட்டக்காரன்" படத்தில் நடிகை தேவிகாவின் மகள் கனகா அறிமுகமாகி வெற்றி பெற்றதை தொடர்ந்து நடிகைகளின் குடும்பங்களைச் சேர்ந்த பெண்கள் பலர் புதிதாக சினிமாவில் புகுந்துள்ளனர்— விஜயசாந்தியின் தங்கை விஜயரேகா— பிந்துகோஷின் அக்காள் மகள் ராகவி— கே ஆர் விஜயாவின் தங்கையும் நடிகையுமான கே ஆர் சாவித்திரியின் மகள் ராகசுதா— "எட்டிக்கு போட்டி" சித்ராங்கியின் அக்காள் யுவஸ்ரீ— அருணாவின் தங்கை லட்சுமி இப்படி நீளுகிறது— இதில் எது எது தேறுமோ!

★

ஒரு "ல"கரத்துக்குள் அடங்கிக் கிடந்த ரூபினி, கௌதமி ஒரு படத்துக்கான நடிப்பு ஊதியம் "அபூர்வ சகோதரர்கள்" வந்த பின்பு 3 லகரத்தை எட்டியுள்ளதாம்! நடிகைகள் இப்படி ஏற்றிக் கொண்டால் கொடுப்பவர்கள் என்ன சும்மா கொடுத்து விடுவார்களா? அதற்குப் பின்பு அந்த நடிகைகள் நடித்த படங்கள் எப்படி ஓடுகின்றன என்பதை கவனித்துத் தானே கொடுப்பார்கள்?

★

இன்று தெலுங்கில் விஜயசாந்தி அடுத்து ராதிகா ராதா "மார்க்கெட்" ஏறிக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது— அங்கு தாக்குப் பிடிக்க முடியாமல்தான் அங்கிருந்து இங்கு சிலர் ஆரிராரோ... ஆராரோ பாட வந்து கொண்டிருக்கிறார்களாம்! இங்கு உள்ள போட்டியில் தாக்குப்பிடிக்க முடியுமா?

(ம—10)



எங்கே புறப்பட்டு விட்டார்கள் இந்த இளம் வீரர்கள்? கமலஹாசனும் பிரபுவும் இவ்வாறு அணி வகுத்து நிற்பது "வெற்றி விழா" படத்திற்காக.

(ம—10)

# அன்பு மகளுக்கு ஒரு நாயகனை நடிகை லட்சுமி தேடி விட்டார்

தனது அன்பு மகள் ஐஸ்வர்யாவுக்கு ஒரு நாயகனைத் தேடி விட்டார் நடிகை லட்சுமி— ஆனால் திருமணம் செய்து வைப்பதற்காக அல்ல— ஒரு படத்தில் தனது மகளுக்கு ஜோடியாக நடிக்க—

லட்சுமி சிவசந்திரன் தயாரிக்கும் கவிதசித்ரா பிலிம்ஸ் "நியாயங்கள் ஜெயிக்கட்டும்" படத் துவக்க விழா, பாடல் பதிவுடன் பிரசாத்தில் ஏ வி எம் சரவணன் முன்னிலையில் நடந்தது— வாலியின் பாட்டுக்கு சங்கர் கணேஷ் இசை அமைத்தார்கள்—

ஒற்றுமையாக வாழ்ந்த குடும்பத்தில் அரசியலால் ஏற்படும் குழப்பங்களையும பாசத்திற்கு ஏற்பட்ட சோதனைகளையும் விளக்கும் இதன் கதை வசனத்தை எழுதி இயக்குகிறார், சிவசந்திரன்—

சிவகுமார், லட்சுமியுடன், ராஜலட்சுமி— ஜெயலட்சுமி— கோவை சரளா, எஸ் எஸ் சந்திரன், ஜெய் கணேஷ், நாகேஷ் ஆகியோருடன் சிவசந்திரனும் முக்கிய வேடத்தில் நடிக்கிறார்—



நாகார் ஜுனா விடம் ராதா அகப்பட்டு விட்டார். "நியாயத்தை திருடாதே" படத்தில் வரும் காட்சி,

(ம—10

லட்சுமியின் மகள் ஐஸ்வர்யா இதில் அறிமுகமாகிறார்— அவருக்கு ஜோடியாக நடிப்ப வரும் புதுமுகமே— அவர் பெயர் குமார்—

(ம—10)

# தாய்மையின் சிறப்பு

— ஜெக்கியா ஜுனைதீன் —

"பா ர்த்தீங்களா...? அவளுக்கு எவ்வளவு பெரிய கல்லு மனசுன்னு...!"

— தன் கணவனிடம் சொல்லியவாறே நேர்ஸிங் ஹோமிலிருந்து வெளியே வந்து பாதை என்றும் பாராது விம்மினாள் மைமூன்.

மனைவியின் விம்மலுக்கு பதிலேதும் பேசவில்லை பரீத்.

இருவரும் காரில் ஏறி அமர்ந்தார்கள்.

பரீத் மனைவியின் முகத்தை ஒரு முறை ஏறிட்டுப் பார்த்தார். தன் மகள் ஸரீனா தாயிடம் நடந்து கொண்ட முறை தவறானதே என்று பரீத்தின் மனம் சொல்லியது.

மனதில் உந்தும் வேதனையுடன் பரீத் காரைச் செலுத்தினார்.

கார் முன்னோக்கி விரைய மைமூனின் சிந்தனை பின்னோக்கி விரைந்தது.

தங்களுக்குள்ள ஒரே மகள் என்பதால் பெண் என்றும் பாராமல் ஸரீனாவை கண்ணுக்குக் கண்ணாகவும் உயிருக்குயிராகவும் வளர்த்தனர்.

பொருளாதாரத்தில் தளும்பவில்லாமல் பரீதின் குடும்பம் நகர, அவருடைய தனியார் துறை பொது முகாமையாளர் பதவி உதவியது.

ஜீ சீ ஈ இறுதி வருடத்தில் பவனி வரும் போது தான் ஸரீனா காதல் வலையில் சிக்கினாள்.

அவன் எழுதிய காதல் கடிதம் அகப்பட்டதும் பாடசாலை அதிபர் ஸரீனாவின் தாயாரைத்தான் முதலில் வரவழைத்தார். அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது— அந்த அதிபர் ஸரீனாவின் தாய் மைமூனின் தூரத்து உறவினரும் ஆவர்.

மகளின் காதல் மடல் அதிபர் மூலம் தாயாரின் கைக்கு இடம் மாறியது.

அதிபர் வந்து எவ்வளவோ சொன்னார் பரீத் மசியவில்லை.

மகள் பரீட்சை எழுத வேண்டிய காலத்தில் பரீத் தன் மகளுக்கு கணவன் தேடும் பரீட்சையில் இறங்கி அதில் வெற்றியும் கண்டார்.

திருமணமும் இனிதே பெரியவர்களின் ஆசியோடு நிறைவேறியது!

— ஸரீனா விரும்பிய காதலனோடு அல்ல, தகப்பன் பார்த்த மணமகனோடு.

தான் எவ்வளவோ கெஞ்சி

"பெத்த மனம் பித்து, பிள்ளை மனம் கல்லு" என்பது நிரூபணமாயிற்று—

இருவருக்கும் இடையில் மனப் பகை என்ற கடினமான சுவர் எழும்பிற்று.

மணமாகி கணவனுடன் புக்ககம் புறப்படும் வேளையிலும் தாயிடம் சொல்லிக் கொள்ளவில்லை ஸரீனா.


தாய்க்கும் மகளுக்கும் இடையில் ஏதோ பெரியதொரு போராட்டம் இருப்பது ஸரீனாவின் கணவன் நஸீருக்கு தெரிந்திருந்தாலும் அதன் மூல காரணம் என்னரூப்பதை மைமூன் உணர்ந்தாள்.

"கிளினிக்"கில் கொடுத்த பிரசவ திகதியையும் தாண்டி எட்டு தினங்களாகி விட்டன.

ஸரீனாவுக்கு இன்னும் பிரசவம் நடக்கவில்லை.

வேதனையின் விளிம்பில் நின்று துடித்தாள்.

இன்னும் மூன்று தினங்கள் பார்த்துவிட்டு "ஸிசேரியன்" (ஆபரேசன்) மூலம்தான் குழந்தையை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும் என டாக்டர்கள் கூறி விட்டார்கள்.



நாளை மாலை ஸரீனாவுக்கு "ஆபரேசன்" செய்தே ஆக வேண்டும் என்ற முடிவுக்கு டாக்டர்கள் வந்து விட்டனர்.

மறுநாள் காலை ஏழரை மணிக்கு போல் மனக் கலக்கத்துடன் ஸரீனாவைப் பார்க்க நேர்ஸிங் ஹோமுக்குள் நுழைந்து கொண்டிருந்த நஸீரை இடைமறித்த தாதி "குட்மோர்னிங்! உங்களுக்கு "டோட்டர்" பிறந்திருக்கிறா" என்றாள்.

அடுத்த கணம் நஸீர், ஸரீனாவின் கட்டிலினருகில் நின்றான்.

மயக்க நிலையில் இருந்த ஸரீனா லேசாக முனங்கினாள்.

அடுத்த "உம்மா!" — என்ற தெளிவான, ஸ்திரமான, ஸ்மரணையான ஒரு முனகல்.

அதைத் தொடர்ந்து அவளின் இரு விழிகளிலிருந்தும் நீர்ப் பெருக்கம் வெளிக் கிளம்பி கன்னங்கள் வழியாகம் வழிந்தோடியது.

தன் பொக்கட்டிலுள்ள கைக்குட்டையை எடுத்து சட்டென்று மனைவியின் கன்னங்களில் வழியும் கண்ணீரைத் துடைத்து விட்டான் நஸீர்.

"ஸரீனா...!" அன்புடன் அழைத்தான்.

கண்களை மூடியபடியே... "வந்திட்டீங்களா? உம்மா!" என்றாள்.

"உம்மா... வரல்ல... நான் தான் வந்திருக்கிறேன் ஸரீனா"

நஸீரின் வார்த்தைகளைக் கேட்டதும் ஸரீனா பகீரதப் பிரயத்தனமாக கண்களைத் திறந்து பார்த்தாள்.

வெண்முகிலாக இருந்த அவள் முகம் கருமேகம் போலானது.

இச்சமயம் தாதி உள்ளே இருந்து குழந்தையைக் கொண்டு வந்து ஸரீனாவின் அருகில் கிடத்தினாள்.

ஆவலுந்த நஸீர் குழந்தை இருக்கும் பக்கத்துக்கு வந்து அதை முத்தமிட்டான்.

ஸரீனா கதறிக் கதறி அழ ஆரம்பித்தாள்.

"இவ்வளவு மகிழ்ச்சியான வேளையில் ஏன் ஸரீனா இப்படி அழ வேண்டும்?" என்றெண்ணிய நஸீரின் மனம் ஒரு கணம் திக்கென்றது...

காட்சியளித்தது.

"ஏன் ஸரீனா அழுவுறீங்க..."

"எனக்கு ஏன்ட உம்மாவ பாக்கணும...!"



## சிறுகதை

"நான் வரச் சொல்றேன்!"

"இங்க பாருங்க... நான் உடனடியா ஏன்ட உம்மாவ பாக்கணும... யா... அல்லாஹ்... நான் எவ்வளவு பெரிய பாவி. தாங்க ஏலாம என்னை மறந்தே "உம்மா"ன்னு சொல்லிட்டேன்...! அதோடயே புள்ளேயும பொறந்திடிச்சி.

என்னைப் பெறவும் ஏன்ட உம்மா இப்படித்தானே கஷ்டப் பட்டிருப்பாங்க! உம்மாட அருமை எனக்கு இப்பத்தான் வெளங்குது. எனக்கு இந்த புள்ள பொறந்ததாலத்தான் ஏன்ட தாயோட அருமை தெரியுது.

நீங்க உடனே போய் உம்மாவ நான் வரச் சொன்னதா கூட்டிக்கிட்டு வாங்களேன்...!

— நீண்ட நேரம் பேசிவிட்ட பின் அமைதியானாள் ஸரீனா.

"இப்பவே போறேன்" — என்ற நஸீர் குழந்தையையும

# மழை பெய்யுமா?

— நிலாபாலன் —

கார்கால மேகமது கறுப்பைப் பூசி
கரிஅடுப்புள் படுத்தெழுந்த பூனை போல
ஊர்ந்தூர்ந்து போகையிலே வான் சினத்து
உறுமும்;பின் மூலவெடி கொளுத்தி வீசும்!
பார் அங்கே... நெருப்பில்தீக் குச்சி யொன்று
பற்றவைத்தாற் போல்வெடிக்கும் மின்னற் கீற்றை;
ஆர்தடுத்தா லும்வானம் அருக்க ளித்து
அருக்களித்தே வாந்தியென மழையைப் போடும்!

★

அக்கினியின் அனலினிலே அவிந்த விந்து
அல்லாடி... விசிறியினுற் காற்றுண் டாக்கி
வெக்கையினைப் போக்கடித்தோம்;... சிறிது நேரம்
வேப்பமர நீழலிலும் இருந்தோம்...! அந்தத்
துக்கநிலை போக்குதற்கு இன்று வானம்
தூக்கிவந்த கடலினையே கொட்டும்... கொட்டும்!]
திக்கெட்டும் காய்ந்திருந்த களனி இன்று
திடுதிடென நிரம்புகிற மழையே பெய்யும்!

★

இன்றைக்கு மழை பெய்யும்... இதுகார் காலம்,
இருட்டுகின்ற வானமின்று பிரச விக்கும்!
கன்றிப்போய் விட்டநிலம் களிப்பில் வீங்கும்;
கதிர்நிசமாய்க் குலைதள்ளும் நீர் குடித்து!
ஒன்றித்த காதலர்கள்... முடிவே யின்றி
உம்...ம் போட்டுப் பேசுவது போல வானம்
இன்றைக்குக் கொட்டுமொரு ஐந்து பாட்டம்!
இனிமழையே தேவையில்லை என்னு மாறே!

முதலில் வரவழைத்தார். அதற்கு இன்னொரு காரணமும் இருந்தது- அந்த அதிபர் ஸரீனாவின் தாய் மைமூனின் தூரத்து உறவினரும் ஆவர்.

மகளின் காதல் மடல் அதிபர் மூலம் தாயாரின் கைக்கு இடம் மாறியது-

விஷயம் இவ்வளவு தூரம் போகும் என்று நினைத்திருக்காத ஸரீனா உண்மையிலேயே கதி கலங்கித்தான் போனாள்.

இந்த விஷயத்தை தந்தையிடம் கூற வேண்டாம் என்று தாயாரின் பாதங்களில் விழுந்தழுதாள் ஸரீனா-

கடந்த பதினெட்டு வருடகாலமாக எந்தவொரு விஷயத்தையும் தன் கணவனுக்கு மறைத்தறியாத "சகதர்மினி" மைமூன் தன் மகளின் காதல் மடலை தன் கணவனிடம் கொடுத்தாள்.

தன் மகளுக்கு இப்போது தேவை கல்வி அல்ல, கணவன் ஒருவன் என்பதை தெள்ளத் தெளிவுற உணர்ந்து கொண்ட பரீத, மகளின் பள்ளி வாழ்க்கைக்கு அணை போட்டார்.



மன்றாடியும் கேட்காமல் காதல் விவகாரத்தை தந்தையிடம் கூறி தனது காதல் கோட்டையைத் தரை மட்டமாக்கியதோடல்லாமல், தனது கல்வி பாதியில் தடைப்படவும் காரணமாகி இருந்த தனது தாயாரை ஜென்ம விரோதியாக ஸரீனா கருதினாள்.

அதன் பலன்!

தாயை வெறுத்தாள்

தன் முதல் எதிரியாக அவளைக் கருதினாள் இதெல்லாவற்றுக்கும் மேலாக தாயை பழி வாங்குவதற்காக ஸரீனா தன் தாயோடு பேசுவதையே விட்டு விட்டாள்.

பலமுறை மைமூன் தன்னோடு கதைக்கும்படி மகளிடம் கெஞ்சினாள், அழுதாள்.

பலன் இல்லை.

வென்பது தெரியவில்லை.

"மாதாவின் பாதத்தினடியில் தான் சொர்க்கம் இருக்கிறது" என நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்கள் கூறி இருக்கிறார்கள் என்று மனைவியிடம் ஒரு முறை நவீர் கூறினான்.

"அது வேற தாய்மாரிடம். என் உம்மா பாதத்தடியில் கொடிய நரகம் தான் இருக்கிது" என வெட்டென கூறினாள் ஸரீனா.

அதிலிருந்து அந்த சமரசப் பேச்சுக்கே போவதை நவீர் விட்டுவிட்டான்.

ஸரீனாவும் தாய் வீடு வருவதை நிறுத்தி விட்டாள்-

ஸரீனாவை பிரசவத்துக்காக "பிரைவேட் நேர்ஸிங் ஹோமில்" சேர்த்திருப்பதாக அவள் கணவன் பெற்றவர்களுக்கு அறிவித்து விட்டுப் போனான்.

பெற்ற வயிறு பொறுக்குமா? கணவன் மாலை வந்ததும் உடையைக் கூட மாற்ற விடாமல் நச்சரித்து அவளுடன் நேர்ஸிங் ஹோமுக்கு பறந்து சென்றாள் மைமூன்.

பெற்றோரைக் கண்டதும் "வாங்க வாப்பா! நீங்க மட்டும் வந்தா போதாதா...? என்று தகப்பனிடம தாய் வருவதை விரும்பவில்லை என்பதைச் சூட்சுமமாகச் சுட்டிக்காட்டினாள் ஸரீனா.

அதை பெற்றவள் லட்சியம செய்யாமல் "எப்ப உம்மா வலி எடுத்துச்சு!" என்றவாறு மகளின் தலையை அன்புடன் வருடினாள்.

தலையை வருடிய கையை தட்டி விட்டவாறே... "என்னைப் பாக்க இனி நீங்க வரவேணாம்! என்றாள் ஸரீனா

மகளின் வார்த்தைகளைக் கேட்டதும மைமூனின் சப்த நாடிகளும ஒடுங்கி தாய்மை என்ற புனிதம கருகி விட்டது.

★

"ம... இறங்குங்கோ!" — என்ற கணவனின் குரலைக் கேட்ட பின்னர்தான்; தன் வீட்டு வாசலில் கார் வந்து நின்ற விட்டி

இறப்புக்கும பிறப்புக்கும இடையில் நடக்கும ஜீவமரணப் போராட்டமே இந்த வேதனை... இதற்கு பிர — சவம என்பது எவ்வளவு பொருத்தமான பெயர் என்ற எண்ணி அந்த உயிர்ப் போராட்டத்தின் போதும ஸரீனாவின் மனம எண்ணி வியந்தது!

அதை முத்தமிட்டான்.

ஸரீனா கதறிக் கதறி அழ ஆரம்பித்தாள்.

இவ்வளவு மகிழ்ச்சியான வேளையில் ஏன் ஸரீனா இப்படி அழ வேண்டும?" என்றெண்ணிய நவீரின் மனம ஒரு கணம திக்கென்றது...

ஒரு வேளை...

குழந்தை... ஏதும அங்கவீனத்துடன்...? யா அல்லாஹ்... அப்படி மட்டும இருக்கப்படாது என்றவாறு குழந்தையை நன்றாக நோட்டம விட்டான்.

புலப்படக் கூடிய வகையில் ஏதும தென்படவில்லை.

அங்கசம்பூரணமான அழகான பெண் குழந்தையாக அது

## சிறுகதை

"நான் வரச் சொல்றேன்!"

"இஙக பாருஙக... நான் உடனடியா ஏன்ட உமமாவ பாக்கணும... யா... அல்லாஹ்... நான் எவ்வளவு பெரிய பாவி. பெத்த தாய்ட அருமை தெரியாம இருந்துட்டேன்.

பதினொரு நாளா நான் கஷ்டப்பட்டேன். வலி தாஙக ஏலாத நேரம நான் சுமமா சரி "உமமா" என்று வாய் தொறக் கல்ல.

"இன்டைக்கு விடிய வலி

நீஙக உடனே போய் உமமாவ நான் வரச் சொன்னதா கூட்டிக்கிட்டு வாஙக ளேன்...!

— நீண்ட நேரம பேசிவிட்ட பின் அமைதியானாள் ஸரீனா.

"இப்பவே போறேன்" — என்ற நவீர் குழந்தையையும மனைவியையும மாறி மாறி முத்தமிட்டு விட்டு, தனது காரை நோக்கி விரைந்தான்.

தன் அருகே கிடத்தப்பட்டிருக்கும தன் மழலையைத் திருமபிப் பார்த்தாள் ஸரீனா! அந்த மழலையின் முகத்தில் தன் தாயின் முகத்தையே அவள் கண்டாள்.

(ல)

# புகைப்பதற்கு எதிராக புனித போர்

கி பி 2000ஆம் ஆண்டில் உலக மக்கள் புகைக்கும் பழக்கத்தில் இருந்து முற்றிலும விடுவிக்க வேண்டும் என்று ஓர் அமெரிக்க டாக்டர் எல்லா நாடுகளுக்கும வேண்டுகோள் விடுத்துள்ளார்-

அவர் பெயர் டாக்டர் சி எவரெட் கூப்- அமெரிக்கப் பொதுச் சுகாதாரப் பணியின் தலைமை அதிகாரி நிபுணராயிருக்கும அவர் மேற்கண்ட குறிக்கோளை எட்டிப்பிடித்தால் பல்லாயிரம மக்களின் உயிரை மீட்கலாம்- புகைப்பதற்காக செலவிடப்படும கோடிக்கணக்கான டாலர்களை மக்கள் வசதியாக் குடியிருக்க குடியிருப்புகள் கட்டவும் சிறந்த கல்வி மருத்துவ உதவியளிக்கவும பயன்படுத்தலாம் என்கிறார்-

புகைக்கும தொழிலாளி ஒருவரால் புகைப்பதால் வரும நோய்களால் மட்டும் தனிப்பட்ட விதத்திலும் சராசரி ரீதியிலும் ஆண்டுக்கு 500 முதல் 4600 டாலர்கள் வரை இழப்பு ஏற்படுகிறது-

இரண்டாம உலகப் போரின் போது புகைக்கும பழக்கத்தை மேற்கொண்டவர்களுக்கு தற்போது நுரையீரல் புற்றுநோயும இருதய நோயும மிக உயர்ந்த அளவில் காணப்படுகின்றன என்று உலக சுகாதார நிறுவனத்தின் வெளியீடு ஒன்று குறிப்பிட்டுள்ளது-

அமெரிக்காவில் "புகைப்பதற்கு எதிராக நடத்திய புனிதப் போர்கள்" பல அறிவியல் ஆய்வுகளின் பின்னணியில் நடத்தப்பட்டன-

இதன் விளைவாக மற்றவர் புகைத்து வெளியிட்ட புகையை உள்ளிழுப்பவர்கள் புகைப்பதால் உண்டாகும நோய்களுக்கு அதிக அளவில் ஆட்பட நேரிடும! ஒரே வீட்டில் புகைக்காத நபர் ஒருவர் நாள் ஒன்றுக்கு இரண்டு பக்கட் சிகரட்டைப் புகைக்கும நபரோடு வசித்து வந்தால்சுமார் 3 சிகரெட்டுக்குச் சமமான புகையை புகைக்கிறார் என்று ஆய்வு தெரிவிக்கிறது-

— கனகராசா —



மேர்கு ஜெர்மனியின் பொன் நகரத்தில் கம்பீரமாகக் காட்சியளிக்கும மாளிகையொன்றையே படத்தில் காண்கிறீர்கள்- இதன் உரிமையாளர் பெருமளவு பணச் செலவில் வருடாந்தம இங்கு களியாட்ட விழாவொன்றை நடத்துவார்- விழாவில் கலந்து கொள்பவர்கள் ஜெர்மனியர்களின் புராதன நாகரிகத்தைப் பிரதிபலிக்கும ஆடையினையே அணிந்திருக்க வேண்டும என்பது கட்டாயமாகும்-

(ம-எ)

# கவிபாடக் கருவில்லை

— எம். ஐ. எம். சுபைர் —

சீதனத்தை செங்கதிரோன்
செய்கின்ற லீலைகளை,
மாதரினை, மயக்கின்ற
மலைகளினை, மரங்களினை,
காதலரைப் பற்றியெலாம்
கவிபாடி ஓய்ந்திட்டேன்!
பூதலத்தில் இனியேதை
புதுக்கருவில் பாடிடுவேன்?

★

கற்றுவித்த ஆசானை,
கற்பிழந்த கன்னியரை,
பெற்ற பிதா மாதாவை,
பேராசை கொண்டாரை,
வெற்றிகளை, தோல்விகளை
விரக்தியுறும் மானிடரைப்
பற்றியெலாம் பாவீந்தேன்!
பாட இனிக் கருவில்லை!

★

பள்ளிசெலும் மாணவரை,
பாதைகளின் சீர்கேட்டை,
கள்வரினை, கடவுளினை,
காமத்தாற் கிளர்வோரைச்
சொல்லிப்பா வார்த்திட்டேன்!
செகத்தினிலே இனியெழுத
இல்லையொரு கருவென்றே
ஏங்குகிறேன்; என்செய்வேன்?

## மணிக் கவிதை

### தேவைதானா?

தொடை தெரியும் உயரம் வரை
தொள தொள உறை மாட்டி
இடை வெளிச்சம் போடும
இழிதர நளினம் காட்டி
சடையினைக் குறைத்து வெட்டி
சமூகமது தூற்ற நிற்கும்
கடைகெடு நாகரிகம்
கன்னியர்க்குத் தேவைதானா?

★ கதிர் தில்லைநாதன்

### இது பகிதம்!

இனிய காதல் என்பது
இதயத்திலிருந்து எழும்
இன்ப கீதமாகுமது!
இதை அன்பு நரம்புகளால்
இசை மீட்டிப் பார்த்தாலோ
இனிமையான பல நாதங்கள்
இவ் வாழ்வில் தோன்றிடுமே!

★ த இந்திராணி

### உயிர் உனக்காக

உனை மறக்கத்தான்
நினைக்கிறேன் முடியவில்லை!
புது மனதிற்குள் என்னால்
புக முடியவில்லை!
உன்னை மட்டுமா இழந்தேன்?
என்னையும் இப்போது
இழந்து கொண்டிருக்கிறேன்!
அந்த நாள் ஞாபகங்கள்
என் நெஞ்சில் பூக்கிறது!
இத்தனை துன்பத்திற்குமிடையில்
நான் உயிரோடிருப்பது
எதற்காகத் தெரியுமா?
நீ கனவில் வந்து செல்வதால்!

★ ஜெயகுமார்

### அ(இ)ன்றுமில்லை

அன்று காதலை எதிர்த்த
உன் பெற்றோரால்
நம் காதல் வாழ்வு
கரை சேரவில்லை!
ஆனால் — இன்று உன்
கல்யாண வாழ்வு கூட
கண்ணீரில் மிதப்பதேன்?

★ ஜனாஸர்

### பறந்து வா!

எண்பதுகளில்தான்
எம் நிம்மதிகள்
காற்றில் பறந்தது!

# கோழை இளவரசன்

**மஷாஹினா ஆதம்பாவா**

ஓர் இளவரசன் இருந்தான்— அவன் மிகவும் நல்லவன்... அவன் குர்ஆன் ஹதீஸ் எல்லாம் படித்திருந்தான்— ஐங்காலமும் தவறாமல் தொழுது வந்தான்... பெரியவர்களுக்கு எப்போதும் மரியாதை செலுத்தி வந்தான்—

எப்போதும் உண்மையே பேசுவான்... ஏழை எளியவர்களுக்கு இரங்கி அவர்களுக்கு உதவி செய்வான்... எல்லோரும் அவனைப் போற்றினார்கள், நேசித்தார்கள்—

ஆனால் அவனிடம் ஒரு குறை இருந்தது— அவன் தைரியமும்— தணிச்சலும் அற்றவனாக இருந்தான், நாட்டை ஆள்பவர்களுக்கு தைரியமும் துணிச்சலும் அவசியம் அல்லவா?

இளவரசனின் தந்தை இறந்த பின் அனைவரும் இளவரசனுக்குப் பட்டம் சூட்ட விரும்பினர்— அந்த நாட்டில் ஒரு வழக்கம் இருந்தது— இளவரசனுக்குப் பட்டம் சூட்டு முன் சிங்கத்துடன் சண்டை போட விடுவார்கள்—

இளவரசன் வெற்றி பெற்றால் அவனை அரசனாக்குவார்கள்— மந்திரி பிரதானிகள் அனைவரும் இதை இளவரசனிடம் தெரிவித்தார்கள்—

வரும் வெள்ளிக்கிழமையன்று சண்டை போடத் தயாராயிருக்கும்படியும் கூறினார்கள்—

இளவரசனுக்கு உதறல் எடுத்தது— அம்மாடி! சிங்கத்துடன் சண்டை போடுவதா? முடியுமா? கதையைக் கடித்துத் தின்று விடுமே! என்று அஞ்சினான்—

பட்டமும் வேண்டாம்— ஒன்றும் வேண்டாம்— உயிரைக் காப்பாற்றிக் கொண்டு எங்காவது போய் பிழைத்துக் கொண்டால் போதும் என்று தீர்மானித்தான்—

அன்றிரவே யாருக்கும் தெரியாமல் தன் குதிரை மீதேறி காற்றாய்ப் பறந்தான்... கண்

குதிரையை வேறு வழியில் திருப்பினான்—

அக்காட்டுக்கு அருகிலேயே ஒரு குன்றின் உச்சியில் இளவரசனின் நண்பன் ஒருவன் மாளிகை கட்டிக்கொண்டு வாழ்ந்து வந்தான்... இளவரசன் அங்கே அவனிடம் சென்றான்—

நண்பன் இளவரசனை நன்றாக உபசரித்தான்—




அன்றிரவு இளவரசன் தூங்கிக் கொண்டிருக்கும் போது சிங்கத்தின் கர்ஜனை கேட்டு அலறி எழுந்தான்—

அறையின் ஜன்னலுக்கு வெளியே சிங்கம் ஒன்று நின்று கர்ஜனை செய்து கொண்டிருந்தது— இளவரசனின் உள்ளம் நடுக்கம் கண்டது—

ஆனால் நல்ல வேளையாக அந்தச் சிங்கத்திற்கு உள்ளே

சியா ஓடுகிறாய் என்று அவன் நகைத்தால் என்ன செய்வது?

இளவரசன் தன் நாட்டு எல்லையைத் தாண்டி அடுத்த நாட்டு எல்லையில் நுழைந்தான்... எங்காவது வேலை தேடிப் பிழைத்துக் கொள்ளலாம் என்று முடிவு செய்தான்—

இங்கும் அங்குமாக அலைந்து ஓரிடத்திற்கு வந்து சேர்ந்தான்... பசி வயிற்றைக் கிள்ளியது— எதிர்ப்பட்ட ஒருவரிடம் ஏதாவது வேலை கிடைக்குமா? என்று விசாரித்தான்—

அவர் இளவரசனை உச்சி முதல் உள்ளங்கால் வரை பார்த்தார்— நல்ல ஆஜானுபாகுவான இளைஞனாயிருப்பதைக் கண்டார்—

அவனை அழைத்துக்

டையே பெரும் பரபரப்பை உண்டாக்கியிருந்தது— நாலாபுறமும் ஆட்கள் அவனைத் தேடிக் கொண்டிருந்தனர்... அவனைக் கண்டவுடன் மகிழ்ச்சியடைந்து மரியாதையோடு அரண்மனைக்கு அழைத்து வந்தனர்—

இப்போது இளவரசனுக்கு வேறு வழியில்லை— சிங்கத்துடன் சண்டை போட்டு வெற்றி பெற்றால் கிரீடம் தரித்துக் கொண்டு நாட்டை ஆளலாம்—

சிங்கத்துக்கு இரையாகிவிட்டால் கப்ருஸ்தானுக்குப்போய் நிம்மதியாக உறங்கலாம— ஆண்டவன் விட்ட வழியாகட்டும் என்று நெஞ்சைத் திடப்படுத்திக் கொண்டான்—

இளவரசன் சிங்கத்துடன் போராட ஏற்பாடு செய்யப்பட்டது— குறிப்பிட்ட நாளில் நாலாபுறமும் கம்பி வேலி போட்ட மைதானத்தில் பயங்கரமான சிங்கம ஒன்று கூண்டோடு கொண்டு வந்து நிறுத்தப்பட்டது—

குறிப்பிட்ட வேளையில் இளவரசன் குளித்துப் புதிய ஆடை தரித்து இரண்டு ரக்அத்தொழுது அல்லாஹ்விடம் தன் உயிரைக் காப்பாற்றும்படி பிரார்த்தனை செய்தான்—

பிறகு கம்பி வேலிக்குள் நுழைந்தான்... ஊர் மக்கள் அனைவரும் திரளாகக் கூடியிருந்தனர்— சிங்கம் இருந்த கூண்டின் கதவு திறந்துவிடப்பட்டது—

பயங்கரமாக கர்ஜனை


சமாளித்துக் கொண்டு தைரியத்துடன் சிங்கத்தை நோக்கி நின்றான்— என்ன ஆச்சரியம்! சிங்கம அவன் மீது பாய்வதற்குப் பதிலாக அவன் காலடியில் வந்து படுத்துக் கொண்

தனர்— "இளவரசர் வாழ்க" என்ற பேரொலி எழுந்தது—

அடுத்த நிமிடம் சிங்கம் கூண்டுக்குள் அடைக்கப்பட்டது, இளவரசன் அரண்மனைக்கு அழைத்து வரப்பட்டான்— வழி நெடுக மந்திரி பிரதானிகளும் மக்களும் இளவரசரை வாழ்த்தினர்— பூமாரிபொழிந்தனா—

"ஆண்டவனே! இது தெரியாமல் நான் பயந்து நாட்டை விட்டோடினேனே! என்ன அறியாமை! என்ன கோழைத்தனம்!" என்று இளவரசன் எண்ணி வெட்கமடைந்

## வழி காட்டுங்கள்!



தமபி தஙகைகளே! இந்த சின்ன மீன் தனது அம்மாவைத் தவற விட்டு விட்டது அமமாவை அது போய் அடைந்திட அதற்கு வழி க்காட்டுங்க்ள் பார்க்க்லாம்



காற்றில் பறந்தது!
தொண்ணூறிலாவது
எம் நிம்மதி காக்க
சமாதானமே நீ
பறந்து வா!

★ எம். ஆர். எம். பௌஸர்

## வாழ்த்துகிறேன்

எண்ணம் போல் வாழ்வு
என்பதற்கொப்பாக – இன்று
உன் தகுதிக்குள் நீ புகுந்து
புகழாரம் தேடி மகிழும்
புதிய இவ் ஆண்டினிலே...
பல்லாயிரம் "பா" வடிக்க
பாவலனாய் இல்லை நான்!
எனினும் உனக்காகவே
சிறிய மணிக்கவியில் – நீ
சிறப்புற வாழ்த்துகிறேனே!

★ லோரி

## ந(த)ப்பாசை

நீ அழகி என்பதால் உன்மேல்
எனக்கு ஒரு நப்பாசை!
ஆனால் நீ புண்க்காரி என்பதால்
இந்த ஏழைக்கு அது தப்பாசை!

★ ஐயூப ஏ மஜீட்

## பரு(வெறு)ப்பு

நம் கல்லூரியில் காலையில்
என்றுமே பருப்பு!
அதைக் கண்டாலே தோன்றும்
நமக்கோர் வெறுப்பு!
அதை எதிர்த்தால் முழு நாளும்
நம் வயிற்றில் நெருப்பு!
இதனால் தயங்குகின்றோம்
கூறுவதற்கு மறுப்பு!
உணவு தருவோர் ஏற்கவேண்டும்
நல்லதோர் பொறுப்பு!

★ சாஜஹான் பாஸ்கான்

## சிகரெட்!

சாவை வாழ வைக்கும்
சத்தியவான் சாவித்திரிகள்!
சுடுகாட்டிற்கு சுருக்கமாய்
வழிசொல்லும் புருஷர்கள்!
காதலனை சிரிக்க வைக்கும்
கல்லறைக் காதலிகள்!
உலக வெளியில் ஒளிவிடும்
ஒலிம்பிக் தீபங்கள்!

★ ராஜாராம்



காற்றாய்ப் பறந்தான்... கண் காணாத ஊருக்குப் போய்விட விரும்பினான்–

நடுவழியில் காடு ஒன்று எதிர்ப்பட்டது– காட்டில் சிங்கம் – புலி இருந்தால் என்ன செய்வதென்று அஞ்சினான்– பக்கத்தில் சிலர் ஆடு மாடுகளை மேய்த்துக் கொண்டிருந்தார்கள்–

அவர்களிடம் விசாரித்தான்– காட்டில் சிங்கம் புலி இருப்பதாக அவர்கள் தெரிவித்தார்கள்–

இளவரசன் நடுங்கினான்...

அந்தச் சிங்கத்திற்கு உள்ளே வர வசதியில்லாமல் இருந்தது!

ஆகையால் இளவரசன் போர்வையைப் போர்த்திக் கொண்டு திரும்பிப் படுத்துக் கொண்டான்– விடியுமட்டும் அவனுக்கு உறக்கமே வரவில்லை–

அதிகாலையில் எழுந்த பஜ்ருத் தொழுகையை நிறைவேற்றி விட்டு நண்பனிடம் சொல்லிக் கொள்ளாமலேயே குதிரை மீதேறிப் புறப்பட்டு விட்டான்– நண்பனிடம் விடை பெற்றால் சிங்கத்திற்கு அஞ்

புதைக் கண்டார்–

அவனை அழைத்துக் கொண்டு ஒரு மிருகக் காட்சிச் சாலைக்குப் போனார்– அங்குள்ள சிங்கங்களுக்கு இரை போடும் வேலை கொடுத்தார்–

அட ஆண்டவனே! எங்கே போனாலும் சிங்கத்தின் மூஞ்சியில்தான் முழிக்க வேண்டியிருக்கிறதே! என்று எண்ணி அன்று இரவே சொல்லிக் கொள்ளாமல் குதிரை மீதேறி தன் நாட்டுக்கே புறப்பட்டுச் சென்றான்–

இளவரசன் திடீரென்று காணாமல் போன செய்தி மக்களி

புரிந்து கொண்டு சிங்கம் கூண்டின் கதவைத் தாண்டி வெளியில் வந்தது– இளவரசன் தைரியத்தை உண்டாக்கிக் கொண்டான்... சிங்கத்துடன் மோத ஆயத்தமானான்– சிங்கம் கம்பி வேலிக்குள் ஒரு முறை சுற்றி வந்தது– பிறகு இளவரசனை நோக்கி வந்தது–

இளவரசனின் உடல் முழுதும் வியர்த்துக் கொட்டியது– இருந்தாலும் ஒருவாறு தன்னை

டது–

அது பயிற்சியளிக்கப்பட்ட சிங்கம்– இளவரசர்கள் தைரியசாலிகள்தானா என்பதைத் தெரிந்து கொள்வதற்காகத்தான் நாட்டு மக்கள் அந்தப் பழக்கத்தை ஏற்படுத்தியிருந்தனர்–

இளவரசன் சிங்கத்தைத் தடவிக் கொடுத்தான்– அது பழக்கப்பட்ட நாயைப் போல் சாதுவாகப் படுத்திருந்தது– மக்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்

கோழைத்தனம்!" என்று இளவரசன் எண்ணி வெட்கமடைந்தான்–

அரண்மனைக்குள் அழைத்து வரப்பட்ட இளவரசனுக்குக் கோலாகலமாக பட்டாபிஷேகம் நடைபெற்றது– மார்க்கப் பெரியார்கள் இறைவசனங்களை ஓதி மகுடம் அணிவித்தனர்– இளவரசன் பாதுஷாவானான்–


அன்று முதல் இளவரசன் சீரோடும் சிறப்போடும் அந்நாட்டை ஆண்டுவந்தான்–

[இ]

# இசைக் கலைஞர்களை ஒற்றுமைப் படுத்த முயற்சி

மேல் நாட்டுப் பொப் இசையில் புரட்சிகர மாற்றத்தை ஏற்படுத்தி இன்றைய நவீன இசைத்துறைக்கே அடித்தளம் அமைத்தவர்கள் பீட்டில்ஸ் பாடகர்களான ஜோர்ஜ் ஹெரிசன் – ரிங்கோஸ்டார் – போல் மெக்கார்ட்னி ஜோன் லெனன் ஆகிய நால்வரும்!

இவர்களது தள்ளாட்ட இசை உலக இசைப்பிரியர்களிடையே வெள்ளமென பிரவகித்தது– ஆனால் 1969 ஆம் ஆண்டு பீட்டில்ஸ் பாடகர் குழு முறிந்தது– திசைக்கொருவராக அவர்கள் சிதறினர்–



மனித இனம் கோபம் பொறாமை ஆகியன காரணமாக மோதுகின்றன– போராடுகின்றன– ஆனல் மிருக இனத்தைச் சேர்ந்த குரங்கும் நாயும குதூகலமாக விளையாடி மகிழ்வதை இங்கு காணலாம–

இவை இரண்டும் மிகவும ஒற்றுமையாகவும புதுமையாக வும இணைந்து விளையாடுகின்றன–

குரங்கு நாயின் மீது ஏறி நாயின் உடலிலுள்ள உண்ணிகளைக் களைந்து விடுகிறது–

பேலியகொடையில் உள்ள ஒரு பௌத்த மதகுருவிடம் இந்த விந்தையான மிருகங்கள் வளருகின்றன– (ம)

இவர்களை மீண்டும் ஒன்று சேர்க்க பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் காரியம் கைகூடவில்லை– ஆனால் சமீபத்தில் போல் மெக்கார்ட்னி பத்திரிகையாளர் மாநாடொன்றில் பீட்டில்ஸ் பாடகர்கள் மீண்டும் ஒன்றிணையும் சாத்தியம் தோன்றியுள்ளது என்று ஒரு தகவலை வெளியிட்டிருந்தார்–

எம்மிடையே இருந்த சட்ட பிரச்சினைகள் எல்லாம் இப்போது முடிவடைந்திருப்பதால் நாம் ஒன்றிணையும் சாத்தியம தோன்றியுள்ளது என்றும் தானும் ஜோர்ஜ் ஹெரிசனும ஒன்றாகப் பாடல்களை எழுத முடியுமென்றும் அவர் கூறியிருந்தார்–

ஆனால் இதுபற்றி கருத்து தெரிவித்த ஜோர்ஜ் ஹெரிசனோ பீட்டில்ஸ் மீண்டும் ஒன்றுசேர்வது நடைபெற முடியாத காரியம் என்று அழுத்தம திருத்தமாகக் கூறி விட்டார்–

பீட்டில்ஸ் பாடகர்கள் மூவரும் ஒன்றுசேர்ந்து இசைத்துறையில் மறுபிரவேசம் செய்தால் அது ஒரு புரட்சிகர நிகழ்வாக அமையும் என்பதில் சந்தேகமேயில்லை– ஆனால் இதுவரை அது வெறும் கானல் நீராகவே இருந்து வருகிறது–

நான்கு பீட்டில்ஸ்களில் இப்போது மூவரே உயிருடன் உள்ளனர்– ஏனெனில் 1980 ஆம் ஆண்டு ஜோன் லெனன் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்–

(ம—032)

## பாம்புகளை விழுங்குகிறார்

சீனாவில் உள்ள வாநுபியோ என்ற விவசாயிக்கு காக்காய் வலிப்பு நோய்,

யாரோ இவரிடம "பாம்பு சாப்பிட்டால் காக்காய் வலிப்பு வராமல் தடுத்து விடலாம!" என்று "சுற்றி" விட்டார்கள்,

அவ்வளவுதான் இரண்டு வருடத்திற்குள் 1800 பாம்புகளைக் கடித்து முழுங்கி விட்டார்,

இவருக்குப் பாமபுப் பலகாரம போட்டுக் கட்டுப்படியாகாமல் வீட்டில் பாம்புப் பண்ணையே ஆரமபித்து விட்டார்கள்,

வியாதி தீர்ந்ததோ இல்லையோ பாமபுகள் சீனாவில் காலியாகிக் கொண்டிருக்கின்றன,

(ம-10)

# முரண்பாடுகளின் மொத்த உருவம்!

## ஜெயலலிதாவுக்கு பண்ருட்டி சூட்டும் பட்டம்

"மன முதிர்ச்சி இல்லாதவர் ஜெயலலிதா— முரண்பாடுகளின் மொத்த உருவம் அவர்" என்று ஜெயலலிதாவை பண்ருட்டி ராமச்சந்திரன் கடுமையாக விமர்சித்து உள்ளார்—

முன்னாள் அமைச்சர் பண்ருட்டி ராமச்சந்திரன் அளித்து உள்ள பேட்டியில் கூறி இருப்பதாவது—

ஜெயலலிதா இயல்புக்கு மாறான குணம் உடையவர்— அவருக்கு மனோபலமும், மனத்திண்மையும கிடையாது இளவயதிலேயே தந்தையை இழந்தவர், ஜெயலலிதா— அதனால் அவருக்கு அதிகமான கண்டிப்பு கட்டுப்பாடு என்பது சிறு வயதில் இருந்ததே இல்லை—

தந்தை இல்லாத குழந்தை நினைத்தது எல்லாம் நடக்க வேண்டும் என்று எதிர்பார்க்குமாம்— இது ஃஸ்ட்ராய்டின்தியரி— அப்படிப்பட்டவர்களின் மனம் ஒரு வழித்தடமாகத் தான் இருக்கும்—

இளமைப் பராயம் முதலே பலரை நம்பி ஏமாந்த காரணத்தால், யாரையும் நம்ப முடியாத மனோ நிலைக்கு ஆளாகி இருக்கிறார்— இவரைப் பற்றி எம் ஜி ஆரே மனமுதிர்ச்சி இல்லாத பெண் என்று கூறியிருக்கிறார்—

எம் ஜி ஆர் தன்னை மணந்து கொள்வார் என்று ஜெயலலிதா எதிர்பார்த்தார்— அது நடக்கவில்லை— சோபன் பாபுவாவது தன்னை மணப்பார் என்று ஜெயலலிதா [illegible]

மற்றவர் கருத்துக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற எண்ணம் ஜெயலலிதாவுக்கு எப்போதும் இருந்தது இல்லை—

1986 இல் எம் ஜி ஆரிடம் தன்னை துணை முதல்வராக்க வேண்டும் என்று தொந்தரவு செய்தார், எம் ஜி ஆர் அவரது வேண்டுகோளை கண்டு கொள்ளவே இல்லை— ஜெயலலிதாவுக்கு எக்காரணம் கொண்டும் ஆட்சிப்



ஜெயலலிதா

பொறுப்பில் இடமளிக்கவே கூடாது என்பதில் உறுதியாக இருந்தார்— ஜெயலலிதாவுக்கு இது மற்றொரு ஏமாற்றம்—

எம் ஜி ஆருடன் சண்டை போட்டுக் கொண்டு ஜெயலலிதா, தன் எம் பி பதவியை ஒரு முறை ராஜினாமா செய்தார்— ஆர் எம் வீரப்பனுக்கு எம் ஜி ஆர் ஆதரவு காட்டுகிறார் என்பதற்காக ஜெயலலிதா கொள்கை பரப்பு செயலாளர் பதவியை ஒரு [illegible]

ராக யாரும இருந்துவிடக்கூடாது என்பது தான்— இந்த எண்ணத்தினால் தான் தேர்தல் பிரசாரத்திற்கு தன் அனுமதியின்றி யாரும் போகக் கூடாது என்று உத்தரவிட்டு இருக்கிறார்—

தேர்தலுக்கு முன் கருணாநிதி ராஜினாமா செய்ய வேண்டும் என்றார்— தேர்தலில் வி பி சிங் அணி வெற்றி பெற்றதும் நான் கருணாநிதியை ராஜினாமா செய்யச் சொன்னேனா என்கிறார்—

ஜானகி அம்மாள் அரசியலை விட்டு ஒதுங்குகிறேன் என்றதும "நீங்கள் தலைவராக நீடிக்க வேண்டும்" என்று ஜெயலலிதா கேட்டுக் கொண்டார்— ஆனால் இப்போது பத்திரிகையாளர்கள் ஜானகி அம்மாளை மீண்டும் அரசியலுக்கு இழுப்பீர்களா?" என்று ஜெயலலிதாவிடம் கேட்டதற்கு, "ஒதுங்கி விட்டவரைப் பற்றி ஏன் கேட்கிறீர்கள்?" என்று கேட்கிறார்— ஆக முரண்பாடுகளின் மொத்த உருவம் தான் ஜெயலலிதா—

விலகல் கடிதம் தருவதும், திரும்பப் பெறுவதும் ஜெயலலிதாவின் உடன் பிறந்த நோய்—

எம் ஜி ஆர் மறைவுக்கு பிறகு இப்பொழுது இரண்டு முறை விலகல் கடிதம் கொடுத்து திரும்பப் பெற்று உள்ளார்—

அப்படிப்பட்டவரை வைத்து எப்படி அரசியல் நடத்துவது? புரட்சித் தலைவர் எம் ஜி ஆரின் தொண்டர்களுக்கு இருக்கும் கவலை இது—

சட்டமன்றத்தில் ஜெயலலிதா தாக்கப்பட்ட பொழுது தமிழ் நாடு குமுறி எழுந்ததா? பாரதப் பந்தை முறியடிப்போம் என்று ஜெயலலிதா முழக்கம் இட்ட பொழுது தமிழ்நாடு செவி சாய்த்ததா? அவரது பதவி விலகல் நாடகங்களினால் தமிழ் நாட்டில் ஒரு துரும்பாவது அசைந்ததா?

ஆகவே தமிழ்நாடு மக்கள் ஏமாளிகள் அல்லர் என்பதை இதன் மூலம் நன்கு அறியலாம்— நாடாளுமன்ற தேர்தல் வெற்றி எப்படி வந்தது? ராஜீவ் காந்திக்கு தனிப்பட்ட முறையிலும், எதிர்க்கட்சிகள் கூட்டு சேர்ந்ததாலும் கிடைத்த வெற்றி அது— ஜெயலலிதாவைப் போல கூட்டுச் சேர்க்க ஆள் இல்லாத கர்நாடகத்தில் உள்ள காங்கிரஸ் கட்சி எப்படி வெற்றி பெற்றது?

கூட்டுச் சேர்க்கும் சக்தி படைத்த ராமராவின் தெலுங்கு தேசக் கட்சி ஆந்திராவில் எப்படி தோற்றது? ஆகவே ஜெயலலிதா தனக்கு கிடைத்த வெற்றி என்பது தான் உட்கார்ந்ததால் தான் பனம்பழம் விழுந்தது என்று சொல்லும் காக்கைக்கு ஒப்பாகும—

இவ்வாறு அவர் கூறியுள்ளார்

(ம—10)

# தி. மு. க.வில் ராகவானந்தம் சேர்ந்தது எதற்காக?

## சோமசுந்தரம் கூறும் காரணம்

ராகவானந்தத்தை மிரட்டி கருணாநிதி தனது கட்சிக்கு இழுத்துவிட்டார் என்று எஸ் டி சோமசுந்தரம குற்றம் சாட்டினார்—

அ தி மு க மூத்த இணைச் பொதுச் செயலாளர் எஸ் டி சோமசுந்தரம நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்— அவர் கூறியதாவது;—



கருணாநிதி

ராகவானந்தம தி மு கவுக்கு போனதற்கு என்ன காரணம என்று கலைஞருக்கும எனக்கும வேண்டிய பொது நண்பர் ஒருவர் என்னிடம் கூறினார்— ஏதாவது பிளாக்மெயில் செய்து இங்குள்ளவர்களை இழுக்க முயற்சி நடப்பதாக அவர் கூறினார்—

ராகவானந்தம் வீட்டு வசதி மந்திரியாக இருந்தபோது 10 சதவீதம அரசு ஒதுக்கீடு முறையில் தனக்கு வேண்டியவர்களுக்கு பினாமியாக வீடுகள் ஒதுக்கினார் இப்போது அவற்றை ஒவ்வொன்றாக விற்று வருகிறார்— இது சம்பந்தப்பட்ட கோப்புகள் கலைஞர் கைக்குப் போனதால் அதைச் சொல்லி மிரட்டி ராகவானந்தத்தை கொண்டுபோய்விட்டார்கள்—

அத்தோடு மீண்டும எம் எல் சி பதவி தருவதாகவும மகனுக்கு அரசு உதவி கிடைக்கும என்றும கூறப்பட்டு இருப்பதாகவும அந்த நண்பர் சொன்னார்—

திராவிட இயக்கத்துக்கும அ தி மு க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவுக்கும எந்தவித சம்பந்தமும் இல்லை என்று ராகவானந்தம கூறி இருக்கிறார்—

எம் ஜி ஆர் காலத்திலேயே புரட்சித் தலைவி ஜெயலலிதா அ தி மு கவில் சேர்ந்துவிட்டார் அதன் பிறகு நாடாளுமன்ற உறுப்பினர் ஆனார்— அ தி மு க கொள்கை பரப்புச் செயலாளராக ஜெயலலிதாவை புரட்சித் தலைவர் எம் ஜி ஆர் நியமித்தார் திராவிட இயக்கக் கொள்கைகளை பரப்புவதற்கு நியமிக்கப்பட்ட ஜெயலலிதாவுக்கும திராவிட இயக்கத்துக்கும சம்பந்தம இல்லை என்று ராகவானந்தம கூறுவது சரியானதல்ல—

புரட்சித் தலைவர் எம் ஜி ஆரை ஜெயலலிதா மதிப்பதில்லை என்று ராகவானந்தம கூறி இருக்கிறார்— அது முற்றிலும தவறானதாகும்— புரட்சித் தலைவர் எம ஜி ஆரை மதிக்காதவர்கள் யாரும் அ தி மு கவில் இல்லை— எல்லோருமே புரட்சித் தலைவரை மதிக்கிறார்கள்—

மேலும அ தி மு கவில் இருந்த தி மு கவிற்குச் செல்லவர் [illegible]

லலிதா மூத்த தலைவர்களை மதிப்பதில்லை என்று ராகவானந்தம கூறி இருக்கிறார்— ஆனால் அது உண்மை அல்ல—

கேள்வி;— அ தி மு கவை உடைப்பதற்காக கருணாநிதி திட்டமிட்டு வருகிறார் என்று நீங்கள் நினைக்கிறீர்களா?

பதில்;— கருணாநிதி தான் தொடர்ந்து பதவியில் இருக்க வேண்டும என்பதற்காக எந்தவிதமான முறையையும கையாளுவ



ராகவானந்தம

தற்கு தயங்க மாட்டார்—

கேள்வி;— அ தி மு க பொதுச் செயலாளர் ஜெயலலிதா வீட்டில் எம் ஜி ஆர் படம இல்லை என்றும எனவே ஜெயலலிதா எம ஜி ஆரின் வாரிசு இல்லை என்றும ராகவானந்தம் கூறி இருக்கிறாரே?

பதில்;— காலம கடந்துதான் அவருக்கு ஞானோதயம் வந்ததோ?

கேள்வி;— ஜெயலலிதா இன்னும ஒருமுறை ராஜினாமா செய்ய மாட்டார் என்று உறுதியாகக் கூற முடியுமா?

பதில்;— தொண்டர்கள் தீக்குளிக்க பலியாவதை ஜெயலலிதா விரும்ப மாட்டார்—

கேள்வி;— சட்டசபைக் கூட்டத்துக்கு ஜெயலலிதா செல்லாவிட்டால் [illegible]

# பிள்ளை பெற்றெடுத்தும்

லலிதா நினைத்தார்– ஏமாற்றமே மணம் செய்சு கொள்ளாமலேயே தான் சோபன் பாபுவுடன் குடித்தனம் செய்ததை பத்திரிகைகளில் படத்துடன் செய்தியாக இவர் வெளியிட்டதால், சோபன் பாபு ஒதுங்கிப் போய் விட்டார்–

பரப்பு செயலாளர் பதவியை ஒரு தடவை ராஜினாமா செய்தார்– எனவே ஜெயலலிதாவுக்கு ராஜினாமா என்பது புதிதல்ல–

மேடையில் தன்னைத் தவிர யாரும் ஏறிவிடக் கூடாதென்ற எண்ணம ஜெயலலிதாவுக்கு இருப்பதற்கு காரணம் தனக்கு நிக

# இடுப்பு வலி தீரவில்லை

தேர்தலில் அ தி மு க வெற்றி பெற்று என்ன பயன்? பிள்ளை பெற்றெடுத்தும இடுப்பு வலி தீரவில்லையே" என்று நடிகர் எஸ் எஸ் சந்திரன் கிண்டலாகக் கூறினார்.

கே– தேசிய முன்னணியில் இப்போதே குழப்ப நிலை நிலவி வருகிறதே, 5 வருஷம அவர்கள் ஆட்சி செய்து விடுவார்களா?

ப– அது ஆண்டவனுக்கே வெளிச்சம.

கே– அப்படியானால் தேசிய முன்னணி ஆட்சி கவிழ்ந்து விடும என்கிறீர்களா?

ப– கவிழக் கூடாது. இததான் என் ஆசை.

கே– தேசிய முன்னணி ஆட்சியினால் நாடு நல்ல முன்னேற்றம அடையுமா?

ப– நிச்சயமாக மத்தியில் தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்தவுடனேயே கலைஞர் வேண்டுகோள்படி தமிழகத்துக்கு பிரதமர் வி பி சிங 50 ஆயிரம தொன் அரிசி கூடுதலாக வழங்கி இருக்கிறார்.

கே– தமிழர் ஒருவருக்கு (மாறன்) "காபினட்" அந்தஸ்து மந்திரிப் பதவி கொடுத்தாலும ஒரு இடத்தில்கூட தி மு க வெற்றி பெறாதது......

ப– தி மு க ஒரு இடத்திலும ஜெயிக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் வடநாட்டில் காங்கிரஸ் ஆளும சில மாநிலங்களில் கூட ஆளுங்கட்சியால் ஒரு இடத்தில்கூட வெற்றி பெறவில்லையே. தமிழகத்தில் தி மு க வெற்றி பெறாவிட்டாலும மத்தியில் தேசிய முன்னணி ஆட்சிக்கு வந்திருக்கிறது. இந்த வெற்றியில் தி மு கவுக்கு முக்கிய பங்கு உண்டு.

கே– அ தி மு க போட்டியிட்ட 11 இடங்களிலும அபார வெற்றி பெற்ற விட்டதே?

ப– அதனால்தான் அந்த அம்மாவை (ஜெயலலிதா) கையில் பிடிக்க முடியவில்லை. 11 இடங்களில் ஜெயித்து என்ன சார் பண்ணியம? பிள்ளை பெற்றும இடுப்புவலி தீராத கதைதான். மத்தியில் அவர்களது தோழமைக் கட்சி ஆட்சிக்கு வர முடியவில்லையே?

இவ்வாறு எஸ் எஸ் சந்திரன் கூறினார்.

(ம–10)

பலர் காத்துக் கொண்டு இருக்கிறார்கள் என்று ராகவானந்தம கூறி இருக்கிறார்– அவர் கூறியிருப்பதன்படி தி மு கவிற்கு செல்ல இங்கே யாரும் காத்துக் கொண்டிருக்கவில்லை–

கேள்வி;– ராகவானந்தம அ தி மு கவில் இருந்த திடீரென விலகியதற்கு என்ன காரணம்?

பதில்;– புரட்சித் தலைவி ஜெயலலிதாவால் எம எல் ஏ பதவி பறிக்கப்படும் சூழ்நிலை உள்ளதே? எனவே மீண்டும சட்டசபைக்கு செல்வாரா?

பதில்;– எம் எல ஏ என்ற முறையில் சட்டசபைக்கு அவர் போகாமல் இருப்பாரா?

இவ்வாறு எஸ் டி சோமசுந்தரம் கூறினார்–

(ம–10)

# தி. மு. க. ஆட்சி கவிழும் என்கிறார் பாக்கியராஜ்

"தி மு க ஆட்சி கவிழப் போவது உறுதி" என்று பாக்யராஜ் கூறினார்.

நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலின் போது பாக்யராஜின் எம ஜி ஆர் மக்கள் முன்னேற்ற கழகம தி மு கவுக்கு ஆதரவு தெரிவித்தது.

இப்போது பாக்யராஜ் தனது போக்கை கிடீர் என்று மாற்றிக் கொண்டார். அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது–

"நரகத்தில் இருப்பவனுக்கு துணைக்கு ஆள் தேவையென்றால் யாரும போக மாட்டான்" என்ற ஒரு பழமொழி உண்டு. ஆனால் நாங்கள் துணை போனோம. ஆம! சென்ற நாடாளுமன்றத் தேர்தலில் தி மு கவுக்கு ஆதரவாக!

காரணம? தன்னை வெட்டி வீழ்த்தும கோடாலிக்கு கூட நறுமணத்தைத் தரும சந்தன மரத்தைப் போன்ற என் தலைவனை, இறந்த பின்னாலும தி மு கவினர் ஏசிக் கொண்டிருப்பதைத் தடுக்க வேண்டும என்ற ஆதங்கத்தில்தான்!

நரகத்தில் இருப்பவனுக்கு துணை போன அவஸ்தையை நாங்கள் நன்றாக அனுபவித்து விட்டோம.

இவ்வாறு பாக்யராஜ் கூறி உள்ளார்.

(ம–10)

## மடிப்பிச்சை ஏந்தலாமா?

மடிப்பிச்சை ஏந்தி மாறனுக்கு மந்திரிப் பதவி வாங்கியதாக சேடப்பட்டி முத்தையா கூறினா

தேசிய முன்னணியில் மந்திரி சபையில் தி மு கவுக்கு இடம கொடுத்து இருப்பது தமிழக மக்கள் அளித்த தீர்ப்பை அவமதிப்பதாகும" என்று அ தி மு க எம பி சேடப்பட்டி முத்தையா கூறினார்.

தன் தலைவன் - தலைவியின் காலடியில் பணி செய்வதைத் தான் மானமுள்ள செயலாகக் கருதுகிறோம. மாறாக கருணாநிதி கட்சியினர் இன்றைக்கு சுய நலத்திற்காக மாற்றானிடம மடிப்பிச்சை ஏந்தி மண்டியிட்டுள்ளார்களே? அதுதான் மானம இழந்த, கன்மானமற்ற செயல்.

— இவ்வாறு சேடப்பட்டி முத்தையா கூறி இருக்கிறார்.

(ம–10)

# கட்சியை ராஜேந்தர் கைவிடமாட்டாராம்!

பாக்யராஜ் மாதிரி இடையில் கட்சியைக் கலைத்துவிட்டு நான் ஓட மாட்டேன் என்று டி ராஜேந்தர் கூறினார்.

தாயக மறுமலர்ச்சிக் கழகத் தலைவர் டி ராஜேந்தர் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.

கேள்வி– எம ஜி ஆர் மக்கள் முன்னேற்றக் கழகம என்ற பெயரில் புதுக் கட்சி தொடங்கிய நடிகர் பாக்யராஜே கட்சியைத் தொடர்ந்து நடத்த முடியாமல் ஜெனறிப் போய் கட்சியைக் கலைத்த விட்டதாக அறிவித்து விட்டார். நீங்களும் அவரைப் போல ஒரு நடிகர்தானே, உங்களால் மட்டும தொடர்ந்து கட்சியை நடத்த முடியும என்று கருதுகிறீர்களா?

பதில்– என்னைப் பற்றி தெரிந்தவர்களுக்கு என்னைப் பற்றி தெரியும. எப்போதுமே நான் முன்வைத்த காலை பின் வைக்க மாட்டேன். கட்சியைக் கலைத்து விட்டு பாதியில் ஓடிவிட மாட்டேன். எனது மூச்சு உள்ளவரை எனது கட்சியை நான் தொடர்ந்து நடத்துவேன். இதில் எந்தவித மாற்றமும இல்லை.

(ம–10)

## வேலை தேடும் வி. பி. சிங் மகன்

இந்தியப் பிரதமர் வி பி சிங்கின் மகன் அஜய் சிங் நியூயோர்க்கில் வங்கியில் பணியாற்றினார்– பின்னர் இந்தப் பதவியை ராஜினாமா செய்து விட்டு இந்தியாவுக்கு திரும்பினார்–

புனித கிட்ஸ் தீவில் பர்ஸ்ட் டிரஸ்ட் வங்கியில் கோடிக்கணக்கில் கூப்பு பணத்தை ரகசியமாக வைத்து இருந்ததாக அஜய் சிங்கிற்கு எதிராக கூறப்பட்ட புகார் பற்றி ராஜீவ் காந்தி அரசு விசாரணை நடத்தியது– இந்த விசாரணையை, நேரில் சந்திக்க அஜய் சிங் இந்தியாவுக்கு வந்தார்–

வி பி சிங், தன்னுடைய குடும்பம அரசியலில் ஆதாயம் அடைந்ததாக புகார் எழக்கூடாது என்பதில் தீவிரமாக இருந்தார்–

தேர்தலில் வெற்றி பெற்று பிரதமர் பதவியை ஏற்றதுமே மகன் அஜய்சிங்கை அமெரிக்காவுக்கு திரும்ப அனுப்பி விட்டார்–

அமெரிக்கா திரும்பிய அஜய் சிங் அவருடைய பதவியை ராஜினாமா செய்த விட்டு இந்தியா சென்றதால் இப்போது புதிதாக வேலை தேட வேண்டிய நிலையில் உள்ளார்–

(ம–10)

# இந்தியத் தலைவர்களை கலக்கும் ஜோதிடர்கள்

வி பி சிங் தன்னுடைய நற்பெயரை பாதுகாப்பதில் கவனம் செலுத்தினாலும், அவருடைய ஆட்சிக்கு 1991 இல் கடும் பாதிப்பு ஏற்படும் என்று வி பிசிங்கிற்கு நெருக்கமான அரசு அதிகாரியான வினோத் குமார் பாண்டே ஜோதிடம் கூறியுள்ளார்–

வி பி சிங்கிற்கு ராசியான எண்களை பாண்டே தேர்ந்து எடுத்து கூறுவதாகவும், இதன் அடிப்படையிலேயே வி பி சிங் மந்திரி சபையில் உள்ள மந்திரிகளின் எண்ணிக்கையையும், நாடாளுமன்றத்தில் நம்பிக்கை ஓட்டு பெறுவதற்கான திகதியையும் தேர்ந்து எடுத்ததாக கூறப்படுகிறது–

வி பி சிங்கின் இப்போதைய அரசு 1991 இல் கவிழும் வாய்ப்பு உள்ளதாகவும் ஜோதிட அடிப்படையில் பாண்டே வி பி சிங்கிற்கு ஆலோசனை கூறியுள்ளார்–

வி பி சிங் இதை அடிப்படையாக வைத்து தன்னுடைய அரசுக்கு மக்களிடையே செல்வாக்கை வலுப்படுத்த தேவையான திட்டங்களை வகுத்து உள்ளதாக கூறப்படுகிறது–

பாண்டேயை போலவே டி என் சேஷன், பெரி சாஸ்திரி ஆகிய அதிகாரிகளும் ஜோதிடத்தில் நிபுணர்கள் என்று கூறப்படுகிறது– சேஷன், ராஜீவ்காந்தி அரசின் மந்திரி சபை செயலாளராக பணியாற்றிய போது ராஜீவ் காந்தியிடம் அவரை இலங்கையில் கொல்ல முயற்சி நடக்கும் என்று ஜோதிடம் கூறினார்–

இதன்படியே, ராஜீவ் காந்தி 1987 இல் இலங்கையுடன் ஒப்பந்தம் ஏற்பட்ட போது இலங்கையின் ராணுவ வீரர்களின் அணி வகுப்பை பார்வையிட்ட சமயத்தில் ராணுவ வீரர் அவரை துப்பாக்கியால் தலையில் அடித்து கொலை முயற்சி செய்தார்–

ராஜீவ் காந்தி இதனால் சேஷனிடம் தொடர்ந்து ஜோதிடம் கேட்டார்– ராஜீவ் காந்தி டிசம்பரில் பிரதமர் பதவியில் இருக்க மாட்டார் என்றும் சேஷன் ஜோதிடம் கூறியிருந்தார்–

தேர்தல் கமிஷன் தலைமை அதிகாரி பெரி சாஸ்திரியும் ஜோதிடத்தில் நிபுணர்– இவர் ராஜீவ் காந்தி நவம்பரில் தேர்தல் நடத்துவார் என்றும், இந்திரா காங்கிரஸ் டில்லியில் ஆட்சியை இழக்கும் என்றும் முன்பாகவே ஜோதிடம கூறினார்–

# பாக்கியராஜை அழைக்கவில்லை

கட்சியைக் கலைத்து விட்டு அண்ணா தி மு கவுக்கு வாருங்கள் என்று பாக்யராஜுக்கு யாரும அழைப்பு விடுக்கவில்லை என்று எஸ் டி சோமசுந்தரம கூறினார். அண்ணா தி மு க மூத்த இணைப் பொதுச் செயலாளர் எஸ் டி சோமசுந்தரம சென்னையில் நிருபர்களுக்கு பேட்டி அளித்தார்.


கேள்வி– பாக்யராஜை அண்ணா தி மு கவில் சேரச் சொல்லி நிர்ப்பந்தப்படுத்தியதாகக் கூறப்படுகிறதே?

பதில்– அண்ணா தி மு க சார்பில் எந்தவித நிர்ப்பந்தமும பாக்யராஜுக்கு செய்யவில்லை. உங்கள் கட்சியைக் கலைத்து விட்டு அண்ணா தி மு கவில் சேருங்கள் என்று யாரும சொல்லவில்லை. அப்படி நிர்ப்பந்தம் செய்து கட்சி நடத்த வேண்டிய நிலையில் நாங்கள் இல்லை. அவரை அழைக்க வேண்டிய நிலையில் அவரும இல்லை.

கேள்வி– அண்ணா தி மு க பொதுச் செயலாளர் ஜெயலலிதாவின் உதவியாளர் நடராஜன் பாக்யராஜை சந்தித்ததாகக் கூறப்படுகிறதே?

பதில்– அண்ணா தி மு கவின் சார்பில் அவரைச் சந்திக்க யாரும போகவில்லை.

(ம–10)



ஜெர்மனியின் "வொக்ஸ்வாகன்" கார்களை இயந்திர மனிதனே உற்பத்தி செய்கிறான் இன்று. தீப்பொறிகளைக் கக்கி புதிய கார் ஒன்றின் பாகங்களை றோபோட் பொருத்தும் காட்சி இது. (ம)

# எருமையின் சம்மதத்துடனேயே அதனை கொலை செய்யும் சடங்கு

சென்னை தாம்பரம அருகே மெப்பேடு என்ற கிராமத்தில், நரிக்குறவர் காலனி உள்ளது.

இந்தக் காலனியில் உள்ள நரிக்குறவர் குடும்பங்கள் ஒன்றாகச் சேர்ந்து திருவிழா நடத்தினர்.

குடும்பத்தின் குலதெய்வமான பெருமாள், பருவட்டம்மன் ஆகிய தெய்வங்களுக்கு தான் இந்தத் திருவிழா.

இரண்டு நாள் நடந்த இத் திருவிழாவில், முதல் நாள் பெருமாளுக்கு தீப ஆராதனையும, படையலும் வைக்கிறார்கள்.

இரண்டாம நாள் காலை ஆறு மணிக்கு திருவிழா உச்ச கட்டம்.

எலும்பும் தோலுமாக இருந்த நான்கு எருமை மாடுகளைக் கட்டி இழுத்து வந்தனர்.

எருமைகளை குளிப்பாட்டி பொட்டு வைத்து அலங்காரம் செய்தனர். சாமியின் முன்பு அழைத்து வந்தவுடன் பலி கொடுக்கும படலம ஆரம்பித்தது.

எருமைகளை வெட்டிக் கொலை செய்யும் முன்பு அந்த எருமைகள் சம்மதம தெரிவிக்க வேண்டுமாம்!

அதற்காக என்ன செய்தார்கள் தெரியுமா? வெல்லம் கரைக்கப்பட்ட தண்ணீரை எருமையின் முகத்தில் ஊற்றினர், ஆனால் அந்த எருமையோ தலையை ஆட்ட மறுத்தது.

உடனே, ஒரு வாலிபர் ஆவேசம் வந்ததைப் போல துள்ளிக் குதித்து வெல்லம கரைத்த தண்ணீரை எருமையின் காதில் ஊற்றினார். காதில் தண்ணீர் அடித்த வேகம தாளாமல் தலையை ஆட்டியது எருமை.

உடனே, அந்த கிராமமே அதிரும் வகையில் நரிக்குறவர்கள் காட்டுக் கூத்தல் கூத்தினர்.

பின்னர் எருமையை இழுத்துக் கொண்டு பலி கொடுக்கும இடத்துக்குச் சென்று படுக்க வைத்தனர்.

எருமையின் வயிற்றிலும், காலிலும 15க்கும மேற்பட்ட குறவர்கள் உட்கார்ந்து கொண்டனர்.

நன்கு பதம செய்யப்பட்ட கத்தியால் எருமையின் கழுத்தில் கீறல் போட்டனர். மெல்லிய சிகப்பு கோடாய் ரத்தம பீறிட்டுக் கிளம்பியது.

உடனே தங்களுடைய கழுத்தில் அணிந்து இருந்த புலிநகத்தை ரத்தத்தில் தோய்த்து புனிதப்படுத்திக் கொண்டனர். அடுத்து எழுந்தது, எருமையின் மரண ஓலம்!

எருமையின் உயிர் கொஞ்சம கொஞ்சமாகப் பிரிந்தது, எருமையின் ஈரலை தீயில் போட்டு வாட்டி ரொட்டித் துண்டில் வைத்தனர்.

இரண்டாவது எருமையை பலி கொடுக்கும போது சாமி சம்மதம கேட்க கையாண்ட முறை சற்று பயங்கரமாக இருந்தது.

எருமையின் முகத்தில் தண்ணீர் தெளித்தும் சம்மதம் கிடைக்காததால், ரத்தத்தை தோப்பையில் பிடித்து, குடித்து, "ஜெமினி" என்ற வாலிபர் தன் நேர்த்திக் கடனை நிறைவேற்றினார்.

எருமையின் குடலை உருவி மாலையாகவும் போட்டுக் கொண்டார்.

(ம)

4 ஆவது வாரம்!

ஜெஸிமா — ரியோ
(கிராண்ட்பாஸ்) (கொம்பனித் தெரு)
2-00, 6-00, 9-00 (குளிரூட்டப்பட்டது)
சனி/ஞாயிறு 10-30 10-15, 2-15, 6-15

ராஜா (யாழ்நகர்)
10-30, 2-30, 6-00

ரஜனிகாந்த் இரண்டு வேடங்களில் வந்து தூள் கிளப்புகிறார் (நடிப்பிலும் சண்டையிலும்)

நதியா — ராதா ஜனகராஜ் நடித்த



# உப்புச் சுரங்கத்தினுள் மருத்துவமனை

## நுரையீரல் ஆஸ்த்மாவுக்கு இங்கு சிகிச்சை நடக்கிறது

நுரையீரல் ஆஸ்துமாவுக்கு இயற்கையான மருத்தவ சிகிச்சை அளிப்பது குறித்த சென்ற நூற்றாண்டிலேயே மக்கள் அறிந்திருந்தனர்— செவே யெற்கை மருத்துவச் சிகிச்சை வெலாயிற்ற உப்புச் சுரங்கங்களில் ஆஸ்துமாவுக்குச் சிகிச்சை அளிக்கும் மிகவும பயனுள்ள சிகிச்சை முறையை டிரான்ஸ் கார்பேத்தியன் மருத்தவ நிபுணர்கள் உருவாக்கிப் பயன்படுத்தி வருகின்றனர்—

உக்ரைனைச் சேர்ந்த டிரான்ஸ் கார்ப்பேத்தியன் பிராந்தியத்திலுள்ள சொலேத்வின்ஸ்கியே உப்புச் சுரங்கத்தினுள் தினமும் பலர் செல்வதைக் காணலாம— இவர்களும் சுரங்கத் தொழிலாளர்களைப் போலவே [illegible]

எனினும இவர்கள் சுரங்கத் தொழிலாளர்கள் அல்ல, 300 மீட்டர் ஆழத்திற்கு சுரங்கத்திற்குள் செல்லும ஒரு கூண்டு நின்றதும் அதனின்று வெளியே வரும இவர்கள் சுரங்கத் தொழிலாளிகள் அணியும உடைகளைக் [illegible]

மருத்துவமனையின் நோயாளிகள் ஆவர்— இது ஒதெஸ்ஸா ஆரோக்கிய நிலையச் சிகிச்சை ஆராய்ச்சிக் கழகத்தின் உஸ்கோராத் கிளையை சேர்ந்த மருத்தவமனையாகும— இந்த மருத்துவமனையின் ஒரு பிரிவு [illegible]

இந்த சுரங்க மருத்தவமனை விசேடமாக வடிவமைக்கப்பட்ட [illegible] மொத்தம் 600 மீட்டர் நீளமுடைய பல நீண்ட தாழ்வாரங்கள் உள்ளன— அவை 12 மீட்டர் [illegible] 6 மீட்டர் [illegible]

உக்ரெய்னைச் சேர்ந்த பிரா ன்ஸ் கார்ப்பேத்தியன் "பிராந்தி யத்திலுள்ள சொலேத்வின்ஸ் கியே உப்புச் சுரங்கத்திலுள் தின மும் பலர் செல்வதைக் காண லாம்— இவர்களும் சுரங்கத் தொழிலாளர்களைப் போலவே தலைக் கவசங்கள் அணிந்து பாதுகாப்பு விதிமுறைகளுக்கு ஏற்ப விளக்குகளுடனும் பிற வசதி களுடனும் உள்ளே செல்கின்றனர்—

எனினும் இவர்கள் சுரங்கத் தொழிலாளர்கள் அல்ல, 300 மீட்டர் ஆழத்திற்கு சுரங்கத்திற் குள் செல்லும் ஒரு கூண்டு நிற்ற தும் அதனின்று வெளியே வரும் இவர்கள் சுரங்கத் தொழிலா ளிகள் அணியும் உடைகளைக் களைந்து பைஜாமாக்களையும் சாதாரண பாத அணிகளையும் அணிந்து கொள்கின்றனர்—

இவர்கள் குடியரசின் அலர்ஜி மருத்துவமனையின் நோயாளிகள் ஆவர்— இது ஒதெஸ்ஸா ஆரோ க்கிய நிலையச் சிகிச்சை ஆராய்ச் சிக் கழகத்தின் உஸ்கோராத் கிளையை சேர்ந்த மருத்துவமனை யாகும்— இந்த மருத்துவமனை யின் ஒரு பிரிவு உப்புச் சுரங்கத் திற்குள் செயல்படுகிறது— இங்கே சுமார் 250 நுரையீரல் ஆஸ்துமா நோயாளிகள் ஒரே நேரத்தில் சிகிச்சை பெறுகின்றனர்—

விசேடமாக வடிவமைக்கப்பட்ட கட்டமைப்பை கொண்டதா கும்— மொத்தம் 600 மீட்டர் நீளமுடைய பல நீண்ட தாழ்வா ரங்கள் உள்ளன— அவை 12 மீட்டர் அகலமும் 6 மீட்டர் உயரமும் கொண்டவை— மருத் துவர்களின் அலுவலகங்களாக வும் ஆய்வு கூடங்களாகவும் சிகிச்சை அறைகளாகவும் பொழுதுபோக்குக் கூடங்களாக வும் மாநாட்டுக் கூடங்களாக வும் பயன்படுத்தப்படும் அள விற்கு இந்த தாழ்வாரங்கள் பெரியவை—

30 நாட்களுக்கு இங்கே சிகிச்சை அளிக்கப்படுகிறது— மரு த்துவரின் ஆலோசனைப்படி ஒரு நோயாளி 24–26 தடவை இந் தச் சுரங்க மருத்துவமனைக்கு வந்து போகிறார்— இதில் அவர் 110–200 மணி நேரம் செலவிடு கிறார்—

உக்ரைனிய மருத்துவ நிபுணர் கள் இயற்கை மருத்துவ சிகிச்சை யெயில் பெற்றுள்ள அனுபவங்கள் பிற குடியரசுகளிலும் பயன்படுத் தப்படுகின்றன— ஜார்ஜியாவிலும் அஜர்பைஜானிலும் கிர்கிஸியாவி லும் ரஷ்ய சமஷ்டியின் பகுதி) பெர்ம பிராந்தியத்திலும் இப்போது உப்புச்சுரங்க மருத் துவமனைகள் செயல்படுகின்றன— (ம)

இரண்டாவது எருமையை பலி கொடுக்கும் போது சாமி சும்மா தம் கேட்க தையாண்ட முறை சற்று பயங்கரமாக இருந்தது.

எருமையின் முகத்தில் தண் ணீரை ஊற்றினர். ஆனால் எருமை அசையவில்லை, உடனே காதில் ஊற்றினர். அப்போதும் ஒரு பயனும் கிடைக்கவில்லை.

பின்னர் அம்மனுக்கு தீப ஆரா தனை காட்டினர். அந்த சூட த்தை எருமையின் முகத்தின்முன்பு காட்டி ஆராதனை செய்த வர்கள்,

எரியும் சூடத்தை திடீரென எருமையின் தாடையில் வைத்து அழுத்தியவுடன் எருமை துள்ளிக் குதித்து, "அம்மா" "அம்மா" என வீறிட்டு கத்தியது,

பின்னர் "சதக்" "சதக்" தான். இப்படியே மற்ற இரு எருமைகளும் கொல்லப்பட்டன. இவை அனைத்தும் முடிய காலை பத்து மணி ஆனது.

பின்னர், எருமைக்கறியை மலை போல குவித்து வைத்து எல்லா வீட்டிற்கும் சமமாக பங்கு போட்டுக் கொடுத்து அனுப்பினர்.

எருமையை வெட்டி படையல் செய்யும் முன்பு, வழியும் ரத்

# குத்பா பிரசங்கத்...

(13ஆம பக்கத் தொடர்ச்சி)
களுக்கான நியமனம வழங்கப் பட வேண்டுமென எழுப்பப் படும கோஷத்தில் சமுதாயத் தேவை அரசியல் வாசத்துடன் தொனிக்கிறது.

இந்நிலையில் என்ன செய்ய லாம?

எந்தப் பிரச்சினையையும சமுதாய கண்ணோட்டத்துடன் அதனால் சமுதாயத்திற்கு கிட்டப் போகும பெறு பேறுகளை தொட்டு பேசுவதில் தவறிருக்க முடியாது.

குறித்த ஒரு கட்சியின் கொள் கைகளை ஒட்டியோ, அல்லது வெட்டியோ பேசாது, சமுதா யம எதிர்நோக்கும குறித்த ஒரு பிரச்சினையினால் ஏற்படப் போகும நன்மை தீமைகளை விளக்கலாம. அது பற்றிய தெளி வான ஒரு கருத்துருவம உரு வாக, ஜமாத்தாரிடையே நிலை மைகளை விளக்கலாம.

நீர் கலந்த பாலில், பாலை மட்டும உறிஞ்சிக் குடிக்கும அன் னம போல், அரசியல்மயப் படுத்தப்பட்ட அனைத்துப் பிரச் சினைகளையும சமுதாய கோணத்தில் பேசுவதும — விமர் சிப்பதும சாதாரண சங்கதியல்ல.

இதற்கு குத்பா உரை நிகழ்த் தும கத்தீப்மார்களுக்கு ஆழ்ந்த சமய ஞானமும, சமகால அரசி யல் போக்கு — அரசியல் பின் னணி — அரசியல் நடவடிக்கை கள் பற்றிய தெளிவான பார்வை யும வேண்டும. அதேவேளை — நிதானந் தவறாத நிறைகுடப் பக் குவமும, சகல மட்டத்திலும சமூக நலனை சிதற விடாமல் பேணும வழி நடத்தல் உணர் வும குத்பா உரை நிகழ்த்து வோருக்கு அவசியம.

"ஒவ்வொரு ஆலிமும ஒரு நீதிபதியாவர்" என்று ஏந்தல் நபி (ஸல்) அவர்கள் கூறியுள் வார்கள். இதற்கு ஏற்ப, ஜமாஅ த்தின் நிலைமையை "தராசு" பிடித்து, நீதி — நேர்மையுடன் பேசும குத்பா உரைகளே இப் போது தேவை. சம காலத்தில் சமூகத்தின் அவசரத் தேவை யும இதுவே.

தாம சார்ந்துள்ள தர்க்கா — ஜமாத் — இயக்கம — கட்சி என்று, ஜமாத்தினரை வெறும அலங்கார வார்த்தைகளால் திசை திருப்பாமல், சமுதாய விடி யலின் வெளிச்சம நோக்கி வழி நடத்திச் செல்லும அபூபக்கர்க ளும — உமர்களும — உத்மான் களும — அலிகளுமே இன்று "மிமபர்" மீதேற வேண்டும. இதையே கழகம எதிர்பார்க்கி றது.

கண்மணி நாயகம (ஸல்) கட் டிக் காத்த மிமபரின் புனிதம — குத்பாவின் பெருமை — சமுதா யத்தின் நலன் போன்றவற்றை தொட்டுத் தொடரும "தீன்தாரி கள்" குத்பா உரை நிகழ்த்த வேண்டும. இதுவே முஸாபிர் விருமபுவது. சமூகம சிந்திக்கட் டும.

# அப்பாவின்...!

(12ஆம பக்கத் தொடர்ச்சி)
அல்சேஷன்களும் இறக்குமதி செய்யப்பட்ட சலாமி மற்றும் கலோரி குறைவான உணவு களையே உண்டு வந்துள்ளன.

ஏராளமான வெளிநாட்டு ஆடமபரப் பொருட்கள் இம மாளிகையில் குவித்து வைக்கப்பட் டுள்ளன.

நிக்கு சீஸெஸ்கு நகரின் மது பான மற்றும் கேளிக்கை விடுதிகளுக்குச் சென்றால் அங் கிருக்கும வாடிக்கையாளர்கள் அனைவரும எழுந்து வெளியே சென்று விட வேண்டுமாம்,

காரில் பவனியாக செல்லும போது கவர்ச்சி நங்கையொருத் தியைக் கண்டால் தன் உதவியா ளர்களிடம் சைகை செய்வா ராம். சில மணித்தியாலங்களில் அப் பெண்மணி நிக்குவின் மடியில் அமர்ந்திருப்பார்!

தான் நஞ்சூட்டப்பட்டு கொலை செய்யப்படலாம என்ற பயம் இவருக்கு இருந்து வந்துள் ளது. இதனால் எல்லா உணவுப் பொருட்களும தலைநகரில் இருந்து மட்டுமே கொண்டு வரப் பட்டன. தீவிரபரிசோதனை களுக்கு ஆளாக்கப்பட்ட பின் னரே இவரது உணவு மேசையை வந்தடையும்.

மேலும் ஒரு தடவை அணிந்த ஆடையை இவர் மறுதடவை அணிவதில்லை. உடைகளில் யாராவது நஞ்சைத் தெளித்திருக் கலாம என்ற பயம் தான் கார ணம்.

மக்கள் படை நிக்குவை மடக் கிப் பிடித்த போது அச்சம கார ணமாக வயிற்றுப்போக்கு ஏற் பட்டதாம்! (ம-032)

## பறவை கடத்தல்

ஆஸ்திரேலியா வனவிலங்கு களைக் காப்பதில் முன்னணி வகிக் கும நாடுகளில் ஒன்றாகக் கணிக் கப்படுகிறது, இந் நாட்டின் வன பரிபாலன சட்ட விதிகளை மீறும எவரும கடும தண்டனைகளை எதிர்நோக்க வேண்டியிருக்கும்.

சமீபத்தில் சிட்னியில் இருந்து சிங்கப்பூர் நோக்கிப் புறப்பட்ட விமானத்தில் ஏற முற்பட்ட ஜெர் மன் பிரஜை ஒருவரின் பெட்டி களைச் சோதனையிட்ட போது 26 பறவைகளை சுங்க அதிகாரி கள் கண்டு பிடித்தனர்,

இப் பறவைகள் அனைத்துமே அரசாங்கத்தால் பாதுகாக்கப் பட்டு வருபவை! இப்பறவை களை அவர் மட்டும் நாட்டுக்கு வெளியே கடத்திச் சென்றிருப் பாரானால் மூன்று லட்சம அமெரிக்க டாலர்களை புரட்டி யிருப்பார்! (ம-032)


3 ஆவது வாரம்!

கிங்ஸ்லி
(கொழும்பு)
2-30, 6-00, 9-30
சனி/ஞாயிறு 10-30

ஈரோஸ்
(பாமன்கடை)
2-30, 6-00, 9-30
சனி/ஞாயிறு 10-30

விஜிதா
(ஹட்டன்)
2-30, 6-00 சனி/ஞாயிறு 10-30

கமலஹாசன், சரண்யா, கார்த்திக் நடித்த

நாயகன்

(கலர்)





ராஜாதி ராஜா

(கலர்)

5 ஆவது வாரம்!

முருகன்
(ஜிந்துப்பிட்டி)
2-15, 6-00, 9-00, சனி/ஞாயிறு 10-15

கொன்கோட்
(தெகிவளை)
10-00, 2-00, 6-00, 9-00

வெலிங்டன்
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-00

ஒளிப்பதிவு வெகு ஜோர்— "பழமுதிர்ச்சோலை" "பொங்கலு" "கண்மணியே" ஆகிய மூன்று பாடல்களும் முக்கனிகள், ஜீவனுள்ள உச்சக்கட் டம் கருத்தாழமிக்க வசனம்—

கார்த்திக்— குஷ்பு நடித்த







வருஷம்—16

(கலர்)

MOTHER & CHILD



# தாயும் சேயும்



## குழந்தைகள் வளரும் சூழ்நிலைக்கு ஏற்பவே தேக ஆரோக்கியமும்

உயரமானவர்களை விட குட்டையானவர்களே தமது வாழ்க்கையின் நடுப்பகுதியில் மாரடைப்பினால் அவதியுறும் வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன என்று மருத்துவ ஆய்வொன்று கூறுகிறது.

இந்த ஆய்வுக்கென ஆயிரத்து 553 பேர் மீது பரிசோதனைகள் நிகழ்த்தப்பட்டன. சோதனையின் போது 5 அடி ஆறு அங்குலம் உயரம் கொண்ட 118 நபர்கள் மாரடைப்பு நோயால் தாக்கப்பட்டனர் என்பது தெரிய வந்தது. இதேசமயம் இதே எண்ணிக்கை கொண்ட உயரமானவர்களில் 62 பேருக்கு மாத்திரமே மாரடைப்பு ஏற்பட்டது. இவர்கள் ஐந்து அடி பத்து அங்குலத்திற்கும் அதிக உயரம் கொண்டவர்கள்.

குட்டையானவர்களது நாடி நரம்புகள் சரிவர இயங்குவதில்லை. இதன் காரணமாகவே இவர்கள் மாரடைப்புக்கு ஆளாகிறார்கள் என்று இவர்களை மட்டும் ஏன் மாரடைப்பு தாக்க வேண்டும் என்பதற்குக் காரணம் சொல்கிறார்கள் ஆய்வாளர்கள்.

சிறுவயதில் குழந்தைகள் வளரும் சுற்றுப்புற சூழல் அவர்கள் உண்ணும் உணவு மற்றும் அவர்களைப் பீடிக்கும் நோய்கள் ஆகியவைகளைப் பொறுத்ததாகவே அவர்களது பிற்கால தேக ஆரோக்கியம் அமைகிறதாம்!

(ம—032)

## மரு தோன்றி நல்ல மருந்து

மருதோன்றி என்றும், மருதாணி என்றும் சொல்லப்படும் செடியின் இலை, காய், பூ ஆகியவை பல்வேறு நோய்களுக்கு மருந்தாக உபயோகப்படுகின்றன.

அத்துடன் பேய், பிசாசு, பில்லி சூனியம் ஆகியவற்றில் நம்பிக்கை உள்ளவர்கள் மருதோன்றிக் காயைத் தங்கள் வீடுகளில் முன் வாசலில் கட்டி வைத்தால் எந்தத் தீமையும் நம்மை அண்டாது என்று வைத்திய நூல்களில் சொல்லப்பட்டுள்ளது.

(ம—241)

## சிறுவர்களை அடிமைப்படுத்தி வேலை வாங்குவது கொடியது

சிறுவர்களை அடிமைப்படுத்தி வேலை வாங்குவது இன்று சர்வசாதாரணமாகி விட்டது.

அடிமை விலங்கில் அகப்பட்டுத் தவிக்கும் இந்த சிறுவர்களைப் பாதுகாக்க நீதித் துறையில் சட்டங்கள் பல உள்ளன.

ஆனால் இது அநேக பாமர மக்களுக்கும் அடிமைப்பிடியில் சிக்கித் தவிப்பவர்களுக்கும் சிறுவர்களை அடிமையாகப் பயன்படுத்துவோர் பலருக்கும் தெரியாது.

இதனால் சிறுவர்களை அடிமையாக வைத்திருப்பவர்கள் சட்டத்தின்பிடியில் இருந்து தப்பித்துக் கொண்டு வருகின்றனர்.


பிள்ளைகளை வேலைக்கமர்த்தல் பிள்ளைகளுக்குப் பலாத்காரமாக ஆயுதப் பயிற்சி அளித்தல் — பிள்ளைகளை பணத்திற்காக விற்றல் ஆகியவை புதிதாக நடக்கும் நடவடிக்கைகளாகும்.

மூன்றாம் உலக நாடுகளிலும் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளிலும் உள்ள சிறுவர்களின் நிலையைப் பார்க்கும் போது இலங்கைச் சிறுவர்களின் நிலை மோசமானதல்ல.

இலங்கையில் தற்போது 5 லட்சத்திற்கும் மேற்பட்ட பிள்ளைகள் இருக்கிறார்கள். இவர்களில் அதிகமானோர் பெற்றோர்களின் பராமரிப்பில் இல்லை.

கொழும்பு போன்ற நகரப் புறங்களில் வாழும் அநேக குடும்பங்களுக்கு இருப்பிட வசதி இல்லை. இதனால் ஒரு வீட்டில் பல குடும்பங்கள் வாழ வேண்டிய அவல நிலை தோன்றியுள்ளது.

இதனால் சில பிள்ளைகள் வீதிகளிலும் கைவிடப்பட்ட குடிசைகளிலும் வாழ்கின்றன. வறுமையின் நிறம் சிவப்பு என்பதை உணர்ந்த இந்த பஞ்சு உள்ளங்கள் தங்களது அன்





## புற்று நோயை விரட்டும்

# பெண்ணின் அற்புத சக்தி

காஷ்மீரைச் சேர்ந்த 38 வயதான ஒரு பெண்மணி தனது அற்புத சக்தியால் புற்று நோய் கண்டவர்களையும் சிறுநீரக நோயால் அவதிப்படுபவர்களையும் இரத்த அழுத்த நோய்க்கு ஆளாகியிருப்பவர்களையும் குணமாக்கி மருத்துவ உலகையே ஆச்சரியத்துக்குள்ளாக்கியிருக்கிறார்.

இவரது இந்த அற்புத சக்தியை ஆராய்ந்துள்ள மருத்துவர்கள் இப்பெண்மணியிடம் குணம் தேடி வரும் நோயாளர்களில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமானோர் குணம் பெற்று வருவது உண்மைதான் என்று ஒப்புக் கொண்டுள்ளனர்.

நோயாளர்களைக் குணப்படுத்த லம்போ என்ற பெயர் கொண்ட இப் பெண்மணி கையாளும் முறை என்ன தெரியுமா?

காஷ்மீரில் உள்ள ஒரு சிறு வீட்டில்தான் இந்த அற்புதங்கள் நிகழ்த்தப்படுகின்றன. சிறு பீடத்தில் விளக்குகளைப் பற்ற வைத்து பிரார்த்தனையை ஆரம்பிக்கும் லம்போ மெதுவாக



லம்பா

சுய நினைவை இழந்து அருள் நிலைக்கு ஆளாகிறார்.

நோயாளியின் உடலைக் கீறும் லம்போ தனது வாயை வைத்த இரத்தத்தை உறிஞ்சுகிறார். வாய் நிறைய நோயாளியின் இரத்தத்தை உறிஞ்சித் துப்பி விடுகிறார். இப்படியே ஒவ்வொரு நோயாளிக்கும் இவர் சிகிச்சையளித்து அனுப்பி வைக்கிறார்.

இவர் இரத்தத்தை உறிஞ்சும் போது நோயையும் சேர்த்து உறிஞ்சி வெளியே துப்பி விடுகிறார் என்று நோய்கள் குணமாக்கப்படும் விதம் குறித்து தெரிவிக்கப்படுகிறது.

இப் பெண்மணி தன்னிடம் எவ்வித அற்புத சக்தியும் இல்லை என்று சொல்கிறார். "லா" என்ற பெண் தெய்வம் தன்னுடைய உடலில் புகுந்து நோயாளர்களின் பிணிகளைத் தீர்த்து வைத்து விடுகிறதே தவிர என்னால் ஆவது ஒன்றுமில்லை" என்கிறார் மருத்துவ நிபுணர்களை திகைப்புக்குள்ளாக்கியிருக்கும் லம்போ!

இவரை அண்டிவரும் புற்று நோய் மற்றும் இருதய நோய்களால் பீடிக்கப்பட்டிருப்பவர்களில் ஐம்பது சதவீதத்திற்கும் அதிகமானோர் குணமாகி விடுகின்றனராம்.

இரத்த அழுத்தம் - சிறுநீரகத்தில் கற்கள் தோன்றுவது சரும நோய்கள் ஆகியவற்றால் பீடிக்கப்பட்டு உள்ளவர்களை எடுத்துக் கொண்டால் எழுபது சதவீதமானோர் குணமாக்கப்பட்டு விடுகின்றனராம்!

(ம—032)

---

...பார்க்க கையேந்தி பிச்சை எடுக்கின்றன.

சில பெற்றோர்களின் முறைகேடான உறவுகளாலும் சில வீட்டு எஜமானர்களின் ஈவு இரக்கமற்ற கொடூரமான செயல்களாலும் சில பிள்ளைகள் அநாதரவாக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு வழி தவறி சென்றுள்ள சிறுவர்களைத் தவிர சுமார் 7000 பிள்ளைகள் அநாதையில்லங்களிலும் புனருத்தாரண நிலையங்களிலும் பராமரிக்கப்பட்டு வருகின்றனர்.

சிறுவர்களை பாதுகாப்பதற்கான சட்டதிட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சில அதிகாரிகள் தடையாக இருக்கின்றனர்.

ஒட்டக ஓட்டிகளாக சிறுவர்களை வெளிநாட்டுக்கு அனுப்புவது தடைசெய்யப்பட்டுள்ளது. எனினும் இவ்விடயத்தில் ஒரு சில அதிகாரிகள் கண்டும் காணாதது போல் இருக்கின்றனர்.

தோட்டத் தொழிலாளர்கள் நாட்டுக்கு அந்நிய செலாவணியை ஈட்டித்தருவதில் பெரும் பங்காற்றுகின்றனர். நாட்டின் முன்னேற்றத்திற்கு தம்மை அர்ப்பணித்துக் கொண்டிருக்கும் தோட்டத் தொழிலாளர்களில் சிலர் அன்றாட உணவுத் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ள முடியாமல் கஷ்டப்படுகின்றனர்.

இதனால் பிள்ளைகளுக்கு கல்வியறிவைப் போதிக்க முடியாத நிலையில் வேலைக்கு அனுப்புகின்றனர்.

சில பிள்ளைகள் பெற்றோர் இன்றி அல்லறுகின்றனர். இதே வேளை தோட்டத் தொழிலாளிகளின் பிள்ளைகள் பெற்றோர்கள் இருந்தும் அடிமைப்படுகின்றனர். இதற்குக் காரணம் அவர்களது பொருளாதார நிலையேயாகும்.

சின்னஞ் சிறுசுகள் இளவட்டங்களாக வளர்ந்தவுடன் வாழ்க்கையில் விரக்தியடைவதற்கும் அவர்களின் அடிமை வாழ்வும் ஒருகாரணமாகும்.

இலவச கல்வித் திட்டத்தின் கீழ் இந்நாட்டில் உள்ள சகல சிறுவர்களுக்கும் கல்வி பயில உரிமை உண்டு. இதற்கு இடமளிக்க வேண்டியது சகல அதிகாரிகளினதும் கடமை!

பிள்ளைகளை பராமரிப்பு நிலையங்களுக்கு அனுப்புவதைக் கூடியளவில் தவிர்த்துக் கொள்வது நல்லது. ஏனெனில் பராமரிப்பு நிலையங்களில் வளரும் பிள்ளைகள் மனோ ரீதியாக பாதிக்கப்படுகின்றன.

ஒரு சிறிய குடிசையில் பெற்றோருடன் வளரும் பிள்ளை சிறந்ததொரு பராமரிப்பு நிலையத்தில் வளரும் பிள்ளையை விட குதூகலமாக வாழும்.

ஒரு சில அநாதை இல்லங்களில் பணத்தை மீதப்படுத்துவதற்காக சிறுவர்களுக்கு நல்ல உணவே கொடுக்கப்படுவதில்லை. இதனால் சிறுவர்கள் நோய்வாய்ப்படுகின்றனர்.

இதைவிட ஒருசில பராமரிப்பு நிலையங்களின் அதிகாரிகள் சிறுவர்களை வைத்து லாபம் அடைய முயல்கின்றனர். அதற்கமைய சிறுவர்களை வீதிகளில் பிச்சை எடுக்க விடுகின்றனர்.

உலகின் 3 கோடிக்கும் மேற்பட்ட பிள்ளைகள் நகரங்களின் பாதை ஓரங்களில் காலத்தைக் கழிக்கின்றனர்.

இதைவிட 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பிள்ளைகள் விபசாரத் தொழிலில் ஈடுபட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

மண்ணின் மைந்தர்களாகக் கூடிய இந்த சின்னஞ்சிறுசுகளை புறக்கணிக்காது அவர்களுக்கும் வாழ வழி காட்டுவது பெரியோர்களின் கடமை. அதை விடுத்து அவர்களை அடிமைப் படுத்துவது கொடுமை!

(ம—இ)

---

# குழந்தைகளை உறங்கவைக்க ஆலோசனை கூறுகிறார்கள்

குழந்தைகள் நித்திரை செய்யும் பழக்கம் பற்றி ஆராய்ச்சி நடத்திய ரொத்ஸ்சைல்ட் வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர் உளநூலார் குழு ஒன்று, குழந்தைகளை உறங்க வைத்து நித்திரை கொள்ளச் செய்வதில் சில நியாய பூர்வமான உண்மைகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

குழந்தைகளை கையில் அணைத்து வைத்திருந்து உறங்க வைக்கும் தாய்மார் அனேகமாக இரவு நேரங்களில் உலாவித்திரியும் பிள்ளைகளை உருவாக்கக் கூடும் என அவர்கள் கண்டறிந்துள்ளனர், அவ்வாறு நித்திரையில் ஆழ்ந்து போன குழந்தைகளுள் 60 சத வீதமான சிசுக்கள் இரவில் இடையில் விழிக்கும் பழக்கத்தை பெற்றுக் கொள்ளலாம்,

அதே சமயம் படுக்கையில் நித்திரை வந்து தூக்கத்தில் ஆழ்ந்து விடும் 34 சதவீதமான குழந்தைகளுக்கு கஷ்டமின்றி விழிக்கும் பழக்கம் உண்டு. பெண் குழந்தைகள் இரவு காலங்களில் தங்கள் விரல்களை சூப்பும் பழக்கம் கொண்டவை, ஆண் குழந்தைகள் பால் அல்லது பழச்சாறு போத்தல்களை வாயில் வைத்துக் கொள்ள விரும்புவார்கள்.

4 முதல் 6 வயது வரையுள்ள சுமார் 740 குழந்தைகளின் நித்திரை கொள்ளும் வழக்கம் பற்றி ஆய்வு நடத்தப்பட்டது,

(ம-10)

---

# மனைவியரை ஏனோ துன்புறுத்துகிறார்கள்

பிரான்ஸ் என்றதும் நினைவுக்கு வருவது நாகரிகம் மிக்க அழகிய பெண்கள், சுவையான உணவுகள் மற்றும் அருமையான வைன் தான், ஆனால் பிரெஞ்சு பெண்கள் மிகவும் பரிதாபத்துக்கு உரியவர்கள்,

பிரெஞ்சு ஆடவர்கள் தமது மனைவிமாரை அடித்து உதைப்பதில் முன்னர்களாம்! கணவர்மாரிடம் வாங்கிக் கட்டிக்கொண்டு தழும்புகளைத் தடவிக் கொண்டிருக்கும் பிரெஞ்சு பெண்களின் தொகை இப்போது இருபது லட்சம் வரை இருக்குமாம்!

தெருவில் போகும் நாயை ஒருவர் அடித்தால் நாய்க்காகப் பரிந்து பேச ஜீவகாருண்ய சங்கங்களாவது உள்ளன, ஆனால் தெருவில் கணவன் தன் மனைவியை இழுத்துப் போட்டு உதைத்தால் அதை இடித்துக் கேட்க ஒருவரும் இல்லை என்கிறார் பிரெஞ்சு பெண்கள் நல அமைச்சர்

பிரெஞ்சு பெண்கள் தங்களைக் கணவர்மார் அடித்தாலும், உதைத்தாலும் அவற்றை வெளியே சொல்லிப் பெரிதுபடுத்த விரும்புவதில்லை, மனதுக்குள்ளே வைத்துக் கொண்டு காலம் தள்ளுகிறார்கள், முடியாத கட்டத்தில் தான் கணவனை விட்டு பிரிந்து பொலீஸாரிடம் புகார் செய்கிறார்கள், அல்லது பெண்கள் விடுதிகளை நாடுகிறார்கள். ஆகவே கணவர்மாரின் இம்சையால் தமது வாழ்க்கையை நரகமாக்கிக் கொண்டுள்ள பெண்களின் உண்மை எண்ணிக்கை பல மடங்கு அதிகமாக இருக்க வேண்டும்.

மனித உரிமைகள் சாசனத்தின் இரு நூறாவது வருட பூர்த்தியை கொண்டாடவிருக்கும் நாம் ஆண்களின் எதேச்சதிகாரப் பிடியில் சிக்கியுள்ள பெண்களுக்கு உருப்படியாக இப்போதாவது ஏதாவது செய்தாக வேண்டும் என்கிறார் இந்த பிரெஞ்சு அமைச்சர்.

மனைவிமாரை உதைப்பது இந்த பிரெஞ்சுக்காரர்களுக்கு பரம்பரையாக வந்த ஒரு விடயம் போலும், ஏனெனில் பிரபல பிரெஞ்சு நாவலாசிரியர் அலெக்ஸாண்டர் டூமாஸ் "பெண்களை அடித்து உதைத்து வரவேண்டும், எவ்வளவுக்கெவ்வளவு உருட்டிப் பிரட்டி எடுக்கிறோமோ அவ்வளவுக்கு இந்த பெண்கள் நமக்கு ஏற்றமாதிரி வகையாக மாறி வருவார்கள்" என்று உபதேசம் செய்திருக்கிறார்!

(ம-032)



# மனையும் மங்கையும்

## கர்ப்ப முற்ற பெண்ணின் அழகு குறைந்து விடுமா?

### அவ்விதம் நினைப்பது தவறு

"கர்ப்பமடைந்து விட்டால் அழகு குறைந்து விடும்.!" என்று பல பெண்கள் நினைக்கின்றனர்.

இதில் உண்மையில்லை. தாய்மை பரிபூரண தன்மை அடையும் நாட்கள் தான் கர்ப்ப காலம்.

உன்னதமான இந்தக் காலத்தில் தாங்கள் களை இழந்து விடுவதாக பெண்கள் எண்ணுவது தவறு.

கர்ப்ப காலத்தில் தன்னம்பிக்கை மிகவும் முக்கியம். அது ஒன்று தான் பெண்களை எல்லா வகையிலும் சீராக பராமரித்துக் கொள்ளும்.

பெண்களின் தாய்மைத் தன்மையை வெளிக்காடுவது தான் கர்ப்ப காலம். கர்ப்பம் தரித்த உடனேயே, "என்னவோ ஏதோ?" என்று பெண்கள் மிகவும் பீதியும், பதட்டமும் அடைவது அர்த்தம் அற்றது.

மூட நம்பிக்கைகளை வளர்த்துக் கொள்ளக் கூடாது. மூட நம்பிக்கைகளை வளர்த்துக் கொண்டால் எல்லா வகையிலும் நம்மை அது முடக்கி வைத்து விடும்.

அதனால் அதற்கு ஆட்பட்டு விடக் கூடாது.

கர்ப்பத்தின் போது உடல் அழகும் ஆரோக்கியமும் சீராக பராமரிக்கப்பட சில வழிமுறைகளைப் பெண்கள் கடைப் பிடிக்க வேண்டும்.

முதலில் உணவில் கட்டுப்பாடு முக்கியமாக இருக்க வேண்டும். "வயிற்றில் வளரும் குழந்தைக்கும் சேர்த்து சாப்பிடு!" என்று வயதானவர்கள் அறிவுரை சொல்லக் கூடும்.

சொல்லக் கூடும் அதைக் கண்டு கொள்ள வேண்டாம்.

அதிகமாக சாப்பிட்டால் உடல் எடை கூடும். அதனால் பிரசவத்தின் போது கஷ்டம் ஏற்படக் கூடும்.

உணவு வகைகளில் கட்டுப்பாடு மிகவும் முக்கியம். புரோட்டின் சத்துள்ள உணவு வகைகளைச் சேர்த்துக் கொள்வது நல்லது.

பால், முட்டை பழங்கள் பழரசம், பச்சைக் காய்கறிகள், ஸ்டார்ச் சத்துள்ள உணவு வகைகள் [illegible]

இவை ஜீரணமாக கஷ்டமானவை.

மிதமாகவும் ஜீரணமாக எளிதாக இருக்கக் கூடியதுமான உணவு வகைகளைச் சாப்பிட்டு வந்தால் கர்ப்பிணிகள் தங்கள் உடல் ஆரோக்கியத்தை சீராக வைத்துக் கொள்ளலாம்.

கொழுமையான உணவைத் தவிர்த்து எளிய உணவை சாப்பிட்டு வரவேண்டும். பழரசமும் மோரும் அடிக்கடி குடிக்கலாம்.

டாக்டர் எழுதித் தரும் டானிக்கை முறைப்படி சாப்பிட்டு வருவது கர்ப்பத்தின் போது உடலில் உள்ள குறைபாடுகளைத் தீர்க்கவல்லது.

பழங்களில், பப்பாளியை கர்ப்பிணிகள் தொடவே கூடாது.

அடுத்து முக்கியமாக கவனிக்க வேண்டியது ரெஸ்ட், கர்ப்பிணிகள் இரவில் 8 மணி நேரம் தூங்குவது தான் முறையானது.

பகலில் சிறிது நேரம் தூங்குவதும் நல்லது. வேலை செய்யும் பெண்களாக இருந்தால், உணவு இடைவேளையில் இருக்கையில் சாய்ந்தபடி சிறிது நேரம் ஓய்வு எடுக்க வேண்டும்.

ஓய்வு எடுப்பது சும்மா உட்கார்ந்து இருப்பதல்ல, மனதையும் உடலையும் எந்தவித எண்ணங்களுக்கும் செயலுக்கும் உட்படுத்தாமல் தளர்த்திக் கொள்வதுதான்.

அதாவது, ரிலாக்சாக வைத்துக் கொள்வது என்று அர்த் [illegible]

தினமும் மாலை நேரங்களில் ஒரு மணி நேரம் ஸ்டூலில் உட்காருவது நல்லது கைப்பிடி எதுவும் இல்லாதிருப்பதால் ஸ்டூலில் உட்கார்ந்தால் உடல் பருமன் குறையும்.

வீட்டில் இருக்கும்போது வெளியே செல்லும் போதும் பதட்டம் எப்போதும் இருக்கக் கூடாது.

பதட்டம் ஏற்பட்டால், மனதை மட்டுமன்றி, அது உடலையும் பாதிக்கிறது.

உடலைப் பாதிக்கும் போது வயிற்றில் வளரும் குழந்தை பாதிக்கப்படலாம், ஆதலால் பதட்டம் கூடாது.

ஓய்வு எடுக்க வேண்டும் என்றால் தொடர்ந்து நாற்காலியிலோ படுக்கையிலோ இருந்து ரெஸ்ட் எடுக்க வேண்டும் என்பதல்ல.

மேற்சொன்னபடி சிறிது நேரம் ரெஸ்ட் எடுத்த பின் நீங்கள் வழக்கமாகச் செய்யும் வேலைகளைச் செய்யலாம்.

ஐந்து மாதத்துக்குப் பின் வேலைகளை அடிக்கடி செய்வதை குறைத்துக் கொள்வது நல்லது. கடுமையான வேலைகளைச் செய்வதோ, அதிகம் எடை தூக்குவதோ, கர்ப்ப காலத்தில் அறவே கூடாது.

சிறு சிறு கவலைகளைக் கூட மனதில் வைத்துக் கொள்ளக் கூடாது. பொழுது போக்குகளில் ஓரளவு ஈடுபடலாம்.

இல்லையெனில் கர்ப்பிணிகளுக்கு சுளுக்கு ஏற்படும் இடுப்புப் பிடித்துக் கொள்ளும். தவிர அதிக நேரம் உட்காருவதோ நிற்பதோ கூடாது. அப்படிப்பட்டவர்கள் டாக்டரை ஆலோசிப்பது நல்லது.

உடல் அழகை பாதுகாப்பதில் தோலுக்கு பெரும் பங்குண்டு உடலில் முகம், கை கால் தோல்கள் கவனமாக் பாதுகாக்கப்பட வேண்டும்.

கர்ப்ப காலத்தின் போது முகத்தில் அவ்வப்போது சுருக்கமோ எண்ணெய்த் தன்மையோ ஏற்பட வாய்ப்பு உண்டு.

அழகுக்கு அழகு சேர்ப்பது கூந்தல். பிரசவம் ஆனவுடன் கூந்தலில் கேசங்கள் அதிக அளவு உதிர்ந்து விடும் என்று கூறப்படுவதும் உண்டு.

கூந்தலை ஆரம்பத்தில் இருந்தே பாதுகாக்க டாக்டரை கலந்தாலோசிப்பது நல்லது.

கர்ப்பிணிகளுக்கு பெரும்பாலும் கை, கால் இடுப்பு பகுதிகளில் தான் அவ்வப்போது வலி ஏற்பட வாய்ப்பு உண்டு.

ஆதலால் இந்தப் பகுதிகளுக்கு கஷ்டம் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும்.

அதாவது வேலைகளை கவனமாகப் பார்த்து இந்தப் பகுதிகள் பாதிக்கப்படாத அளவில் செய்ய வேண்டும்.

கர்ப்ப காலத்தில் முக்கியமாக [illegible]

வளர்ப்பதை நிறுத்திக் கொள்ள வேண்டும்.

புடவைகளையோ மாடர்ன் டிரஸ்களையோ அணியும்போது இறுக்கமாக அணியக் கூடாது.

பருத்தி ஆடைகளே சிறந்தது. லூசாக அணிந்து கொள்வது நல்லது. "நைட்டி" விஷயத்திலும் கவனம் தேவை, மெல்லிய துணியால் தைத்திருக்க வேண்டும்.

இப்படிப் பல வகையிலும் கர்ப்பிணிகள் கவனமாக இருக்க வேண்டும். அப்புறம் களை இழந்து விடுவோமோ என்றகவலையே வேண்டாம்.

(த-10)



## கரைகடந்த காதல் ஆபத்தைத் தேடித்தரும்

கரை கடந்த காதல் ஆபத்தைத் தேடித் தரலாம். கவனமாக இருப்பது நல்லது.

சாரா என்ற 20 வயது காபரே இங்கிலாந்து நடனக்காரி ஒரு ஆஸ்துமா நோயாளி. இவர் ஹோட்டல் ஒன்றில் காபரே ஆடி வந்தார். அங்கு இவருக்குப் பழக்கமானவர் இருபதே வயதான மைக் என்ற கம்பீர தோற்றம் கொண்ட இளைஞர். ஒருவரையொருவர் சந்தித்த மாத்திரத்தில் இருவரிடையே காதல் ஏற்பட்டு சீக்கிரமே கனிந்தும் விட்டது.

மைக் தனது விடுமுறை முடிந்து இங்கிலாந்து திரும்பினார். எட்டு வாரத்தில் ஒப்பந்த [illegible]

இருந்த சாராவை ஆஸ்துமா தாக்கியது. அப்படியிருந்தும் மறுநாள் பிடிவாதமாக சாரா ரயில் நிலையம் சென்று மைக்கின் மார்பில் முகம் புதைத்தார். அன்றைய தினத்தை இருவரும் ஒன்றாகவே கழித்தனர். மறுநாள் ஆஸ்துமா அதிகரித்தது. மைக் அம்புலன்சை அழைத்துவரும் முன்னரே சாராவின் உயிர் பிரிந்து விட்டது.

தாளமுடியாத இன்ப அதிர்ச்சி காரணமாகத்தான் சாராவின் உயிர் பிரிந்தது என்கிறார்கள் டாக்டர்கள். பொதுவாக ஆஸ்துமா [illegible]

அதிகமாக சாப்பிட்டால் உடல் எடை கூடும், அதனால் பிரசவத்தின் போது கஷ்டம் ஏற்படக் கூடும.

உணவு வகைகளில் கட்டுப்பாடு மிகவும் முக்கியம. புரோட்டின் சத்துள்ள உணவு வகைகளைச் சேர்த்துக் கொள்வது நல்லது,

பால், முட்டை பழங்கள் பழரசம், பச்சைக் காய்கறிகள், ஸ்டார்ச் சத்துள்ள உணவு வகைகள் பருப்பு ஆகியவற்றை சேர்த்துக் கொள்ளலாம்.

கொழுப்பு சத்துள்ள உணவை அறவே ஒதுக்கி விடுவது நல்லது எண்ணெய் சம்பந்தப்பட்ட உணவு வகைகளையும் ஒதுக்கி விடுவது நல்லது.

இடைவேளையில் இருக்கையில் சாய்ந்தபடி சிறிது நேரம் ஓய்வு எடுக்க வேண்டும்.

ஓய்வு எடுப்பது சும்மா உட்கார்ந்து இருப்பதல்ல, மனதையும் உடலையும் எந்தவித எண்ணங்களுக்கும செயலுக்கும் உட்படுத்தாமல் தளர்த்திக் கொள்வதுதான்,

அதாவது, ரிலாக்சாக வைத்துக் கொள்வது என்ற அர்த்தம்.

அதற்காக வீட்டில் வேலை எதுவும் செய்யக் கூடாது என்பதல்ல, பதட்டப்படாமல் மெதுவாக வேலைகளைக் கவனிக்கலாம.

ஐந்து மாதத்துக்குப் பின் வேலைகளை அடிக்கடி செய்வதை குறைத்துக் கொள்வது நல்லது, கடுமையான வேலைகளைச் செய்வதோ, அதிக எடை தூக்குவதோ, கர்ப்ப காலத்தில் அறவே கூடாது,

சிறு சிறு கவலைகளைக் கூட மனதில் வைத்துக் கொள்ளக் கூடாது. பொழுது போக்குகளில் ஓரளவு ஈடுபடலாம்,

தினமும் சிறிது நேரம் நடப்பது நல்லது, இது தொடர்பாக டாக்டரின் ஆலோசனை பெறுவது முறையானது, அதே போல டாக்டரின் அட்வைஸ் அல்லது நிபுணர்களின் மேற்பார்வையின்றி பயிற்சிகளையோ, யோகாசனமோ செய்வது பாதிப்பை ஏற்படுத்தும.

நிமிர்ந்து உட்காருவதும் நிமிர்ந்து நடப்பதும முதுகு வலியைக் குறைக்கும். உடல் பளுவை சமமாக தாங்க வேண்டும், ஒற்றைக் காலிலோ சாய்ந்தவாறோ நிற்கக் கூடாது!

நேராக நடந்து எழுந்து கொள்ளும் போது தரையில் கைகளை ஊன்றியும் எழுந்து கொள்வது முறையானது,

பாலும கை, கால் இடுப்பு பகுதியில் தான் அவ்வப்போது வலி ஏற்பட வாய்ப்பு உண்டு,

ஆதலால் இந்தப் பகுதிகளுக்கு கஷ்டம் கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும.

அதாவது வேலைகளை கவனமாகப் பார்த்து இந்தப் பகுதிகள் பாதிக்கப்படாத அளவில் செய்ய வேண்டும,

கர்ப்ப காலத்தில் முக்கியமாக கவனிக்க வேண்டிய மற்றொரு விடயம் காலணி, ஹை ஹீல்ஸ் செருப்புகளை பெண்கள அணியக் கூடாது, பொதுவாகவே இடுப்பு வலி ஏற்படக் காரணமானது, இது.

கர்ப்ப காலத்தில் இது நிச்சயமாகத் தவிர்க்கப்பட வேண்டும்,

முகத்தில் சோர்வும், சுருக்கமும் இருக்கலாம, ஆதலால் அழகு பாதிக்கப்படலாம. இதைத் தவிர்க்க கலர் சேலைகளைக் கட்டுவதுடன் கண்களுக்கு குளிர்ச்சியான லைட்கிளாஸ்களை உபயோகப்படுத்தலாம்,

உதட்டுச் சாயத்தை குறைத்துக் கொள்வது நல்லது, அதே போல நகங்களை நீண்டதாக

தரலாம். கவனமாக இருப்பது நல்லது,

சாரா என்ற 20 வயது காபரே இங்கிலாந்து நடனக்காரி ஒரு ஆஸ்துமா நோயாளி. இவர் ஹோட்டல் ஒன்றில் காபரே ஆடி வந்தார், அங்கு இவருக்குப் பழக்கமான: இருபதே வயதான மைக் என்ற கம்பீர தோற்றம கொண்ட இளைஞர், ஒருவரையொருவர் சந்தித்த மாத்திரத்தில் இருவரிடையே காதல் ஏற்பட்டு சீக்கிரமே கனிந்தும் விட்டது,

மைக் தனது விடுமுறை முடிந்து இங்கிலாந்து திரும்பினார், எட்டு வாரத்தில் ஒப்பந்த காலம முடிவடைந்ததும அரக்கபரக்க லண்டன் வந்து சேர்ந்தார் சாரா, ஊருக்கு அவர் வந்திருப்பதை அறிந்ததும மைக் தான் வீட்டுக்கு வாவிருப்பதாக அவருக்கு தகவல் தெரிவித்து விட்டு ரயிலேறினார், மைக் வரவிருக்கும தினத்துக்கு முதல் நாள் காதலன் நினைவாகவே

இருந்த சாராவை ஆஸ்துமா தாக்கியது, அப்படியிருந்தும் மறுநாள் பிடிவாதமாக சாரா ரயில் நிலையம் சென்று மைக்கின் மார்பில் முகம புதைத்தார், அன்றைய தினத்தை இருவரும் ஒன்றுகவே கழித்தனர், மறுநாள் ஆஸ்துமா அதிகரித்தது, மைக் அம்புலன்சை அழைத்துவரும முன்னரே சாராவின் உயிர் பிரிந்து விட்டது.

தாளமுடியாத இன்ப அதிர்ச்சி காரணமாகத்தான் சாராவின் உயிர் பிரிந்தது என்கிறார்கள் டாக்டர்கள், பொதுவாக ஆஸ்துமா நோய் கண்டவர்கள் அதிர்ச்சியால் பாதிக்கப்படுவதில்லை, ஆனால் எப்போதாவது ஒருவர் டாக்டர்களின் கூற்றுப்படி லட்சத்தில் ஒருவர் அதிர்ச்சி தாளாமல் ஆஸ்துமா தாக்குதலுக்கு உள்ளாகி கண்ணை மூடிவிடுவதுண்டாம!

(ம-032)

## கைக்குழந்தைகள் மீது கவனமாக இருங்கள்

துணி துவைக்கும் இயந்திரத்தை இயக்கி விட்டு அழுக்குத் துணிகளை அதனுள் போட ஒரு பெண்மணி ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது இந்தச் சம்பவம நடைபெற்றது!

அவரது இருபது மாதக் குழந்தை லீ ஜேம்ஸ் ஒரு நாற்காலியில் ஏறி துணி துவைக்கும் இயந்திரத்தின் வாயினுள் இறங்கியது! அழுக்குத்துணிகளை கசக்கிப் பிழிந்து துவைப்பதற்கென உருவாக்கப்பட்டுள்ள அந்த இயந்திரம் இப் பச்சிளம் குழந்தையை சும்மா விட்டு வைக்குமா என்ன? குழந்தையை கசக்கத் தொடங்கியது!

அப்போதுதான் நடந்த கோர சம்பவத்தை உணர்ந்து கொண்ட குழந்தையின் தாயார் மெண்டி, குழந்தையை இயந்திரத்தின் பிடியில் இருந்து மீட்டெடுத்தார்!

உடனடியாக லண்டன் நோயல் குவென் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட குழந்தையின் உயிரை டாக்டர்கள் காப்பாற்றியதோடு உடல் சிதைவின்றி லீயை அன்னையிடமே ஒப்படைத்தனர்!

பச்சைக் குழந்தைகளை வைத்திருக்கும் தாய்மார்கள் தமது செல்வங்களின் மீது ஒரு கண்ணை எப்போதும வைத்திருக்கப் பழக வேண்டும் என்பதையே இச் சம்பவம உணர்த்தியிருக்கிறது-

(ம—032)

## மது அருந்தினால் ஆண்மைத்தன்மை கெடும்

மது அருந்தினால் தாம்பத்திய உறவு சிறப்புறும் என்று சிலர் நினைக்கிறார்கள்- ஆனால் பிட்யூட்டர் ஹைப்போதாலமஸ் கோளங்கள் பாதிக்கப் பெற்றுத் தாமபத்திய உறவில் ஆண்மையின்மை தோன்றுவதாக மருத்துவ ஆய்வுகள் உறதிப்படுத்தியுள்ளன-

மதுபானத்தினால் தாம்பத்திய உறவு கருதரித்தல் போன்றவைகளில் தேக்கம் காணப்படும-

மேரிலாந்திலுள்ள பீடஸ்பாக் அரசாங்க மருத்துவ நிலையத்தில் இதைப் பற்றிய ஆராய்ச்சிகள் நடத்தப்பட்டன-

ஆராய்ச்சி செய்த குழுக்கள் தொடர்ந்து ஒரு சில காலம் மதுபானங்களையே குடிப்பவன் ஒன்றுக்கும் உதவாத முறையில் ஆண்மை அற்றவனாக மாறவான் என்பதை பரந்த அளவில் ஆராய்ச்சி செய்து தெளிந்த முடிவிற்கு வந்துள்ளார்கள்-

மேலும் மதுபானங்களை பயன்படுத்துவதால் ஈரல் சிதைவு ஏற்படுகிறது என்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது-

மிகையாக குடிப்பது பிட்யூட்டரிச் சுரப்பியையும் ஹைப்போதாலமஸ் சுரப்பியையும் பாதிக்கின்றது என்று ஆராய்ச்சியாளர்கள் கருத்து தெரிவித்துள்ளார்கள் இந்த இரு சுரப்பிகளே ஆண்தாதுவையும், விந்துவையும் உருவாக்குமபடி விதைப்பையைத் தூண்டுகின்றன-

(ம-455)

## நீல நிற உதடு குழந்தைகளுக்கு ஆபத்து தரும்

குழந்தை பிறக்கும் போது இளஞ்சிவப்பு நிற உதட்டுடன் பிறந்தால் அதற்கு இதயமும் இரத்தக் குழாய்களும் சரியாக அமைந்திருக்கின்றன என்று பொருள்!

நீல நிற உதட்டுடன் பிறந்தால் அந்தக் குழந்தையின் இதயத்திற்கு இரத்தத்தைப் பம்ப் செய்து தரும் இரண்டு இரத்தக் குழாய்களும் மாறி அமைந்துள்ளன என்று பொருள்படும்!

இந்த இரத்தக் குழாய்களை உடனே சத்திர சிகிச்சை மூலம் மாற்றி அமைத்தால் 25 வருடங்கள் அக் குழந்தை உயிர் வாழும்!

இல்லாவிட்டால் பிறந்த சில நாட்களில் குழந்தை இறந்து விடும். அழும் போது மாரடைப்பு ஏற்படுவதால் நிகழும் மரணம் இது!

(ம—241)

## குடும்பத்தை பிரிந்து வாழும் மனிதர்களுக்கு வெறித்தனம் ஏற்படும்

மனைவி மக்களைப் பிரிந்து வாழும மனிதர்களுக்கு வெறித்தனம் ஏற்படும என்பது மனோதத்துவ நிபுணர்களின் கருத்து.

எட்டி பேங்க் என்ற இங்கிலாந்து சுரங்கத் தொழிலாளி ஒரு வெடிகுண்டு நிபுணர், திருமணமான இவர், மனைவியை விட்டு பிரிந்து வாழ்ந்து வருபவர். இவரது மனைவி ஆனுக்கு 28 வயதாகிறது, இரண்டு புதல்விகளுடன் தனியாக வசித்து வந்தார். எட்டி பேங்க் தனது காதலி ஷரோனுடன் வாழ்ந்து வந்தார். ஆனாலும அவருக்கு நிம்மதி இல்லை.

ஒருநாள் பேங்குக்கும் அவரது காதலிக்கும இடையே சண்டை மூண்டது, பேங்கின் கவனம் அவரது மனைவி மீது திரும்பியது, அவருக்கு தன் புதல்வியர் மீது கொள்ளை ஆசை. ஆனால் அவர்கள் மனைவியின் பாதுகாப்பில் இருந்தனர், புதல்வியருக்கும தனக்கும் இடையில் மனைவி இரும்புச் சுவராக இருப்பதாக அவர் கருதினார். தன் காதலியுடனான தகராறு இந்த எண்ணத்தை அதிகரிக்கச் செய்யவே, எட்டி பேங்க் நான்கு டைனமைட்டுகளை உடலைச் சுற்றிக் கட்டிக்கொண்டு தனது மனைவியின் வீட்டை நோக்கி அதிவேகமாகக் காரைச் செலுத்திச் சென்றார்,

காரை விட்டு கீழே இறங்கிய எட்டி பேங்க் இரு புதல்வியரையும் தன்னிடம ஒப்படைக்காவிட்டால் டைனமைட்டுகளை வெடிக்கச் செய்து மனைவி குழந்தைகளையும வீட்டோடு ஒழித்துக் கட்டப்போவதாக எச்சரித்தார், தன் கணவரின் கோபக் கூச்சலைக் கேட்டு, ஏதோ விபரீதம நடக்கப் போவதை உணர்ந்து கொண்ட ஆன் வீட்டைப் பூட்டிக் கொண்டு கொல்லைப்புறத்தில் மகள்மாருடன் மறைந்து கொண்டார்,

மனைவியிடமிருந்து பதில் கிடைக்காததைத் தொடர்ந்து தன் மார்புடன் சுற்றிக் கட்டியிருந்த நான்கு டைனமைட்டுகளையும் வெடிக்கச் செய்தார் பேங்க்! பெருத்த ஓசையுடன் டைனமைட்டுகள் வெடிக்கவே எட்டி பேங்க் சுக்குல் சுக்குலாகிப் போனார். வீட்டின் முன் பகுதியும சேதமடைந்தது, நல்ல வேளையாக ஆனால் இரு பெண் குழந்தைகளும தாயமின்றி தப்பினர்,

மனைவி மக்களைப் பிரிந்து வாழ்பவர்களுக்கு வெறித்தனம ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது,

(ம-032)

சிந்தாமணி
தினவெளியீடு "தினபதி" ஞாயிறு வெளியீடு "சிந்தாமணி"
CHINTAMANI சிந்தாமணி

# 80 வயதிலும் ஓயவில்லை!

ஹொலிவூட் நடிகைகளில் கவர்ச்சிகரமாகவும் தைரியமாகவும் வலம் வந்து சிறப்பான இடத்தைப் பெற்றவர் "குளோரியா ஜோஸ்பின் மேஸ்வென்சன்"

இவர் 1897 ஆம் ஆண்டு மே மாதம் 27ஆம் திகதி சிக்காக்கோ நகரில் பிறந்தார்—

ஸ்வீடிஸ் — இத்தாலிய தாய் தந்தை வழிவந்தவர்— இவரின் தந்தை இராணுவ அதிகாரியாகப் பணியாற்றி வந்தார்— இவருடைய டீன் ஏஜ் பருவத்தை அடைவதற்குள் கிட்டத்தட்ட பனிரெண்டு பள்ளிகளில் மாறி மாறிப் படித்து வந்தார்—

1913 இல் ஒரு முறை சிக்காக்கோ நகரில் "எஸ்ஸானி" ஸ்டூடியோவுக்கு செல்லும் சந்தர்ப்பம் கிட்டியது— அதன் பலன் இவர் ஒரு துணை நடிகையாக அறிமுகப்படுத்தப்பட்டார்—

இவர் மக்களிடம் பிரபலமாக விளங்க பிரமாதமான மாடல் அழைப்புடன் கூடிய



குளோரியா ஜோஸ்பின்

ஆடை அலங்காரங்களை அணிந்து காட்சியளித்து தன்னுடைய இமேஜை நன்கு வளர்த்துக் கொண்டார்—

1917 முதல் 1941 வரையிலும் அதன் பிறகு திரும்பவும் 1950 முதல் 1974 வரை கிட்டத்தட்ட 53 வருடங்கள் 40க்கு மேற்பட்ட படங்களில் நடித்த 62 வருடங்களில் கலை உலக அனுபவம் பெற்றவர்—

பல டி வி காட்சிகளில் தோன்றி நடித்தார்— "கெஸ்ட்"டாகவும் தோன்றி கலகலப்பூட்டினார்— திரும்பவும் ஹொலிவூட்டுக்கு வந்த 1974 ஆம் ஆண்டு கடைசியாக "ஏர் போர்ட் 1975" படத்தில் நடித்தார்—

இவரின் நான்காவது ஐந்தாவது திருமணம் குறைந்த கால கட்டத்தில் முடிந்தது—இவர் 1976 இல் தனது 80 ஆவது வயதில் ஆறாவது திருமணம் புரிந்து பெரும் புரட்சியை ஏற்படுத்தினார்— நடிகை எலிஸபெத் டெய்லருக்கு முன்னோடியாகத் திகழ்ந்தவர் இவர்!

(ம—10)

# பிறக்காத குழந்தையின் ஆவி செய்யும் அட்டகாசம்!

ஆவிகளின் அட்டகாசம் இங்கிலாந்தையும் விட்டு வைக்கவில்லை. ரேகிதீன் — ஷரோன் தம்பதிகளின் குழந்தையான சமந்தாவை கெட்ட ஆவி அலைக்கழிக்கிறதாம்.

இத் தம்பதியினருக்கு முதலில் ஒரு ஆண் குழந்தை பிறந்த உடன் மடிந்து விட்டது. பெற்றோரிடம் தான் பெற முடியாத அன்பையும் பாசத்தையும் இந்த சமந்தா அனுபவித்து வருகிறாளே என்ற பொறாமை தாங்க முடியாமல் தான் அந்தப் பிறக்காத குழந்தையின் ஆவி சமந்தாவுக்கு பல தொல்லைகளைத் தந்து வருகிறதாம்.

முதலாவது குழந்தை கர்ப்பத்தில் இருந்த போதே அதற்கென ஒரு தனி அறையை முன் கூட்டியே பெற்றோர் ஆயத்தம் செய்தனர்.

சிறு கட்டில், ஊஞ்சல், விளையாட்டுச் சாமான்கள், பொம்மைகள் என்று பல்வேறு பொருட்களை வாங்கி அவ்வறையில் வைத்த ஷரோன், அறையை வெகுவாக அலங்கரித்தும் வைத்தார். ஆனால் குழந்தை இறந்து பிறந்தது.

குழந்தை இறந்து போனாலும் அதன் ஆவி தன் ஆசைகள் பூர்த்தியாக எதிர்பார்ப்புகளுடன் தனக்கென தயார் செய்யப்பட்ட அறையிலேயே மிகுந்த பொறாமை உணர்ச்சியுடன் இருந்து வருகிறதாம். தனக்கென தனது பெற்றோர்களால் உருவாக்கப்பட்ட அறையில் யாரும் நுழைவதையோ அங்குள்ள பொருட்களைப் பயன்படுத்துவதையோ ஆவி கொஞ்சமும் விரும்பவில்லை.

தற்போது இரண்டாவது குழந்தை சமந்தா உறங்கிக் கொண்டிருக்கும் போது, அந்த அறையில் யாரோ நடமாடுவது போல ஓசை கேட்குமாம். ஷரோன் ஓடிச் சென்று கதவைத் திறந்து பார்த்தால் அறையில் யாருமே இருக்க மாட்டார்கள். குழந்தை ஆழ்ந்த உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும்.

சில சமயம் குழந்தை வீரிட்டலறும் ஓசை கேட்குமாம். ஓடிச் சென்று கதவைத் திறந்தால் அமைதியாக தமது மகள் உறங்கிக் கொண்டிருப்பதையே கண்டு, அலறியது யார் என்று மூளையைக் குழப்பிக் கொள்வார்கள் பெற்றோர்கள்.

அப்போதுதான் பெற்றோருக்கு, இயற்கை விதிகளுக்கு அறிவுக்கு அப்பாற்பட்ட ஏதோ ஒன்று அந்த வீட்டில் நடமாடி வருகிறது என்ற உண்மை மெல்ல புரிய ஆரம்பித்தது.

சமந்தாவுக்கென பெற்றோர் பெரிய துணி பொம்மை ஒன்றை வாங்கித் தந்திருந்தனர். திடீரென அப்பொம்மை ஒரு தினம் காணாமற் போய் விட்டது. வீடு முழுக்கத் தேடியும் பொம்மையைக் காணவில்லை.

காணாமற் போன அப் பொம்மை பழைய இடத்திலேயே திடீரென ஒரு நாள் தோன்றியது. எழும்பி நடக்க முடியாத சமந்தா எப்படியும் அப் பொம்மையை எடுத்திருக்க வழியில்லை. அப்படியானால் யார் இந்த பொம்மையை ஒளித்தது? பின்னர் மீண்டும் பழைய இடத்திலேயே வைத்தது?

சமந்தாவின் அறையில் விளக்குகள் திடீரென ஆப் செய்யப் பட்டு விடும். விளக்குகள் அணைக்கப்பட்டிருந்தால் திடீரென ஆன் செய்யப்படும். இது எப்படி நடக்க முடியும் என்பதை விளக்க முடியாமல் மூளையைக் குழப்பிக் கொண்டு திணறத் தொடங்கினார்கள் பெற்றோர்.



சமந்தாவின் அறையை ஒழுங்கு செய்து விட்டு சென்றால், சிறிது நேரத்தில் பொருட்கள் கலைந்து கிடக்கும். பொம்மைகள் இடம் மாறியிருக்கும். மேசை டிராயர்கள் திடீரென திறந்து கொள்ளும். மூடிக் கொள்ளும். அலுமாரி கதவுகள் திறக்கும் மூடும்.

சமந்தா உறங்கிக் கொண்டிருக்கும் போது யாரோ அவளை உலுப்பி விட்டு விடுவார்கள். குழந்தை வீரிட்டலறும். அல்லது உறக்கத்திலேயே அழுது கண்ணீர் விடும். கெட்ட கனவு கண்டு கொண்டிருப்பதை அறிந்து கொள்ளும் பெற்றோர் குழந்தையை எழுப்பி, மார்போடு அணைத்துக் கொள்வார்கள்.

பச்சைக் குழந்தையை கெட்ட ஆவி ஒன்றுதான் படாத பாடு படுத்தி வருகிறது என்பதை உணர்ந்த தாய், அதன் விவரத்தை அறிய ஆவி உலகிடம் தொடர்பு கொண்ட ஒரு மந்திர வாதியிடம் சென்றார்.

அவர் ஷரோனைப் பார்த்து, "இறந்து போன உங்கள் மகனுடன் அல்லவா நீங்கள் வந்திருக்கிறீர்கள்? உங்களது கைவிரல்களைப் பிடித்துக் கொண்டு உங்கள் மகன் நிற்கிறானே!" என்று கூறினாராம். அப்போதுதான் யாரோ தனது கை விரல்களைப் பிடித்து இழுப்பது போன்ற உணர்ச்சி தாய்க்கு ஏற்பட்டது—

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் தமது கருவிலேயே செத்துப் பிறந்த மகனின் ஆவி தன்னை அரூபமாக சுற்றி வருவதை உணர்ந்த போது ஷரோனின் உடல் சில்லிட்டது. இதைத் தொடர்ந்து மந்திரவாதி சொன்ன விஷயங்கள் ஷரோனை உறையச் செய்தன—

"வீட்டில் நடக்கும் கலாட்டாக்களுக்கு எல்லாம் உங்களது மகனின் ஆவியே காரணம். தனக்கென உருவாக்கப்பட்ட அறையில் தான் மட்டுமே வாழ வேண்டும் என்பது உலக வாழ்க்கையை அனுபவிக்க முடியாமற் போன இந்த ஆவியின் ஏக்கம். இதனால் சமந்தாவை இந்த அறையை விட்டு விரட்டும் நோக்கத்துடனேயே இந்த ஆவி இவ்வறையில் பல்வேறு சேஷ்டைகளைச் செய்து வருகிறது. ஆவிகள் உலகத்தில் உங்கள் மகன் முதிர்ச்சி பெற்ற நிலையில் இருக்கிறான். அங்கு அவன் குழந்தை அல்ல. உங்கள் வீட்டில் நடைபெறும் அதீத சம்பவங்களுக்கு உங்கள் இறந்து போன மகனின் பொறாமை கொண்ட சேஷ்டைகளே காரணம்"

— இவ்வாறு அந்த மந்திரவாதி ஷரோனிடம் கூறினார்.

நிறைவேறாத ஆசைகளுடன் இறந்து போகும் நபர்கள் சில காலம் ஆவியாக அலைந்து திரிவது வழக்கம்.

ஆனால் பிறக்காத ஒரு மனிதனின் ஆவி, தனது பொருட்களுக்கு சொந்தம் கொண்டாடி வருவது வித்தியாசமான ஒரு சம்பவம்.

(ம—032)

## நடிகர் தந்த அதிர்ச்சி விருந்து

கடந்த எட்டு ஆண்டுகளாக

## அரச குடும்பத்தினரை கிண்டல் செய்யலாமா?

ஆங்கிலப் பத்திரிகைகள் குறும்புத்தனம் மிக்கவை, இப் பத்திரிகைகளின் குறும்புத்தனம் சில சமயம் அரச குடும்பத்தினருக்கு தலைவலியாகப் போய் விடுவதும் உண்டு.

அரச குடும்பத்தினர் குறிப்பாக டயானா இளவரசி அல்லது சாரா இளவரசி என்ன தவறு விடுகிறார்கள் என்பதை கண் கொத்திப் பாம்பாக கவனிப்பது இப்பத்திரிகைகளின் வேலை.


சமீபத்தில் ஒரு ஆங்கிலப் பத்திரிகை இரண்டு அரச குடும்ப தொடர்பான புகைப்படங்களைப் பிரசுரித்து சார்ள்ஸ் இளவரசர் மற்றும் டயானா இளவரசியை எரிச்சலுக்கு உள்ளாக்கியிருந்தது.

பத்திரிகை பிரசுரித்திருந்த முதல் படம் ஒரு புதர் அருகே சார்ள்ஸ் இளவரசரது மூத்த மகன் வில்லியம்ஸ் சிறுநீர் கழிப்பதை சித்திரிக்கிறது. வில்லியம்ஸ் திருட்டுத்தனமாக சிறுநீர் கழிக்கிறார் என்ற குறிப்பு வேறு.

வில்லியம்சின் தம்பி ஹெறி தன்னுடன் படிக்கும் சக மாணவனுடன் மல்லுக்கு நிற்கும் மற்றொரு படத்தையும் இந்தப் பத்திரிகை பிரசுரித்துள்ளது, இப் புகைப்படங்கள் அரச குடும்பத்தினருக்கு எரிச்சலை மூட்டாமலா இருக்கும்?

எமது குழந்தைகள் ஏனைய பிள்ளைகளைப் போல சாதாரண சூழ்நிலையின் பின்னணியில் கல்வி கற்பதையே நாம் விரும்புகிறோம், ஆகவே எமது குழந்தைகளையாவது பத்திரிகையாசிரியர்கள் விட்டு வைக்க வேண்டும். அவர்களைத் தொந்தரவு செய்ய வேண்டாம் என்று அரச குடும்பத்தினர் இப் புகைப்படங்கள் குறித்து விடுத்துள்ள அறிக்கையொன்றில் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

(ம-032)



லித்துவேனியாவில் ஒரு ஆரோக்கிய ஸ்தலம் உண்டு. அதன் பெயர் துருஸ்கினின்கை. 15 வருடங்களாக இயங்கி வரும் இந்த ஸ்தலம் ஒரு வனத்தின் மத்தியில் உள்ளது. அங்கே திறந்த வெளி மியூஸியம் ஒன்று உள்ளது அதன் பெயர் "வனத்தின் எதிரொலி".

## மக்களை ஈர்க்கும் வனத்தின் எதிரொலி

கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ள பொருள்கள் அனைத்தும் மரத்தால் செதுக்கப்பட்டவையாகும். ஒரு பக்கத்தில் "கோழிக் காலில்" நிற்கும் இல்லத்தைக் காணலாம்- மறுபுறத்தில், சிலைகள் உள்ளன. இல்லத்திலுள்ள கதவுப்பிடிகள், அலங்காரப் பண்டங்கள், கூரையிலிருந்து தொங்கும் விளக்குகள், டெலிபோன் அனைத்தும் மரத்தில் செதுக்கப்பட்டவையாகும்.

மியூஸியம் முறையாக வகுப்புகளை நடத்துகிறது- இயற்கையை நேசிக்கவும் சூழல் சுற்றாடலைப் பாதுகாக்கவும் சிறுவர்களுக்கு கற்பிக்கப் படுகிறது-

அல்கிர்தாஸ் வலாவிசியஸ் "மனிதன் இயற்கையோடு ஒத்திசைந்து வாழ வேண்டும். இயற்கையின் அம்சமாக தன்னை நினைத்துக் கொள்ள வேண்டும்- இதை உணர்ந்தால் மாத்திரமே உலகத்தில் அழிவைத் தடுக்கலாம்" என்று கூறுகிறார்

மியூஸியத்திற்குப் பொறுப்பான அதிகாரி

(ம)



## நகைச்சுவை மஞ்சரி

பேஷண்ட்- "ஐயய்யோ... என்ன நர்ஸ் நீங்க! டாக்டர் கிட்டே எனக்குக் காது ஆபரேஷன் செய்யணும்னு தப்பாச் சொல்லிட்டீங்களே...?"

நர்ஸ்- கவலைப்படாதீங்க— எங்க டாக்டர் ஞாபக மறதிக்காரர் காதுன்னு சொன்னால்தான் உங்களுக்குச் சரியாகக் கண் ஆபரேஷன் செய்வார்...!

வக்கீல்- "உன்னோட பணம் பிறந்தநாள் தூங்கிக்கிட்டிருக்கும் போது எதற்காகக் கட்டையால் அடித்தாய்...?"

கூண்டில் இருப்பவர்- "முழிச்சிட்டிருக்கும் போது அடிக்க யாருக்குங்க தைரியம் வரும்!"



நோயாளி— ஐயையோ சார்... தூக்கத்திலே நடக்கிற வியாதி எனக்கு அதிகமா இருக்குங்க!

டாக்டர்— யோவ்! அதுக்காக நடுராத்திரியிலே ஒரு மணிக்கு கதவைத் தட்டி என்னை எழுப்பணுமா?

★

பிரபு— நேத்து என் கனவிலே செத்துப் போன நம்ம தலைவர் வந்தாருங்க!

ரகு— என்ன கேட்டார்?

பிரபு— பங்கு கேட்டார்!

ரகு— நீங்க என்ன சொன்னீங்க?

பிரபு— டபக்குன்னு கண்ணை முழிச்சிட்டு கொடுக்காமல் ஏமாந்திட்டேன்.

★

மனைவி— பேப்பரைப் படிச்சுட்டு ஏன் சுக்குநூறா கிழிச்சிட்டீங்க?

கணவன்— இல்லைன்னா பக்கத்து வீட்டுக்காரர் ஓசி வாங்கிட்டுப் போயிடுவார்!

★

உதவியாளர்— நம்ம டைரக்டர் ரொம்பவும் ரியலிஸம் பார்க்கறாரு...



நிருபர்— என்ன விஷயம்?

உதவியாளர்— ஹீரோயினுக்கு மாட்டற "விக்"குல ரெண்டு மூணு பேன் விடச் சொல்றாரு!

★

வேலு— அந்த டாக்டர் ரொம்ப மோசம்!

ரவி— ஏன் அப்படி சொல்கிறீங்க?

வேலு— மாத்திரையை எப்படிச் சாப்பிடறதுன்னு கேட்டதுக்கு எக்ஸ்ட்ரா ஃபீஸ் கேட்டு வாங்கிட்டார்.

★

ஒருவர்— உங்க புதுக்கட்சிக்கு இரும்புக் கட்சின்னு பெயர் வைச்சீங்க?

மற்றவர்— உடையாமல் இருக்குமே!

★

வீட்டுக்காரர்- "இரண்டு விதமா சமைக்கத் தெரியும் நீயே! இங்கே அசைவம் யாரு சாப்பிடறது இல்லையே"



சமையற்காரர்- "நான் அதைச் சொல்லலை... விருந்தாளிங்களை திரும்பி வரவழைக்கிற சமையலும் செய்வேன். திரும்பிப் பார்க்காமல் தலைதெறிக்க ஓடுகிற மாதிரியும் சமைப்பேன்னு சொன்னேன்...!"

★

ஜெயில் காவலர்- நீ திரும்பி திரும்பி ஜெயிலுக்கு வரதுக்கு காரணமென்ன?

கைதி- வீட்டுல இருந்தா நான் அத்தனைக்கும் சோறு போடணும் இங்கதான் எனக்கும் சேர்த்து நீங்களே சோறு போடறீங்களே!

★

கடந்த எட்டு ஆண்டுகளாக திரைப்படம் எதிலுமே தலை காட்டாத அமெரிக்க நடிகர் ரிச்சர்ட் ஹெறிஸ் "த பீஸ்ட்" என்ற பெயரில் ஒரு திரைப்படத்தைச் சொந்தமாகத் தயாரித்து வருகிறார்,

ரிச்சர்ட் ஹெறிஸ் பயங்கரக் குடிகாரர், மூக்குமுட்டக் குடிப்பதில் பெயர் போனவர். ஆனால் தனது படத்துக்கான இறுதி நாள் ஷூட்டிங் முடிவடைந்ததும் படப்பிடிப்புக் குழுவினர் மற்றும் நடிக நடிகையர்களுக்கு அவர் அளித்த தண்ணிப் பார்ட்டியின் போது இவர் மதுவை வாயில் வைக்கவேயில்லை!

(ம-032)


## தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்களும்

இலங்கையிலும் வெளிநாட்டிலும் அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்லாமிய நூல்கள் தொடர்பான உங்கள் தேவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்.



எம். டி. குணசேன அன்ட் கம். லிமிட்.

217, ஒல்கொட் மாவத்தை
கொழும்பு—11.
தொலைபேசி- 23981—84.



இப் பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபென்டன்ட் நியூஸ் பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 (இலங்கை) தபால் பெட்டி இல. 1613. வெளியீட்டு திகதி 7 ஜனவரி 1990-

CHINTAMANI, 5 Gunasena Mawatha, Colombo 12 — P.O. Box 1618.